# தண்பதம்

# Thanpatham

## Proceedings of Annual Conference
## 2015





தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
&
குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்பதம்

# Thanpatham

ஆலோசனையும் வழிகாட்டலும்
பேராசிரியர் வ. மகேஸ்வரன்

பதிப்பாசிரியர்கள்
திரு. பெருமாள் சரவணகுமார்
திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன்

வெளியீடு
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்
குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்பதம்
பதிப்பாசிரியர்: திரு. பெருமாள் சரவணகுமார், திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன்

© 2016

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6

வெளியீட்டு எண் # 604

ISBN 978-955-659-418-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக்குழு

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்)

**பேராசிரியர் சி. பத்மநாதன்**
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்)

**பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் துரை. மனோகரன்**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் சி. மௌனகுரு**
(கிழக்குப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் வை. சுப்பராயலு**
(தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் ச. உதயசூரியன்**
(தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் ந. அதியமான்**
(கல்வெட்டியல் மற்றும் கடல்சார் தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் வி. அரசு**
(சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)

**பேராசிரியர் கா. இராஜன்**
(தொல்லியல் துறை, புதுச்சேரி நடுவண் பல்கலைக்கழகம்)

## மலர்க்குழு

**கலாநிதி சோதிமலர் ரவீந்திரன்**
**கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்**
**திரு. முருகையா ஜெயசீலன்**
**திரு. பாஸ்கரன் சுமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA

# Message from the Vice - Chancellor
# University of Peradeniya

It is with great pleasure that I send this congratulatory message to the Thanpatham (proceeding of annual Conference – 2015) published by the department of Tamil of the University of Peradeniya.

The Tamil Department of the University of Peradeniya is considered as one of the oldest and traditional departments in SriLanka. Over the last three years this Department has taken the initiative to conduct International Conferences on Tamilology in a commendable manner. It is noteworthy to mention that Tamil Scholars from the Universities of SriLanka and India have participated in this conference. It is also remarkable that the research articles presented at this Conference has been compiled into a book titled 'Thanpatham' and published annually.

Accordingly, the publications of the articles presented last year, which was based on the theme 'New Perspectives on Sangam Literature' will be released on 7th October 2016.

In conclusion, I take this opportunity to congratulate the organizing committee of this international conference for their tremendous efforts in making this event a great success.

***Prof. Upul B. Dissanayake***
Vice-Chancellor
University of Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA

# Message from the Dean, Faculty of Arts
# University of Peradeniya

It is with great pleasure and honour that I present this message of congratulations and appreciation for international Conference on Tamilology. I believe the Department of Tamil in the University of Peradeniya as the oldest Department in that discipline has taken the right and courageous decision to organize this annual national seminar. I believe the literary work in Tamil will positively contribute to establishing personal liberties and cultural mindsets to a harmonious and a sustainable society.

Many this kind of efforts are required to resurrect and rejuvenate the Tamil literature in Sri Lanka. I also wish that the scholars and artists in Tamil will be able to contribute to social development and harmony through literary work. These efforts will also help creating the next generation of scholars who will contribute to the richness and the quality of Tamil literature.

The conference will also pave the way for more academic collaborations and cooperation with many University institute abroad and develop a mutually beneficial future programmes for research and study partnerships.

I wish the conference be a great success.

***Professor OG Dayaratna –Banda***
Dean, Faculty of Arts,
University of Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

மீண்டும் ஒரு காலடி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினால் மிக அழுத்தமாக எடுத்துவைக்கப்படுகிறது. உலகளாவில் பல்வேறு துறைகளிலும் நிகழ்த்தப்படுகின்ற சர்வதேச ஆய்வு மாநாடுகளில் அறிந்தும் பங்குபற்றியும் பெற்றுக்கொண்ட அநுபவங்களின் அடிப்படையில் நமது தமிழ்த்துறையும் இவ்வாறான ஆய்வு மாநாடொன்றை பேராதனையில் நிகழ்த்தினால் எவ்வாறு இருக்கும் என்ற அருட்டுணர்வின் வெளிபாடாகவே 2013 இல் நமது துறைசார்ந்த விரிவுரையாளர் சகாக்களை இணைத்துக்கொண்டு முதலாவது மாநாட்டினை நடாத்தினோம். அந்த மாநாட்டின் வெற்றி தொடர்ந்தும் எம்மை இயங்கத் தூண்டியது. எமது பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் அதற்கான ஆதரவை நல்கினர். இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழியற் புல புலமையாளர்களும் இதற்கு ஆதரவுக் கரம் நீட்டினர். எனவே, இரண்டவாது மாநாடு சர்வதேச மாநாடாக மாற்றம் கொண்டது. அந்த மாநாட்டின் பெருவெற்றியின் தொடர்விளைவாக மூன்றாவது மாநாட்டை 2016 இல் நடாத்துகிறது. உண்மையில் இது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியதும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையை ஆய்வறிவுப் பின்புலத்தில் நிலைநிறுத்துவதுமான அரங்காகவும் இது நிகழ்ந்தேறி வருகின்றது.

தண்பதத்தின் முதலாவது இதழில் தமிழியல் ஆய்வுப் போக்குகளை மதிப்பிடு செய்யும் விதத்தில் ஆய்வுக்கட்டுரைகள் அமைந்தன. இந்த இரண்டாவது இதழில் சங்க இலக்கியங்கள் பற்றி புதிய நோக்கில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இதனூடாக தமிழியல் ஆய்வுப் புலத்தில் சிறு சலனத்தை ஏற்படுத்திய மகிழ்ச்சி எமக்குண்டு. அவ்வகையில் கருத்தரங்கின் வெற்றிக்கு உழைத்த சகலருக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகிறேன். குறிப்பாக, எமது மூத்த கல்வியாளர்கள், வாழ்நாள் பேராசிரியர் சி. தில்லைநாதன் மற்றும் பேராசிரியர்கள் எம்.ஏ. நு∴மான், துரை. மனோகரன் ஆகியோருக்கும் எம் நன்றிகள். கடந்த வருடம் மையக்கருத்துரையை வழங்கிய தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டு மொழிக் கல்வித்துறையின் பேராசிரியர் உதயசூரியன் அவர்கள், எமது துறையின் செயற்பாடுகளை தமிழகத்தில் தொடர்ந்து நிகழ்த்துவதற்கு ஆற்றிவரும் தொண்டு அளப்பெரியது. அவருக்கு எமது துறைசார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்த மாநாட்டை சரியான விதத்தில் ஒழுங்கமைப்பதற்கு உதவிய துணைவேந்தர் உபுல் வி. திசாநாயக்க அவர்களுக்கும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன அவர்களுக்கும் எமது நன்றிகள். எல்லாவற்றும் மேலாக இம்மாநாட்டை உரிய வகையில் நடத்த சகல வழிகளிலும் முன்னின்று உழைத்த எனது மாணவர்களும் சகாக்களுமான தமிழ்த்துறையின் இளம் விரிவுரையாளர் குழுமத்துக்கு என்னுடைய நன்றிகள்.

தமிழாராய்ச்சித்துறை என்பது எடுத்துரைப்பு முறையின் நின்று மாறுபட்டு புதிய புதிய திசைவெளிகளைக் கடக்க வேண்டும் என்பது எமது வேணவா. அந்தச் செல்நெறியை வழிப்படுத்துவதில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆர்வமுடன் இயங்கி வருகிறது என்பதன் அடையாளமே தண்பதம். இது மேலும் மேலும் வேகங்கொள்ளும். அதனால் தமிழ் ஆய்வுலகம் பயன்பெறும்.

**பேராசிரியர் வ. மகேஸ்வரன்**
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சங்கப்பாடல்கள் வழியும் அக்கால வரலாறு குறித்து கிடைத்த தொல்லியல் மூலாதாரங்கள் வழியும் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இற்றைவரை சங்ககாலம் குறித்து பல ஆய்வு முயற்சிகள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. சங்ககாலத்தின் பல கூறுகள் குறித்து நுணுக்கமாக ஆராய வேண்டிய காலத் தேவையும் இன்று நம்முன்னே உள்ளது. புதிய புதிய கோட்பாடுகள் சங்ககாலத்தின் மீது, சிறப்பாக அதன் இலக்கியங்கள் மீது பாய்ச்சும் ஒளி இதுவரை பார்க்கப்படா பக்கங்களை நமக்குத் திறக்கிறது; பார்த்திராப் பார்வையை நமக்குத் தருகிறது. இந்தப் பக்கங்களை இத்தகு புதிய பார்வை கொண்டு பார்க்க ஆய்வாளர்களைத் தூண்டும் ஒரு சிறு முயற்சியாக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட 'புதிய நோக்கில் சங்க இலக்கியம்' என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு அமைந்திருந்தது.

கடந்த வருடம் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கை, இந்திய நாட்டு தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து, தமது ஆய்வியல் பங்களிப்புகளை வழங்கியதோடு, மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கும் உறுதுணையாக அமைந்தனர். புதிய நோக்கில் சங்க இலக்கியம் என்ற தொனிப்பொருளை ஊடுசரடாகக் கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். கருத்தரங்கில் கட்டுரைகளை வாசித்ததோடு, உரிய நேரத்தில் கட்டுரையைத் தந்துதவி தண்பதம் மீண்டும் தடம் பதிக்க துணைபுரிந்த அனைத்து வளவாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்விதழில் மொத்தமாக பதினான்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. கருத்தரங்கின் மையப்பொருளுக்கேற்ப ஒவ்வொரு கட்டுரையும் அமைந்திருக்கின்றது. இத்தொகுப்பில் இடம்பெறும் பேராசிரியர் எம்.ஏ. நு..மானின் 'சங்க இலக்கிய மொழி பெயர்ப்புகள்' என்ற கட்டுரை மிக முக்கியமானது. சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் பற்றியும், அதன் தேவை, பிரச்சினைகள் பற்றியும் எடுத்துரைக்கும் அதேவேளை, சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளை மதிப்பீடுவதாகவும் உள்ளது.

திரு. க. சண்முகலிங்கத்தின் 'மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்' என்ற தலைப்பிலான கட்டுரையும் மிகுந்த கவனத்துக்குரியது. குறிப்பாக மானிடவியல் நோக்கில் பெ. மாதையன் எழுதிய சங்க கால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு 'மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்' குறித்து விவாதிக்கும் கட்டுரையாக அமைந்துள்ளது. இக்கட்டுரையின் ஊடாக திரு.க. சண்முகலிங்கம் எழுப்பும் வினாக்கள் எதிர்கால ஆய்வாளர்களை மடைமாற்றம் செய்யத்துண்டுவனவாக அமைகின்றன.

சங்க அகத்திணை இலக்கியங்களில் தலைவியின் அழுகுரல் - குறுந்தொகையை முன்வைத்து ஒரு நோக்கு என்ற பேராசிரியர் துரை. மனோகரனின் கட்டுரையும் இத் தொகுப்புக்கு வளம்சேர்ப்பதாக அமைகின்றது. குறுந்தொகையில் காணப்படும் பாடல்கள் அக்கால சமுதாயத்தின் பிரதிபலிப்பாக அமைகின்றன என்பதை முன்னிறுத்துகின்ற அதேவேளை, அப்பாடல்களில் மேலோங்கியுள்ள தலைவியின் அழுகுரல் சமுதாய விமர்சனமாகவே அமைந்துள்ளது என்பதை வலியுறுத்துவதாகவும் கட்டுரை விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செ. யோகராசாவின் 'சங்க கவிதைகளும் நவீன இலக்கிய உருவாக்கமும்' என்ற கட்டுரையும் சிறப்பாக நோக்கத்தக்கது. சங்க இலக்கியங்களில் பரவிக்கிடக்கும் இலக்கியக் கூறுகள் எவ்வாறு நவீன தமிழ்க் கவிதைகளில் விரவிவந்துள்ளன என்பதை அடையாளப்படுத்துவதாகவும் கட்டுரை விளங்குகின்றது. காலமாற்றமும் சமுதாய மாற்றமும் இணைந்து இலக்கிய உருவாக்கத்தை எவ்வாறு ஆக்கிக் கொள்கின்றன என்பதை கட்டுரையாசிரியர் முன்னிறுத்துவது சிறப்பாக நோக்கத்தக்கது. சி. சிவசேகரம், வ.ஐ.ச. ஜெயபாலன் முதலான கவிஞர்கள் இயற்கையைப் பாடுவதனூடாகவும் படிமமாக்குவதன் ஊடாகவும் எவ்வாறு சமுதாயத்துக்கு தேவையாக கருத்தியல்களை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதை மதிப்பீடுவதாகவும் உள்ளது.

சூழலியல் திறனாய்வுக் கோட்பாடும் சங்க இலக்கியமும் என்ற றூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்களது கட்டுரை புதிய நோக்கில் அமைந்துள்ளது. நவீன கோட்பாட்டியல் அடிப்படையில் சங்க இலக்கியத்தை ஆராய முனைகின்ற ஒரு கட்டுரையாக இது விளங்குகின்றது. சூழலியல், சூழலியல் திறனாய்வுக் கோட்பாடு ஆகியவற்றை சுருக்கமாக விளங்கி, அக்கோட்பாட்டு நிலைகளின் துணைகொண்டு சங்கப் பாடல்களை வாசிக்கும் அதேவேளை சங்கப் பாடல்களில் காணப்படும் முதல், கரு, உரி மற்றும் உள்ளுறை, இறைச்சி முதலான இலக்கியக் கூறுகள் எவ்வாறு சூழலியல் கோட்பாட்டு நிலைகளோடு இணைந்து வந்துள்ளது என்பதைப் பதிவுசெய்கின்றது.

கலாநிதி சோதிமலர் ரவீந்திரனின் 'சங்ககால ஆற்றுப்படை இலக்கியம்: மரபும் மாற்றமும்' என்ற கட்டுரை ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி நிலைகள, அவ்விலக்கியம் முன்னிறுத்துகின்ற சமுதாய மாற்றங்கள் முதலானவற்றை அடையாளப்படுத்துவனவாக அமைந்துள்ளது. ஆற்றுப்படை இலக்கியங்கள் பதிவுசெய்துள்ள இருவேறுபட்ட வழிபாட்டு முறைகளையும் அவ்வழிப்பாட்டு முறைகளுடாக மேற்கிளம்புகின்ற சமுதாய வேறுபாடுகளையும் கட்டுரை பதிவுசெய்கின்றது.

நவீன கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கப் பாடல்கள் மீதான மறுவாசிப்பு என்ற கலாநிதி ம. நதிராவின் கட்டுரையும் மிக முக்கிய விவாதங்களை எழுப்புகின்றது. சூழலியல் விமர்சனம், உடல்சார் விமர்சனம் முதலானவற்றின் அடிப்படைகளை வைத்துக்கொண்டு, சங்கப் பாடல்களை மறுவாசிப்பு செய்யும் கட்டுரையாக அமைந்துள்ளது. சங்கப் பாடல்களில் மேலோங்கியுள்ள படைப்புக்கூறுகளில் சூழலியல் சார்ந்த கருத்துக்கள் எவ்வாறு விரவிவந்துள்ளன என்பதை கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

கலாநிதி க. இரகுபரனின் கலித்தொகை: காலமாற்றத்தின் கண்ணாடி என்ற கட்டுரை மிக முக்கியமானது. சங்க இலக்கியம் என்று எமக்குக் கையளிக்கப்பட்டுள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலான தொகை நூல்கள் ஒரே காலப்பகுதியில் எழுதப்பட்டவை அல்ல. பல்வேறு சமூக மாற்றங்களோடு வளர்ந்து வந்த இலக்கியப் பிரதிகளாகவே சங்க இலக்கியப் பிரதிகள் காணப்படுகின்றன என்பதை எடுத்துரைக்கும் அதேவேளை, சங்க கால சமுதாய மாற்றத்தைப் பதிவுசெய்துள்ள இலக்கியப் பிரதிகளுள் கலித்தொகைக்கு உரிய இடம் என்ன என்பதை அடையாளப்படுத்துவதாகவே கட்டுரை அமைகின்றது.

கலாநிதி ஸ்ரீ பிரசாந்தனின் சங்க இலக்கியத்தில் திணை மயக்கம் என்கின்ற கட்டுரையும் சிறப்பாக நோக்கத்தக்கது. திணை மயக்கம் குறித்த நச்சினார்க்கினியரின் கருத்துக்களை மீள் வாசிப்பு செய்யும் வகையில் கட்டுரை அமைந்து இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கிய ஆய்வில் திணை மயக்கம் குறித்து விரிவாக ஆராயப்படவேண்டியதன் அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

திருமதி. செல்வஅம்பிகை நந்தகுமரனின் பண்டைய தமிழரிடையே வழக்கிலிருந்த ஒப்பனை முறைகள்: சங்க இலக்கியத்தின் வழியான தேடல் என்ற கட்டுரை பழந்தமிழரின் பல்வேறு ஒப்பனை முறைகளைத் தொகுத்து தருகின்றது. அழகு குறித்து நிகண்டுகள் தரும் சொற்கள், சங்க இலக்கியங்களில் பயின்று வரும் அழகு குறித்த சொற்கள், அழகின் இரு நிலை என்பவற்றை விளக்குவதோடு, சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நீராடல், கூந்தல் ஒப்பனை, தொய்யில் ஒப்பனை, ஆடை வகைகள், அணி வகைகள், மலர்கள் புனைதல், வாசப்பொருட்கள், ஒப்பனை செய்யும் வேளைகள், வயது நிலைக்கேற்ற மாற்றங்கள் முதலானவற்றை மிக விரிவாக எடுத்துரைக்கின்றது.

திருமதி. ஹறோசனா ஜெயசீலனின் 'சமூக வரலாற்று நோக்கில் மூதீன்முல்லைப் பாடல்கள்' என்ற கட்டுரையும் மிக முக்கியமானது. சங்க இலக்கியப் பிரதிகளை ஒற்றைப்படையான தளத்தில் வாசித்தல் என்ற சட்டகத்தை உடைத்து, அதனை வெவ்வேறு சமுதாய படிநிலை வளர்ச்சியின் ஊடாகவும் ஆராயவேண்டும் என்ற கருத்தியலை மிக ஆழமாகப் பதிவுசெய்யும் கட்டுரையாக இது விளங்குகின்றது. குறிப்பாக சங்கப் பாடல்கள் இனக்குழுச் சமுதாய அமைப்பினையும், அரசு உருவாக்கம் நடைபெற்ற காலப்பகுதியையும் பிரதிபலிப்பன. இப்பாடல்கள் இருவேறு சமூக மாற்றங்களை அடையாளப்படுத்துவன என்பதை கட்டுரை பதிவுசெய்கின்றது. சங்கப் பாடல்களில் மூதின்முல்லைப் பாடல்களுக்கு தனித்துவமானதோர் சமூக வரலாற்றுப் பின்னணி உண்டு என்பதையும் கட்டுரையாளர் முன்னிறுத்துவது நோக்கத்தக்கது.

திருமதி. வானதி பகீதரனின் சங்க கால இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களாக பாணர்கள் என்ற கட்டுரையும் இனக்குழுச் சமுதாயம் குறித்த சில முக்கிய கருத்துக்களை பதிவுசெய்கின்றது. குறிப்பாக பாணர் என்கின்ற மரபு எவ்வாறு இனக்குழுச் சமூக வளர்ச்சிநிலைகளிலிருந்து தோற்றம் கொள்கின்றது என்பதையும் அப்பாணர் மரபில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களையும் எடுத்துரைப்பதாகக் கட்டுரை அமைகின்றது.

கலாநிதி எஸ்.வை. ஸ்ரீதரின் சங்கப் பாடல்களில் கதைக்கூறுகள் என்கின்ற கட்டுரை சங்கப் பாடல்களில் இடம்பெறும் கதைக்கூறுகளை அடையாளப்படுத்துவதாக உள்ளது. குறிப்பாக கலித்தொகைப் பாடல்களில் இடம்பெறும் கதைக்கூறுகளை முன்னிறுத்தி இக்கட்டுரை அமைந்துள்ளது.

திரு. தயாநிதியின் சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு என்ற கட்டுரையும் மிக முக்கியமானது. தமிழ்ச் சமூகத்தில் நிலை கொண்ட தாய்த் தெய்வ வழிபாட்டின் வளர்ச்சிப் படிநிலைகளை குறித்த ஆய்வாகவே இது அமைகின்றது. கொற்றவை என்கின்ற வழிபாடு ஏனைய வழிபாட்டு மரபுகளிலிருந்து வேறுபடுமாற்றையும் அவ்வேறுபாடுகளினூடாக வெளிப்படும் சமுதாய மாற்றத்தையும் கட்டுரை பதிவுசெய்கின்றது.

திரு. இராசையா மகேஷ்வரனின் 'சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள்' என்ற கட்டுரை சங்க இலக்கியங்களில் இடம்பெறும் தமிழரது விளையாட்டுக்களை தொகுத்துரைப்பதாக அமைகின்றது. பழந் தமிழரிடையே செல்வாக்குப் பெற்றிருந்த விளையாட்டுக்கள் தற்காலத்திலும் பல மாற்றங்களுடாக வடிவங்கொண்டுள்ள முறைமையை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் இடம்பெறும் ஒவ்வொரு கட்டுரையும் வெவ்வேறு கருத்துநிலைகளின் பின்புலத்திலிருந்து வெளிவந்தவை. இக்கட்டுரைகள் தமிழியல் ஆயவுப் போக்கின் பன்முகத்தன்மையை மிக அழுத்தமாகவே பதிவுசெய்கின்றன எனலாம்.

தண்பதத்தை மிகச் சிறப்பாக வெளிக்கொணர்வதில் எம்மிலும் வேணவா கொண்டிருந்த எம் துறையின் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களுக்கு எமது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கூடவே தண்பதத்தை உரிய காலத்துள் வெளிக்கொணர்வதற்கான முயற்சிகளில் எம்மோடு கரமிணைத்து உழைத்த எம் துறையின் உதவி விரிவுரையாளர்கள் செல்வி. எம். வை. எப். ரிஸ்மியா, திருமதி. எம். என் ஜெஸ்மினா மற்றும் எம் மாணவன் திரு. சி.கேசவன் ஆகியோருக்கும் எம் நன்றிகளை உரித்தாக்குகிறோம். மேலும் அச்சுப்பதிப்பினை மேற்கொள்ளும் பணியை மனமுவந்தேற்ற குமரன் புத்தக இல்ல நிர்வாக இயக்குனர் திரு. க. குமரன் அவர்களுக்கும் அவரது ஊழியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. பெருமாள் சரவணகுமார்**
**திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியநோக்கில் சங்க இலக்கியம்

## மையக் கருத்துரை

## [ஆதார சுருதியுரை]

முனைவர் சா. உதயசூரியன்
துறைத்தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

சங்கத் திணைப்பாடல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாட்டு மரபின் வேர்களை விசாரிக்கும் தரவுகளைத் தாங்கி நிற்பவை. இப்பாடல்கள் முன்வைக்கும் பாடுபொருள்கள் மனித ஆழ்மன அசைவுகளின் அடையாளங்களாக இருந்து வருபவை. இத்திணை இலக்கியங்கள் மாற்றங்களுக்கு இடங்கொடுத்து மாறிவரும் காலங்களுக்கேற்பத் தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டு புதுப்புது அர்த்தங்களை அள்ளித் தரும் குறியீட்டு வல்லமை கொண்டவை. எனவே சங்க இலக்கியங்கள் சமகாலத் தேவைகளை நிறைவு செய்வதில் ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் கூடுதல் பயன் விளைவிப்பவை. அன்றைய உரையாசிரியர்கள் தொடங்கி நேற்றைய பேராசிரியர்கள் வரை நடத்தி முடித்த ஆய்வுகள் அல்லது வாசிப்புகள் அனைத்தையும் கடந்தகால வாசிப்பின் பதிவுகளாக மட்டுமே கொள்ள முடியும். அவை அனைத்தும் எவ்வளவு பயனார்ந்த பார்வை கொண்டவையாக இருந்திடினும் நிகழ்காலத்தின் பிரதிநிதிகளாக முன்னிறுத்த முடியாதவை. எனவே சங்க இலக்கியத்தின் மீதான சமகால வாசிப்பு இன்று தேவையாகிறது. சங்கப் பனுவல்கள் மீதான கடந்தகாலப் பார்வைகளை உதறிவிட்டுப் புதிதான நேரடியான உறவை அவற்றோடு ஏற்படுத்திக் கொள்ளும்போதே சமகால வாசிப்பு சாத்தியமாகும். சங்க இலக்கியத்தின் மீதான கவனம் அதிகரித்து வரும் இந்தப் பொழுதுகளில் இத்தகைய வாசிப்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

### சங்க இலக்கிய ஆய்வு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பயணித்து வந்துள்ள சங்க இலக்கியங்கள் குறித்த தொடக்கநிலைப் பார்வைகளை அறிய சான்றுகள் இல்லை. உரையாசிரியர் காலத்துக்குப் பின்னர் சங்க இலக்கிய வாசிப்பு மரபை உணர முடிகிறது. சங்க இலக்கியங்களின் மீதான நெடிய வாசிப்பு மரபில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவ்வக் காலச் சமூகத்தின் செல்வாக்கைக் காணமுடிகிறது, ஒரு படைப்பின் மீதான வாசிப்பு வெவ்வேறு காலங்களில் நிகழ்கையில் அவ்வக்கால மாற்றங்களால் அப்படைப்பு கூடுதலான பொருளைத் தரத்தொடங்கி விடுகிறது. சங்க இலக்கிய ஆய்வு மரபிலும் இதைத் தெளிவாகவே புரிந்து கொள்ளமுடிகிறது.

இந்திய விடுதலை இயக்கம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கங்கள், சமய மறுமலர்ச்சி இயக்கங்கள், சாதிய இயக்கங்கள் என அனைத்து இயக்கங்களும் சங்க இலக்கியத்தை ஆய்வுக்கு உட்படுத்தின. இதன் காரணமாக மொழி, இனம், மதம், அரசியல், பண்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மேம்பாட்டுச் சிந்தனைகள் மேலெழுந்தன. சங்க இலக்கியப் புதிய பதிப்புகள் பலப்பல வெளிவரலாயின. எளிய உரைகளும் விளக்கங்களும் எழுத்திலும் பேச்சிலும் எழுந்தன. இதன் விளைவாக கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் சங்க இலக்கியம் ஆய்வுப் பொருளாய் மாறியது. இது சங்க இலக்கிய ஆய்வில் நிகழ்ந்த மிக முக்கிய திருப்பு முனையாகும்.

சங்க இலக்கியம் பற்றிய ஒரு நூற்றாண்டுக்கால வாசிப்பைத் திரும்பிப் பார்க்கும் போது பல புதிய இலக்குகள் நம்முன் தோன்றுகின்றன. ஒரு நூற்றாண்டுக் காலச் சமூக வரலாற்றையும் அரசியல் வரலாற்றின் இயங்கியல் போக்கையும் அதனுள் தரிசிக்க முடிகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மை கொண்ட சங்க இலக்கியங்களின் சொல்லாடல்கள் அவை தோன்றிய காலந்தொட்டுத் தொடர்ந்து பேசப்பட்டு வரும் உண்மை நமக்குத் தெரிய வருகிறது. எனவே சங்க இலக்கிய வாசிப்பு மரபினை நுட்பமாக ஆராய்ந்து நோக்கி அவ்வவக் காலச் சமூக இயங்கியலை வெளிக்கொணர்தல் இன்றைய அவசரத் தேவையாய் மாறியிருக்கிறது.

## ஆய்வுப் படிநிலைகள்

சங்க இலக்கிய ஆய்வு நூறாண்டைக் கடந்த தொன்மைக்குரியது. தொய்வின்றித் தொடர்ந்து நடந்தேறி வருவது. ஆனால் இவ்வாய்வுகளை ஒரு சேரத் தொகுத்து நோக்கி சங்க இலக்கிய ஆய்வை மேலெடுத்துச் செல்லும் பணி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தோற்றம் கொண்டது. சங்க இலக்கிய அட்டவணை என்ற பெயரில் இந்த ஆய்வுத் தொகுப்புப் பணியை 1973இல் முதன்முதலாக ஆரம்பித்தவர் பேராசிரியர் ந.சஞ்சீவி. இப்பணியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றவர் பேராசிரியர் தமிழண்ணல். இவர் உயர்கல்வி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அரிதின் முயன்று "தமிழியலாய்வு" எனும் பெயரில் தொகுத்து 1983இல் வெளியிட்டார்.

இந்த அரும்பணியை மேலும் முன்னெடுத்த பெருமை பதிப்புச் செம்மல் பேராசிரியர் மெய்யப்பனாருக்கு உரியது. இவர் பேராசிரியர் அமிர்தலிங்கத்தைக் கொண்டு உருவாக்கி கி.பி.200இல் வெளியிட்ட "சங்க இலக்கியக் களஞ்சியம்" சங்க இலக்கிய ஆய்வு செழிக்க அடிப்படைகளை அமைத்துத் தந்தது, இதில் சங்க இலக்கியம் பற்றி அதுவரை வெளிவந்த ஆய்வுநூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், பதிப்பு விவரங்கள் போன்றவை இடம் பெற்றன.

சங்க இலக்கிய ஆய்வு குறித்த தகவல்களை மட்டும் தொகுக்காமல் அவற்றின் மீதான மதிப்பீடுகளையும் ஓர் ஆய்வுத் திட்டமாகச் செயல்படுத்திச் சங்க இலக்கிய ஆய்வை மீளாய்வு செய்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர் பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன். இந்த ஆய்வுநூல் "சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு" என்ற பெயரில் 2008இல் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வந்துள்ளது. அதில் இருபதாம் நூற்றாண்டில் சங்க இலக்கிய ஆய்வுகள் பெருகியுள்ள வரலாற்றைப் பதிவு செய்து அவற்றின் செல்நெறிகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டியுள்ளார்.

- வரலாற்று ஆராய்ச்சி சார்ந்தன
- பண்பாட்டாராய்ச்சி செய்வன
- நலம் பாராட்டும் வகையின
- நூற்பொருள் உரைப்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மொழியியல் நோக்கின
- புலவர் திறம் குறிப்பன
- திணை, துறைப் பகுப்பாய்வு நெறியின
- ஒப்பியல் வகையின

இதுவரை நிகழ்ந்த சங்க இலக்கிய ஆய்வுகளின் பெரும்பான்மையான போக்கினை மேற்கண்ட வகைப்பாடு அடையாளப்படுத்துவதாகவே கொள்ள முடிகிறது. கடந்த பத்தாண்டுகளில் கோட்பாட்டு நோக்கில் சங்கப் பனுவல்களை ஆய்வுக்கு உட்படுத்தும் போக்கும் மேலெழுந்து வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் உள்வாங்கியவாறு சங்க இலக்கிய ஆய்வை இனி கொண்டு செலுத்த வேண்டிய புதிய திசைகளைத் தீர்மானிக்கும் இலக்கோடு இக்கருத்தரங்கம் வடிவமைக்கப்பெற்றுள்ளது.

## கவனம் பெறவேண்டிய திசைகள்

சங்க இலக்கிய ஆய்வுகள் கடந்த நூறு ஆண்டுகளில் பயணித்த வழித் தடங்களை உற்றுநோக்கினால் இனி பயணிக்க வேண்டிய பின்வரும் புதிய திசைகள் தென்படுகின்றன.

- சமூக மதிப்புகளைப் பற்றிய புதிய புரிதலோடு சங்கப் பனுவல்களை அணுகுதல்
- கவிதை மொழிக்கான கலைநுட்பக் கூறுகளைக் கூடுதலாய் இனங்கண்டு சங்கப் பாடல்களில் அவற்றை அடையாளங் காணுதல்
- ஒப்பியலாய்வின் நவீனப் பரிமாணங்களைச் சங்கக் கவிதைகள் மீது பொருத்திப் பார்த்தல்
- உலகப் பொதுவான ஆழ்மன உணர்வோட்டம் என உளவியல் முன்வைக்கும் உண்மையின் பின்புலத்தில் சங்க இலக்கியத்தை விளங்கிக் கொள்ளல்
- வளர்ந்துவரும் சூழலியல் பார்வையோடு சங்கப் புலவர்களின் படைப்புகளை மேலும் கூர்மையாக ஆராய்தல்
- செவ்வியல் பண்பின் தனித்துவமாக விளங்கும் திணைக் கோட்பாட்டை உலக அளவில் முன்னெடுத்தல்

இந்த வரைவுகளை வரையறையாக்கி இனி சிலவற்றைச் சிந்திக்கலாம்.

## சமூக மதிப்புகள்

தமிழ் மரபின் அடையாளங்களைச் சங்கக் கவிதை வழி இனங்காண வேண்டுமென்றால் அக்கவிதைகளில் காணப்பெறும் வாழ்க்கை மதிப்பைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். போர், வீரம், கொடை பற்றிய சங்கப் பாடல்களை அதன் நீள, அகலத்தோடு உள்வாங்கிக் கொள்ள சமூக மதிப்புகள் பற்றிய தெளிவு தேவையாகிறது. சங்கக் கவிதைகள் சமூக மாறுதல்களைப் பதிவு செய்துள்ளதைப் போலவே சமூக மதிப்பு மாறுதல்களையும் நுட்பமாகப் பதிவு செய்து வைத்துள்ளன.

உலகப் பொதுமையான சமூக மதிப்புகளுக்கு அப்பால் நின்று சங்க காலத்திற்கே உரிய சமூக வாழ்வியல் சார்ந்த மதிப்புகளைச் சங்கப் பாடல்களின் வழி இனங்காண முடியும். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், அந்துவஞ்சேரல் இரும்பொறையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவூரில் வேண்மாடத்தில் இருந்தபோது நடந்த நிகழ்வை ஒரு புறநானூற்றுப் பாடல் விவரிக்கிறது. மேற்கண்ட இருவரும் ஒருங்கிருந்தபோது சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி யானையின் மீது ஏறி சேரமன்னனின் மேல் படையெடுத்து வருகிறான். அக்காட்சியைக் கண்ட புலவர் சேரல் இரும்பொறையை நோக்கி

*இவன்யார் என்குவை ஆயின் இவனே*
*புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய*
*எய்கணை கிழித்த பகட்டு எழில்மார்பின்*
*மறலியன்ன களிற்று மிசையோனே* *(புறம்.பா.13 : 1-4)*

என்று முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளியைப் பாராட்டுகின்றார். தன்னைப் புரந்த மன்னன் உடனிருந்தும் அவனின் பகைமன்னனை வாழ்த்தும் பாங்கு ஒரு புதிய சமூக மதிப்பீட்டை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. இத்தகைய அரிய இடங்களை அடையாளங் கண்டு சமூக மதிப்புகளை எடையிட சங்கப் பாடல்களில் இடமிருக்கிறது.

## கவிதைமொழி

சங்க இலக்கியக் கவிதை மொழியை மையப்படுத்திப் பல ஆய்வுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனால் பெண்கவிதை மொழி குறித்து இதுவரை அரிதாய்ச் சில ஆய்வுகளே நிகழ்ந்துள்ளன. குறிப்பாக ஔவையார், வெள்ளிவீதியார் பாடல்களை முன்னிறுத்தி அவை அமைந்துள்ளன.

காலங்காலமாகப் பெண்ணைப் பேசவிடாது அடக்கி ஒடுக்கி வைக்க ஆணாதிக்கம் ஏற்பாடு செய்துவைத்த நாணத்தை மீறவேண்டும் என்ற உணர்வு ஒரு புறமும் ஆழ்ந்த காதலின்பால் விளைந்த காமத்தீயை வென்றுதீர வேண்டும் என்ற உணர்வு ஒரு மறுபுறமுமாக வெள்ளிவீதியாரின் பாடல்கள் உணர்வுகளின் கொந்தளிப்பாய்க் காட்சியளிக்கின்றன. பெண் நாணப்பட வேண்டுமெனத் தொல்காப்பியத்தில் விதிசெய்த போது அதை அப்படியே அனைவரும் ஏற்று நடந்த நாளில் நாணத்தைத் தூக்கியெறிந்த துணிச்சல் வெள்ளிவீதியாரிடம் இருந்தது வியப்பைத் தருகிறது.

*அளிதோ தானே நாணே நம்மொடு*
*நனிநீடு உழந்தன்று மன்னே இனியே*
*வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை*
*தீம்புனல் நெரிதர வீந்துஉக் காஅங்குத்*
*தாங்கும் அளவைத் தாங்கிக்*
*காமம் நெரிதரக் கைந்நில் லாதே* *(குறுந் 149)*

இப்பாடலுக்கு உரை வரையும் மு.சண்முகம்பிள்ளை காமம், நாணம் இரண்டனுள் நாணத்தைக் காமம் வென்றது எனக் குறிக்கின்றார். தலைவியிடம் நெடுங்காலம் உடனிருந்த நாணம் விலகிப் போவதைப் பதிவு செய்கிறது இப்பாடல். வெண்ணிறப் பூக்களைக் கொண்ட கரும்பு வயலின் உயர்ந்த மணற்கரை பெருக்கெடுத்து ஓடிவரும் நீரால் அழிவதைப் போல் காமம் பெருகியதால் தலைவியிடம் தாங்க முடியாமல் தாங்கி நின்ற நாணம் சிதறிப் போகிறது. சீறிப்பாயும் நீரலைகளில் மணல்மேடு சரிந்து சாயும் நிகழ்வை ஒரு முப்பரிமாணப் படத்தைப் போல் காட்டி நாணச்சிறை உடைந்து நொறுங்குவதை இப்பாடல் சித்திரமாக்குகிறது. நாணச்சிறை உடைதலினூடாக மரபைமீறி விழித்தெழும் வெள்ளிவீதியாரைத் தரிசிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிசையில் அள்ளிர் நன்முல்லையார், நக்கண்ணையார் போன்ற பெண் கவிகளின் படைப்புகளையும் விரிவாக ஆராயும்போதே அக்காலத்திற்கே உரிய பெண்கவி மொழியைக் கண்டெடுக்க இயலும்.

**ஒப்பியல்**

சங்க இலக்கியங்களை ஒப்பியல் பார்வையில் பார்க்கும் ஆய்வுகள் வளர்ந்து வருவதை வரலாறு காட்டி நிற்கிறது. ஆனால் திணை இலக்கியங்களின் ஆழத்தை மிக நுட்பமாக உணர்த்தி நிற்கும் குறியீடுகளை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராயும் பணி இன்னும் தொடக்க நிலையே இருந்து வருவது கசப்பான உண்மையாகும். எடுத்துக்காட்டாக மலர் நாகரிகம் எனப்போற்றப்படும் தமிழர் நாகரிகத்தில் மலர்களே குறியீடுகளாய் இயங்கிப் புதுப்புது பொருள்களைப் பூக்கச் செய்வதைக் காணலாம்.

வேங்கை மலர் (குறிஞ்சி) ⟶ செல்வக் குறியீடு
முல்லை மலர் (முல்லை) ⟶ கற்புக் குறியீடு
ஆம்பல் மலர் (மருதம்) ⟶ பரத்தமைக் குறியீடு
நெய்தல் மலர் (நெய்தல்) ⟶ சிறுபொழுதுக்கான குறியீடு
இலவ மலர் (பாலை) ⟶ சிறுபொழுது மற்றும் பெரும்பொழுதுக்கான குறியீடு

*பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ*
*மான்இனப் பெரும்கிளை மேயல் ஆரும்*
*கானக நாடன் வரவும் இவள்*
*மேனி பசப்பது எவன்கொல் அன்னாய்* *(ஐங்குறு. 217)*

கபிலரின் இப்பாடல் வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சியுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியதாக அமைந்துள்ளது. உயர்ந்த மலையின் உச்சியிலுள்ள வேங்கை மரத்தின் பொன்னிற மலர்களை மான்கூட்டம் மேய்ந்து மகிழும் கானகநாடு இப்பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வேங்கை மலர்களை மான்கூட்டம் மேய்ந்து மகிழ்வது என்பது இனித் தலைவனும் தலைவியும் மணந்து கொண்டு இல்லறம் நிகழ்த்தும்பொழுது அவர்களின் உறவினர் பலரும் தலைவனின் இல்லத்தில் உள்ள பெருஞ்செல்வத்தை நுகர்வர் எனும் குறியீட்டுக் கருத்தை முன்வைக்கிறது. இதில் வேங்கை மலர்கள் செல்வத்தின் குறியீடாக இயங்குகின்றன. இத்தகைய திசைகளில் தமிழாய்வு இயங்கும்போதே நம் செவ்வியல் வளமையை உலகம் உணரும் நிலை உருவாகும்.

ஜப்பானிய ஐக்கூக் கவிதைகளும் நம் சங்கப் பாடல்களும் இயற்கையோடு இயற்கையாய்க் கலந்திருப்பதை ஒப்பிட்டுச் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஐக்கூக் கவிதைகள் ஐங்குறுநூற்றுப் பாடல்களோடு ஒன்றுபடுகின்றன என்ற நிலையிலும் சிலர் ஆய்வு செய்துள்ளனர். சங்கப் பாடல்களில் உள்ள விலங்கினங்கள், மரங்கள், மலர்கள் என வகைப்படுத்தித் தொகுத்து ஐக்கூக் கவிதைகளில் இவை இடம்பெற்றதையும் தொகுத்து நோக்கி இரண்டும் ஒன்றானவை என்று கூறும் மேலெழுந்தவாரியான ஆய்வுகளும் தமிழ் நிலத்தில் நிகழ்ந்து வருவதையும் காணமுடிகிறது. ஐக்கூவின் காலம் மிகவும் பிற்பட்டது. சங்க இலக்கிய முகிழ்ப்புச் சூழல் முற்றிலும் வேறானது. இவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் கணக்கில் கொள்ளாமல் அவசரகதியாய்ப் பட்டங்கள் பெறும் தாகத்தில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் சங்க இலக்கிய ஆய்வை நீர்த்துப் போகச் செய்பவை.

## உளவியல்

சங்கக் கவிதைகளை உளவியல் நோக்கில் பார்க்கும் அணுகுமுறை ஏற்கனவே தமிழில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் கூர்மையடையவில்லை. பிராய்டு, யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் பற்றி முன்வைத்துள்ள பல கருத்தியல்கள் ஒரு வரன்முறையாக இன்னும் தமிழுக்கு வந்து சேரவில்லை. எனவே இன்னும் இந்தப் பார்வையில் தமிழாய்வு பின்தங்கியே நிற்கிறது.

சங்கப் பாடல்களில் பலைத் திணையில் பாலை நிலத்தின் தன்மையினை நினைத்துத் தலைவி தோழியிடம் புலம்பும் பொழுதும், தன் நெஞ்சிற்குள் புலம்பும் போதும் உணர்வு தோன்றப் புலம்பும் தன்மையினைக் காண முடிகிறது. அச்ச உணர்வானது ஒரு பொருளை அடைய முடியாத நேரத்திலும் தனக்கு கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற ஏக்கத்தின் காரணமாகவும் தோன்றுகிறது. உளவியலாளர்களின் கருத்துப்படி இயல்பூக்கங்களின் உந்துதல்களுக்கேற்ப மனவெழுச்சியானது வெளிப்படுகின்றது. தப்பித்தல் என்னும் இயல்பூக்கத்தின் வெளிப்பாடாக அச்சம் என்னும் கிளர்ச்சி சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் வெளிப்படுகின்றன. அச்ச உணர்வானது எழும் சூழலை தொல்காப்பியர்,

> *அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்*
> *பிணங்கல் சாலா அச்சம் நான்கே (மெய்ப்.6)*

என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவில் நான்கு வகையான அச்ச உணர்வுகள் வெளிப்படுகின்றன என்று கூறுகிறார். இத்தகைய அச்ச உணர்வானது பாலைப் பாடல்களில் தலைவி கூற்றில் வெளிப்பட்டுள்ள முறையினைக் காணலாம்.

தலைவனுடைய பிரிவினால் ஏற்படும் துயரைத் தாங்கும் ஆற்றல் தன்னிடம் இல்லை எனவும், அப்பிரிவுத் துயரைத் தாங்காமல் தான் இறந்துபடுவேன் என்றும் அஞ்சுகின்றாள் தலைவி. இதனை,

> *ஏர்தரல் உற்ற இயங்கு அருங் கவலைப்*
> *பிரிந்தோர் வந்தும் புணரப் புணர்ந்தோர்*
> ..................................................
> *யாதனின் தவிர்க்குவம் காதலர் செலவே (நற்.79)*

என்ற நற்றிணைப் பாடலடிகளில் நம் தலைவன் பிரிகின்ற பாலை வழி அழகு மிக்கது என்றாலும், ஆபத்து நிறைந்தது. பிரிந்தவர்கள் சேர்ந்து வாழும் இந்நேரத்தில் நம் தலைவன் நம்மைப் பிரிய நினைப்பது கொடுமையானது. அவ்வாறு அவர் பிரிந்தால் என் உயிர் பிரியும் என்று தலைவி கூறுவதில் தலைவியின் பிரிவச்சம் வெளிப்படுகிறது.

இத்தகைய உணர்வுகள் ஒப்பிடப்பட்டால் உலகப்பொதுமையாய்க் கருதப்படும் 'ஆழ்மன உணர்வோட்டம்' சங்க இலக்கியங்களுக்குப் பொருந்திவரும் உண்மை உறுதிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலியல்

தமிழில் அறிவியல்தமிழ் தனித்து வளர்ந்து வரும் நிலையிலும் சூழலியல் இன்னும் பரந்துபட்ட நிலையில் அறிமுகம் காணவில்லை. சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் உள்ள தாவரம் மற்றும் உயிரினம் பற்றிய அறிவியலாகும். உயிரினங்களுக்கும் சுற்றுச் சூழல்களுக்கும் இடையிலான உறவுகளை இந்த அறிவியல் பேசும்.

சங்கத் தமிழர் தாம் வாழும் நிலத்தையோ, நிகழும் பொழுதையோ, நிற்கும் செடியையோ, நில்லா விலங்கையோ எதையுமே தம்முடைய அகவாழ்வுக்குப் புறமாகக் கருதவில்லை. தமிழரின் இத்தகைய சூழலியல் அறிவை இன்றைய சூழலியல் அறிஞர்களின் கூற்றுக்களோடு பொருத்திப் பார்க்கும் ஆய்வு இங்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை இன்று பல அறிவியல் இயக்கங்கள் ஓர் இயக்கமாகவே ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ச் சமுதாயம் இயற்கையோடு கைகோர்த்து வாழ்ந்து வந்ததைச் சங்கப் பாடல்கள் சுட்டி நிற்கின்றன. நீர் மாசு, காற்று மாசு, நிலமாசு என அடையாளப்படுத்தாமலேயே பழந்தமிழர் சூழலியலைப் பின்பற்றி வந்தனர்.

அகநானூற்றுப் பாடல் ஒன்று ஒலிமாசு குறித்துப் பதிவு செய்துள்ளது. உழத்தியர் உலக்கை கொண்டு அவல் இடிக்கும் காட்சியை அப்பாடல் எடுத்துரைக்கிறது.

*கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்*
*பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து*
*பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்*
*கடிதுஇடி வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு (அகம் - 141:16-19)*

இளம்பெண்கள் முற்றிய நெற்கதிர்களை முறித்தெடுத்து வயிரம் பாய்ந்த உலக்கையால் பச்சை அவலை இடிப்பர். இந்த உலக்கை இடிக்கும்போது எழும் ஓசைக்கு அஞ்சி வெண்குருகுகள் வாழை மடலிலிருந்து மாமரக்கிளைகளுக்கு இடம்பெயர்வதாக நக்கீரர் பாடுகிறார். ஒலிமாசு குறித்த விழிப்புணர்வு இயற்கையிலேயே இருந்ததை இந்தப் பாடல் வழி புலனாகிறது.

துறைசார் அறிவு இன்று வேகமாகக் கிளைவிரித்து வளரும் காலமிது. உளவியல் ஒரு துறையாகவும் சூழலியல் ஒரு துறையாகவும் இருந்த நிலை இன்று மாறி "சுற்றுச்சூழல் உளவியல்" என்று புதிய துறையே தோற்றம் கண்டுள்ளது. இத்தகைய புதிய போக்குகளை உட்கிரகித்துத் தமிழாய்வு வளம்பெற வேண்டும். சங்கப் பாடல்களில் சுற்றுச்சூழல் உளவியல் எனும் பொருண்மையில் எதிர்கால ஆய்வுகள் நிகழ்த்தப்பெறும் நிலை உருவாக வேண்டும்.

## திணைக்கோட்பாடு

தொல்தமிழ் மரபின் வாய்மொழிப் பாடல் ஓசை மரபுகளைத் திட்டஞ்செய்து ஒழுங்குபடுத்திச் செய்யுள் மொழியாக்கி, அதனூடாக திணை வாழ்வியல் நெறியை அமைத்துத் திணைக்கோட்பாடு உருவாக்கப்பட்டது என்பர். திணைக்கோட்பாட்டை முன்னிறுத்தும் ஆய்வுகள் அழுத்தமாகவே தமிழாய்வில் கால்பதித்து விட்டதைப் பார்க்க முடிகிறது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக திணை விரிவாக்கம் நிகழத் தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக் கோட்பாடு தொல்தமிழர் மரபில் வேர்கொண்டது. எனவே தொடர் அடையாளத்தின் புத்தாக்கம் தேவை என்ற நிலையில் திணை விரிவாக்கம் இன்றைய தமிழாய்வில் புதிய வீச்சில் மலரத் தொடங்கியுள்ளது. தமிழில் இதுவரை படைக்கப்பட்ட கவிதை, புதினம், சிறுகதை போன்ற இலக்கிய வகைகளில் திணை விரிவாக்க முறைமையில் ஆராயமுடியும். புதிய கருத்தியல்களுக்கேற்ப விரிவு செய்யும் நிலைக்கு, பழைய திணையின் வரம்புகளும் உள்முரண்களும் இடம் கொடுக்கின்றன.

புதிய கோட்பாடுகள் வழி பழையனவற்றை விரிவாக்கம் செய்து புதுக்கி அமைப்பதே, உயிர்ப்பைத் தக்கவைத்து ஆய்வுக்குப் புத்துயிர்ப்பைத் தரக்கூடியது. இதுவரை முன்மொழியப்பட்ட ஆய்வு முன்னெடுப்புகள் பரந்து விரிந்த தமிழாய்வு உலகின் சில கூறுகள் மட்டுமே என்பதைப் பதிவு செய்கிறேன். தமிழறிவு மேன்மேலும் கிளைவிரித்துச் செழித்தோங்கும் என்பதில் கூடுதல் நம்பிக்கை கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


வாழ்த்துரை iv - v

நூன்முகம் vi

பதிப்புரை viii

ஆதார சுருதியுரை xi

1. சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் 1
   - *எம்.ஏ. நுஃமான்*

2. மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்: பெ.மாதையனின் சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் 11
   - *கந்தையா சண்முகலிங்கம்*

3. சங்க அகத்திணை இலக்கியங்களில் தலைவியின் அழுகுரல் குறுந்தொகையை முன்வைத்து ஒரு நோக்கு 19
   - *பேராசிரியர் துரை. மனோகரன்*

4. சங்கக் கவிதைகளும் நவீன இலக்கிய உருவாக்கமும் 25
   - *பேராசிரியர் செ. யோகராசா*

5. சூழலியல் திறனாய்வுக் கோட்பாடும் சங்க இலக்கியமும் 37
   - *றூபி வலன்ரீனா பிரான்சிஸ்*

6. சங்ககால ஆற்றுப்படை இலக்கியம் மரபும் மாற்றமும் 43
   - *கலாநிதி சோதிமலர் ரவீந்திரன்*

7. நவீன கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கப்பாடல்கள் மீதான மறுவாசிப்பு 49
   - *கலாநிதி ம. நதிரா*

8. கலித்தொகை: காலமாற்றத்தின் கண்ணாடி 59
   - *க. இரகுபரன்*

9. சங்க இலக்கியத்தில் திணை மயக்கம்: நச்சினார்க்கினியர் உரையை முன்வைத்து ஒரு நோக்கு 65
   - *கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்*

10. பண்டைய தமிழரிடையே வழக்கிலிருந்த ஒப்பனை முறைகள் சங்க இலக்கியத்தின் வழியான தேடல் 72
   - *திருமதி.செல்வஅம்பிகை நந்தகுமரன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சமூக வரலாற்று நோக்கில் மூதின்முல்லைப் பாடல்கள் 88
- *ஹறோசனா ஜெயசீலன்*

12. சங்ககால இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களாக பாணர்கள் 100
- *திருமதி. வானதி பகீரதன்*

12. சங்கப் பாடல்களில் கதைக் கூறுகள் 110
- *கலாநிதி எஸ். வை. ஸ்ரீதர்*

13. சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு 114
- *திரு. தயாநிதி*

14. சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள்: ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு 121
- *இராசையா மகேஸ்வரன்*

பின்னிணைப்புகள் 129


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள்

பேராசிரியர் எம். ஏ. நுஃமான்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

## சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு: ஒரு சுருக்க வரலாறு

சங்க இலக்கியம் என்று இன்று அறியப்படுகின்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு நூல்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே மீள்கண்டு பிடிப்புச் செய்யப்பட்டு, அச்சில் பதிப்பிக்கப்பட்டு பரவலாக அறிமுகமாகின. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடை 1884ல் பதிப்பிக்கப்பட்டது. சங்க இலக்கியங்களுள் முதலில் பதிப்பிக்கப்பட்டது இது என்றே தெரிகின்றது. ஏனைய பத்துப்பாட்டு நூல்கள் 1889ல் பதிப்பிக்கப்பட்டன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை 1887ல் சி.வை. தாமோதரம்பிள்ளையால் முதலில் பதிப்பிக்கப்பட்டது. 1894ல் உ.வே. சாமிநாதையர் புறநானூற்றைப் பதிப்பித்தார். ஏனைய எட்டுத்தொகை நூல்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1903ல் இருந்து 1937 வரை பதிப்பிக்கப்பட்டன.

சங்க இலக்கியத் தொகுதிகள் அச்சேறத் தொடங்கிய பின்னரே இத்தகைய வளமான, தனித்துவமான பண்டைத் தமிழ் இலக்கித்தின் இருப்பு தமிழருக்கும் வெளி உலகினருக்கும் தெரியவந்தது. இதன் பின்னரே தமிழர் வரலாறு, பண்பாடுபற்றிய விரிவான ஆய்வுகள் தொடங்கின. சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் முயற்சிகளும் தொடங்கின. இப்போது நமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி ஜி.யு. போப்தான் (1820 – 1908) சங்க இலக்கியத்தை – புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை – முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். எனினும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்துதான் சங்க இலக்கியம் பரவலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படத் தொடங்கியது.

போப்பின் பின்னர் நடந்த மிக முக்கியமான சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.வி. செல்லையாவின் பத்துப்பாட்டு நூல்களின் மொழிபெயர்ப்பு எனலாம். பத்துப்பாட்டு முழுவதையும் இவர் மொழிபெயர்த்திருக்கின்றார். இதன் முதல் பதிப்பு 1946ல் கொழும்பில் வெளிவந்தது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும் இதனை மீள்பதிப்புச் செய்துள்ளன. இம்மொழிபெயர்ப்புப் பெறுமதியான தென்றும், கவித்துவக் குறைபாடு உடையதெனினும் பெரிதும் நம்பகமானது என்றும் கமில் சுவலபில் (1973) குறிப்பிட்டுள்ளார்.

ஃபிரான்ஸ் நாட்டுத் தமிழறிஞரான ஃபிரான்சுவா க்றோவின் பரிபாடல் மொழிபெயர்ப்பு 1968ல் வெளிவந்தது. பாண்டிச்சேரியில் இயங்கும் இந்தியவியலுக்கான ஃபிரஞ் நிறுவகம் (French Institute of Indology) இதனை வெளியிட்டுள்ளது. இதை அடுத்து வெளிவந்த பிறிதொரு முக்கியமான நூல் ஜே.ஆர். மார் எழுதிய எட்டுத்தொகை பற்றிய ஆய்வு நூல். இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்துக்காக புறநானூறு, பதிற்றுப்பத்து பற்றி ஆய்வுசெய்து 1958ல் சமர்ப்பித்த ஆய்வேடு (Eight Tamil Anthologies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with Special Reference to Purananuru and Pathirruppatthu) பல பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. இந்நூல் 1985ல் ஆசிய ஆய்வுகளுக்கான சென்னை நிறுவகத்தால் (Madras Institute of Asian Studies) வெளியிடப்பட்டுள்ளது.

1999ல் இருந்து அ. தட்சினாமூர்த்தியின் சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் வெளிவரத் தொடங்கின. சங்க இலக்கியத்தின் பெரும்பகுதியை இவர் மொழிபெயர்த் திருக்கிறார். இவரது அகநானூறு மொழிபெயர்ப்பை 1999ல் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிட்டது. இவரது நற்றிணை (2001) குறுந்தொகை (2007), பத்துப்பாட்டு (2012) மொழிபெயர்ப்புகள் அடுத்தடுத்து வெளிவந்தன. ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், என். கந்தசாமி, வி. முருகன் ஆகியோரும் நற்றிணையை மொழிபெயர்த்துள்ளனர். பேராசிரியர் வி. முருகனின் கலித்தொகை மொழிபெயர்ப்பு 1999ல் வெளிவந்தது. ஜோர்ஜ் எல் ஹார்ட் ஹங் ஹெய்்.பெற்ஸ் என்பவருடன் இணைந்து புறநானூறு முழுவதையும் மொழிபெயர் துள்ளளார். இவர்களுடைய மொழிபெயர்ப்பு Four Hundred Songs of War and Wisdom என்ற தலைப்பில் 1999ல் வெளிவந்தது. மார்த்தா ஆன் செல்பி ஐங்குறு நூறு முழுவதையும் மொழிபெயர்த்துள்ளார். இவரது மொழிபெயர்ப்பு Tamil Love Poetry: The Five Hundred Short Poems of Ainkurunuru என்ற தலைப்பில் 2011ல் வெளிவந்தது. இவர்களைத் தவிர பி. ஜோதிமுத்துவும் புறநானூறு (2000), ஐங்குறுநூறு (2013) ஆகியவற்றை மொழிபெயர்த் துள்ளார்.

குறுந்தொகை தட்சணாமூர்த்தி தவிர்ந்த வேறு பலராலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆர். பாலகிருஷ்ண முதலியார் (2009), றொபேர்ட் பட்லர், ஈவா வில்டன் (2010), முத்துச் சண்முகம், டேவிட் ஈ லட்டன் ஆகியோரின் குறுந்தொகை மொழிபெயர்ப்புகள் குறிப்பிடத் தக்கன. இவற்றை விட பல்வேறு இணையதளங்களில் சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளை இப்போது பார்க்க முடிகின்றது. இவற்றுள் வைதேகி ஹேர்பட்டின் தளம் குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்தின் பெரும்பகுதியை இவர் மொழிபெயர்த்திருக்கிறார்.

சங்க இலக்கிய மொழிபெயர்ப்பில் மிகப் பிரபலமானவர் ஏ.கே. ராமானுஜன். சங்க இலக்கியத்தை உலக அளவில் ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் அவர் முக்கியமானவர். அவருடைய குறுந்தொகைப் பாடல்கள் பலவற்றின் மொழிபெயர்ப்பு Interior Landscape என்ற தலைப்பில் 1967ல் வெளிவந்தது. அதன் பின்னர் அகப் புறப் பாடல்களின் மொழிபெயர்ப்புத் தொகுதி ஒன்று The Poems of Love and War என்ற தலைப்பில் 1985ல் வெளிவந்தது. ராமானுஜத்தின் பின்னர் சங்க இலக்கியத்தின் தேர்ந்த கவிதைத் தொகுப் பொன்றை வெளியிட்டவர் ஜோர்ஜ் எல் ஹார்ட். ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த 300 கவிதைகளின் தொகுப்பொன்றை Poets of the Tamil Anthologies: Ancient Poems of Love and War என்ற தலைப்பில் 1979ல் இவர் வெளியிட்டார். 2010ல் ம.லெ. தங்கப்பாவின் மொழிபெயர்ப்பில் 160 கவிதைகள் கொண்ட தொகுப்பொன்று Love Stands Alone: Selection from Tamil Sangam Poetry என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. இவ்வாறு கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதியில் கிட்டத்தட்ட சங்க இலக்கியம் முழுவதும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது எனலாம்.

## மொழிபெயர்ப்பு : தேவையும் பிரச்சினைகளும்

மொழிபெயர்ப்பை ஒரு பண்பாட்டுப் பாலம் என்று சொல்லலாம். இரு மொழிப் பண்பாடுகளுக்கிடையிலே, இருமொழி வாசகர்களுக்கு இடையிலே அது ஒரு இணைப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமாகவே செயற்படுகின்றது. மொழிபெயர்ப்பு மூலமே இருமொழிப் பண்பாடுகள் தொடர்புகொள்கின்றன.

மொழி, இலக்கியம், பண்பாடு என்பன ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாது பிணைந்துள்ளன. மொழி பண்பாட்டின் ஒரு கூறாகவும் பண்பாட்டின் கருவியாகவும் செயற்படுகின்றது. மொழி இல்லாமல் இலக்கியம் இல்லை. இலக்கியம் பண்பாட்டின் ஒரு பகுதியாகவும் அதன் பதிவேடாகவும் இயங்குகின்றது. ஒரு மொழிப் பண்பாட்டையும் அதன் இலக்கியத் தையும் பிற மொழிப் பண்பாட்டினர் அறிந்து கொள்வதற்கான ஒரே வழி மொழிபெயர்ப்புத்தான்.

மொழிபெயர்ப்புகள் மூலம்தான் சங்க இலக்கியம் வெளி உலகுக்குப் போய்ச்சேர்ந்தது. தமிழர்களின் வரலாற்றை, பண்பாட்டை, தமிழ் இலக்கியத்தின் செழுமையை, தொன்மையை, அதன் தனித்தன்மையை வெளி உலகம் அறிய மொழிபெயர்ப்பு ஒன்றே வாயிலாக அமைந்தது.

ஒரு மொழி ஊடகத்தில் உள்ள தகவல்களை, செய்திகளை, இலக்கியத்தை பிறிதொரு மொழி ஊடகத்துக்கு மாற்றுவதுதான் மொழிபெயர்ப்பு. றோமன் யாகோப்சன் மூன்று வகையான மொழிபெயர்ப்புகளைச் சொல்கிறார். ஒன்று ஒரு தகவலை ஒரு குறிமுறையிலிருந்து பிறிதொரு குறிமுறைக்கு மாற்றுவது. இதை அவர் Inter Semiotic Translation என்று சொல்கிறார். ஒரு நாவலைத் திரைப்படமாக்குவது அல்லது ஒரு கவிதையை ஓவியமாக்குவது இத்தகையது. மற்றது ஒரே மொழிக்குள் நடக்கும் மொழிபெயர்ப்பு. இதை அவர் Intra Lingual Translation என்கிறார். இதை அக மொழிபெயர்ப்பு எனலாம். உதாரணமாக சங்க இலக்கியத்தை நாம் இன்று புரிந்து கொள்வது இத்தகைய மொழிபெயர்ப்பின் மூலமே. இன்றையத் தமிழருக்குப் புரியாத பழந்தமிழில் இருக்கும் சங்கப் பாடல்களை இன்றையத் தமிழுக்கு மொழிபெயர்த்தே இன்று நாம் புரிந்துகொள்கிறோம். மூன்றாவது வகை மொழிபெயர்ப்பு இரண்டு அல்லது பல மொழிகளுக்கு இடையே நடக்கும் மொழிபெயர்ப்பு. இதனைப் புற மொழிபெயர்ப்பு எனலாம். இதனை அவர் Inter Lingual Translation என்பார். இதனையே வழக்கமான அர்த்தத்தில் நாம் மொழிபெயர்ப்பு என்கிறோம்.

எல்லா வகையான மொழிபெயர்ப்புகளிலும் ஒரு ஊடகத்திலுள்ள தகவலை நாம் பிறிதொரு ஊடகத்துக்கு மாற்றுகின்றோம். இந்த மாற்றத்தில் தகவல் அல்லது பொருள் அடிப்படையானது. பொருள் சிதைவடையாமல் மாற்றுவதுதான் மொழிபெயர்ப்பில் உள்ள பிரதான சிக்கல். இலக்கியப் பிரதியில் இச்சிக்கல் மேலும் அதிகரிக்கின்றது. ஏனெனில், ஒரு இலக்கியப் பிரதியில் பொருள் என்பது அதன் அர்த்தம் மட்டுமல்ல. அது தரும் உணர்ச்சி, அதன் அழகியல் கட்டமைப்பு, அதன் நடை நயம் என்பன எல்லாம் அடங்கும். இலக்கியத்தின் மொழி தட்டையானதல்ல. அது பல்வேறு அடுக்குகளைக் கொண்டது. இதில் அந்த மொழிக்கே உரிய அம்சங்கள் (language specific), அந்தப் பண்பாட்டுக்கே உரிய அம்சங்கள் (cultural specific), அந்தப் படைப்புக்கே உரிய அம்சங்கள் எனப் பல உண்டு. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய ஒரு படைப்பின் பொருளைப் பிறிதெரு மொழிக்குப் பெயர்ப்பது 'இரண்டும் இரண்டும் நாலு' என்பதுபோன்ற எளிமையான விடயம் அல்ல. அது எப்போதும் சிக்கலானது. அவ்வகையில் மூலத்துக்குச் சரிநிகரான மொழிபெயர்ப்பு என்பது சத்தியமல்ல. மூலத்துக்கு மிக நெருங்கிய மொழிபெயர்பைச் சிறந்த மொழிபெயர்ப்பு எனலாம். அதுபோல் மூலத்தை விட்டு மிகத் தொலைவில் உள்ள மொழிபெயர்ப்பை மோசமான மொழிபெயர்ப்பு எனலாம். நல்ல மொழிபெயர்ப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இரண்டுக்கும் இடையில் உள்ளன. ஆனால் முழு நிறைவான மொழிபெயர்ப்பு (perfect translation) என்று எதுவும் இல்லை.

சங்க இலக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வதிலும் மொழிபெயர்ப்பதிலும் சில அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன. அதில் பிரதானமானது அதன் காலச் சேய்மை. ஏனைய பிரச்சினைகள் இதனுடன் பிணைந்துள்ளன. இன்று நமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியத் தொகுதி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. மிகவும் வேறுபட்ட சமூக பண்பாட்டுச் சூழலில் பிறந்தது. இன்றையத் தமிழிலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு தமிழில் அமைந்துள்ளது. அதன் இலக்கிய மரபு இன்றைய இலக்கிய மரபில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. சங்க இலக்கியம் பற்றிய நமது இன்றையப் புரிதல் தொல்காப்பியம், அதன் உரையாசிரியர்கள் வழிவந்ததுதான். தொல்காப்பியக் கண்ணாடி மூலமே நாம் சங்க இலக்கியத்தைப் பார்க்கின்றோம். தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் கிடைத்திராவிட்டால் சங்க இலக்கியம் பற்றிய நமது பார்வை, புரிதல் வேறாக இருந்திருக்கும். அகம், புறம் என்ற பார்வைக்குப் பதிலாக நாம் வேறு பார்வையை உருவாக்கி இருக்கக்கூடும். இது எவ்வாறெனினும், இன்று சங்க இலக்கியத்தைப் புரிந்து கொள்வதிலும், அதை மொழியெர்ப்பதிலும் தொல்காப்பியமே நமக்கு அடிப்படையாக உள்ளது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

எல்லா மொழிபெயர்ப்பாளரும் எதிர்கொள்ளும் அடிப்படையான பிரச்சினை மொழிபெயர்ப்புச் சமனிகளை (translation equivalents) கண்டறிவதாகும். பரஸ்பரம் மொழிபெயர்க்கக்கூடிய மொழிக்கூறுகளையே மொழிபெயர்ப்புச் சமனி என்பர். 'எனது பெயர் நு.்.மான்' என்பதை ஆங்கிலத்தில் 'My name is Nuhman' என்று கூற முடியுமாயின் இரண்டு கூற்றுகளும் ஒன்றுக்கு ஒன்று சமமானது அவ்வகையில் மொழிபெயர்ப்புச் சமனிகள் எனலாம். ஆனால், இரண்டு மொழிகளுக்கிடையே இத்தகைய சமனிகள் எப்போதும் கிடைப்பதில்லை. சிலவேளை பல தேர்வுகள் இருக்கலாம், சிலவேளை சமனிகள் எவையும் இல்லாதிருக்கலாம். இத்தகைய நிலையில் மொழிபெயர்ப்பு சிக்கலாகின்றது. எடுத்துக்காட்டாக 'நீ எப்போது வந்தாய்?', 'நீங்கள் எப்போது வந்தீர்கள்?', 'நீர் எப்போது வந்தீர்?' ஆகிய மூன்று தமிழ் வாக்கியங்களும் பேச்சுச் சூழலில் அர்த்த வேறுபாடு உடையவை. ஆங்கிலத்தில் இவை மூன்றுக்கும் பொதுவாக 'When did you come?' என்ற ஒரு சமனிதான் உண்டு. அவ்வகையில் ஆங்கில மொழிபெயர்ப்பில் இந்த அர்த்த வேறுபாடு இழக்கப்பட்டுவிடும். இது மொழி அமைப்பு சார்ந்த பிரச்சினை. பண்பாடு சார்ந்த பிரச்சினை இதைவிடச் சிக்கலானது. எடுத்துக்காட்டாக "மஞ்சள் வளத்துடன் வாழ்க, உன் மங்கலக் குங்குமம் வாழ்க" போன்ற பாடலடிகளை ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கவே முடியாது. இதற்குரிய பண்பாட்டுச் சமனிகள் அம்மொழிகளில் இன்மை இதற்குக் காரணமாகும். எல்லா வகையான மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் இறுதி ஆய்வில் மொழி சார்ந்த சிக்கல்களாகவே உள்ளன.

### சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு : ஓர் ஒப்பீடு

சங்க இலக்கிய மொழிபெயர்ப்பில் காணப்படும் சிக்கல்களை இப்பின்னணியிலேயே புரிந்துகொள்ள வேண்டும். ஒரு கவிதையைப் பலர் மொழிபெயர்க்கும் போது ஏற்படும் வேறுபாடுகள் இதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும். பலர் மொழிபெயர்த்த இரண்டு புகழ்பெற்ற சங்கப் பாடல்களை இங்கு நாம் எடுத்து நோக்கலாம். ஒன்று அகப்பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுந்தொகையில் 25ஆவதாக இடம்பெறும் 'யாரும் இல்லைத் தானே கள்வன்' எனத் தொடங்கும் பாடல். மற்றது ஒரு புறப்பாடல். கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும்கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல். முதலில் அகப்பாடலை எடுத்துக்கொள்வோம்.

*யாரும் இல்லைத் தானே கள்வன்*
*தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ*
*தினைத்தா ளன்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே* *(குறுந்தொகை 25, கபிலர்)*

(இப் பாடலின் பின்னணிக் குறிப்பும் உரையும் பின்வருமாறு: வரைவு நீடித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில், சான்றாக வேறு ஒருவரும் இலர். தலைவனாகிய கள்வன் ஒருவன்தான் இருந்தனன். அங்ஙனம் இருந்த தலைவன் அப்போது கூறிய சூழுறவினின்றும் தப்பினால் யான் யாது செய்ய வல்லேன். ஓடுகின்ற நீரில் ஆரல் மீன் வரவை உண்ணும் பொருட்டுப் பார்த்து நிற்கும் தினையின் அடியைப் போன்ற சிறிய பாதங்களை உடைய நாரையும் இருந்தது.)

இந்த உரையின் பொருத்தப்பாடு ஆய்வுக்குரியது. 'யாரும் இல்லை' என்ற தொடருக்குத் தலைவன் தன்னை மணந்தபோது அதற்குச் சான்றாக வேறு யாரும் இல்லை என்று பொருள் கொள்வது பொருத்தமா என்ற கேள்வி எழுகிறது. களவுப் புணர்ச்சி யாரும் இல்லாத சூழலிலேயே நிகழும். சான்று வைத்துக்கொண்டு அது நிகழ்வதில்லை. அவ்வகையில் சான்று பற்றிய பேச்சுக்கு இங்கு இடம் இல்லை. அவ்வகையில் தன்னுடைய இன்றைய நிலைக்கு வேறு யாரும் காரணமல்ல, அவனே காரணம் என்று தலைவி சொல்வதாகவும் இங்கு பொருள்கொள்ளலாம். 'ஒழுகு நீர் ஆரல் பார்க்கும் குருகு' இங்கு தலைவனை உள்ளுறையாகச் சுட்டுவதாகக் கொள்ளலாம். இன்றையத் தமிழில் இதைப் பின்வருமாறு மொழிபெயர்க்கலாம்.

*யாரும் இல்லை அவனே கள்வன்*
*அவன் அதை மறுத்தால் நான் என்ன செய்வேன்*
*தினைத் தாள் போன்ற சிறியகால் உடைய*
*ஓடும் நீரில் ஆரல் பார்க்கும்*
*நாரையும் இருந்தது எனை அவன் மணந்த போது*

இக்கவிதைக்கு நான் அறிய ஐந்து ஆங்கில மொழிபெயர்ப்புகள் உள்ளன. ஏ.கே. ராமானுஜன், கமில் சுவலபில், ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும், இ. அண்ணாமலையும் ஹரொல்ட் ஃப்மனும், ம.லெ. தங்கப்பா ஆகியோரின் மொழிபெயர்ப்புகள் இவை. ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து வேறுபடுகின்றது. இந்த வேறுபாடுகள் அவர்களின் புரிதல், தேர்வு அடிப்படையிலானவை எனலாம். இவர்களின் மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுப் பார்ப்பது சுவாரஸ்யமாக இருக்கும்

ராமானுஜன் பொதுவாக மூலக் கவிதையின் அடி அமைப்பைப் பெருமளவு பேணுபவர். இங்கு நான் அடியமைப்பு என்பது வரிகளின் எண்ணிக்கையை அல்ல, பொருள் தொடர்ச்சியை. மூலக் கவிதையில் ஐந்து அடிகள் உள்ளன. ராமானுஜனின் மொழிபெயர்ப்பில் ஒன்பது வரிகள். எனினும் பொருள் தொடர்ச்சி இரண்டிலும் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளது. எல்லோரும் அவ்வாறு அல்ல. அவருடைய மொழிபெயர்ப்பை நான் இங்கு முழுமையாகத் தருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Only the thief was there, no one else
And if he should lie, what can I do?
There was only
a thin-legged heron standing
on legs yellow as millet stem
and looking
for lampreys
in the running water
when he took me

(A K Ramanujan, Poems of Love and War p.17)

பொதுவாக மொழிபெயர்ப்பாளர்கள் எல்லோரும் 'யாரும் இல்லைத் தானே கள்வன்' என்ற முதல் அடியை உரைவிளக்கத்தின் அடிப்படையிலேயே பெயர்த்துள்ளனர். ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும் 'none else was there, but only he, the thief' என மொழிபெயர்த்துள்ளனர். கமில் சுவலபில் பெரிதும் ஜேசுதாசனைத் தழுவி இவ்வரியைப் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார். 'none else was there but he, the thief'. இங்கு 'only' என்ற சொல் மட்டும் விடுபட்டுள்ளது. அண்ணாமலையும் வாசியையும் ('யாரும் இல்லை... தான் மணந்த ஞான்றே') இணைத்து முதல் அடியாக்கியுள்ளனர். அவர்களுடைய முதல் வரி பின்வருமாறு: 'There was no witnesses when he embraced me' இங்கு 'தானே கள்வன்' என்ற முக்கியமான தொடர் மொழிபெயர்க்கப்படாமல் விடுபட்டுள்ளது. அது தேவையில்லை என்று அவர்கள் கருதினார்கள் போலும். தங்கப்பா இன்னும் அதிக சுதந்திரத்தை எடுத்துக்கொண்டு மூலக் கவிதையின் கட்டமைப்பையும் இறுக்கத்தையும் தளர்த்தி கடைசி அடியை முதலாவதாகவும் முதல் அடியை இரண்டாவதாகவும் இணைத்து மொழிபெயர்த்திருக்கிறார். அவருடைய மொழிபெயர்ப்புப் பின்வருமாறு: 'When my lover / wedded me secretly, / there was no witness / but he the cheat himself' இவருடைய மொழிபெயர்ப்பில் களவுப் புணர்ச்சி இரகசியத் திருமணமாயிற்று. அண்ணாமலை போல் இவரும் சாட்சியம் இன்மைக்கே முதன்மை கொடுத்துள்ளார். கள்வன் என்பதை இவர் ஏமாற்றுக்காரன் என்ற பொருளில் 'cheat' என மொழிபெயர்த்துள்ளார். கள்வன் என்பதன் உருவகப் பொருள் இங்கு இழக்கப்படுகின்றது. 'Thief' என்ற ஆங்கிலப் பதம் கள்வன் என்பதன் நேர் பொருளையும் அதன் உருவகப் பொருளையும் தரவல்லது. ஆனால் cheat இங்கு அத்தகைய இரட்டைப் பொருளைத் தராது.

இப்பாடலை மொழிபெயர்த்த ஐவரும் சாட்சியமற்ற ஒரு நிகழ்வுக்குச் சாட்சியமாகவே குருகின் இருப்பைப் பொருள்கொண்டுள்ளனர். அவ்வகையிலேயே 'யாரும் இல்லை' என்ற தொடரை அச்சந்தர்ப்பத்தில் வேறு யாரும் சாட்சியாக அங்கு இருக்கவில்லை என்ற பொருள்படப் புரிந்து மொழிபெயர்த்துள்ளனர். பாடலுக்குத் தரப்பட்ட உரையாசிரியரின் விளக்கத்தினால் இவர்கள் வழிநடத்தப்பட்டுள்ளனர் என்பதை இது காட்டுகின்றது. ஆனால் 'தானே கள்வன்' என்ற அடுத்த தொடரில் உள்ள அழுத்தம் 'என் நிலைமைக்கு வேறு யாரும் காரணம் இல்லை. அவனேதான் கள்வன்' என்ற பொருளையே தருகின்றது. அவ்வகையில் இம்முதல் அடியை 'No one else, he was the thief' என மூலத்தில் இருப்பதுபோல் மொழிபெயர்ப்பதே பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெயர்க்கும்போது மூலக் கவிதை தரக்கூடிய இரண்டு பொருளையும் நாம் தக்கவைத்துக்கொள்ளலாம்.

'தானது பொய்ப்பின் யான் எவன் செய்கோ' என்ற இரண்டாவது அடியை ராமானுஜன் if he should lie, what can I do? என்றும், கமில் சுவலபில் if he denies it , what shall I do? என்றும் ஜேசுதாசன் Should he be false, what should I do என்றும் அண்ணாமலையும் ∴ப்மனும் (if he leaves me now, what can I do?) என்றும் தங்கப்பா if he goes back on his pledge / what can I do? என்றும் மொழிபெயர்த்துள்ளனர். அண்ணாமலையும் ∴ப்மனும் ஏன் இதை அடைப்புக் குறிக்குள் தந்துள்ளனர் என்று தெரியவில்லை. 'தானது பொய்ப்பின்' என்பதை if he denies it my;yJ if he should lie அல்லது Should he be false என மொழிபெயர்ப்பது மூலப் பொருளுக்குக் கிட்டியதாகக் கொள்ளலாம். ஏனைய இரண்டும் உரை விளக்கம் போலுள்ளது.

"தினைத்தா ளன்ன சிறுபசுங் கால / ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் / குருகும் உண்டு" என்னும் இரண்டரை அடிகளையும் ராமானுஜன் ஆறு வரிகளில் மொழிபெயர்த்திருக்கிறார். கமில் சுவலபிலின் மொழிபெயர்ப்பு நான்கு வரிகளில் பின்வருமாறு அமைகின்றது. "Only a heron stood by, / its thin gold legs like millet stalks / eyeing the aaral fish / in the gliding water" இது ராமானுஜனின் மொழிபெயர்ப்புடன் பெருமளவு ஒத்திருக்கக் காணலாம். இவர் ஆரல் மீன் என்பதை அவ்வாறே எழுத்துப் பெயர்ப்புச் செய்திருக்கிறார். சொற்தேர்வுகள் வேறுபடுகின்றன. கருத்துச் சிதைவு இல்லை எனலாம். அண்ணாமலையும் ∴ப்மனும் செய்திருக்கும் மொழிபெயர்ப்பு பொரிதும் இதை ஒத்திருக்கின்றது. அது வருமாறு: Only a heron stood by, / its thin gold legs like millet stalks, / eyeing the aaral-fish / in the flowing water." ஜேசுதாசன் தம்பதியினரின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு: "... there was in our sight / Only the stork, with leg as thin as a wisp of straw, / That into the gliding water peered for prey." மற்ற நால்வரும் தினைத்தாள் என்பதை millet stalks/ stem என மொழிபெயர்க்க இவர்கள் அதைப் பொதுமைப்படுத்தி wisp of straw என மொழிபெயர்த்திருப்பது அவதானிக்கத் தக்கது. 'in our sight' என்பது ஒரு மேலதிக சேர்க்கை. தங்கப்பாவின் மொழிபெயர்ப்பு ஐந்து வரிகளில் பின்வருமாறு அமைகின்றது. "But there stood a heron / on slender, greenish legs/ shaped like a millet's stem / looking for fish in the shallow water." இங்கு டிரவ என்ற இணைப்பிடைச் சொல்லுக்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. 'there was no witness' என்று முன்பு சொன்னதற்கு ஒரு மாற்றாக, ஆயினும் ஒரு குருகு இருந்தது என்ற பொருள் தரத்தக்க வகையில் இதைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

'தான் மணந்த ஞான்றே' என்ற இறுதித் தொடரின் ஐந்து மொழிபெயர்ப்புகளையும் நோக்குவது சுவாரஸ்யமானது. இங்கு 'மணந்த' என்பது மணம் புரிந்த என்ற நேர்பொருளில் அன்றி, என்னோடு இணைந்த, என்னைப் புணர்ந்த என்னும் அர்த்தத்தில் இடம்பெறுவதாகக் கொள்ளலாம். மூன்று மொழிபெயர்ப்புகள் இப்பொருளில் பின்வருமாறு அமைந்துள்ளன.: 'when he took me' (ராமானுஜன்), 'on the day he took me' (கமில் சுவலபில்), 'when he embraced me' (அண்ணாமலை). ஆனால் ஜேசுதாசன் இதை 'when we met' என்றும், தங்கப்பா முன்குறிப்பிட்டதுபோல் 'When my lover wedded me secretly' என்றும் மொழி பெயர்த்துள்ளனர். இந்த வேறுபாடுகள் மொழிபெயர்ப்பாளரின் புரிதல், அவர்களின் தேர்வு அவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பன போன்ற பல விடயங்களில் தங்கியுள்ளன. என்னைப் பொறுத்தவரை இவ்வைந்து மொழிபெயர்ப்புகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமானுஜன், கமில் சுவலபில் ஆகியோரின் மொழிபெயர்ப்புகள் மூலத்துக்கு நெருக்கமாக உள்ளன என்பேன்.

## புறப்பாடல் ஒன்று

அகப் பாடல்களை மொழிபெயர்ப்பதை விட புறப் பாடல்களை மொழிபெயர்ப்பது ஒப்பீட்டளவில் இலகுவானது எனலாம். அகப்பாடல்கள் உள்ளுறைப் பொருளும் பூடகத் தன்மையும் மிக்கவை. அவ்வகையில் அதன் மொழி மறைபொருள் மிக்கது. ஒன்றைச் சொல்லி இன்னொன்றை உணர்த்துவது. ஆனால் புறப் பாடல் நேரடியானது, அவ்வகையில் அதன் மொழியும் நேரடியானது. இவ்வாறு சொல்வதன் மூலம் புறப் பாடலை மொழிபெயர்ப்பது சிக்கலற்ற இலகுவான பணி என்று பொருள்தராது. இதை விளக்குவதற்கு நாம் எல்லோரும் அறிந்த மிகப் புகழ் பெற்ற கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கவிதையின் நான்கு ஆங்கில மொழிபெயர்ப்புகளை எடுத்துக்கொள்கின்றேன். ஜி.யூ. போப், ஜோர்ஜ் எல் ஹார்ட், ராமானுஜன், தங்கப்பா ஆகியோரின் மொழிபெயர்ப்புகள் இவை. மூலக் கவிதை வருமாறு:

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்*
*இனிது என்று மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்*
*இன்னாது என்றலும் இலமே, மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ ஆனாது*
*கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே,*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறநானூறு 192)*

இக்கவிதை முழுவதும் தன்மைப் பன்மையில் கவிஞர் கூற்றாக அமைகிறது. இலம், தெளிந்தனம் ஆகிய தன்மைப் பன்மை வினைமுற்றுகள் இதைக் காட்டும். பிறிதொரு முக்கியமான அம்சம் இதில் பால் வேறுபாடு இன்மை. அதாவது இக்கவிதை ஆண்களை நோக்கியோ பெண்களை நோக்கியோ பேசவில்லை. பொதுவானது, மனிதரைப் பற்றியது. வாழ்க்கை உண்மையைக் கண்டறிந்த ஒரு தத்துவ தரிசனத்தின் கவித்துவ வெளிப்பாடு இக்கவிதை எனலாம். இக்கவிதையின் நான்கு மொழிபெயர்ப்புகளிலும் காணப்படும் வேறுபாடுகள் கவனத்துக்குரியவை. அவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு நோக்கலாம்.

ஊர் என்பதற்கு நிகரான ஆங்கிலச் சொல் எதுவும் இல்லை. Village, town, city settlement, place என்ற எதுவும் இதற்கு நேர் சமனி என்று சொல்ல முடியாது. எனினும் இவற்றுள் ஏதாவது ஒன்றைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. கவிதையின் தொடக்கமாக அமையும் 'யாதும் ஊரே' என்பதை நால்வரும் நான்கு விதமாக மொழிபெயத்துள்ளனர். அவை வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'To us all towns are one' (போப்), 'Every city is your city' (ஜோர் ஹார்ட்), 'Every town is our home-town' (ராமானுஜன்), 'All the world is our home' (தங்கப்பா).

ஏனையோர் தன்மைப் பன்மையைப் பயன்படுத்த ஜோர் ஹார்ட் மட்டும் முன்னிலையைப் பயன்படுத்தியிருக்கிறார். கவிதைச் சூழலைப் பொறுத்தவரை அவ்வாறு மொழிபெயர்ப்பதற்குக் காரணம் இல்லை. ஏனையோர் 'ஊர்' என்பதை town, city, home-town என்று மொழிபெயர்க்க தங்கப்பா மட்டும் All the world என ஒரு பெரும் பரப்பை உள்ளடக்கி மொழிபெயர்த்திருக்கிறார். 'யாதும் ஊரே' என்பதை முழு உலகும் வீடு எனப் பொருள்கொள்வது பொருத்தமாகப் படவில்லை.

'யாவரும் கேளிர்' என்பதற்கான மொழிபெயர்ப்பும் கவனத்துக்குரியது. யாவரும் என்பது பால் பாகுபாடற்ற பொதுச் சொல். ஆண், பெண் இருபாலாரையும் அது சுட்டும். ஆயினும் ஜோர் ஹார்ட்டைத் தவிர ஏனைய மூவரும் 'All men our kin' என்றோ (போப், தங்கப்பா), 'every man a kinsman' என்றோ (ராமானுஜன்) மொழிபெயர்த்துள்ளனர். ஜோர் ஹார்ட் மட்டும் அதனை 'Everyone is your kin' என மொழிபெயர்த்துள்ளார். அவர் இங்கும் முன்னிலை இடப்பெயரையே பயன்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது.

*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே,*

என்ற வரிகளுக்கான நான்கு மொழிபெயர்ப்புகளும் அர்த்தத்தில் கணிசமாக வேறுபடுகின்றன. அவற்றை நாம் இங்கு நோக்கலாம்.

1. "Life's good comes not from others' gifts, nor ill,
   Man's pains and pain's relief are from within,
   Death's no new thing" (போப்)

2. "Failure and prosperity do not come to you because others
   Have sent them! Nor do suffering and the end of suffering.
   There is nothing new in death." (ஜோர் ஹார்ட்)

3. "Good and evil do not come / from others
   Pain and relief of pain / Come of themselves
   Dying is nothing new" (ராமானுஜன்)

4. Good and evil / are not caused by others.
   Nor are suffering and relief" (தங்கப்பா)

தங்கப்பாவின் மொழிபெயர்ப்பில் 'சாவதும் புதுவதன்றே' என்ற முக்கியமான தொடர் விடுபட்டுள்ளது. இது தவறுதலான விடுபாடா, அல்லது தேவையற்றது என்று அதை விட்டாரா தெரியவில்லை. எவ்வகையிலும் ஒரு மொழிபெயர்ப்பில் இத்தகைய விடுபாடுகள் வரவேற்கத் தக்கதல்ல. ஜோர் ஹார்ட் இங்கும் அனாவசியமாக 'you' என்ற முன்னிலைப் பெயரைப் பயன்படுத்தியுள்ளார். ஜோர் ஹார்ட் தவிர ஏனையோர் 'தீதும் நன்றும்' என்ற தொடரின் சொல் ஒழுங்கை 'நன்றும் தீதும்' என மாற்றி இருப்பதும் கவனிக்கத்தக்கது. கவிதை வரிகள் என்ற வகையில் ராமானுஜனின் மொழிபெயர்ப்பு அதிக தாக்கமுள்ளது என்பது என்கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாகக் கவிதையின் உச்சமான கடைசி வரிகள் இரண்டும் எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதை நோக்கலாம்:

மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

1. We marvel not at the greatness of the great;
   Still less despise we men of low estate (போப்)
2. "... so we are not amazed
   at those who are great and even less do we despise the weak" (ஜோர்  ஹார்ட்)
3. "so / we are not amazed by the great,
   And we do not scorn the little ones (ராமானுஜன்)
4. "therefore, we neither marvel at the great
   Nor disdain the amall" (தங்கப்பா)

இந்த வரிகளைத் தமிழில் படித்துப் பழகியவர்களுக்கு இந்த ஆங்கில வரிகள் பெரிதும் திருப்தி தரா என்றே நம்புகின்றேன். மூலத்தின் கவித்துவ வீச்சு மொழிபெயர்ப்பில் முற்றிலும் கிடைக்காது என்பது உண்மையே. பண்டைத் தமிழின் மொழி அமைப்பு மிகவும் இறுக்கமானது. 'அதனினும் இலமே' என்பதை இன்றையத் தமிழில் கூட நாம் மொழிபெயர்க்க முடியாது. ஒருவேளை இவ்வரிகளை இன்றையத் தமிழில்

*"மாண்புடைப்*
*பெரியோரை வியந்து போற்றவும் மாட்டோம்*
*சிறியோரை இகழ்ந்து தூற்றவும் மாட்டோம்"*

என மொழிபெயர்ப்பது மூலத்துக்குக் கிட்டியதாக இருக்கலாம். ஆயினும் மூலம் வேறு மொழிபெயர்ப்பு வேறுதான். மொழிபெயர்ப்பில் மூலத்தின் பல அம்சங்கள் இழக்கப்படுகின்றன, சில அம்சங்கள் புதிதாகச் சேர்கின்றன. அதனாலேயே முழு நிறைவான மொழிபெயர்ப்பு என்று எதுவும் இல்லை என்று கூறுகின்றோம். அதனாலேயே கவிதை மொழிபெயர்க்க முடியாதது என்றும் படைப்புரீதியான ஒரு உருமாற்றம் மட்டுமே சாத்தியம் என்றும் ரோமன் யகோப்சன் கூறுகின்றார். இதுவரை நடைபெற்றுள்ள சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளைப் பொறுத்தவரை இது முற்றிலும் பொருந்தும் எனக் கூறலாம்.

இங்கு நாம் நோக்கிய மொழிபெயர்ப்பாளர் எல்லாரும் தமது புரிதலுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவகையில் சங்கப் பாடல்களுக்கு மறு உருவம் கொடுக்க முயன்றுள்ளனர். இவற்றுள் எவை நல்ல மொழிபெயர்ப்புகள் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை ராமானுஜன் ஒரு சிறந்த ஆங்கிலக் கவிஞர் என்ற வகையில் அவருடைய பெரும்பாலான சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் சங்கக் கவிதைகளை ஆங்கிலக் கவிதைகளாக உருமாற்றம் செய்வதில் பெருமளவு வெற்றிபெற்றுள்ளன என்றே தோன்றுகின்றது. மூலக் கவிதையின் அடி வரையறைக்குள் கட்டுப்படாமல் தன் மொழிபெயர்ப்பில் தற்காலக் கவிதை மரபை அவர் பேணுகிறார். தங்கப்பாவும் வேறு பலரும் அவரைப் பின்பற்றுவதாகத் தெரிகின்றது. இன்றைய வாசகர்களை மனங்கொண்ட இந்த முறை பழம் பாடலைப் புது வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்: பெ.மாதையனின் சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்

கந்தையா சண்முகலிங்கம்
முன்னாள் பணிப்பாளர்
(இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்)

சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் (2004) ஆறு கட்டுரைகளைக் கொண்டதும் 178 பக்கங்களையுடையதுமான சிறுநூல். சங்க இலக்கியம் பற்றி தமிழில் வெளிவந்துள்ள சிறப்பான ஆய்வு நூல்களில் இதுவும் ஒன்றாகும். பாவை பப்ளிக்கேசன்ஸ் இந்நூலை வெளியிட்டது. இந்நூல் பற்றிய மானிடவியல் நோக்கிலான அறிமுகம் ஒன்றை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும் ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச்சொத்துரிமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக் காலம்." என்று சங்க இலக்கிய காலத்தை நூலாசிரியர் வரையறை செய்கிறார். அத்தோடு இவ்வுண்மையைச் சங்க இலக்கியத்தை, 'மானிடவியல் நோக்கில் காண்போர் அறியலாம்' என்றும் கூறுகின்றார். (பக்.12) பெ.மாதையனின் நூல் தரும் செய்திகளையும், அவர் தம் ஆய்வு முடிவுகளையும் வசதிக்காக நான்கு தலைப்புக்களில் வகுத்துள்ளேன்.

1. அரசு உருவாக்கம்
2. சமூக உருவாக்கமும் வர்க்க வேறுபாடுகளும்
3. உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்கள்
4. உற்பத்தியின் பரிமாற்றம்

மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஆயினும் பகுப்பாய்வுத் தேவை கருதித் தனித்தனியாக இவை நோக்கப்படுகின்றன.

## 1. அரசு உருவாக்கம்

குலக்குழு அல்லது கூட்டம் (Band) இனக்குழுமம் (Tribe), குறுநில மன்னர் ஆள்புலங்கள் (chiefdoms) அரசு (State) என்ற நான்கு கூட்டங்கள் ஊடாக அரசு என்ற நிறுவன அமைப்புப் பரிணாமம் பெறுவதை மானிடவியலாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். இந் நான்கினுள் கூட்டம் என்பது அரசு இல்லா நிலையைக் குறிப்பிடுகின்றது. அடுத்த மூன்று கூட்டங்களும் முந்து நிலை அரசு முதல் அரசு வரையான (Pre-State to state) சமூகங்களைக் குறிக்கும். சங்க காலத்தில் அரசுருவாக்கத்தின் மூன்று படிநிலைகளைப் பெ.மாதையன் நூலின் துணையுடன் இவ்வாறு வகுத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மானிடவியலாளர்கள் குறிப்பிடும் படிநிலைகள் | சங்க இலக்கியங்கள் ஊடாகத் தெரியவரும் சமூகத் தலைமைகள் அரசு வடிவங்கள் |
|---|---|
| இனக்குழுச் சமுதாயம் குறுநில மன்னர் ஆள்புலம் அரசு | சீறூர் மன்னர் முதுகுடி மன்னர் குறுநிலமன்னர்கள் வேந்தர். |

## சீறூர் மன்னரும், முதுகுடி மன்னரும்

புறநானூற்றில் 285 முதல் 335 வரையான பாடல்கள் சீறூர் மன்னர் பற்றியன. 336 முதல் 355 வரையான பாடல்கள் முதுகுடி மன்னர் பற்றியன என்று மாதையன் எடுத்துக் காட்டியுள்ளார். (பக்.16) சீறூர் மன்னர் புன்செய் நிலங்களில் வாழ்ந்த மக்களின் தலைவர்களாவர். இவர்களது வாழிடம் வன்புலம் என்று அழைக்கப்படும். முதுகுடி மன்னர் சீறூர் மன்னர் போலல்லாமல் மருத நிலத்தை ஆண்டவராவர். வரகு, கொள், தினை, அவரை எனும் புன் செய்விளை பொருட்களே சீறூர் மன்னர் ஆண்ட பகுதி மக்களின் உணவுப்பொருட்களாகும். புறப்பாடல்கள் சீறூர்களைப் 'பருத்திவேலிச் சீறூர்' (299), கரம்பைச் சீறூர் (302) என்று குறிப்பிடுகின்றன. (பக்.16), சீறூர்களில் நெல் பயிரிடப்படவில்லை என்பதை 'புன்புலச் சீறூர் நெல் விளையாதே' (328) என்ற தொடர் விளக்கி நிற்பதையும் பெ.மாதையன் எடுத்துக் காட்டுகிறார். முதுகுடி மன்னர் ஒரெயில் மன்னன் (338) தண்பனைக் கிழவன் (342), தொல் குடி மன்னன் (353) என்று வருணிக்கப்படுகின்றான். முதுகுடி மன்னர் மருத நிலத்தை ஆண்டவர்களையும், மருத விளை வயல்களின் உடைமையாளர்களாயும் இருந்தனர். சீறூர் மன்னர் முல்லை நிலப்பகுதிகளிலும் குறிஞ்சி நிலத்திலும் வாழ்ந்தவர்களாவர்.

## குறுநில மன்னர்

புறநானூற்றுப் பாடல்களில் குறிப்பிடப்படும் குறுநில மன்னர்கள் வேளிர், மழவர், ஆவியர் முதலிய குடிவழி வந்தோராய் மலையும் மலைசார்ந்த பகுதிகளை ஆட்சி செய்தவர்களாய் உள்ளனர். வரட்சிக் காலத்திலும் வளம் தரும் மலைப்பிரதேசப் பொருளாதாரம் இவர்களின் வளர்ச்சிக்கு ஆதாரமாயிற்று. அதியமான், பாரி, காரி, ஆய், பேகன், ஓரி, பிட்டங்கொற்றன் போன்ற பல குறுநில மன்னர்கள் பற்றிப் புறநானூற்றின் வழி அறிகின்றோம். இவர்கள் கொடைப் பண்பு மிக்கவர்களாகப் பாராட்டப்பட்டுள்ளனர்.

## வேந்தர்

வேந்தர் பற்றி மாதையன் கூறியிருப்பதை மேற்கோளாக இங்கு தருகின்றேன். 'வம்ப வேந்தர் (புதிய மன்னர்கள்) (புறம் 287, 345) எனப்பெறும் மூவேந்தர் நெய்தல் நிலப் பகுதியையும், மருதநிலப் பகுதியையும் அடிப்படையாகக் கொண்டு ஆண்டுள்ளனர். இயற்கை வளம் மிகுந்த மலைப்பகுதிகளும் இவர்களால் கவரப்பட்டுள்ளன. பொருளாதாரப் பெருக்கத்திற்கு அடிப்படையாய் அமையும் நிலப்பகுதிகள் எல்லாம் இவர்களின் ஆளுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' (அகத் 5) எனத் தொல்காப்பியர் சுட்டியதைப் போல் இவர்கள் தங்களை வேந்தர் எனக் குறிப்பிட்டுக் கொண்டது. மருதநிலத் தலைவர்கள் என்பதன் அடிப்படையிலேயே ஆகும். (பக்.21). தென்னகத்தின் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளின் துறைமுக நகர்களின் வளர்ச்சியும், ஏற்றுமதி வர்த்தகமும், உள்நாட்டு வர்த்தகமும் விருத்தி பெற்றதும் பண்ட உற்பத்தியை அதிகரித்தது. மருத நிலப் பகுதிகளிலும் நெய்தல் நிலத்திலும் மையம் கொண்ட புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுகள் உருவாகின. இவை முல்லை, குறிஞ்சி ஆகிய நிலப்பகுதிகளிலும் தனது ஆள்புலத்தில் கொண்டு வந்து தம் எல்லையை விரிவாக்கும் போர்களில் ஈடுபட்டன. தமிழக நிலப்பரப்பில் முந்து வரலாற்றுக் காலத்தில் (கி.மு 300 - கி.பி. 300) ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் அரசு உருவாக்க வரலாற்றையும் ஆராயும் ஆங்கில நூல்கள், கட்டுரைகளை எழுதியவர்களின் மிகமுக்கியமான ஆய்வாளர்களாக ராஜன் குருக்கள், சுதர்சன் செனிவிரத்தின, ஆர்.எஸ். கென்னடி என்ற மூவரை பேராசிரியர் கா. இந்திரபால குறிப்பிடுகின்றார். தமிழில் கா. சுப்பிரமணியன் (1982) ர. பூங்குன்றன் ஆகியோரும் பெ.மாதையன் அவர்களும் இவ்விடயம் பற்றி எழுதியோருள் குறிப்பிடத்தக்கவர்கள் எனலாம்.

அரசு என்ற நிறுவன வடிவம் முழுமை பெறும் போது அது பின்வரும் உப முறைகளை (Sub system) கொண்டதாய் விரிவடைகின்றது என்பதை மானிடவியலாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

1. குடிமக்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல், அடையாளம், ஆள்புல எல்லைகள் என்பன முக்கியம் பெறும்.
2. நீதி நிர்வாகம் - சட்டம், நீதிபதிகள்.
3. சட்டநிறைவேற்றம் - நிரந்தர இராணுவமும், காவல் படையும்.
4. வரி விதிப்பும், வரி அறவீடும்.

இந்த நான்கு முறைகளையும் ஒன்றிணைத்து ஆள்வோர் குழு தோற்றம் பெறும். இக்குழுவில் குடியியல் (சிவில்) இராணுவ அதிகாரிகளும் சமய துறைத் தலைவர்களும் அடங்குவர். சங்ககால முழு நிறைவுடைய அரசுகளின் தோற்றம் முற்றுப்பெறவில்லை என்றே கூறலாம்.

## 02. சமூக உருவாக்கமும், வர்க்க வேறுபாடுகளும்

புறநானூற்றுப் பாடல்களில் வரும் சீறூர்த்தலைவர்கள் உடைமையோ, கைப்பொருளோ இல்லாதவர்கள் (327, 313) மிகுந்த ஏழ்மை நிலையில் வாழ்பவர்கள் (331), இரவலர்களைப் பேணுவதற்காக பொருளைக் கடனாகப் பெறுபவர்கள் (316,327) என்று குறிப்பிட்டுள்ளனர். சீறூர்த்லைவியரின் விருந்தோம்பல் பண்பையும், ஊரவர்களின் பசியைப் போக்கும் அவர்தம் இயல்பையும் சில பாடல்கள் சித்திரிக்கின்றன. இரவலர்க்கு அளித்ததால் வரகு, தினை முதலான உணவுப் பொருட்கள் தீர்ந்து போன நிலையில் விதைக்கென வைத்திருந்த தினையை உரலிலிட்டு இடித்துச் சமைக்கும் சீறூர்த் தலைவியை ஒரு பாடல் (புறம் 333) சித்திரிக்கின்றது.

சீறூர் தலைவர்களுக்கு அடுத்த உயர் நிலையில் உள்ளவராக முதுகுடி மக்கள் இருப்பதை புறநானூற்றுப் பாடல்கள் (336-355) கொண்டு அறிய முடிகிறது. முதுகுடி மன்னர் மருத நிலச்சமுதாயத் தலைவர்களாய் இருந்தனர். அவர்கள் விளைவயல் களின் உடைமையாளர்களாகவும் இருந்தனர். தண்பணையூர் (341) நெடுநல் ஊர் (343) கதுவாய் மூதூர் (350) கன்று மேய்ந்து உக;ர் (385) எனப்பல பாடல்களில் முதுகுடி மன்னரின் மருதநில வளமும், உழுதொழில் உற்பத்தியால் கிடைத்த செல்வ வளமும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. முதுகுடி மன்னரின் செல்வ வளத்தால் கவரப்பட்ட வேந்தர்கள் அவ்வூர்கள் மீது போர் தொடுத்து விளை வயல்களை பாழ்படுத்தியும் கொள்ளையிட்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் நாட்டெல்லையை விரிவாக்கியும் அழிவுகளை ஏற்படுத்தியதையும் இப்பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

முதுகுடி மன்னரை விட பொருளாதார பலத்திலும், வலிமையிலும் மேம்பட்டவர்களாக குறுநில மன்னர்கள் இருந்தனர். இயற்கைவளம் நிறைந்த மலைப்பகுதிகளின் தலைவர்களான குறுநில மன்னர்களது ஆள்புலம் 'நாடு' என்று அழைக்கப்பட்டது.

தேர்வண் பாரிதண் பறம்புநாடே(118) என பாரியின் நாடும், பெண்ணையம் படைப்பை நாடு கிழவோயே (126) எனக் காரி ஆண்ட பகுதியும் குறிப்பிடுவதை மாதையன் எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறே ஆய், பேகன், பிட்டங்கொற்றன் ஆகிய குறுநில மன்னர்களும் 'நாடு' என வருணிக்கப்பட்ட வளம் பொருந்திய பகுதிகளை ஆண்ட மன்னர்களாகக் காணப்படுகின்றனர்.

வேந்தர்கள் அகழியும் மதிலும் உடைய அரண்மனைகளில் வாழ்வோராகவும், நாட்டையும் அரச செல்வத்தையும் வழிவழியாய் பெற்றவர்களாயும் இருந்ததை காண்கின்றோம். யாணர் வைப்பின் நன்னாட்டு பொருந (புறம் 2) விழுநீர்வேலி நாடு கிழவோன் (13) நாடு கெழு செல்வத்துப் பீடு கெழு வேந்து (35) எனப்பலவாறு வேந்தர்களின் செல்வச் செழிப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சமூக உருவாக்கம் (Social Formation) சமூக அடுக்கமைவும் வர்க்க வேறுபாடும் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் மானிடவியலாளர்கள் மூவகை சமுதாயங்களை அடையாளம் கண்டுள்ளனர். அம்மூவகை சமுதாயங்களையும், சங்ககால சமூகத் தலைவர்களையும் மன்னர்களையும் எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பதை மேல்வருமாறு வகுத்துக் கூறலாம்.

**சமுதாய வகை**

| | |
|---|---|
| 1. சமத்துவ சமுதாயங்கள்<br>2. தரநிலைச் சமுதாயங்கள்<br>3. அடுக்கமைவுடைய வர்க்க சமுதாயங்கள் | சங்ககாலத் தலைமைகளும் மன்னர்களும் சீறூர்த் தலைவர்கள், முதுகுடி மன்னர்கள், குறுநில மன்னர்கள், வேந்தர்கள் ஆட்சி செய்த பகுதிகள் |

இம் மூவகைச் சமுதாயங்களின் இயல்புகள், அவற்றின் பொருளதாரம், அரசுமுறை என்பனவற்றை பக்கத்தில் உள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

**சமத்துவ சமுதாயங்கள், தரநிலைச் சமுதாயங்கள், அடுக்கமைவுடைய சமுதாயங் கள் என்பனவற்றுக்கிடையிலான ஒப்பீடு.**

**வகை** சமத்துவ சமுதாயம் (Egalitarian Society)

**இயல்புகள்** அந்தஸ்து வேறுபாடு பரம்பரையாகப் பெறப்படுவதில்லை. வயது, பால், தனிநபரின் திறமை அடிப்படையிலேயே வேறுபாடுகள் இருக்கும்.

**பொருளியல் முறை** வேட்டை உணவு சேகரிப்பு

சமூக அமைப்பு குலக்குழு (Band) இனக்குழுச் சமுதாயம் (Tribe)

**சங்க இலக்கிய உதாரணம்**

சீறூர்த்தலைவர்கள் வாழிடம்

**வகை** தரநிலைச் சமுதாயம் (Ranked Society)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயல்புகள்** அந்தஸ்து பரம்பரையாகப் பெறப்படுவது தரவரிசை இருக்கும். உயர்ந்தோர், தாழ்நிலையில் உள்ளோர். என இரு பிரிவினர் இருப்பர்.

**பொருளியல் முறை** வேட்டை வன்புல விவசாயம் மந்தை மேய்ப்பு

**சமூக அமைப்பு** குறுநில மன்னர்களின் சிற்றரசுகள் (Chiefdoms) இனக்குழு சமுதாயம்

**சங்க இலக்கிய உதாரணம்** முதுகுடி மன்னர்

**வகை** அடுக்கமைவுச் சமுதாயம் (Stratified Society)

**இயல்புகள்** அந்தஸ்து வேறுபாடுகள் பரம்பரையாக பெறப்பட்டவை பிரபுக்கள் - சாதாரண மக்கள் என்ற தெளிவான பிரிவும் அடுக்கமைவும் இருக்கும்

**பொருளியல் முறை** விவசாயம்

**சமூக அமைப்பு** நாடு, மவண்டலம், அரசு (State)

**சங்க இலக்கிய உதாரணம்** வேந்தர்

## 03. உற்பத்தி முறை மாற்றங்கள்

மனித வரலாற்றில் உற்பத்தி முறைகள் நான்கு படிநிலைகளில் வளர்ச்சி பெற்றன என மானிடவியலாளர்கள் கூறுவர்.

அ. வேட்டையாடி உணவு சேகரித்தல்

ஆ. கால் நடைவளர்த்தல்

இ. எளிமையான வேளாண்முறை (உழுது பயிரிடும் முறைக்கு முந்திய வேளாண்மை, காட்டெரிப்பு வேளாண்மை, தோண்டு கழி கொண்டு விதைத்தல் முதலியன.

ஈ. பண்பட்ட வேளாண்மை (உழுதல் வேளாண்மை) (பக்தவத்சல பாரதி பக். 462)

சமூக அமைப்பு முறை, உற்பத்தி முறை, அரசு முறை என்பன ஒன்றோடொன்று பொருந்தி அமைவதை பெ.மாதையன் ஆய்வு தரும் செய்திகளைக் கொண்டு பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

**சங்ககாலச் சமுதாயம் - சமூக அமைப்பு, வாழிடம், உற்பத்தி முறை, அரசு முறை சமூக அமைப்பு** இனக்குழுச் சமுதாயம் சமத்துவ சமுதாயம் முல்லை.

**வாழிடம்** குறிஞ்சி, பாலை

**உற்பத்தி முறை** வேட்டை, உணவு சேகரிப்பு வன்புல வேளாண்மை

**அரசுமுறை** சீறூர்த் தலைவர்கள்

**சமூக அமைப்பு** மாற்றமுறும் இனக்குழு சமுதாயம், தரநிலச் சமுதாயம்

**வாழிடம்** மருத நிலம்

**உற்பத்தி முறை** உழவு வேளாண்மை

**அரசு முறை** முதுகுடி மன்னர்

**சமூக அமைப்பு** மாற்றமுறும் இனக்குழு சமுதாயம், தரநிலைச் சமுதாயம்

**வாழிடம்** குறிஞ்சி, முல்லை வன்புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்பத்தி முறை** எளிமையான வேளாண்மை, கால்நடை வளர்ப்பு

**அரசு முறை** குறுநில மன்னர்கள்

**சமூகஅமைப்பு** அடுக்கமைவுடைய சமுதாயம்

**வாழிடம்** மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை பருநிலைப் பிராந்தியம் (Macro-Region)

**உற்பத்தி முறை** நெல் வேளாண்மை பண்ட உற்பத்தி

**அரசுமுறை** வேந்தர்

**உற்பத்தியின் பரிமாற்றம்**

மனிதர் தம் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு பண்டங்களையும், சேவைகளையும் பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். இப்பரிவர்த்தனை மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது. சந்தை முறை (Market System) மறுபங்கீடு (Redistribution) பரிமாற்றம் (Reciprocity) என்பனவாக இவற்றை வகைப்படுத்தலாம். வளர்ச்சியடைந்த சமூகங்களில் சந்தைமுறை முதன்மை பெற்றிருக்கும். இனக்குழுச் சமுதாயங்களில் மறுபங்கீடு, பரிமாற்றம் என்ற இரண்டு நிகைளில் இடம்பெறும் பரிவர்த்தனையே முதன்மையிடத்தைப் பெறுகின்றன. இவற்றுள் பரிமாற்றம் என்ற வகைப்பட்ட பரிவர்த்தனை பற்றி இங்கு கவனம் செலுத்துவோம். சமூக நிலையில் சமத்துவமானவர்களிடையே நிகழும் பரிவர்த்தனையே பரிமாற்றம் ஆகும். இது மூவகைப்படும்.

1. பொதுப்படையான பரிமாற்றம் (Generalised reciprocity)
2. சமச்சீர் பரிமாற்றம் (Balanced)
3. எதிர்மறைப் பரிமாற்றம் (Nagative)

இவற்றுள் பொதுப்படையான பரிமாற்றம் கடப்பாடு எண்ணம் மிகுந்த உறவுக் கூட்டத்துள் நிகழும். இனக்குழு சமுதாயத்தைச் சேர்ந்த சீறூர்த் தவைர்கள் விருந்தோம்பல் பண்புடையவர்களாக போற்றப்படுகின்றனர். மூதின் முல்லை, வல்லான் முல்லைப் பாடல்கள் பொதுத் துய்ப்பு சீறூர் சமுதாயத்தில் வந்ததைக் காட்டுகின்றன. தலைவி ஊரோடு (புறம் 318), உடும்பை அறுத்துச் சுட்டுக் கறியைப் பகுத்துக் கொடுத்தமை (325), இருந்த வரகும் தினையும் இரவலர்க்கு அளித்தமையால் தீர்ந்து போனமை (328) என்பன போன்ற செய்திகள் இதற்குச் சான்றாக அமைகின்றன என மாதையன் குறிப்பிடுகின்றார். (மாதையன் 209:136)

உடைமைச் சமுதாய வளர்ச்சிக் கட்டத்தில் விருந்தோம்பல் (பரிமாற்றம்), கொடை (மறுபங்கீடு) என்ற இரண்டும் இனக்குழுச்சமுதாயத்தின் எச்சங்களாக நிலைத்திருந்தன. ஆழிந்து கொண்டு செல்லும் இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களாக அமையும் விருந்தோம்பல் கொடை என்பன உடைமைச் சமுதாயத்தில் உயர் விழுமியங்களாக இலட்சியப்படுத்தப்பட்டன. சங்ககாலத்திற்குப் பின்னர் தோன்றிய திருக்குறளில் உடைமைச் சமுதாயத்தின் நிறுவனங்களில் ஒன்றாகிய குடும்பம் இலட்சியப்படுத்தப்படுவதோடு, குடும்பத்தின் உயர் விழுமியமாக விருந்தோம்பல் கூறப்பட்டது.

வேந்தர் சமுதாயத்தில் போற்றப்படும் கொடை 'வரிசை அறிந்து' வழங்கும் கொடையாக மாறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெ.மாதையனின் 'சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்' என்னும் தலைப்பில் எழுதியிருக்கும் நூலினை மானிடவியலாளர் கூறும் கருத்துக்களின் பின்னணியில் இக்கட்டுரையில் அறிமுகம் செய்துள்ளேன்.

## சங்க இலக்கியம் பற்றிய புதிய நோக்கிலான ஆய்வுகள்

Early Historic Tamilnadu (C300 BCE – 300 CE) (முந்துவரலாற்றுக் காலதமிழகம்) என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலின் பதிப்பாசிரியரான கா. இந்திரபால அந்நூலுக்கு எழுதிய அறிமுக கட்டுரையில் ஆங்கிலம் வழி வெளிவந்த அண்மைக்கால ஆய்வுகள் பற்றிய அறிமுகத்தையும் விமர்சன மதிப்பீட்டையும் தந்துள்ளார். (இந்திரபாலா 2009: 1) தமிழகத்தின் முந்து கால வரலாற்று ஆய்வுக்கு இந்திய வரலாறு பற்றிய 'ஒருங்கிணை அணுகுமுறை' உதவியாக அவர் கூறுகின்றார்.

புதிய ஒளியைப் பாய்ச்சும் இந்திய வரலாறு பற்றிய ஒருங்கிணை அணுகுமுறை உருவானது. இந்நோக்கு திருந்திய விஞ்ஞான முறையியலையும், எண்ணக்கருக்கள் என்ற வகையில் முக்கியமான ஆய்வு வரைச் சட்டங்களையும் பயன்படுத்தியது. இதன் பயனாக மிகுந்த பயனுள்ள நோக்குமுறைகள் தோற்றம் பெற்றன. இவை கடந்த காலம் பற்றிய புதிய பார்வையை வழங்கின (ஆர். சம்பகலக்சுமி இந்திரபால (2009:3) மேற்கோள்) வரலாற்றுத் துறையில் ஏற்பட்ட புதிய ஒளிப்பாய்ச்சல்கள் ஆறு விடயங்கள் சார்ந்தன என்றும் இந்திரபாலா கூறுகின்றார். அவை பின்வருமாறு,

1. சமஸ்கிருதமயமாதல் - ஜோர்ஜ் எல்.ஹார்ட் ஆய்வு முக்கியமானது
2. வர்த்தக விருத்தியும் நகரமயமாக்கலும் - கிளாரன்ஸ் மலோனி, ராஜன் குருக்கள் ஆகியோர் முக்கிய ஆய்வுகளை எழுதினர்.
3. திணைக்கோட்பாடு – கா.சிவத்தம்பி, ராஜன் குருக்கள், சம்பக லக்சுமி, சுதர்சன் செனவிரத்தின ஆகியோர் முக்கிய பங்களிப்பை நல்கினர்.
4. விவசாய உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் - ராஜன் குருக்கள், சம்பக லக்சுமி ஆகிய இருவரும் இத்துறையில் முன்னோடிகள்
5. அரசு முறை மாற்றம் - சுதர்சன் செனவிரத்தின, ராஜன் குருக்கள், ஆர்.எஸ். கென்னடி ஆகியோர்.

கா.இந்திரபாலா 20 வரையான ஆய்வாளர்களின் பட்டியலைத் தந்து அவர்களின் பங்களிப்பைப் பாராட்டிப் பேசுகின்றார். இவர்கள் இருவரையும் உள்ளடக்கிய இரு குழுக்களை அடையாளம் காணலாம்.

1. அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம் ஆகிய மேற்கு நாட்டு பல்கலைக் கழகங்களில் ஆய்வுகளை சமர்ப்பித்தோர்.
2. புதுடெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சார்ந்து ஆய்வுகளைச் செய்தோர். தமிழில் எழுதிய ஆய்வாளர்கள் பற்றி இந்திரபாலா எதனையும் குறிப்பிடவில்லை.

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள ஆய்வுகளின் கருத்துக்களை பெ.மாதையன் எந்தளவுக்கு உள்வாங்கியுள்ளார். அவரது ஆய்வின் தரத்தை ஏனைய ஆங்கில தமிழ் ஆய்வுகளுடன் எப்படி ஒப்பீடு செய்து மதிப்பிடலாம் என்ற விடயம் தனித்து ஆராயப்பட வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரபாலா குறிப்பிடும் ஆய்வாளர்களில் கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, ஐராவதம் மகாதேவன், கா.இராஜன் ஆகிய ஆய்வாளர்களின் கருத்துக்கள் பெ.மாதையன் அவர்களின் ஆய்வில் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்திரபாலா குறிப்பிடாதவர்களான ராஜ் கௌதமன், ர.பூங்குன்றன், நா. வானமாமலை, கா.சுப்பிரமணியன் ஆகியோரையும் பெ.மாதையன் மேற்கோள் காட்டியுள்ளார்.

**உசாத்துணை நூல்கள்**

K.Indirapala (ED) Early Historic Tamilnadu C.300 BCE – 300 CE< Kumaran Press, Colombo (2009)

கி. பக்தவத்சலபாரதி பண்பாட்டு மானிடவியல் (1990) மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

பெ.மாதையன் சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும் பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை (2004)

பெ.மாதையன் தமிழ்ச் செவ்வியல் படைப்புக்கள் கவிதையியல், சமுதாயவியல் நோக்கு என்.சி.பி.எச், சென்னை (2009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க அகத்திணை இலக்கியங்களில் தலைவியின் அழுகுரல் குறுந்தொகையை முன்வைத்து ஒரு நோக்கு

பேராசிரியர் துரை. மனோகரன்
தமிழ்த்துறை, பேரதனைப் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியம் கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி.3ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றியுள்ளது. தமிழ் இலக்கிய வளர்ச்சியின் தோற்றுவாயாக விளங்கும் இது, தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலான பல விடயங்கள் பற்றியும் இலக்கியரீதியாகப் பேசுகிறது. இலக்கியம் வெறுமனே ரசனை உணர்வுக்கு மாத்திரம் உரியதல்ல. அதன் அழகியல் போற்றப்படவேண்டும். அதேவேளை, அதன் சமுதாயப் பிரதிபலிப்பையும் நாம் கண்டுகொள்ளவேண்டும். சங்க இலக்கியங்களின் ஒரு பகுதியான அகத்திணை இலக்கியங்கள் காதல் பாடல்களைக் கொண்டுள்ளன என்று பொதுவாகச் சொல்லப்படினும், தலைவியரின் பிரச்சினைகளையும் அவை பெரும்பாலும் உணர்த்துகின்றன.

சங்ககால அகத்திணை இலக்கியங்களில், அக்காலத்துப் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பது காட்டப்படுகின்றது. சங்க அகத்திணை இலக்கியங்களில் தலைவியரின் கூற்றுகளில் பெரும்பாலானவை ஆண்கள் பற்றிய விமர்சனங்களாகவும் இருப்பதை நோக்கமுடிகிறது. ஆணாதிக்கம் ஆண்களுக்கு வழங்கியுள்ள வசதிகள் பெண்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதையும் சங்க அகத்திணை இலக்கியங்களின் தலைவியரின் கூற்றுகள் உணர்த்துகின்றன. ஆணாதிக்க சமுதாயத்தின் மனோபாவங்களைச் சங்க அகத்திணை இலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன எனலாம்.

ஆணாதிக்க சமுதாயத்தின் அடிப்படையிலேயே சங்ககாலத்து வாழ்வியலும் அமைந்திருந்தது என்பதைச் சங்க அகத்திணைப் பாடல்கள் உணர்த்துகின்றன. அகத்திணைப் பாடல்களில் கணிசமானவற்றில் தலைவியரின் அழுகுரல்களையே கேட்கமுடிகிறது. சங்க இலக்கியத்தில் தலைவிகளின் அழுகுரல்கள், அக்காலக் கவிஞர்களின் வெறும் கற்பனையே என நாம் ஒதுக்கிவிடமுடியாது. இக்கட்டுரையில் சங்க அகத்திணை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையை அடிப்படையாகக் கொண்டு, தலைவிகளின் அழுகுரல்கள் நோக்கப்படுகின்றன.

குறுந்தொகையில் 401 பாடல்கள் உள்ளன. இவற்றுள் ஏறத்தாழ 182 பாடல்கள் தலைவி கூற்றாக அமைந்துள்ளன. அவற்றுள் சுமார் 85 பாடல்கள் தலைவியின் அழுகுரலோடு தொடர்பானவையாக விளங்குகின்றன. குறுந்தொகையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, தலைவி கூற்றுகளில் பெரும்பாலானவை தலைவனைப் பிரிந்த தலைவியின் பிரிவுத்துயரை வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன. தலைவியின் பிரிவுத்துயர் இரு வகையாகக் காணப்படுகின்றன.

1. தற்காலிகப் பிரிவு
2. நிரந்தரப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகப் பிரிவுக்கான முக்கிய காரணம், பொருள் தேடும் முயற்சிகளில் தலைவர்கள் ஈடுபட்டமையாகும். அந்தத் தற்காலிகப் பிரிவையே தாங்கமுடியாத தலைவிகளும் குறுந்தொகையில் காட்டப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக வெண்பூதியின் பாலைத்திணை சார்ந்த பாடலைக் காட்டலாம்.

*அத்தம் அரிய என்னார் நத்துறந்து*
*பொருள்வயிற் பிரிவார் ஆயின் இவ் உலகத்துப்*
*பொருளே மன்ற பொருளே*
*அருளே மன்ற ஆருமில் லதுவே.*

இன்னொரு பாடலில் ஒக்கூர் மாசாத்தி முல்லைத்திணை சார்பாகப் பாடும்போது பின்வருமாறு கூறுகிறார்:

*இளமை பாரார் வளம்நசைஇச் சென்றொர்*
*இவணும் வாரார் எவணரோ?*

கச்சிப்பேட்டு நன்னாகையாரின் ஒரு பாடலில் தலைவி பின்வருமாறு கேட்கிறாள்: பாலை நிலத்தைக் கடந்து வன்னெஞ்சினராக என்னைப் பிரிந்துசென்ற தலைவர், தாம் சென்ற நாட்டில் பொருளையாவது ஈட்டினாரா? போனபோன இடங்களிலே மிருகங்கள், பறவைகள் ஜோடியாக, அந்நியோன்யமாக வாழ்வதைப் பார்த்தாவது அவர் தன்னை நினைக்கக்கூடாதா என்று குறுந்தொகையின் சில தலைவிகள் கேட்கிறார்கள்.

அதேவேளை, இன்னொரு வகையானவை, மருதநிலத்துத் தலைவர்கள் மனைவியரைப் பிரிந்து பரத்தையரை நாடிச்செல்வதாகும். மருதத்திணை சார்ந்த பாடல்களில் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. தலைவர்கள் பரத்தையரை நாடிச்செல்வதனால், தலைவிகள் வேதனையோடு அப்பிரிவைத் தாங்கிக்கொள்ளவேண்டி ஏற்படுகிறது. அதற்கு உதாரணமாக அள்ளூர் நன்முல்லையாரின் மருதத்திணைப் பாடல் வரிகளை நோக்கலாம்.

*நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே...*
*இனிய செய்தநம் காதலர்*
*இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே*

தலைவர் தலைவியர் இடையேயான நிரந்தரப் பிரிவுக்கு முக்கிய காரணம், தலைவர்கள் தலைவியருடன் பழகிவிட்டு, திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்துவிட்டு, அவர்களை விட்டு விலகிச்செல்வதாகும். இத்தகைய பல பாடல்கள் குறுந்தொகையில் உள்ளன. இது தொடர்பாகக் கபிலரின் குறிஞ்சித்திணை சார்ந்த அற்புதமான பாடல் ஒன்று உள்ளது.

*யாரும் இல்லைத் தானே கள்வன்*
*தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ*
*தினைத்தாள் அன்ன சிறுபசுங் காஅல*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே*

என்பது அப்பாடல். யாரும் இல்லாத வேளையில் தலைவன் தன்னோடு பழகிவிட்டு, தன்னை ஏமாற்றிவிட்டான் எனவும், அவன் தனக்கு அளித்த வாக்குறுதியை அவனே மீறிவிட்டால் தன்னால் என்ன செய்யமுடியும் என்றும், தாம் இருவரும் பழகியமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு சாட்சி நாரை மட்டுமே எனவும் தலைவி வேதனையோடு குறிப்பிடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. கள்வன் என்ற சொல்லுக்குக் களவன் என்ற இன்னொரு பாடமும் உண்டு. சாட்சி என்பது அதன் பொருள். இதுபோன்ற இன்னொரு பாடலும் குறிப்பிடத்தக்கது. வருமுலையாரித்தி என்ற பெண்பாற்புலவர் குறிஞ்சிநிலத்துத் தலைவி ஒருத்தியின் நிலையைப் பின்வருமாறு அவளின் கூற்றாகச் சித்திரிக்கிறார்:

*ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்*
*பல்நாள் வந்து பணிமொழி பயிற்றிஎன்*
*நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை*
*வரைமுதிர் தேனின் போகியோனே*
*ஆசுஆகு எந்தை யாண்டுளன் கொல்லோ*
*வேறுபுலன் நல்நாட்டுப் பெய்த*
*ஏறுடை மழையின் கலுழும் என்நெஞ்சே.*

தலைவனது பிரிவினால், தமது அழகு வீணாகப்போய்விட்டது என்று கவலைப்படும் பல தலைவியர்களைக் குறுந்தொகையில் காணமுடிகிறது. இவ்வகையில் நெய்தல் திணை தொடர்பாக வெண்பூதி பாடிய ஒரு பாடல் பின்வருமாறு அமைகிறது:

*யானே ஈண்டை யேனே என்நலன்*
*ஆனா நோயொடு கானல் அஃதே*
*துறைவன் தம் ஊரானே*
*மறை அலராகி மன்றத் தஃதே.*

தான் தன் இடத்தில் இருப்பதாகவும், தனது அழகு மிகுந்த வேதனையோடு கடற்கரைச் சோலையில் இருப்பதாகவும், நெய்தல்நிலத் தலைவன் தனது ஊரில் இருப்பதாகவும், தங்கள் இருவருக்கும் இடையிலான காதல் இரகசியம் பலரும் அறியத்தக்க பொருளாகி, மக்கள் கூடும் பொது இடத்தில் இருப்பதாகவும் தலைவி தனது துயரத்தைத் தெரிவிக்கிறாள். அம்மூவன் பாடிய நெய்தல் திணை சார்ந்த பாடல் ஒன்றில் விழவு மேம்பட்ட என் நலனே... தண்ணம் துறைவனொடு கண்மாறின்றே என்று தலைவி கூறி வருந்துகிறாள். விழாக்களை விடச் சிறப்பான தனது அழகு நெய்தல்நிலத் தலைவனோடு இடம்மாறிச் சென்றுவிட்டது என்று அவள் கூறுகின்றாள்.

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன் பாடிய குறிஞ்சித்திணை சார்ந்த பாடலில் அன்னை ஓம்பிய ஆய்நலம் என்னை கொண்டான் யாம் இன்னமால் இனியே என்று தலைவி கூறுகின்றாள். தனது தாய் பாதுகாத்துப் பேணிய தனது அழகைத் தனது தலைவன் தன்னோடு கொண்டுசென்றுவிட்டதாகவும், தனக்கு இனிமேல் அந்த அழகு கிடையாது என்றும் தலைவி குறிப்பிடுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இதுபோன்ற இன்னொரு தலைவியை வெள்ளிவீதியார் வேறு ஒரு வகையால் காட்டுகிறார்:

*கன்றும் உண்ணாது கலத்தினும் படாது*
*நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காங்கு*
*எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது*
*பசலை உணீஇய வேண்டும்*
*திதலை அல்குல் என் மாமைக்கவினே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைத்திணை சார்ந்த இப்பாடலில், நல்ல பசுவின் இனிய பால், அதன் கன்றினாலும் உண்ணப்படாது, பாத்திரத்திலும் எடுக்கப்படாது, வீணாக நிலத்தில் ஊற்றப்படுவதைப் போல், தனது சிறந்த அழகு தனக்கும் உதவாமல், தன் தலைவனுக்கும் பயன்படாமல் பசலை உண்கின்றது என்ற தலைவி கூற்று இடம்பெற்றுள்ளது.

தலைவனின் பிரிவு காரணமாகத் தலைவி படும் துன்பம், நெய்தல் சார்ந்த ஒரு பாடலில் வேறு ஒரு விதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவன் பிரிந்துசென்றமை காரணமாகத் தான் மட்டும் துன்பப்படுவதாகவும், உலகத்தவர்கள் அமைதியாகத் தூங்குகின்றனர் எனவும் ஒரு தலைவி புலம்புவதாகப் பதுமனார் பாடுகின்றார்:

*நள்ளென் றன்றே யாமம் சொல்அவிந்து*
*இனிது அடங்கினரே மாக்கள் முனிவுஇன்று*
*நனந்தலை உலகமும் துஞ்சும்*
*ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.*

இதே பாடலைப் பின்பற்றிப் பின்வரும் திரைப்படப் பாடல் ஒன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது:

*ஊருசனம் தூங்கிடிச்சு*
*ஊதல்காத்தும் அடிச்சிருச்சு*
*பாவிமனம் தூங்கலையே.*

உற்றார், உறவினர், ஊரார் நிம்மதியுடன் உறங்கிக்கொண்டிருக்க, தான் மட்டும் நிம்மதி இழந்து தவிப்பதா என்ற நிலையில் ஒரு தலைவி படும் அவதி ஒரு பாடலில் காட்டப்படுகிறது. தலைவனின் பிரிவினால் ஏற்பட்ட விரக்தி, ஒரு தலைவியை வன்முறையில் ஈடுபடத் தூண்டுவதாக ஔவையாரின் இப்பாடல் அமைந்துள்ளது. பாலைத்திணைக்குரிய பாடலாக இது விளங்குகிறது.

*மூட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்*
*ஓரேன் யானும் ஓர்பெற்றி மேலிட்டு*
*ஆஅ ஒல்எனக் கூவுவேன் கொல்*
*அலமரல் அசைவளி அலைப்பஎன்*
*உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.*

தலைவியரின் அழுகுரல்களும் கேட்கும் குறுந்தொகையின் பாடல் ஒன்றில், தலைவனைப் பிரிந்து வாடும், வாழும் தலைவி ஒருத்தியின் நிலை பிறிதொரு விதமாகக் காட்டப்படுகிறது. தனது அழுகையைத் தீர்ப்பவர்கள் யாரும் இல்லையே என்று வருந்துபவளாகக் கடுவன் மள்ளன் என்ற புலவர் அவளைச் சித்திரிக்கிறார். குறிஞ்சித்திணைக்குரிய அப்பாடலில் தலைவி, அழாஅல் என்றுநம் அழுதகண் துடைப்பார் யார் ஆகுவர்கொல் தோழி... என்று தனது தோழியிடம் கேட்கிறாள்.

பிரிவுத்துயரால் வருந்தும் பிறிதொரு தலைவியைக் கோக்குளமுற்றன் என்னும் புலவர் காட்டுகிறார். தலைவனைப் பிரிந்துவாழும் தனது சோகநிலையை யாராவது தலைவனிடம் தெரிவித்தால் நன்றாக இருக்குமே என்று முல்லை நிலம் சார்ந்த தலைவி தனது தோழியிடம் கூறுவதாக அப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இன்னள் ஆயினள் நன்னுதல் என்று அவர்த் துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே நன்றுமன் வாழிதோழி என்று அவள் கூறும்முறை நன்றாகவே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் காதலித்த தன் தலைவன் நல்லவன் அல்லன் என்பதைக் காலப்போக்கில் உணரும் தலைவி ஒருத்தியும் குறுந்தொகையில் காட்டப்படுகிறாள். ஔவையாரின் பாடல் ஒன்றில் அவ்வாறான ஒரு தலைவி இடம்பெறுகிறாள். தனது தலைவன் நல்லவன் அல்லன். அவன் செயலை நினைத்தால் உள்ளம் வேகின்றது. நினைக்காது இருப்பின் தன்னால் தனது காதலைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது என்று அவள் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. நெய்தல் திணைக்குரிய இப்பாடல் பின்வருமாறு:

*உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது*
*இருப்பின்எம் அளவைத்து அன்றே வருத்தி*
*வான்தோய் வற்றே காமம்*
*சான்றொர் அல்லர்யாம் மரீஇ யோரே.*

நெய்தல் திணை சார்ந்தது, இப்பாடல்.

அதேவேளை, தம்மை மறந்து பிரிந்துசென்ற தலைவர்கள்மீது தமது வெறுப்புணர்வைக் காட்டுகின்ற தலைவிகளையும் புலவர்கள் இனங்காட்டுகின்றனர். கிள்ளிமங்கலங்கிழார் என்னும் புலவரின் முல்லை நிலம் சார்ந்த தலைவி ஒருத்தி, குளிர்காலத்தில் தனது தலைவி எவ்வாறு இருக்கிறாளோ என்று அறிய விரும்பாத தலைவன், திரும்பி வந்தாலும்சரி, வராவிட்டாலும்சரி, அவன் தனக்கு யார் என்று வெறுப்போடும், விரக்தியோடும் தோழியோடு பேசுகிறாள்.

*வாரார் ஆயினும் வரினும் அவர்நமக்கு*
*யார்ஆ கிலரோ தோழி...*
*..............................வாடையொடு*
*என் ஆயினள்கொல் என்னா தோரே.*

பிரிந்துசென்ற தலைவன்மீதான வெறுப்புநிலை இவ்வாறு காட்டப்படுகிறது. என்னைப் பிரிந்துசென்று அயலானைப்போல நடந்துகொண்ட தலைவன் இங்கே மீண்டும் வந்தால், விரிந்துள்ள எனது கூந்தலுக்கு மலர்கள் சூட்டவேண்டாம், என்னையும் தொடவேண்டாம் என்று நான் சொல்வேன் என்று தனது வெறுப்பை வெளிப்படுத்துகிறாள்.

காதல் வாழ்வில் ஏற்படும் ஏமாற்றங்களினால், தலைவியர் மனங்களில் ஏற்படும் தாக்கங்களும் புலவர்களால் இலக்கியரீதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அடைய முடியாத தலைவனோடு வாழநினைப்பதில் பயனில்லை என்பதை ஒரு தலைவி வெளிப்படுத்துகிறாள். மோசிகொற்றன் என்ற புலவரின் குறிஞ்சிநிலம் சார்ந்த தலைவி, எய்தற்கு அமையா நாடனொடு செய்துகொண்டது ஓர்சிறுநல் நட்பே என்று தெரிவிப்பது, அவளது ஏமாற்றத்தின் எல்லையை உணர்த்துகிறது. பிற மகளிரைப்போலத் தலைவனோடு வாழ்வதற்குத் தான் கொடுத்துவைக்கவில்லையே என்று ஏங்கும் தலைவியொருத்தியைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ காட்டுகிறார். தம் தலைவர்கள் வரும்போது பிற பெண்கள் மகிழ்ச்சியோடு நடந்துகொள்வர். ஆனால், தனக்கு அப்படிக் கொடுத்துவைக்கவில்லையே என்பதைச் செற்றாம் அன்றே தோழி என்ற வார்த்தைகளால் அவள் வெளிப்படுத்துகிறாள்.

காதல் வாழ்வின் ஏமாற்றங்கள் காரணமாகச் சங்ககாலச் சமுதாயத்தில் தற்கொலை முயற்சிகளும் நடைபெற்றிருக்கலாம். சில பாடல்கள் தலைவியர் காதல் தோல்வியால் தம் வாழ்வை முடித்துக்கொள்ள விரும்புவதைக் காட்டுவதாக அமைந்துள்ளன. வாயிலான் தேவன் என்னும் புலவரின் நெய்தல்நிலத் தலைவி ஒருத்தி, வாரார் போல்வர்நம் காதலர் வாழேன் போல்வல் தோழியானே என்று கூறுவது இதனை உணர்த்துகிறது. தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் வரமாட்டார் போல் இருக்கிறது. ஆகவே, தானும் வாழமாட்டாள் போல் தனக்குத் தோன்றுகிறது என்பது அவளது மனநிலை.

சிலவேளைகளில் ஒரு பெண் ஒருவனை விரும்பியிருக்க, பெற்றோர் அவளை வேறு ஒருவனுக்குத் திருமணம் செய்துவைக்கும் வழக்கமும் சமுதாயத்தில் இருப்பதுண்டு. அவ்வாறான ஒரு பாடலும் குறுந்தொகையில் உண்டு. பூங்கணுத்திரையார் என்ற புலவரின் மருதநிலத் தலைவி, ஆழமான குளத்தில் வீசிய மீனுக்கு உரிய வலையில் மிருகம் சிக்கியதைப் போல, அயலான் ஒருவனைத் தனக்கு மணம்பேச முயற்சிப்பதாகக் கூறுகின்றாள்.

சங்ககாலச் சமுதாயத்தின் மகளிர்நிலை பற்றி அறிந்துகொள்வதற்கான வாய்ப்பினைக் குறுந்தொகையின் தலைவி கூற்றுகள் தருகின்றன. இலக்கியம் என்ற முறையில் புனைவுகள் உண்டு. ஆயினும், அப்புனைவுகள் ஊடே தெரியும் சமுதாய நிலையைக் காண்பதற்கு இலக்கியங்கள் உதவுகின்றன. குறுந்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள தலைவி கூற்றுகள், ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் பரிதாபநிலையை உணர்த்துகின்றன. ஒருவகையில் தலைவி கூற்றுகளை, சங்ககாலச் சமுதாயம் பற்றிய விமர்சனங்களாகக்கூடக் கருதிக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கவிதைகளும் நவீன இலக்கிய உருவாக்கமும்

பேராசிரியர் செ. யோகராசா
தமிழ்த்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

மேற்குறித்த ஆய்வுத் தலைப்பு, வசதிகருதி, நவீன இலக்கிய வகைகளுளொன்றான நவீன கவிதையுடன், அதுவும் ஈழத்து நவீன கவிதைச் செல்நெறியுடன் மட்டும் தொடர்பு படுத்தி பார்ப்பதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து செல்வதற்குமுன், சங்க இலக்கியத்தை இவ்வாறு பார்ப்பதற்கு கட்டுரையாளரைத் தூண்டிய கட்டுரையொன்று பற்றிக் குறிப்பிடுவது அவசியமானது.

தமிழகத்து ஆய்வாளர் தமிழவன் தமது கட்டுரைத் தொடரில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:[1]

"கிரேக்க இலக்கியத்தை முன் உதாரணமாக்கி உருவான இரண்டு உலகப் பெரும் ஆளுமைகள் கார்ல் மார்க்ஸும் பிரட்ரிக் நீட்சேயும் ஆவர். இருவரின் இளமைக் காலத்தையும் பார்க்கும்போது இருவரும் கிரேக்க இலக்கியத்தைப் படித்து விளங்கிக் கொண்ட இருவேறு முறைகளில் இருந்துதுதான் ஐரோப்பாவின் நவீன கலாசாரம் தோன்றியுள்ளது என்றறிகிறோம். .... நம் பழைய சம்பத்துக்களான பழைய நூல்கள் அதே பரிணாமத்தைக் கொண்ட சிந்தனையாளர்களை உருவாக்கினவா? இன்று அடிமை நிலையை எட்டியுள்ள உலகத் தமிழ்ச் சமூகம் தனது பாரம்பரிய சொத்துக்களான பண்டைய நூல்களால் ஏன் எந்தப் பயனையும் பெறவில்லை?" ஆக, மேற்கூறிய பின்புலத்தில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகள் பெற்ற பயன்பற்றிச் சிந்திக்க முற்பட்டதன் விளைவே இவ்வாய்வாகின்றது.

ஈழத்து நவீன கவிதைச் செல்நெறியில் என்கின்றபோது குறிப்பாக (சென்ற நூற்றாண்டின்) எழுபதுகளில் இத்துறையினுள் பிரவேசித்த வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம், சு.வில்வரத்தினம் ஆகியோர் கவிதைகளும் (சென்ற நூற்றாண்டின்) தொண்ணூறுகளின் பிற்பகுதியில் பிரவேசித்த துவாரகன், சுதர்சன் ஆகியோரது கவிதைகளும் மட்டுமே கவனத்திற்குட்படுகின்றன. ஏனெனில், சங்கக் கவிதைகளுடனான தமது ஈடுபாடு பற்றி இவர்கள் குறிப்பிட்டிருப்பதால் இவ்வாறு குறிப்பிட்டிருப்போரது கவிதைகளை ஆய்வுக்குட்படுத்துவதே பொருத்தமானதென்பது இக்கட்டுரையாளரது கருத்தாகின்றது. ஏனெனில், சங்க இலக்கியங்களுடன் நேரடியாகப் பரிச்சயமில்லாது தமது காதலுணர்ச்சிகளை வெளிப்படுத்துவோரது கவிதைகளை, மரபின் தொடர்ச்சி என்ற காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஏற்பது அர்த்தமுடையதாகாது.

## 'இயற்கை' பின்புலமாதல்

சங்க அகத்திணை மரபுக் கவிதைகள் பற்றி அவதானிக்கின்ற போது அவற்றில 'இயற்கை'யின் செல்வாக்கு முக்கியமான அடிப்படை இயல்புகளுள் ஒன்றாகவிருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நினைவு கூர்வது அவசியமானது. ('இயற்கை' ஐந்திணைகளாகவும் 'முதல் - கரு - உரிப்' பொருள்களாகவும் இனங்காணப்பட்டிருப்பது பலருமறிந்ததொன்று)

மேற்கூறிய விதத்தில் வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதைகள் கவனத்திற்குரியவை. வ.ஐ.ச.ஜெயபாலனின் அண்மைக்காலக் கவிதைகளில் அப்பண்பு பன்மடங்கு சிறப்புடன் வெளிப்பட்டுள்ளது.

**முல்லைப்பாட்டு**

ஆயிரம் காலங்களைக் கடந்த கடல்
ஒரு முதுகவிஞன் காதலைப்பாடுவது போல
இன்றும் புதுஅலைகளை எழுப்புகிறது.
அந்த அலைகளின் எல்லைக்கு மேலே
யுகம்யுகமாய் மோர்வார்த்துக்கை சிவந்த
இடைச்சிகளின் மேச்சல் நிலம்.

அந்தக்கானல் பொட்டலின்
கந்தல் குடையான சிறுமரம் நோக்கி
கத்திக்கம் போடும்
செல்பேசியோடும் பெயர்கிறாள்
ஒரு புல்வெளியின் இளவரசி.
நூல் பாவையாய்
அவள் அசைவின் ஏவலுக்கெல்லாம்
ஆடித்தொடர்கிறது நாய்.

அந்த நான்கு கண்களின் பார்வையில்
கட்டுண்டு மேய்கிற ஆட்டுக்கிடைகள்
செம்புழுதி போர்த்த பற்றைகளிடை
காடைகள் மிரளாமல் ஊரும்.

ஆயிரம் காலத்து வளமையாய்
நிழல் தேடிவரும் ஆயர்குலத் தேவதைக்கு
பழமும் வைத்திருக்கிறது இலந்தைமரம்.
போகிறபோக்கில் களவாய் உருவி வந்த
முற்றாத நெற்கதிர்களின் பால்
இன்னும் அவளது கடைவாயில் வழிகிறது.

அந்தியிலும் சூரியன் விழுந்து கிடந்து
எரிகிற புல்வெளி மேல்
கறுத்து, ஈழவரின் கவிதைகள் போல
சூல்கொண்டு அலைகிற முகில்கள்
ஈரலித்த நம்பிக்கையை பாடுகிறது.

ஒரு நடிகனின் மீசையைப் போல
நிலையற்றது வாழ்வு.
பூம்புகாரன்ன பெருநகர்களே தொலைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக்கரைப் புல்வெளியெங்கும் நிலைத்த
சங்கக்கவிஞர்களின்
மோர் கமழும் காதல் பாடல்கள்
இன்றும் நெய்தலும் முல்லையுமாய்ப் பூக்கிறது
கோணாத்திகளின் கூந்தலுக்காக.
கோணாத்தி - இடைச்சி

**குறிஞ்சிப் பாடல்**

கரும் திரை அசையும் தோற்பாவைகளாய்
நெளியும் நீல மலைத்தொடர்களின் மேல்
முலை சிந்தச் சிந்த நிலா
நட்சதிரக் கன்றுகளைத் தேடுது.

சொட்டும் நிலாப் பாலில்
கரையும் இருளில்
பேய்களே கால்வைக்க அஞ்சும்
வழுக்கு மலைப் பாதை
பாம்பொடு பாம்பாய் நெளிகிறது.

மின்மினிகள் துளை போடும்
இருள் போர்த்த காட்டின் வழி நீழ
கமழும் நாவல்மரங்கள் உதிர்க்கும் கனிக்கு
கரடிகள் அலையும் இரவில்
பூத்துக் குலுங்குது முல்லை.

ஆதிவாசிகளே அஞ்சும் வன இருளில்
வண்ணத்துப் பூச்சிகளும் உறங்கும்
இந்தக் கொடிய நள்ளிரவில்
ஏன் பூத்தாய் காட்டு முல்லை.

நான் மண்ணுக்கு பழசு கவிஞா
பொறுத்திரு என்று நகைத்த
முது முல்லை சுட்டும் திசையில்
ஆளரவம் தெரிகிறது.
என்ன பிரமையா இல்லை ஆவியா
இருக்காது பின்னே குறிஞ்சி முருகனா
துணுக்குற்றேன்.

வேல் இல்லை
கானமயில் இல்லை
காற்ச்சட்டை சேட்டு
கையில் சிணுங்கி ஒளிருகிற செல்பேசி.
வருகிறது மனிதன்தான்.

அவன் மேகம் உறங்கும் மேலூரான்
பகலில் காட்டு யானைகள் நடுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுக்கியில் பவனிவரும் பாகன்.
இரவெல்லாம் காதலன்.

கீழே சிறு குடியில்
தூங்காது விரகத்திலே புரண்டு
குறுஞ்சேதி தட்டுகிற ஒருத்திக்காய்
புலி விலகி கரடி ஒதுங்கி
பாம்புகள் கடந்து வருகின்ற இருளன்
போகும் வழியில்
பூ பறிப்பான் குழலிக்கு

கொட்டும் பனியிலும்
பெருமூச்சில் கனன்றபடி
வாடா வந்திரென ஓயாமல்
குறும்சேதி தட்டுகிற பாதகத்தி
பகலில்கூட இப்பாதை வரத் துணிவாளோ

கபிலன் இல்லையே இன்று
உயிரினும் காதல் இனிதென்னும்
இந்தக் காமுகனைப் பாடுதற்கு.

மேற்கூறிய கவிதைகளை தொண்ணூறுகள் காலப்பகுதி ஈழத்து சமூக அரசியல் நிலைமைகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போதே அவற்றின் சிறப்பியல்புகள் வெளிப்படும்.

ஈழத்துக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவரான சிவசேகரத்தின் கவிதைகள் பல தனித்துவ அம்சங்கள் பெற்றிருப்பவை. கவிதை உள்ளடக்க மாறுபாடுகளுக்கேற்பவும் கால மாற்றத்திற்கேற்பவும் எடுத்துரைப்பு நிலையில் வெவ்வேறு வடிவங்களும் இயல்புகளும் அமைவது அத்தகைய இயல்பு. மேற்கூறிய விதத்தில் அவரது ஆரம்பகாலக் கவிதைகளில் ‘இயற்கை’ச் சித்திரிப்பின் ஆதிக்கம் கணிசமானது. அவரது முதற் தொகுப்பின் தலைப்பே இயற்கை சார்ந்து ‘நதிக்கரை மூங்கில்’ எனும் தலைப்பிலமைந்தது. அவரது கவிதைகளில் இயற்கை பின்புலமாகவன்றி குறியீட்டுப்பாங்கிலே வெளிப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[3] எ-டு : 1

**நெல்**

முளைத்து எழுந்து தளிர்த்து வாழ்ந்து
செழித்து விளைந்து சரிந்து விழுந்து
இறந்து கிடந்த நெல்லின் தலையில்
இருந்தன நாளைய பரம்பரை நூறு

சிவசேகரத்தின் கவிதைகளின் மேற்கூறிய இயல்புபற்றி தமிழக விமர்சகரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இவ்வேளை கவனத்திற்குரியது:[4]

“இலையுதிர் கால அரசியல் நினைவுகள் என்ற சிவசேகரத்தின் கவிதைத் தலைப்பு மாத்திரமே ‘அரசியல்’ என்ற பிரயோகத்தைக் கொண்டுள்ளது. ஆனால், மேலோட்டமாய் படிக்கும் வாசகனுக்கு இது சிறந்த Lyric கவிதையாகக்கூடும். இயற்கை நிகழ்வுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த பிரக்ஞையும் பருவகால மாறுதல்களைப் பதிவு செய்யும் கவனமும் இக்கவிதையின் ஸ்தூலமான சித்திரிப்புக்களைத் தந்துள்ளன. பருவ மாறுதல்களும் கால மாறுதல்களும் சமூக மாறுதல்களை உணர்த்தும்படி இயல்பாய் எழுதப்பட்டிருக்கின்றன.

*மீண்டும் மலர்கள் மண்ணைப் பெயர்க்க*
*பறவைகள் மெல்லப் பாடத் தொடங்க*
*அணில்கள் தாவ வசந்தம் வந்தது*
*மரங்கள் மீது இலைகள் போர்த்தன*
*இலையுதிர்காலம் கொடியது தானோ?*

கடைசி வரியின் கேள்வி நம்மை மீண்டும் வரிவரியாகப் படிக்கச் செய்து, தலைப்புக்குக் கவனம் தாவி, மீண்டும் வரிவரியாகப் படிக்கச் சொல்கிறது. அரசியல் கவிதைகள் வரட்டுத்தன்மையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை என்பதைச் சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்' தொகுதி நிரூபணம் செய்கிறது".

## சங்க இலக்கியக் குறிப்புகள்

சு.வில்வரத்தினம் இயற்கையை முதன்மைப்படுத்தாது, கலைவளர்ச்சி, மொழிவளர்ச்சி தொடர்பில் சங்ககாலத்தை நினைவுபடுத்தும் குறிப்புகள் சிலவற்றைப் பண்பாட்டு நோக்கில் பயன்படுத்துவார்[5]

### நெற்றி மண்

*சங்கப் பலகையிலே*
*சரிக்கட்டி வைத்த தொட்டில்.*
*தொட்டிலிலே கண் வளர்ந்திருந்தவை*
*குழலும்தான் யாழும்தான் முழவும் தான்*
*தொட்டிலுக்குக் காவலாய்*
*ஆயகலைகளின் தாய்.*
*மடியிலே மழலையென வீணை.*
*வீணையை மெலிதாய் மீட்டியதென்ன*
*மேவும் மாலைப் பொழுதும் சாய,*
*பிறை வெண் குருத்தைச் சப்பியபடி*
*பிளிறியெழும் கரிய இருள்.*

*இருளின் அடர்வ்*
*ஊடுபத்தி அவியும் சுடரின்*
*புகை குமைச்சல்*
*துர் வாடையின் அடைவ்*
*துட்டாத்மாக்களினதேதான்.*

*உள்ளக் கமலங்களை ஓங்கி மதித்தபடி*
*கொள்ளிக் கண் பரிகலங்கள்*
*கலை வளரும் தொட்டிலுக்குத்*
*தீ மூட்டி விட்டு*
*கோட்டையின் கபாடங்களினுள் மறைந்துகொள*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ மூண்டெரிகிறது.
எரிகின்ற தீயிடை குழலும்தான் யாழும்தான்
முழுவும்தான் மனித முயல்வின்.
திறன் முழுதும்தான்.
பிள்ளைத் தமிழின் பிடிசாம்பரள்ளிப்போய்ப்
மாவலியில் கரைப்பமென
வாடி போட்டிருந்தவரின் வஞ்சமனத்தகத்தே
போலும் தீ மூண்டெரிகிறது.
தீயின் வீச்சம் திசைகளைச் சுட்டது
வீசு தென்றலைச் சுட்டது
வீங்கிள வேனிலைச் சுட்டது
வீணை மீட்டியிருந்த தாயின்
நாத மணித்தளிர் விரல்களைச்
சுட்டபோதங்கு
மாசில் வீணை நரம்புகள் கேவின்

குழலும் குழல்வழிப் பல்லியமும் தேம்பின்
முழவின் ஏங்கின மனிதமுயல்வின் திறனெலாம்.
தாயவள்,
தமிழ்தம் உணத்தந்த கலைத்தெய்வதம்,
பூண்டிருந்த வெள்ளைப் பணியெலாம் புகை படர,
ஆயகலைகளெலாம் அவளைச் சூழநின்று
பாலுக் கிரந்தழுத பரிபாடலை நான்
எப்படிப் பாடுவேன்?
பாடத்தான் வேண்டும்
காற்றிலேறி, கனைகடலை, நெருப்பாற்றை,
மலை முகடுகளைக் கடந்து
செல் எனச் செல்லுமோர் பாடலை.

கபாட புரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்
உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும்.
ஏடு தொடக்கிவைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த
விரல் முனையை தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை

பின்வரும் சுதர்சனின் கவிதை சங்ககால பேய் மகளிர் பற்றிய தகவலைத் தெரிவிக்கின்றது.

பேய் மகளிர் ஆண்பாலில் முளைத்தல்
நிணச்சுவை விரும்பி
ஈமப்பெருங்காடென ஆயிற்று
மாம்பழ நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மரணத்தை விளைக்க*
*மண்டையோட்டை விதைத்து*
*நிணவயல்*
*குருதி பாய்ச்சி*
*நனையுமொரு காலம்*
*வானச் சூரியனோடு*
*நட்சத்திரங்களையும் உதிர்த்துவிட்டு*
*விசரியாய்த் திரியும்*
*என் நிலக்காதல் கனவு*
*புல்வெளியே*
*பயணப் புழுதித் தெருவே*
*அஞ்சலிக்கீதம் இசைக்காதலையும்*
*பறவையே*
*மனமடி பெருத்தலையும்*
*நிலமூச்சை எப்போதுயிர்ப்பேன்*
*இறந்த துண்டங்களை*
*நெருப்பிட்டுக் கூழாக்கி*
*ஆடுமொரு வேள்விக் கூத்தில்*
*நீலவுடல் சிவப்பைக் கழுத்தணிய*
*பேய்மகளிர் ஆண்பாலில் முளைத்தது* *(மார்கழி 2012- ஞானம்)*

## வரலாற்று நிகழ்வுகள்

சு.வில்வரத்தினம் சங்ககால வரலாற்று நிகழ்வுகள் சிலவற்றையும் தமது கவிதைகளில் எடுத்தாள்வார்.[6] இவ்விதத்தில் அவரது பின்வரும் கவிதை முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்:

*'நிலவின் எதிரொலி'*
*பறம்புமலை*
*பாரி மறைந்து*
*பெரிதும் மறைந்த இருளில்*
*அகதிகளாயினர்*
*அங்கவையும் சங்கவையும்*
*வென்றெறி முரசம் வீழ்ந்த கையோடு*
*குன்றிலே*
*தொய்ந்த முழுநிலவின் சோகம்*
*படர்கின்ற ஒற்றையடிப் பாதையினூடே*
*பாரி மகளிர் நடந்தனர்*
*மலையின் இறங்கிப் பெயர்ந்து*
*தானும் தளர்நடை நடந்தது நிலவும்*
*தள்ளாத வயதின் கபிலர் துணைபோல*
*நடந்து இளைத்து தேய்ந்து*
*நரை விழுந்து போனது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலவும் தான்
கபிலரும் தான்
பாரிமகளிரும் தான்
பறம்புமலை வாழ்வும் தான்
வாழ்விளைத் மகளிரை
ஔவையிடம்
பவ்வியமாகக் கையளித்துவிட்டு
கபிலர் மறைந்தார்
பயணம் தொடர்ந்தது
கூழ் குடித்த சேரியெல்லாம் ஔவையோடு
கூடவே நடந்தனர் பாரி மகளிர்
நின்று நிதானித்து
நிலவும் நடந்தது
அதியமான் கொடுத்த நெல்லிக் கனியீந்த
ஆயுட்காலம் முடிவிற்கு வந்ததோ
ஔவை அவசரப்பட்டு விட்டாள்
தன்னைப் போல் தமிழ் செய்த மகளிரை
பறம்புமலை வாழ்வை அழித்தவர்க்கே
தாரை வார்த்துக் கொடுத்தாள்
காலந் தாழ்த்திய திறைப்பொருளாக
கூழோ கஞ்சியோ வார்த்தவர்
குடியில் கொடுத்திருந்தாலும்
பாரியின் ஆன்மா பரவசப்பட்டிருக்கும்
பாவம் அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
பறம்பு மலைக்குன்றும்
வென்றெறி முரசும்
அந்தப்புரத்து அடிமைகளாகிவிட்ட
அங்கவையும் சங்கவையும்
இரங்கி அழுதவையெல்லாம்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவிலும்
எதிரொலிக்கின்றனவே

**சங்கப் பாடல்களின் சந்தர்ப்பம்**

துவாரகனின் கவிதைகளில் சங்கக் கவிதைகளின் செல்வாக்கு இன்னொரு தளத்திலானது. சங்கப்பாடலொன்றில் தலைவன் தலைவியுடன் களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டு கைவிட்டுச் சென்ற நிலைமையை பின்னர் தலைவி நினைவுகூர்கின்றபோது தலைவனது செயலுக்கான சாட்சிகள் பற்றி உருக்கமான நினைவு கூர்வாள். அப்பின்னணிச் சம்பவமொன்றை பின்வருமாறு துவாரகன் சித்திரித்துள்ளார்.[7]

**யானெவன் செய்கோ?**

அந்தகாரத்தில் ஒலித்து ஓய்ந்துபோன
அந்த ஈன ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் கலந்து கரைந்து போனது
மெல்ல மெல்ல
மண்ணிலிருந்து எழுந்து
மரங்களில் தெறித்து
வானத்தில் சென்றடங்கிப் போனது.
எது சாட்சி?

ஒரு மரம்
ஓணான், காகம் குருவி
இன்னும்
நான்கு சுவர்களும் பல்லிகளும் சாட்சி.

அந்த வேப்பமர ஊஞ்சல்
அவள்
காற்றில் கூந்தல் விரித்த
கணங்களையும் இழந்து விட்டது

சுவருக்கும் பல்லிக்கும்
மரத்துக்கும் ஓணானுக்கும்
கடவுள் பேசும் வரம் கொடுத்தால்,
கட்டுண்ட வெளியில் இருந்து
புதையுண்ட மண்ணில் இருந்து
மூடுண்ட அறையுள் இருந்து
இன்னும் கதைகள் பிறக்கும்.

அன்று இசைவோடு ஏமாந்தாள்
குருகு சாட்சியாக.
இன்று அந்தகாரத்தில் அடங்கிப் போனாள்
பல்லியும் ஓணானும் சாட்சியாக.

**பாடலடிகள்**

கவிஞர் சிலர் சங்கப் பாடலடிகள் சிலவற்றைக் கவிதைத் தலைப்பாக கையாள்வது பற்றியும் இவ்வேளை குறிப்பிட்டாக வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'அற்றைத்திங்களும் அவ்வெண்ணிலவும்', 'முல்லையும் பூத்தியோ' முதலானவை இவற்றுட் சிலவாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது சமூக விமர்சன நோக்கில் கையாளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.[8]

**யாதும் ஊரே**

போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும்
ஆங்கில நாட்டரும் ஆற்றியகொடுமை
கொலனி ஆட்சியின் கொள்ளையடிப்பு
மரபைப் பேண வகுத்த தடைகள்
மொழியைப் பேச விதித்த தண்டம்
மதத்தை மாற்றப் புனைந்த சதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பழங்கதை என்றா மறந்து போனோம்?*
*பேரினவாதம் இழைத்த இன்னல்*
*இந்திய நண்பர் இயற்றிய வஞ்சனை*
*எல்லாம் முடிந்தன என்றா மறந்தோம்?*
*இல்லை, இல்லை, உண்மை ஏதெனில்*
*நாமே நமக்குப் பகையென ஆனோம்.*
*நம்மை நாமே அழித்திட உறுதி*
*பூண்டனம். அதனால்*
*எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே*
*எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளிர்*
*தீதும் அழிவும் பிறர்தர வேண்டா.*

**பேச்சோசைப் பண்பு**

ஏறத்தாழ (சென்ற நூற்றாண்டின்) எழுபதுகள் வரையான ஈழத்து நவீன கவிதைகளின் தனித்துவமான இயல்பாகப் பேச்சோசைப் பண்பு கருதப்பட்டு வந்துள்ளது. இதுபற்றி ஈழத்தில் விரிவான ஆய்வுகளை இ.முருகையனும் நு.்.மானும் செய்துள்ளனர் இ. முருகையன் இது பற்றி எழுதும்போது ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது:[9]

"இனி, பேச்சோசைக்கு முக்கியத்துவம் தரும் ஓர் இயற்பாவை நவீன கவிதையை நாம் பார்ப்போம்.

"*உள்ளத்தைக் கொளுவி இழுத்து, உவகையினை*
*அன்பளிப்பாய் வழங்கி, இன்ப*
*வள்ளத்தில் மிதக்க விடும் மகிழ்வூறும்*
*சிரிப்பினொலி கேட்டாய் தானா?*
*நள்ளிரவு வானத்தில் நகைசெய்யும்*
*விண்மீன்கள் அமைதி வாரி*
*வெள்ளியொளியாய் வழங்கும் சிரிப்பின் ஒலி*
*கேட்டாயா? கேட்டாய் தானா?*"

பேச்சோசைக் கையாட்சி என்ற இப்பண்பை நவீனத்தன்மை என நாம் விபரிக்கலாமெனில், இந்த நவீனத்தன்மை பழந்தமிழ்ச் சான்றோர் செய்யுளிலும் அமைந்து கிடப்பது அதிசயம் தான். நற்றிணையிலோ, குறுந்தொகையிலோ ஒரு செய்யுளை எடுத்துப் படித்துப் பாருங்கள், நான் சொல்வதன் உண்மை – பொய் உங்களுக்குப் புலப்படும்.

"*யாயும் ஞாயும் யாராகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயர் நீர்போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே*".

பாடுங் குரலுக்கென நினைத்துக் கோக்கப்பட்டவையாகவா இச்சொற்கள் ஒலிக்கின்றன? இல்லை, இது பேச்சோசைக் கவிதை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய விடயங்கள் அடியாக நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயமொன்றுள்ளது. ஈழத்து நவீன கவிதையில் வெளிப்படும் பேச்சோசைத் தன்மை சங்கக் கவிதைப்போக்கினை நினைவுபடுத்தினாலும் சங்கக் கவிதைகளைப் படித்துத் தேறிய அருட்டுணர்விலேதான் ஈழத்துக் கவிஞர்கள் இப்பண்பினை வளர்த்துக் கொண்டார்களா என்பது ஆழமான தேடலுக்குரியது. எனினும், ஈழத்து நவீன கவிதை அவ்வாறான சங்கக் கவிதை இயல்புடன் சங்கமித்திருப்பது வியப்பிற்கும் பாராட்டிற்குமுரியதாகின்றது.

## தமிழ் அழகியல்

இன்றைய தமிழ் ஆய்வாளர் சிலரிடம் 'தமிழ் அழகியல்' பற்றிய தேடல் முனைப்புப் பெற்றுள்ளது. இவ்விதத்தில் அண்மையில் வெளிவந்துள்ள தமிழ் அழகியல் முக்கியமான ஆய்வு நூலாகின்றது. இந்நூலாசிரியர் தமிழ் அழகியலின் தேடலின் ஆரம்ப ஊற்றுக்களை – ஆழமான ஊற்றுக்களை – சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் காண முற்பட்டுள்ளார்.[10]

இத்தியாதி விடயம் தொடர்பாக, எமது கவனத்திற்குட்பட்டுள்ள கவிஞர் சு. வில்வரத்தினம் ஏலவே சிந்தித்துள்ளார். அவர் தமது கவிதைப் போக்குப் பற்றி எழுதும்போது ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.[11]

“ஆங்காங்கு எனது கவிதைகளினிடை அடையாள வரிகளாய் இடைப்பெய்து நீண்ட எமது பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களை படிமப்படுத்திக் காட்ட முயல்வது எனது கவிதை ஆக்கத்தில் ஒரு பகுதி போலாகிவிட்டது. இதை நான் தெரிந்தே, தேவை கருதியே, பிரக்ஞைபூர்வமாகவே கையாள்கிறேன். இதனூடாக எனது வாசகன் தமிழின் வழிவழி ஓட்டத்தைத் தரிசனம் பண்ணுவதோடு அத்தரிசன ஒளியில் எனது கவிதை போராட்ட வளத்தின் புதிய முகத்தையும் காணட்டும் என்கின்ற வேணவாவும்தான். 'அகங்களும் முகங்களும்' தொகுப்பிலிருந்து இந்த 'நெற்றி மண்' தொகுப்பு வரையிலும் அத்தகைய அடையாளப்படுத்தலை இனம் காணலாம். 'எழுந்திரு பிள்ளாய் இது விடுதலைப் பொழுது' என அகங்களும் முகங்களும் தொகுப்பில் இடம்பெற்ற 'விடுதலைப் பொழுது' கவிதையின் வரிகளிலும், இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதை ஒன்றில் வரும் 'வெள்ளை விளிசங்கின் பேரரவம் போலும் ஓர் விடியல்' எனும் வரிகளிலும் ஆண்டாளின் குரல் ஒளி விழுத்திச் செல்வதை உதாரணமாகக் காட்டலாம். இது போலப் பலப்பல. எனது கவிதைகள் சமகாலப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும் பொழுதும் தமிழின் ஆதிக்குரலை ஆங்காங்கு மீட்டிச் செல்வதைக் காணலாம். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப் பட்டதை நினைவு கூரும் இத்தொகுப்பில் வரும் கவிதையிலும் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் தொட்டிலாக அதை உருவகப்படுத்திக் காட்டுகிறேன். 'துய்யதான சங்கமென்னும் தொட்டிலில் வளர்ந்த பிள்ளை' எனும் பாரதிதாசனின் வரிகளை ஞாபகப்படுத்தி 'சங்கப் பலகையிலே சரிக்கட்டி வைத்த தொட்டில்' எனத் தொடங்கி 'தொட்டிலிலே கண் வளர்ந்திருந்தவை குழலும்தான் யாழும்தான் முழவும்தான் மனிதமுயல்வின் திறன் முழுதுந்தான்'. எனத் தொடர்கின்ற அக்கவிதை ஒரு பண்பட்ட தமிழ்த் தேசீயத்தின் தொட்டிற் குரல் என்பதை யாவரும் அடையாளம் காண வேண்டும்.

தமிழக விமர்சகர் இந்திரன் நுண்கலை இயக்கத்தின் ஊடே தேடுகின்ற தமிழ் அழகியல் என்னும் பார்வை, எனது கவிதையின் ஊடே தன் முகம் காட்டுகிறது என்பது என் அபிப்பிராயம்”.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இறுதியாக, நவீன கவிதைகளில் சங்க இலக்கியச் செல்வாக்கு வெளிப்படுமாறு பற்றி இதுவரை கூறப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களை நினைவுகூர்வது பொருத்தமானது:

1. சங்க அகத்திணைப்பாடல்களில் இயற்கை பின்புலமாகவிருப்பதன் தாற்பரியம் பற்றி நன்கறிந்து அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுப்பது அவசியமானது. சங்க அகத்திணைப் பாடல்களிலே பாத்திர உணர்ச்சியை சிறப்புற வெளிப்படுத்த 'இயற்கை' பயன்படுவது போன்று, நவீனகவிதைகளிலும் கவிஞரது உணர்ச்சி வெளிப்பாட்டினைச் சிறப்பிக்க பயன்படுத்த முடியும் உள்ளுறை உவமம், இறைச்சி முதலானவற்றையும் பயன்படுத்தவியலும்.
2. சங்கப்பாடல்களுள் கணிசமானவை சமகால சமூக, அரசியல், பண்பாட்டு நிலைமைகளை வெளிப்படுத்துவதற்குச் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடியனவாகவுமுள்ளன. (முற்குறிப்பிட்ட துவாரகனின் கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு)
3. இக்காலக் கவிஞைகளும் சங்க அகத்திணைப் பாடல் மரபுகளைச் செம்மையாகக் கையாள்வதற்கு வாய்ப்புள்ளது.
4. சங்கப் பாடலடிகளை எடுத்தாள்வதனூடாக, சமூக, அரசியல், பண்பாட்டு விமர்சனக் குறிப்புக்களை வெளிப்படுத்த முடியும். (முற்குறிப்பிட்ட சிவசேகரத்தின் கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது)
5. 'தமிழ் அழகியல்' தொடர்பாக தொடர்ந்து ஆழமாகச் சிந்திக்கவும் வாய்ப்புள்ளது.
6. பேச்சோசைப்பண்பு பற்றி மேலும் ஆய்வு செய்வதோடு அதனுடன் தொடர்புபட்ட வேறு அம்சங்கள் பற்றியும் கவனிப்பது அவசியமானது.

### அடிக்குறிப்புக்கள்

1. தமிழவன், 'கார்ல்மார்க்சுக்குப் பயன்பட்ட பழமையும் தமிழர்களுக்குப் பயன்படாத பழமையும்', தீராநதி, குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிலிட், ஏப்ரல் 2014 ப.34
2. ஜெயபாலன், வ.ஐ ச, **வ.ஐ.ச. ஜெயபாலன் கவிதைகள்** (பெருந்தொகை), ஸ்நேகா, சென்னை, 2002, ப.233
3. சிவசேகரம், **நதிக்கரை மூங்கில்**, காவ்யா வெளியீடு, பெங்களூர், 1983, ப.32
4. மேற்கோள், யோகராசா, செ., **ஈழத்து நவீன கவிதை, புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு ரூசென்னை 2007 ப.90
5. வில்வரத்தினம், சு. **நெற்றிமண்**, கூடல் பதிப்பகம், திருகோணமலை, 2000, பக் 6-8
6. வில்வரத்தினம், சு, மே.கு.நூல், ப.20
7. துவாரகன், காற்றுவெளி, (மின்னிதழ்), டிசம்பர் நவம்பர் 28,2010.
8. சிவசேகரம், சு.தேவி எழுந்தாள், 1991,ப.32, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.
9. முருகையன், **ஒரு சில விதி செய்வோம், கவிதைச் சிந்தனைகள்**, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 1972, ப.48.
10. நு.்.மான் எம்.ஏ., **திறனாய்வுக் கட்டுரைகள்**, அன்னம் லிமிட்டட், சிவகங்கை பக் 9-15.
11. விரிவான விளக்கத்திற்கு, பார்க்க: நடராசன், தி.சு., **தமிழ் அழகியல்**, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், டிசம்பர் 2012.
12. வில்வரத்தினம்,சு., **மு.கு.நூ**, பக் ix – xi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலியல் திறனாய்வுக் கோட்பாடும் சங்க இலக்கியமும்

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
தலைவர், தமிழ்த்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

சூழலியல் (Ecology) என்பது உயிர் வாழ்க்கையின் பரவல் பற்றியும் உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான இடைவினைகள் பற்றியும் அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது. சூழலியல் தொடர்பான நோக்கு உலகளாவிய வகையில் முக்கியத்துவமுடையதொன்றாகக் கருதப்படுகின்றது. சமூக நன்மைகளுக்காக இது பற்றிய உரையாடல் பல்வேறுபட்ட தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையையும் அவதானிக்கலாம்.

சூழலியல் என்பது 'உயிரினங்கள் வாழுமிடம் பற்றிய கல்வியாக முதலில் கருதப்பட்டது. ஆனால் தற்போது 'உயிரற்ற காரணிகள் உயிருள்ள காரணிகளின் மீது செலுத்தும் தாக்கம் அல்லது விளைவு' என வரையறுக்கப்படுகின்றது.

**உயிருள்ள காரணிகளாகக் குறிப்பிடப்படுபவை**

1) மனிதன் தொடர்பானவை

அ) மானிட உயிரினச் சூழல்

ஆ) மானிட பண்பாட்டுச் சூழல்

இ) அரசியல் அமைப்புக்கள் என்பன இதில் அடங்கும்.

2) மனிதனல்லாத பிற உயிர்கள்

அ) தாவரங்கள்

ஆ) விலங்குகள்

இ) பறவைகள் என்பன இதில் அடங்கும்.

**உயிரில்லாக் காரணிகளாகக் குறிப்பிடப்படுபவை**

அ) நிலம்

ஆ) நீர்

இ) காற்று

ஈ) ஆகாயம்

உ) தீ ஆகியன இதிலடங்கும்.

"இலக்கியத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு" என சூழலியல் திறனாய்விற்கு வரைவிலக்கணம் வகுக்கின்றார், அமெரிக்க பேராசிரியர் செரில் கிராட்பெல்டி (Cheryil Glotfelty).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுற்றுச் சூழல் பற்றிய திறனாய்வு என்பது இலக்கியத்திலுள்ள இயற்கையை ஆராய்வதன்று. இது ஓர் இயற்கை சார்ந்த உலகப் பார்வை. மனித இனத்தோடு மனிதன் அல்லாதவைகளையும் அவைகளின் சுற்றுச்சூழல்களையும் ஒரே இனமாக இணைத்து மனித இனத்தைப் பெருக்கிக் காட்டும் முயற்சியாகும்" என மைக்கல் பி. பிரான்ஞ் என்பவர் குறிப்பிடுவார்.

சூழலியல் பற்றிய ஆய்வில் இயற்கை சார்ந்த உலகப் பார்வையின் அவசியத்தை செ.வை. சண்முகமும் (சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல்) வலியுறுத்தியுள்ளார். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இயற்கை வருணனை பற்றிய விடயம் தனிநாயகம் அடிகள் முதலான பலராலும் விளக்கப்பட்டிருந்தாலும் அவை இலக்கியத்திலுள்ள இயற்கை குறித்தனவாக இருப்பனவேயன்றி இயற்கை சார்ந்த உலகப்பார்வையை அவற்றில் காண முடியாதென அவர் கருதுகின்றார். உள்ளுறை முதலானவற்றில் அவர்கள் கவனம் செலுத்தாமை இதற்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

சூழலியல் திறனாய்வு (Eco Criticism) பூமியின் இயற்கைச் சூழல் நிலைப்பாட்டிலிருந்து இலக்கியத்தையும் பண்பாட்டையும் புரிந்து கொள்ள உதவுகின்றதென பஞ்சாங்கம் குறிப்பிடுவார். (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்: 2011)

செரில் கிராட்பெல்டி (Cheryil Glotfelty), வில்லியம் ரூக்கர்ட் (William Rueckert), ஹெரால்ட் ப்ரோம் (Harold Fromm), டேவிட் மாஷல் (David Mazal), லோரன்ஸ் பௌல் (Lawrance Buell), ஸ்காட் ஸ்லோவிக் (Scott Slovic) ஆகியோரும் இத்திறனாய்வின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் சூழலியல் திறனாய்வை மேற்கொண்டோருள் ஒருவராக பேராசிரியர் நிர்மல் செல்வமணி (ஆங்கிலத்துறைப் பேராசிரியர், திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம்) குறிப்பிடப்படுகின்றார். இவர் சங்க இலக்கியப் பாடல்களிலும் தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டிலும் இத்திறனாய்வைப் பொருத்தி ஆராய்ந்துள்ளாரென அறிய முடிகின்றது.

இத்தகைய பின்னணியில் இக்கோட்பாட்டு அணுகுமுறையின் அடிப்படையில் சங்க இலக்கியங்களை நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. இதன் மூலம் சுற்றுச் சூழல் பற்றி பதிவு செய்துள்ள வகையிலும் அது குறித்த அக்கறை பேணப்பட்ட முறையிலும் அதனைக் காப்பது தொடர்பான உணர்விலும் (சூழல் காப்புணர்வு) சங்கப் புலவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றமையை வலியுறுத்துவதும், மிகப் பழங்காலந் தொடக்கம் தமிழர்கள் மத்தியில் இவ்வம்சம் சிறப்பிடம் பெற்றமையை வெளிக்கொணர்வதும் சங்க இலக்கியங்கள் அதற்கு ஆதாரமாக அமைவதை நிறுவுவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

ஒரு கவிதையில் இயற்கை முன்மொழியப்படுதல், நிகழ்ச்சி அமைப்பில் இயற்கைப் பொருட்கள் தொழிலாற்றுதல், நிலம் குறித்த உருவகங்கள் இலக்கியச் செயற்பாட்டிற்கு உதவுதல் என்பனவற்றில் சுற்றுச் சூழல் திறனாய்வாளர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

சங்க இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு ஆராயும்போது மேற்குறித்த விடயங்கள் துல்லியமாக வெளிப்படுவதைக் காண முடியும். இதனை ஆய்வாளர்கள் சிலரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

முதல், கரு என்னும் பாகுபாட்டில் இயற்கை விளக்கப்பட்டுள்ளமையையும், உள்ளுறை உவமம், இறைச்சி முதலானவற்றின் மூலம் இயற்கைப் பொருட்கள் செயலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றமையையும், சமூகக் குழுமங்கள் நிலத்தின் தன்மை குறித்து செயல்படுகின்றமையையும் (உரி) குறிப்பிட முடியும்.

சங்க இலக்கியத்தை கோட்பாட்டு நோக்கில் விளக்கும் தொல்காப்பியக் கருத்துக்கள் சுற்றுச் சூழல் ஆய்வோடு நேரடியாகத் தொடர்புடையவை. குறிப்பாக முதல், கரு, உரி என்ற பாகுபாடும் உள்ளுறை, இறைச்சி என்பனவும் சுற்றுச்சூழல் பற்றித் தெளிவாக விளக்குவனவாக அமைகின்றன.

முதல் என்பது நிலமும் பொழுதும் (தொல். அகத். 3) கரு என்பது 'தெய்வம், உணா, விலங்கு பறவை, பறை, தொழில், பூ என்பன. (தொல். அகத். 18, 19) உரி என்பது அகத்திணை, புறத்திணை ஆகியன.

ஆய்வு எல்லை கருதி மிக முக்கியமான விடயங்கள் மட்டுமே இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## கருப்பொருள் உரிப்பொருளுக்கு உதவப் பயன்பட்டுள்ளமை

சிறு பிரிவைக் கூடத் தாங்காத மனம் படைத்தவள் தலைவி. அவள் சிறுமியாக இருந்தபோது ('ஓரையாடல்' என்னும்) நண்டு பிடிக்கும் விளையாட்டில் ஈடுபட்டபோது அவளிடமிருந்து தப்பி கடலுக்குள் சென்ற நண்டுகளின் பிரிவைக் கூடத் தாங்கமுடியாது தனக்குள் மறுகித் துயருற்றவள். தலைவனின் பிரிவுத் துயரினால் மனம் பேதலித்து தன்னையறியாமல் ஞாழல் மரத்தின் நுனியைப் பறித்துச் சிதைத்து விட்டாள் எனக் கூறப்படுகின்றது.

"..........................................
*ஆடுவரி அலவன் ஓடுவயினாற்றாது*
*அசைஇஉள் ளொழிந்த வசைதீர் குறுமகட்கு*
*உயவினென் சென்றுயான் உள்நோயுரைப்ப*
*மறுமொழி பெயர்த்தல் ஆற்றாள் நறுமலர்*
*ஞாழல் அஞ்சினைத் தாழ்இணர் கொழுதி*
*முறிதிமிர்ந்து உதிர்த்த கையள்*
*அறிவுஅஞர் உறுவி ஆய்மட நிலையே* (நற்றிணை 118: 3 - 9)

## உரிப்பொருள் சிறப்பிக்கப்படுவதற்கு முதல்பொருள் துணையாக அமைதல்

*"நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்*
*இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு*
*தடவின் ஓங்குசினைக் கட்சியில் பிரிந்தோர்*
*கையற நரலும் நள்ளென் யாமத்துப்*
*பெருந்தண் வாடையும் வாரார்"* (குறுந் : 160) குறிஞ்சி

சிவந்த கொண்டையையுடைய அன்றில் பறவை தன் பெடையுடன் தடா மரத்தின் உயர்ந்த கிளையில் உள்ள கூட்டிலிருந்து ஒலியெழுப்பும். அந்த ஒலியைக் கேட்டு நள்ளிரவில் வாடைக்காற்று வீசும் கூதிர்காலத்திலும் தலைவன் வரவில்லை என்கிறாள், தலைவி. ஒன்றை விட்டு மற்றொன்று பிரிந்து வாழாத பண்புடையதாகக் குறிப்பிடப்படும் அன்றில் பறவையின் இயல்பினூடாக தலைவியின் எதிர்பார்ப்பு விளக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளுறை உவமம்**

*"மனைநடு வயலை வேழம் சுற்றும்*
*துறைகேழ் ஊரன் கொடுமைநாணி*
*'நல்லன்' என்றும் யாமே*
*'அல்லன்' என்னும் என் தடமென் தோளே"* *(ஐங்குறு நூறு: 11)*

மருத நிலக் கருப்பொருள்கள்: நாணல் (வேழம்), கரும்பு, மூங்கில், பீர்க்கு முதலாயின. வீட்டில் வளர்க்கப்பட்ட வயலைக்கொடியானது வீட்டைச் சுற்றாமல் அருகிலுள்ள வேழத்தை (நாணலை) சுற்றுகிறது எனக் குறிப்பிடப்படுகின்றது. வீட்டிலுள்ள தலைவியை நாடாமல் பரத்தையை நாடிச் சென்ற தலைவனின் நடத்தை பற்றி உள்ளுறையாக அது விளக்கியுள்ளமையைக் காணலாம்.

**இறைச்சி**

*"நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்*
*பிடிபசி களைஇய பெருங்கை வேழம்*
*மென்சினை யாஅம் பொளிக்கும்*
*அன்பின் தோழி அவர் சென்ற ஆறே" (குறுந்: 37)*

பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக ஆண்யானை யா மரத்தின் பட்டையை உரித்து அளிக்கும் அன்பையுடையதாகக் காணப்படுவது தலைவன் சென்ற காட்டு வழி. எனவே தலைவன் தலைவிமீது விருப்பம் உள்ளவனாகி விரைவில் திரும்புவான் எனக் கூறப்படுகின்றது. சுற்றுச் சூழல் அகவுணர்வுத் தூண்டலுக்கு வழி வகுத்துள்ளமையை இதிற் காணலாம். இது இறைச்சி எனப்படும் இலக்கியக் கூறிற்கு எடுத்துக்காட்டாகும்.

*அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்*
*வன்புறையாகும் வருந்திய பொழுதே (தொல் பொருளியல்: 35)*

என இறைச்சியின் செயல்பாட்டை தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

கருப்பொருளின் அன்புசால் நிகழ்வுகள், வருந்தும் தலைவிக்கு ஆறுதலளிக்கும் என்பது இதன் பொருளாகும்.

இங்கும் கருப்பொருளானது உரிப்பொருள் நிகழ்விற்குத் தூண்டுதலாய் அமைவதைக் காணலாம்.

இளம்பூரணர் அகத்திணையியல் முதல் சூத்திர உரையில் 'முதல் பொருள் நிலம். எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும், நீருக்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்' என விளக்குவார். இவ்விளக்கம் முதல் என்பதனுள் சுற்றுச்சூழலை உள்ளடக்கியதாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம்.

புறநானூறு 2ஆம் பாடல் இவ்வைம்பூதங்களைக் குறிப்பிட்டு விளக்குகின்றது. அவை பற்றிய விளக்கம் மன்னனின் நடத்தைக்குப் பொருத்திப் பார்க்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இயற்கையைப் பண்பாட்டுடன் இயைபுடையதாக்கி சூழல் மேம்பாட்டை வலியுறுத்துவதாக இது அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மண்திணிந்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்" (புறம்: 2:1-8)*

முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் போற்றிப் பாடும்போது ஐம்பூதங்களைப் போல் ஆற்றலுடையவனாக அவனைக் குறிப்பிட்டுள்ளார்.

*நிலம் போலப் பகைவரைப் பொறுத்துக் கொள்பவன்:
வானம் போல விரிவாக ஆராய்பவன்:
காற்றுப் போல மிகுந்த வலிமையுடையவன்:
தீயைப் போல பகைவரை அழிப்பவன்:
நீரைப் போலப் பலருக்கும் அருள் புரிபவன்"*

என இயற்கையோடு இயைந்த வகையில் அரசனின் நடத்தைப் பண்புகள் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

## சூழல் காப்புணர்வு

இயற்கையைப் பாதுகாத்தலும் அதனை மனித மேம்பாட்டிற்கு உதவச் செய்தலும் முக்கியமான அம்சங்கள் என்ற வகையில் சூழல் காப்புணர்வு பற்றிய நோக்கு தமிழரிடையே இருந்தமைக்கு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இங்கு வகை மாதிரிக்காக நீர் வளப் பேணுகை குறித்த உதாரணங்கள் நோக்கப்படுகின்றன:

### நீர் வளத்தைப் பெருக்குதலும் பாதுகாத்தலும்

*"நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும்நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே
வித்திவான் நேக்கும் புன்புலம் கண்அகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணியாளும்
இறைவன் தாட்குதவாதே
.................................
நிலன்தெளி மருங்கில் நீர்நிலைபெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே (புறம்: 18:18 - 26,28 - 29)*

நீரின் முக்கியத்துவத்தை முதலில் உணர்த்திய புலவர்(குடபுலவியனார்) மிகப் பரந்த புன்செய் நிலத்தை ஒரு மன்னன் கொண்டிருந்தாலும் அதனால் பயனில்லை எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் வளைந்து செல்லும் பகுதியில் நீர் நிலை பெருகுமாறு அணை கட்டித் தடுத்தவர்தாம் இங்கே விரும்புவனவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தியவராவார் எனவும் குறிப்பிடுவதைக் காணலாம்.

குளத்தினுடைய வளம் பற்றிய செய்திகளை பெரும்பாணாற்றுப்படை 288, மதுரைக்காஞ்சி 710, குறிஞ்சிப்பாட்டு 63, மலைபடுகடாம் 47 ஆம் பாடல்களிலும் காணலாம்.

புறம் 118ஆம் பாடல் குளத்தினைப் பாதுகாத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றது. வேள் பாரியின் இழப்பின் பின்னர் அவனது பெருமையைப் பாட வந்த கபிலர், எட்டாம் நாள் தோன்றும் பிறை போன்ற வளைந்த கரையைக் கொண்டதும் தெளிந்த நீரையுடையதுமான சிறிய குளம் பாதுகாப்பவர் இல்லாமையால் உடைவதைப் போல பாரியை இழந்த பறம்பு நாடு ஆயிற்றென்கிறார்.

*“எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்*
*தெள்நீர் சிறுகுளம் கீள்வது மாதோ*
*கூர்வேல் குவைஇய மொய்ம்பின்*
*தேர்வண் பாரிதண் பறம்பு நாடே”* *(புறம்: 118: 2 – 5)*

கையறுநிலையில் (துறை) கபிலர் பாரி குறித்துப் பாடிய பாடல்கள் பாரியின் பறம்புமலை பற்றி அதிகமாகப் பேசியுள்ளன. இதன் இயற்கைச் சூழலும் பாரியின் வீரம் மற்றும் கொடைத்திறனும் ஒருங்கிணைந்து மக்களைக் காத்த செய்திகளை இவற்றிற் காணலாம். இந்த நிலம் அவர்களின் வாழ்வியலுக்குத் துணை போனமையையும் இவை பதிவு செய்துள்ளன. அவ்விடத்தை விட்டு நீங்கும்போது மாறாத் துயர் அவர்களை வாட்டுகின்றது.

*“ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை*
*சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற*
*களிறு மென்றிட்ட கவளம் போல*
*நறவுப் பிழிந்திட்ட*
*கோதுடைச் சிதறல்*
*வாரசும்பு ஒழுகும் முன்றில்*
*தேர்வீசு இருக்கை நெடியோன் குன்றே”* *(புறம்: 114)*

**இதன் பொருள்:** இங்கே நின்று பார்த்தாலும் பறம்பு மலை தெரியும் சற்றுத் தூரத்தே நின்று பார்த்தாலும் மலை தெரியும். யானை மென்று குதப்பிய கவளச் சிதறல்போல மது வடித்து ஒதுக்கப்பெற்ற சக்கையின் சிதறல் ஒழுகும் முற்றமாகியதும் கொடை வழங்கிய இடமாகியதுமாகிய பாரியின் பறம்புமலை என அமைகின்றது.

எனவே, தொகுத்து நோக்குமிடத்து முதல், கரு, உரி மற்றும் உள்ளுறை, இறைச்சி முதலான கருத்தாக்கங்களினூடாக சுற்றுச்சூழல் குறித்த கருத்துக்களை உள்ளடக்கியதாகக் காணப்படும் சங்க இலக்கியம், பண்டைக் காலத்திலேயே தமிழரின் சிந்தனை குறித்த பதிவுகளுக்கு மிகச் சிறந்த ஆவணமாக இருப்பதுடன் சுற்றுச் சூழல் குறித்து அக்கறை கொள்ளும் இன்றைய காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் விழிப்புணர்வினை ஊட்டக் கூடியதான முன்னுதாரணமாக விளங்குவதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககால ஆற்றுப்படை இலக்கியம் மரபும் மாற்றமும்

கலாநிதி சோதிமலர் ரவீந்திரன்,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

சங்கச் சான்றோரால் போற்றி வளர்க்கப்பட்ட சிற்றிலக்கியங்களுள் காலத்தால் முந்தியது ஆற்றுப்படையாகும். அடித்தள மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கத் தொடங்கிய முதல் சிற்றிலக்கியமும் இதுவேயாகும்.

ஆற்றுப்படை என்பதற்கு வழியிற் செலுத்துதல் என்பது பொருளாகும். புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற இரவலன் ஒருவன், வறுமையில் வாடும் மற்றொருவனை வழியிற் சந்திக்க, அவ்வறுமையாளனை தான் பொருள் பெற்ற அப்புரவலனிடம் சென்று பொருள் பெற்று வாழுமாறு ஆற்றுப்படுத்தலே ஆற்றுப்படையின் பொது இலக்கணமாகும். இதனை ஆங்கிலத்தில்,

A poem at panageric poem generally in akaval merter in which one who has been rewarded with gifts directed from another to the presence of the chief whom the latter may also receive similar rewards. எனக் கூறலாம்.

இவ்விலக்கிய வடிவத்துக்கான இலக்கிய வித்தும் இலக்கியப் போக்கும் தொல்காப்பியத்துள்ளும் சங்க இலக்கியங்களுள்ளும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் ஆற்றுப்படைக்கான இலக்கணமானது (தொ.புற. சூத்திரம்36) கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை முதலிய இலக்கியங்களின் தோற்றுவாய்க்கு அடிப்படையாக அமைந்துள்ளன. பத்துப்பாட்டினுள் ஐந்து பாட்டுக்கள் ஆற்றுப்படை என்ற பெயரிலேயே அமைந்துள்ளன. அவை திருமுருகாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை என அமைகின்றன. பத்துப்பாட்டினுள் காணப்படும் ஆற்றுப்படைகளுக்கு முன்பு புறநானூற்றுப் பாடல்களிலும் ஆற்றுப்படையின் அடிப்படைகளைக் காணலாம்.

ஆற்றுப்படை இலக்கியத்தின் இலக்கணத்தைப் பிற்காலத்தில் எழுந்த பாட்டியல் நூலாசிரியர்களும் விரிவாகக் கூறுகின்றனர்.

**பன்னிரு பாட்டியல்:**

*"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட*
*இரவலன் வெயில் தெறும் இருங்கானத்திடை*
*வறுமையுடன் வரூஉம் புலவர் பாணர்*
*பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்*
*புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்*
*ஆங்குநீ செல்கென விடுப்பதாற்றுப்படை"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெண்பாப் பாட்டியல்:**

*"ஒன்றா மகவலால் ஒண்புலவர் யாழ்ப்பாணர்*
*குன்றாத சீர் பொருநர் கூத்தரே - என்றிவரை*
*ஆங்கொருவ னாற்றுப்படுத்த பரிசறைந்தால்*
*பாங்காய ஆற்றுப்படை"*

**சிதம்பரப் பாட்டியல்:**

*"புகழகவலால் புலவன் பாணர் கூத்தர்*
*பொருநர் முத லவருரையாற் றெதிர்ப் பாடாகப்*
*பகரும தாற் றுப்படையாம்"*

**இலக்கண விளக்கப் பாட்டியல்:**

*"அரசர் பாவா லாற்றுப் படைமேல்*
*உரை செய்தவை யென றோர்த்தனர் கொளலே"*

என்றும்,

*"..... அகவலால்*
*உயர் விறலி பாணர் கூத்தர்*
*பல பொருந ரிந் நால்வரில் ஒருவர் பரிசுதவு*
*பரிசினுக் கேகுவாரைப்*
*பரிசுற்று வருவோர் களாற்றினிடையே கண்டு*
*பரிசுதவு தலைவன் கொடை*
*நிலை கீர்த்தி கொற்றமுந் சாற்றலாற்றுப்படை"*

என்றும், இவ்வாற்றுப்படை இலக்கியத்துக்கான இலக்கணத்தைப் பல்வேறு பாட்டியல் நூல்கள் விரிவாக விளக்குகின்றன.

ஆற்றுப்படை நூல்கள் பெயர் பெறுகின்ற முறையானது ஆற்றுப்படுத்துபவரைப் பொறுத்தே அமைகின்றன. உதாரணமாக, புலவரை ஆற்றுப்படுத்தும் நூல் புலவராற்றுப்படையெனவும் கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூல் கூத்தராற்றுப்படையெனவும் பொருநரை ஆற்றுப்படுத்தும் நூல் பொருநராற்றுப்படையெனவும் பாணரை ஆற்றுப்படுத்தும் நூல் பாணராற்றுப்படை எனவும் அமைவதனைக் காணலாம்.

சங்ககாலத்தில் அதிகளவிலான ஆற்றுப்படை இலக்கியங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த பின்னணியை நோக்குவது அவசியமானதே. அவ்வகையில் இவ்விலக்கியங்களின் தோற்றத்திற்கு அக்கால அரசியற் பின்னணியே காரணமெனலாம்.

சங்ககால இலக்கியங்கள் கூறும் கருத்தினடிப்படையில் அக்கால மக்கள் அரசர்களையும் வள்ளல்களையுமே சார்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். அத்தோடு, சங்க இலக்கியங்களும் அரசர்களையும் கொடை வள்ளல்களையும் பெரும் கொடை வள்ளல்களாகவே சித்திரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசர்கள் தம்மை அதிகாரமிக்கவர்களாகவும் அறக்காவலர்களாகவும் அன்புள்ளம் கொண்டவர்களாகவும் காட்ட முயற்சித்தனர். எனவே, தன்னைவிட வசதியில் குறைந்த பாத்திரங்களைப் படைத்து அவர்கள் தம்மிற் தங்கி வாழ்பவராகக் காட்ட முயற்சித்தனர். இவர்களின் இத்தகைய முயற்சியே அதிகளவிலான ஆற்றுப்படை இலக்கியங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்ததெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், ஆற்றுப்படை இலக்கியங்களில் புலவர்களின் வறுமை அளவுக்கதிகமாகவே கூறப்பட்டுள்ளது. அரசரின் கொடைச் சிறப்பை மிகைப்படுத்திக் காட்டுவதற்காகவே அவ்வாறு கூறப்பட்டிருக்கலாம். இயற்கை வளத்தினூடாகத் தமது தேவைகளைத் தம் நிலப்பகுதியிலிருந்து சுய பூர்த்தி செய்துகொண்ட மக்களுக்கு இந்தளவு வறுமை இருந்திருக்க முடியாது. எனவே, இவ்வாற்றுப்படை இலக்கியங்களில் அதிகளவு வறுமை கூறப்படுவது அரசரின் கொடைச் சிறப்புப் பற்றிப் புகழ்பாடும் நோக்கத்திற்காகவேயாகும் எனலாம். எனவே, ஆற்றுப்படை இலக்கியங்களின் தோற்றம்கூட அக்கால அரசியலின் வெளிப்பாடேயாகும்.

ஆற்றுப்படை இலக்கியங்களின் பொருள்மரபு பற்றி நோக்குமிடத்து, அவற்றில் சங்ககால மக்களின் வாழ்வியல் அம்சங்கள் படம்பிடித்துக் காட்டப்படுகின்றமையைக் காணலாம். இவ்விலக்கியங்களில் பெரும்பாலும் இரவலரின் வறுமையும் அரசர்களதும் வள்ளல்களதும் கொடைச் சிறப்புமே விபரிக்கப்படுகின்றன. இரவலரின் வறுமையைக் கூறுமிடத்து உடம்பின் மெல்லிய தோற்றம் பற்றியும் அவர்களது பசியின் கொடுமை பற்றியும் பல இடங்களில் சுட்டப்படுகின்றன. உதாரணமாகப் பின்வரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம்:

*"உடும்பு உரித்து அன்ன என்பு எழு மருங்கின்*
*கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது*
*சில்செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து,*
*ஈங்குஎவன் செய்தியோ பாண் பூண்சுமந்து*
*அம்பகட்டு எழிலிய செம் பொறி ஆகத்து" (புறநானூறு: 68)*

*"கையது கடன்நிறை யாழே மெய்யது,*
*புரவலர் இன்மையின் பசியே அரையது*
*வேற்று இழை நுழைந்த வேர்நனை சிதாஅர்*
*ஓம்பி உடுத்த உயவற் பாண்*
*பூட்கை இல்லோன் யாக்கைப் போல" (புறநானூறு: 69)*

*"ஈரும் பேனும் இருந்து இறைகூடி*
*வேரொடு நனைந்து வேற்று இழை நுழைந்த*
*துன்னற் சிதாஅர் துவர நீக்கி*
*நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து*
*அரவு உரி அன்ன அறுவை நல்கி" (புறநானூறு)*

மேலும், இரவலர்கள் தம் பசியைப் போக்கக் கொடை வள்ளல்களை நோக்கிச் சென்ற பாதைகளின் கொடுமைகள் பற்றியும் அரசர்களின் கொடைச் சிறப்புப் பற்றியும் இவ்விலக்கியங்களில் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன.

அரசர்களின் கொடைச்சிறப்பைப் பற்றிக் கூறுமிடத்து,

*"மழை என மருளும் மகிழ்செய் மாடத்து*
*இழை அணி வனப்பில் இன்நகை மகளிர்*
*போக்கு இல பொலங்கலம் நிறை பல்கால் வாக்குபு தரத்தர*
*வருத்தம் வீட ஆர உண்டு பேர் அஞர் போக்கி"*

*(பொருநராற்றுப்படை: 84 - 88)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பிறன் கடை மறப்ப நல்குவன் செலினே" (புறநானூறு)*

இவ்வரிகளானவை கொடையாளியின் கொடைத் திறனை விளக்குகின்றன. ஒரு இரவலன் மீண்டும் இன்னொரு கொடையாளியை தேடிச் செல்ல வேண்டிய தேவையேற்படாத அளவுக்கு வாரி வழங்குபவர்களாக அக்கால வள்ளல்கள் இருந்தார்களென்பதை மேற்குறிப்பிட்ட வரிகள் விளக்குகின்றன.

மேலும், இரவலர்க்குக் கொடுக்கப்படும் கொடைகள் விலைமதிப்பற்றவையாகக் காணப்பட்டன. அவை பொன்னாகவும் பொருளாகவும் அமைந்தன. சேயிழை, யானை, குதிரை, வண்டு ஆடாத பொற்றாமரை என்பனவும் அவற்றுள் சிலவாக அமைந்தமையை இவ்வாற்றுப்படை இலக்கியங்கள் ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது.

இரவலர்கள் வறுமையில் வாடியபோதும் கொடையாளிகளிடம் எப்பொருளையும் அவர்கள் இனாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தமது இசையால் மகிழ்வூட்டிய பின்பே பெற்றுக்கொண்டனர். இரவலர்கள் தமது இசைத்திறமையாலேயே வறுமையைப் போக்கிக் கொண்டனர். எனவே, இரவலர்கள் ஆடுவதற்கும் பாடுவதற்கும் பயன்படுத்திய இசைக்கருவிகள் அவற்றின் அமைப்பு என்பவற்றுடன் அவர்களது கேசாதிபாத வர்ணனையும் இவ்வாற்றுப்படை இலக்கியங்களில் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஆற்றுப்படை இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்படும் விடயங்களுள் விருந்தோம்பல் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு நிலப்பகுதியிலும் விளையும் விளைச்சல்களைக் கொண்டே விருந்தோம்பல் செய்யப்பட்டதாகவும் இறுதியில் இரவலர் கொடையாளியிடமிருந்து விலகிச் செல்லும் போது பரிசில்கள் பல வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இவ்விலக்கியங்களில் ஒவ்வொரு நிலப்பகுதிக்குமுரிய பண்பாட்டம்சங்கள், பழக்கவழக்கங்கள் என்பனவும் தனித்தனியே கூறப்பட்டுள்ளமை போற்றத்தக்கது.

சங்ககாலத்தைத் தொடர்ந்து வந்த காலங்களில் ஆற்றுப்படை இலக்கியங்களின் பொருள்மரபு மாற்றம் பெறுவதை அவதானிக்க முடிகிறது. இதனை நாம் திருமுருகாற்றுப் படையில் காணக்கூடியதாயுள்ளது. ஏனைய ஆற்றுப்படை இலக்கியங்கள் அரசனிடமும் கடையெழு வள்ளல்களிடமும் இரவலரை ஆற்றுப்படுத்த, திருமுருகாற்றுப்படை ஆசிரியர் மோட்சம் தேடி அலையும் பக்தரை முருகனிடம் ஆற்றுப்படுத்துகிறார். இவ்வாசிரியர் சிற்றின்ப வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடாது பேரின்ப வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அத்துடன் வைதிக சமயம் சார்ந்ததொரு ஆற்றுப்படையாகவும் இதனை ஆக்கியுள்ளார்.

திருமுருகாற்றுப்படை பொருளமைப்பு மரபிலிருந்து மாறுபடுவதற்குச் சமகாலச் சூழ்நிலை காரணமாக அமைந்திருக்கலாம். அக்கால சமூகத்திற் காணப்பட்ட நிம்மதியற்ற நிலைமை காரணமாக பக்தர்கள் ஆன்ம விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்காக இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கலாம்.

இவ்வாற்றுப்படையின் இன்னொரு சிறப்பியல்பாக இறைவன் பாட்டுடைத் தலைவனாக அமைவதைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி, இத்தெய்வத்தின் திராவிட, வடநாட்டு இயல்புகள் கலந்த கலாசார பண்பாட்டு மரபுகள் கலக்கின்ற போக்கினையும் இவ்விலக்கியம் விளக்குகின்றது. அத்தோடு, பிற்பட்ட காலங்களில் முருகன் பற்றி எழுந்த கந்தபுராணம் போன்ற புராணங்கள் தோன்றவும் வழிவகுத்ததெனலாம். இவ்வாற்றுப்படையைப் பின்பற்றியே இஸ்லாமிய புலவராற்றுப்படை, செய்கலாவுதீன் ஆற்றுப்படை என்பனவும் தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையால் படைக்கப்பட்ட காதலியாற்றுப்படையானது முன்னர் தோன்றிய அனைத்து ஆற்றுப்படைகளிலிருந்தும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இது ஒரு தேசிய இலக்கியத்துக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் பலவற்றையும் கொண்டுள்ளது. அதுவரை காலமும் புறம் சார்ந்து வந்த ஆற்றுப்படை இலக்கியங்கள் காதலியாற்றுப்படையின் தோற்றத்துடன் மரபிலிருந்து மாறுபடுகின்றது. அகத்திணை மரபினை இவ்வாற்றுப்படை பெரிதும் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இது ஒரு பிரதேசத்தை மையப்படுத்திய ஆற்றுப்படையாக அமைந்துள்ளமையும் நோக்கத்தக்கது.

இவ்வாற்றுப்படையானது நெஞ்சைக் கவர்ந்த காதலனின் பதிக்குச் செல்லும் பாதையைக் காதலிக்கு ஆற்றுப்படுத்துகிறது. சங்ககால ஆற்றுப்படைகளில் ஐவகை நில வர்ணனைகள் இடம்பெறுவது போல இவ்வாற்றுப்படையில் கடற்கரைப் பிரதேசம் வர்ணிக்கப்படுகின்றது. மாலை வேளையிலே காற்றின் உதவியிலே கலம் செலுத்தும் மீனவர், இரவு கழிந்து தமது வலையகப்படுத்திய பல்வகை மீன்களை விலைகூறி விற்கும் காட்சி, மலையைப் போன்ற பலம் வாய்ந்த திரைகள் கொந்தளித்து எழும் அலைகடல், அந்த அலைகடலைக் கிழித்துச் சென்று மரக்கலங்களிலே பசியை ஓட்டும் மீனவர்கள், பசிய நெல், கொள்ளு, கடலை போன்ற தானிய வகைகள் துறைகளிலே இறங்கும் காட்சி என்பன வர்ணிக்கப்படுகின்றன.

சங்க காலத்தில் எழுந்த ஆற்றுப்படைகளில் இரவலரின் வறுமை, வாழ்க்கை முறை என்பன விபரிக்கப்பட்டன. இவ்வாற்றுப்படையானது யாழ்ப்பாணப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட தொழிலாளர் கூட்டத்தின் வாழ்க்கையையும் வறுமையையும் வர்ணிக்கிறது. உதாரணமாக, கந்தையுடையினர், குறுக்குக் கட்டினர், சிந்திடு வேர்வையர், அசைந்த நடையினர், வறுமையிற் செம்மை அமைந்த வாழ்வினர் போன்ற சொல்லாட்சிகள் இதனை விளக்குகின்றன.

எனவே, குறிப்பிட்டதொரு பிரதேசத்தின் சமூக, பண்பாட்டு அம்சங்களை விளக்குமுகமாக இவ்விலக்கியம் அமைந்திருப்பதால் ஆற்றுப்படை மரபிலிருந்து மாறுபட்டுள்ளமையை அவதானிக்கலாம். அத்தோடு, திருமுருகாற்றுப்படையின் சாயலையும் இவ்விலக்கியத்திற் காணலாம். இதனை இதிற் குறிப்பிடப்படும் முருக வழிபாட்டுத் தலங்களின் குறிப் பினூடாகக் காணலாம்.

மேலும், இவ்வாற்றுப்படையில் ஆகம விதிசாராத வழிபாடுகள் பலவும் குறிப்பிடப் படுகின்றன. அத்தோடு, கூத்துக்கள் ஆடப்படும் இடமான நெல்லண்டை போன்ற இடங்களும் குறிப்பிடப்படுவதால் பழைய மரபு இழையோடியிருப்பதனையும் காணலாம். இவ்வாற்றுப்படையில் இடம்பெறும் பேச்சுமொழிச் சொற்களும் காலத்திற்கேற்ற வகையில் அச்சமூகத்தின் பண்பாட்டை உணர்த்தி நிற்கின்றன எனலாம். எனவே, காதலியாற்றுப்படையானது காலத்திற்கு ஏற்றவகையில் பல புதிய மாற்றங்களைப் பெற்று பழைய மரபிலிருந்து மாறுபடுகின்றதெனலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, சங்ககால அடிநிலை மக்களின் வாழ்க்கைக் கூறுகளையும் அரசர்களது கொடையையும் எடுத்துக்கூற எழுந்த புற இலக்கியங்களான இவ்விலக்கியங்கள் இறுதியில் அகத்திணை மரபுகளோடு கலந்து பழைய மரபிலிருந்து மாறுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

சுப்பிரமணியன் (2003), **சங்க இலக்கியம் பத்துப்பாட்டு**, கோவிலூர் மடாலயம், கோவிலூர்.

இராசமாணிக்கம், மா. (1970), **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை.

அமிர்தலிங்கம், க. (2000), **சங்க இலக்கியக் களஞ்சியம்,** மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம்.

கணபதிப்பிள்ளை, க. (1940), **காதலியாற்றுப்படை**, திருமகள் பதிப்பகம், சுன்னாகம்.

சிவத்தம்பி கார்த்திகேசு. (1997), **பேராசிரியர் கணபதிப்பிள்ளை**, கொழும்பு தமிழ்ச் சங்கம், கொழும்பு.

சண்முகசுந்தரம். (தொகுப்பு) (2010), **சங்க இலக்கிய வரலாறு,** காவ்யா, சென்னை.

சண்முகசுந்தரம் (   ) **தெ.பொ.மீயின் சங்கத் தமிழ்**, மணி ஆப்செட், சென்னை.

செல்லையா, யெ.வி. (1947), **பத்துப்பாட்டு**, ஜெனரல் பிரசுரம், கொழும்பு.

சாமிநாதையர், வி. (1956), **பத்துப்பாட்டு** (நச்சினார்க்கினியர் உரை), கபீர் பிரசுரம், சென்னை.

**இளங்கதிர்** 1964/1965 தமிழ்ச் சங்க வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கப்பாடல்கள் மீதான மறுவாசிப்பு

கலாநிதி ம. நதிரா
தமிழ்த்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

## I

காலனித்துவ மற்றும் நவகாலனித்துவப் பார்வைகள் காரணமாக சுதேசிய அறிவுத்தொகுதிகள், வாழ்க்கை முறைகள் என்பவற்றை இரண்டாந்தரமாகப் பார்க்கும் ஒரு மரபு மூன்றாம் உலகில் காணப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக நவகாலனித்துவ (neo colonization) பண்பாட்டு முன்னெடுப்புக் காரணிகளான தகவல் தொழில்நுட்பம், தொழிநுட்ப மயப்படுத்தப்பட்ட ஊடகம் என்பவற்றினூடாக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட உலகமயமாதல் என்ற பண்பாட்டு ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது. காலனித்துவ மற்றும் நவகாலனித்துவ சிந்தனை காரணமாக மூன்றாம் உலகைச் சேர்ந்த சுதேச அறிஞர்கள் மீண்டும் உலகமயமாதல் என்ற மேற்கு-மையக் கோட்பாட்டின் மாயக்கண்ணாடிக்கூடாகத் தமது அறிவுத்தொகுதியை, வரலாற்றை, பண்பாட்டைப் பார்க்கின்ற மரபு இன்றும் காணப்படுகின்றது.

சங்க இலக்கியத்தை நவீன கோட்பாடுகளின் அடிப்படையில் மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றபோது நம் கல்வி முறையினூடாக எமக்குள் நிறுவப்பட்டுள்ள மேற்குமைய (euro centric), மேற்குமுதன்மைப் பார்வை பற்றிக் கவனம் கொள்ள வேண்டும். செழிப்பான இயற்கை சார்ந்த வாழ்க்கை வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டத்தின் செவ்விலக்கிய மற்றும் நாட்டார் மரபுகளைச் சேர்ந்த இலக்கியத் தொகுதியைப் பின்னை நவீனத்துவ உலகமயமாதற் சூழலில் மேற்குலக விமர்சனக் கோட்பாடுகளின் வழி மறுவாசிப்புக்குட்படுத்தும் போது நாம் காலனிய, மேற்குமையப் பார்வைகளில் இருந்து விடுபட்ட நிலையில் அவதானமாக அவற்றை மேற்கொள்ள வேண்டும்.

சங்கப்பாடல்கள் எண்ணிக்கையிலும் பிராந்திய வேறுபாடுகளின் அடிப்படையிலும் புலவர்களின் எண்ணிக்கையிலும் அவற்றின் உள்ளடக்கம் சார்ந்த வேறுபாடுகளின் அடிப்படையிலும் மிக விசாலமான பரப்புடையனவாகும். தற்காலத்தில் மட்டுமல்லாது இன்னும் பன்னூற்றாண்டு காலம் மனித வாழ்வு, அறம், இலக்கியம் போன்ற துறைகளில் தோன்றவிருக்கும் எத்தகைய கோட்பாடுகளின் பார்வைக் கோணங்களில் இருந்தும் அவற்றை நாம் மறுவாசிப்புக்கு உட்படுத்த முடியும். அப்பாடல்கள் ஆரோக்கியமான பல புதிய பார்வைகளை உலகிற்கு வழங்கும் செழுமையுடையன.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்கப் பாடல்களை நவீன கோட்பாடுகளின் வழி அணுகும் போது நாம் எந்த அரசியல் நிலைப்பாட்டை, ஆய்வு முறையியலைப் பின்பற்றுகிறோம் என்பது முக்கியமானது. குறிப்பாகப் பெண்ணியம், மார்க்சியம், பின்னைக் காலனியம், பின்னை நவீனத்துவம் போன்ற கருத்தியல்களின் வழிநின்ற சங்க இலக்கிய மறுவாசிப்புக்கள் அவசியம். ஆயினும் மேற்குறித்த கருத்தியல் பள்ளிகளுக்குள்ளும் மேற்கு-மைய ஏகாந்தவாதப் போக்குகளுக்கு எதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மைத்துவத்திற்கான குரல்கள் எழுப்பப்படுகின்றன என்பதை மனங்கொள்ள வேண்டும். சில வேளைகளில் மேற்கூறிய கண்ணோட்டங்களுக்குத் தருகின்ற முக்கியத்துவங்களைக் கீழைத்தேய அறிஞர்கள் நம் மண்சார்ந்த செழுமையும் தொன்மையும் மிக்க இலக்கியங்கள், இலக்கிய வரலாறுகள், மரபுகள் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் என்பவற்றிற்குத் தருவதில்லை.

இருப்பினும் நவீன காலத்தில் நீலகண்டசாஸ்தரி, சிறீநிவாச ஐயங்கார், தேவநேயப்பாவாணர், மறைமலையடிகள், மயிலை சீனி வேங்கடசாமி, கால்டுவெல், கமில் சுவலபில், ஜே.ஆர். மார், ஜோர்ஜ்.எல். ஹார்ட், மு. வரதராஜன், தனிநாயகம் அடிகள், கைலாசபதி, சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் பண்டைத்தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம் பற்றிய ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்கூறிய முன் நிபந்தனைகளோடு சங்கப் பாடல்களை அமைப்பியல்வாதம் முதற்கொண்டு மார்க்சியம், பெண்ணியம், பின்னை நவீனத்துவம், சூழலிய விமர்சனம், மொழியியல் மற்றும் உளப்பகுப்பாய்வு சார்ந்த விமர்சனக் கோட்பாடுகளின் அடிப்படையில் மறுவாசிப்புக்குட்படுத்தலாம்.

சுருக்கம் மற்றும் ஆய்வெல்லை கருதிச் சூழலியல் விமர்சனம் மற்றும் பெண்மைய விமர்சனம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கப்பாடல்களை இக்கட்டுரை மறுவாசிப்புக்கு உட்படுத்த முனைகின்றது.

## II

### சூழலியல் விமர்சனம் (eco criticism)

சூழலியல் விமர்சனம் (eco criticism) என்பது உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள முற்போக்குச் சிந்தனையாளர்கள் மற்றும் முற்போக்கு எழுத்தாளர்களால் அண்மைக் காலங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது வெறும் இலக்கிய விமர்சனப்பார்வை மட்டுமன்றி பொருளாதாரம், சமூகவியல் மற்றும் பண்பாட்டுக் கற்கைகள் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடைய கோட்பாடுமாகும்.

மொழி பண்பாட்டின் மிகப்பெரும் கருவூலம். பண்பாட்டு வாழ்க்கை முறைகள் மற்றும் பண்பாட்டு வாழ்வியற் சிந்தனைகளையும் இவற்றின் அடி ஆதாரமாக விளங்கும் தாவரங்கள், விலங்குகள், காலநிலை போன்ற உயிர்ச்சூழல் பற்றிய அறிதல்களையும் மொழி தன்னுள் பதியம் செய்துள்ளது. ஒவ்வொரு மொழியும் அம்மொழியிற் தோன்றிய இலக்கியங்களும் சுற்றுச்சூழலின் மிகச்சிறந்த ஆவணக்காப்பகங்களாகும். மொழிகள் பண்பாட்டின் உறைவிடமாக விளங்கி உலகின் உயிர்ப் பல்வகைமையைப் (biodiversity) பாதுகாத்து வருவதோடு சுற்றுச்சூழலுடன் நேரடியாக உயிரோட்டமான உறவுகளைக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்கள் சூழல் அறிவில் மிகப்பெரிய தகவல் களஞ்சியங்களாக விளங்குகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை என ஐவகைத் திணைகளையும் நுட்பமான தரவுகளோடு பதிவுசெய்து வைத்துள்ளன. சங்கப்புலவர்கள் தொல்தமிழ்ச் சமூகத்தின் இயற்கை மற்றும் சூழல் சமநிலை பற்றிய கருத்துக்களைத் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

ஆங்கிலத்தில் 'Eco Criticism' என்று அழைக்கப்படுகின்ற கோட்பாட்டை நேரடியாக மொழி பெயர்க்கின்ற போது சூழலியல் விமர்சனம் என்று அமைகின்றது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோட்பாட்டின் நோக்கங்களை ஆய்வு செய்கின்ற போது அது வெறும் இலக்கிய விமர்சன நிகழ்ச்சி நிரலுக்குள் முடங்கிவிடவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே இக்கோட்பாட்டை சூழலிய இலக்கியக்கோட்பாடு (சூழல்மைய இலக்கியக் கோட்பாடு) எனக் குறிப்பிடலாம். இக்கோட்பாட்டின் பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. இலக்கியப்படைப்புக்களைச் சூழல் பேணுகைக் கருத்தியல் வழிநின்று ஆய்வு செய்தல்.
2. இலக்கியங்களில் இயற்கையின் அங்கங்களான தாவரங்கள், விலங்கினங்கள் அவற்றின் ஆதாரமாக விளங்கும் பௌதீகச் சூழல்கள் என்பன பதிவு செய்யப்பட்டுள்ள முறைமையைப் பற்றி ஆய்வு செய்தல்.
3. இயற்கைச் சமநிலைப் பேணுகையைக் கருப்பொருளாகவும் இயற்கையின் மேற்கூறிய அங்கங்களை இலக்கியத்தின் முதல் மற்றும் கருவாகக் கொண்ட இலக்கியங்கள் படைக்கப்படுவதையும் ஊக்குவித்தல்.
4. சுய பண்பாட்டு மட்டத்திலும் உலகளாவிய ரீதியிலும் இயற்கைச் சமநிலைப் பேணுகை பற்றிப் பரப்புரை செய்தல்.

சூழலிய இலக்கியக் கோட்பாட்டிற்கும் ஏனைய இலக்கியக் கோட்பாடுகளுக்கும் அடிப்படையிலான பெரியதொரு வேறுபாடு காணப்படுகின்றது என இக்கோட்பாட்டை உருவாக்கியவர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் செரில் க்ளொட்பெல்ட்டி (Cheryll Glotfelty) கூறுகின்றார். ஏனைய இலக்கியக் கோட்பாடுகள் மனித சமூகம் அவற்றின் மாற்றம் குறித்துப் பேசுகின்றன. ஆனால் சூழலிய இலக்கியக் கோட்பாடு மனித வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமான இயற்கைச் சூழலின் இருப்பு, அதன் சமநிலைப் பேணுகை என்பவற்றை மையமாகக் கொண்டது.

சூழலிய இலக்கியக்கோட்பாடு சமூகம், நாடு, உலகு என்ற வார்த்தைகளுக்குள் மனிதர்களோடு இயற்கையையும் இணைத்து அர்த்தம் தருகிறது. பல்வேறு நாடுகளிலும் தோன்றிய தொன்மை இலக்கியங்களில் தவிர்க்க முடியாதபடி இயற்கை முக்கிய கருப்பொருளாகவும் இலக்கிய உத்திகளினூடாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. எனினும் தமிழ் இலக்கியப் பாரம்பரியமானது சங்கப் பாடல்கள் மற்றும் தொல்காப்பிய காலத்தில் இருந்து இயற்கையை முதல் மற்றும் கருவாகவும் இயற்கைச் சமநிலைப் பேணுகையை வலுவான கருப் பொருளாகவும் பதிவு செய்து வந்திருக்கின்றது.

இயற்கை மீதான சுரண்டலும் ஏனைய சமூகச் சுரண்டல்களும் ஒரே அதிகார அரசியல் தளத்திலேயே இடம்பெறுகின்றன. இதன் அடிப்படையில்தான் 'Eco Feminism' (Vandhana Shiva & Maria Mies) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற சூழலியல் பெண்ணியம் தோற்றம் பெற்றுள்ளது.

தமிழ் இலக்கிய மரபின் ஆதியும் அடிப்படையுமான சங்கப்பாடல்களும் தொல்காப்பியமும் இலக்கியம் மற்றும் மனித இருப்பின்அடிப்படையாக இயற்கையை அடையாளப்படுத்தியுள்ளன. வாழ்க்கை முறை மற்றும் இலக்கிய வெளிப்பாட்டின் அடிப்படைச் சட்டகமாகத் திணைக் கோட்பாடு அமைகின்றது. இயற்கையின் இருப்பின் அடிப்படைகளான காலம், இடம் என்பவற்றைத் தொல்காப்பியம் நிலம், பொழுது எனப் பிரித்து முதல் என வரையறுப்பது தமிழிலக்கிய மரபின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

மேற்கூறிய நிலம், பொழுது ஆகிய முதலின் தன்மை சார்ந்தே தாவரங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினங்கள், அவற்றின் உணவு மற்றும் மனிதப் பண்பாட்டின் தெய்வம், இசை முதலான இன்ன பிற கூறுகளான கரு அமைகின்றது. கருவைப் படிமச் சட்டகமாகக் கொண்டே உரி என்னும் மனித உணர்வுகள் பாடுபொருள்களாக சங்கப்பாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னதான மனித இருப்புப் பற்றிய தத்துவார்த்த அபத்தங்களை முற்றிலுமாகப் புரட்டிப்போட்ட சார்ல்ஸ் டார்வினது பரிணாமக் கோட்பாட்டின் அடிப்படைகளைத் திணைக்கோட்பாடு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரிணாமக் கோட்பாட்டிற்குச் சமாந்தரமாக எழுந்த "naturalism" என அங்கிலத்தில் அழைக்கப்படும் இயற்கை மைய இலக்கியக் கோட்பாடு பற்றிக் குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

இலக்கியக் கதாபாத்திரங்களின் நடத்தை மற்றும் குண இயல்புகள் உள்ளிட்ட மரபுக்கூறுகள் மற்றும் சமூகச் சூழல் என்பவற்றை அவற்றின் பின்புலமான இயற்கைச் சூழலே தீர்மானிக்கின்றது என இயற்கை மையவாதிகள் கருதினார்கள்.

இது போலவே சங்கப்பாடல்களும் தொல்காப்பியமும் முதலாகிய நிலம், பொழுதின் அடிப்படையிலேயே உரியாகிய உணர்வுகளை வகுத்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் டார்வினும் இயற்கை மையவாதிகளும் கூறியதை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கப்பாடல்களும் தொல்காப்பியமும் பதிவு செய்துள்ளமை தமிழரின் வாழ்வியலில் இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது. பின்வரும் சில எடுத்துக்காட்டுக்கள் இதனை விளங்கிக் கொள்ளலாம்:

### பௌதீகக் கூறுகள்

இயற்கை ஐந்து வகையான பெரியஆற்றல்களை உடையது என முரஞ்சியூர் முடிநாகராயர் பின்வரும் பாடலில் குற்ப்பிடுவர்:

*மண்திணிந்த நிலனும்*
*நிலனேந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை போல*
*(முரஞ்சியூர் முடிநாகராயர், புறம் 2: 16)*

### நீர் வளம்

நீர் என்பது உயிரின் அடிப்படை என்பதைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் மிகத்தெளிவான முறையில் வரையறை செய்கின்றது. உடம்பு மற்றும் உயிரின் தோற்றத்திற்குக் கண்ணுக்குப் புலப்படாத விடயங்களைக் காரணங்களாகச் சுட்டாமல் மிக யதார்த்தமான முறையில் நீரும் நிலனுமே அடிப்படை என்பதைக் குடபுலவியனார் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றார்.

*நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே (குடபுலவியனார், புறநானூறு:18)*

இதேபோல கபிலரும் வள்ளுவரும் கூட "நீரின்று அமையாது உலகு" என்ற தொடரைப் பயன்படுத்துகின்றனர்.

## நீர் நிலைகள் பற்றிய குறிப்புக்கள்

குளங்களைச்சுற்றி வலிமையான கோடு என்ற குளக்கட்டுக்கள் அமைக்கப்பட்டதுடன் குளங்கள் காவலர்களால் பாதுகாக்கப்பட்டமை தொடர்பான குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. எ-டு:

*சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன் போல*
*(நக்கண்ணையார், அகம் 252: 11-12)*

*காப்புடைய கயம் படியினை*
*(நெட்டிமையார், புறம் 15: 10)*

## மண்ணரிப்பு

ஆறுகள் பெருக்கெடுத்துப் பாயும் காலங்களில் ஏற்பட்ட மண்ணரிப்புப் பற்றிய புரிதலும் அக்கறையும் இருந்தமை பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். வண்டல் பற்றிய குறிப்புக்கள் சங்கப்பாடல்களில் மிகுந்து காணப்படுகின்றன. நீரோட்டத்தின் போது கரையோரப்பகுதிகளில் உள்ள மண் அரிக்கப்படுவதற்குப் பின்வரும் பாடலடிகளைச் சான்றாகக் காட்டலாம்:

*இயங்கு புனல் கொழித்த வெண்தலைக் குவவு மணற்*
*கான் பொழில் தழீஇய அடைகரை தோறும்*
*(மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி: 336-337)*

*புனல் கால் கழிஇய மணல்வார் புறவில்*
*(இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப்*
*பெருங்கௌசிகனார், மலைபடுகடாம்: 48)*

*வேறு பஃறுகிலின் நுடங்கி அகில் சுமந்து*
*ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்*
*பூவுடை அலங்கு சினை புலம்ப வேர்கீண்டு*
............................
*இழுமென் இழிதரும் அருவி (திருமுருகு, 296- 298, 396)*

*வளிவாங்கு சினைய மாமரம் வேர் கீண்டு (பரி 7: 14)*

## தாவரங்கள், விலங்கினங்கள்

இயற்கையின் பல்வேறு கூறுகளும் தாவரங்களும் விலங்கினங்களும் மனித உணர்வு வெளிப்பாட்டிலும் கவிதை வெளிப்பாட்டிலும் அங்கிங்கெனாதபடி சங்கப்பாடல்கள் முழுவதும் படிமங்களாகப் பயன்படுத்தபபடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணர் தாவர பரிணாமத்தின் மிக ஆரம்ப வடிவமான பாசியின் தன்மை பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஊருண் கேணியின் உண்துறையில் மனிதக்கரங்களின் தொடுகையின் போது அவற்றிலுள்ள நொதியங்களின் தாக்கங்களினால் பட்டென்று பரந்து கொள்கின்ற மரகதப் பாசியின் தன்மையை ஒரு பெண்ணின் காதலுணர்வோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

*ஊருண்கேணி உண்துறைத் தொக்க*
*பாசியற்றெ பசலை காதலர்*
*தொடுவுழித் தொடுவுழி நீங்கி*
*விடுவுழி விடுவுழிப் பரத்தலானே (பரணர், குறு: 399)*

சங்கப்பாடல்களில் விலங்கினங்கள் இயற்கைச் சூழல் சமநிலையில் எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றன என்பது பற்றிய தெள்ளத்தெளிவான புரிதலைக் காண முடிகின்றது. பின்வரும் பாடலில் யார் கண்ணிலும் படாமல் இரவு நேரத்தில் கடற்கரை ஓரமாக முட்டையிட்டு மணலில் புதைக்கின்ற ஆமையின் செயற்பாடு கூட ஒரு சிறந்த ஆவணத் திரைப்பட ஒலிப்பதிவாளரின் அழகியலோடு பெண்பாற் புலவரான நப்பசளையார் பதிவு செய்வது வியப்புக்குரியது. இச்சித்திரிப்பில் உள்ள படிமங்கள் புலனுணர்வு சார்ந்தனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

*அடும்புகொடி சிதைய வாங்கி கொடுங்கழிக்*
*குப்பை வெண்மணற் பக்கம் சேர்த்தி*
*நிறைச்சூல்யாமை மறைத்து ஈன்று புதைத்த*
*கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை*

## இயற்கைப் பேணுகை பற்றிய பாடல்கள்

சங்கப் பாடல்கள் பலவற்றில் இயற்கைப் பேணுகை பற்றி நேரடியாகவும் உணர்வுபூர்வ மானதுமான பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. விலங்குகளையும் தாவரங்களையும் மனிதரைவிட மேலாக மதித்து அவற்றிற்குக் கொடை நல்கிய உன்னதமான விழுமியங்களை உடையது பண்டைத் தமிழ் மரபு. இதற்குச் சான்றாகக் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகன் மயிலுக்குப் போர்வை வழங்கிய நிகழ்வைக் குறிப்பிடலாம். பின்வரும் சிறுபாணாற்றுப்படை வரி இதற்கு ஆதாரமாக அமைகிறது:

### கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

*அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்*
*பெருங்கல் நாடன் பேகனும்*
*(இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், சிறுபானாற்று 85-87)*

அதேபாடலில் சிறு பூக்களையுடைய முல்லைக்குப் பெருந்தேர் வழங்கிய வள்ளல் பாரி பற்றியும் பின்வரும் வரிகளில் குறிப்பிடுகின்றார்:

*சுரும்பு உண*
*நருவீ உறைக்கும் நாக நெடுவழிச்*
*சிறுவீ முல்லைக்குப் பெருந் தேர் நல்கிய*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்*
*பறம்பின் கோமான் பாரியும்*
*(இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், சிறுபானாற்று 87-91)*

இதற்கு ஒருபடி மேலே சென்று தேனீக்கள் அச்சமடையக் கூடாது என்பதற்காக தனது தேரின் மணியினது நாவை ஒலிக்காது இழுத்துக் கட்டிய தலைவன் பற்றிய அற்புதமான குறிப்பொன்று குறுங்குடி மருதனாரது அகநானூற்றுப் பாடலில் வருகின்றது. எ-டு:

*பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த*
*தாது உண் பறவை பேதுறல் அஞ்சி*
*மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்*
*(குறுங்குடி மருதனார், அகநானூறு 4: 10- 12)*

இவ்வாறு சங்கப் பாடல்கள் முழுவதும் நேரடியாகவும் படிமங்களாகவும் இயற்கை பற்றிய நுண்ணிய அவதானிப்புக்களையும் இயற்கை பேணுகை பற்றிய அக்கறையையும் காணலாம். (சுருக்கம்கருதி அவை முழுமையாகத் தரப்படவில்லை)

## III

### பெண்மைய விமர்சனம்

பெண்ணை எழுத்தாளராக்கொண்டு, அவளது பால் மற்றும் பால்நிலையை மையமாக வைத்துச் செய்யப்படும் விமர்சனம் 'Gynocriticism' (பெண்மைய விமர்சனம்) ஆகும். பெண்மைய விமர்சனத்தை எலெய்ன் ஷோவோல்ட்டர் (Elain Showalter) பின்வருமாறு வரையறுப்பர்:

பெண்களை எழுத்தாளர்களாகவும், தங்களது எழுத்துக்களின் கருத்துநிலையைத் தீர்மானிப்பவர்களாகவும் கொண்டு அவர்களது எழுத்துக்களின் வரலாறு, அடிக்கருத்துக்கள் (theme), வடிவம் (form/style), அமைப்பு (structure) ஆகியவற்றை ஆய்வு செய்வதாகப் பெண்மைய விமர்சனம் அமைகின்றது (1979: 186)

பெண்ணெழுத்தாளர்களின் பிரதிகளுக்கிடையேயான உறவு, அவர்களது ஆக்கங்களுக் கிடையிலான பொதுத்தன்மை என்பவை பற்றியும் இது கவனம் செலுத்துகிறது. எனவே பெண்மைய விமர்சனம் இலக்கியப் படைப்புகளை மட்டுமல்லாது இலக்கியத்தின் படைப்புச்சூழல் பற்றி ஆராய்வதிலும் அதிக கவனம் செலுத்துகிறது. இதன் முக்கிய கூறாகப் பெண்மைய விமர்சனம் "பெண்கள் இலக்கியப் பாரம்பரியம்" என்னும் கோட்பாட்டையும் முன்வைக்கிறது.

எலெய்ன் ஷோவோல்ட்டர் பெண்களின் ஆக்கங்களின் வேறுபாட்டிற்குக் காரணமான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பெண்மைய விமர்சனத்தைப் பின்வரும் நான்கு உட்பிரிவுகளாகப் பகுக்கிறார்:

உடல்சார் விமர்சனம் (Biological Criticism)

மொழியியல் விமர்சனம் (Linguistic Criticism)

உளவியல் விமர்சனம் (Psychological Criticism)

பண்பாட்டு விமர்சனம் (Cultural Criticism)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை நான்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும், ஒன்று மற்றையதன் தொடர்ச்சியாகவும் காணப்படுகின்றன. உடல்சார் விமர்சனம் முன்வைக்கும் சில கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சங்கப்பாடல்களை விளங்கிக் கொள்ளலாம். எ-டு:

### உடல்சார் விமர்சனம்

இவ்விமர்சனம் ஆண் எழுத்தாளர்களின் எழுத்துக்களிலிருந்து பெண்ணெழுத்தாளர்களின் எழுத்துக்கள் வேறுபடுவதற்கு முதன்மையான காரணம் பெண்களது உடல் சார்ந்த வேறுபாடே என்று குறிப்பிடுகின்றது. பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் பெண்ணுடலின் தனித்தன்மைகளான தாய்மை, பாலுணர்வு என்பவற்றை பெண்களின் எழுத்துக்களின் அடிப்படைகளாகக் கருதுகின்றனர். இதன் அடிப்படையில் பெண்ணுடலை எழுதுதல் (ecriture feminine) என்ற கோட்பாட்டை முன்வைக்கின்றனர்.

### பெண்ணுடலை எழுதுதல் (ecriture feminine)

பெண்களது எழுத்துக்கள் பெண்ணுடலிலிருந்தும் அதன் தனித்துவமான உணர்வுகளிலிருந்தும் தோற்றம் பெறுகின்றன எனக் கொள்வதே பெண்ணுடலை எழுதுதல் (ecriture feminine) என்ற கோட்பாடாகும். பெண்கள் தனித்துவமான உணர்வு, உளவியல், பாலியல்பு கொண்டவர்கள் எனவும் அதற்கு அவர்களது உடல் சார்ந்த வேறுபாடுகளே அடிப்படையாக அமைகின்றன எனவும் லூஸ் இரிகாரே போன்றோர் கருதுகின்றனர். இத்தனித்துவங்களை அவர்கள் சாதகமானவையாகவும் வலுவின் மூலங்களாகவும் கொண்டாடப்பட வேண்டியன வாகவும் கருதுகின்றனர்.

பெண்ணுடலை எழுதுதல் என்ற கோட்பாட்டை எழுபதுகளில் ஆன்னி லெக்லக் (Annie Leclerc), சேவியர் கௌத்தியர் (Xaviere Gauthier), மார்கிரெட் டூராஸ் (Marguerite Duras) ஆகிய பிரெஞ்சுப் பெண்ணியவாதிகளே அறிமுகப்படுத்தினர். பின்னர் ஹெலன் சிசு, லூஸ் இரிகாரே போன்றோர் அதை மேலும் செழுமைப்படுத்தினர்.

பெண்களின் எழுத்துக்கள் தொடர்பான இக்கோட்பாடு தனித்துவங்களைக் கொண்டாடுதல் என்ற அடிப்படையில் அமைந்தது. பெண்களது உடல், பாலியல்பு, தாய்மை, என்பனவே எழுத்தின் ஊற்றுவாயாக அமைவதனாலேயே அச்செயற்பாட்டைப் பெண்ணுடலை எழுதுதல் என்று குறிப்பிடுகின்றனர்.

### சங்கப்பாடல்களில் தாய்மையுணர்வும் அனுபவமும் பெண்மொழியும்

பெண்களது எழுத்துக்கள் உடல் சார்ந்த அனுபவங்களுடாக, உடல் சார்ந்த படிமங்களுடாகப் பெரிதும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதைச் சங்கப் பெண்கவிஞர்களது பாடல்களில் காணலாம். பெண்களது பாலுணர்வு மற்றும் காதலுணர்வு என்பவற்றை உடல் சார்ந்த அனுபவங்கள் மற்றும் படிமங்களினூடாகவே வெளிப்படுத்துகின்றனர்.

### தாய்மை தொடர்பான படிமங்கள்

சங்கப் பெண்கவிஞர்களின் பாடல்களில் தாய்மை தொடர்பான படிமங்கள் அதிகமாக இடம்பெறுவதைக் காணலாம். பெண் புலவர்கள் காதல் உணர்வு பற்றிக் கூறுகையில் தாய்மையோடு தொடர்புடைய உடல் சார்ந்த படிமங்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். ஔவையார் தனது பாடலில் தலைவியின் காதல் விருப்பத்தைப் பின்வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரிக்கிறார். மந்தி தனது மகவை இறுகத் தழுவுவது போலத் தழுவிக் காதலன் தலைவியின் குறையைக் கேட்பான் எனின் அது சிறப்புடையதாகும் எனக் கூறுகிறார்:

*..................... நெஞ்சே நன்றும்*
*பெரிதால் அம்ம நின் பூசல் உயர்கோட்டு*
*மகவுடை மந்தி போல*
*அகன் உறத் தழீஇ கேட்குநர்ப் பெறினே (ஔவையார், குறு: 29)*

தலைவன், தலைவிக்கிடையிலான உடல் நெருக்கத்தைச் சுட்டுவதற்குத் தாய்மை சார்ந்த படிமத்தை ஔவையார் பயன்படுத்துகிறார். குறிப்பாகத் தலைவனைத் தாய்மை நிலையிற் சித்திரிப்பது குறிப்பிடத்தக்கது.

பிறிதொரு அகப்பாடலில் கச்சிப்பேட்டு நன்னாகையார் நிறைந்த நீரைச் சுமந்து செல்லும் மழை மேகத்தைப் பின்வருமாறு விபரிக்கிறார்:

*முந்நாள் திங்கள் நிறைபொறுத்து அசைஇ*
*ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்*
*கடுஞ்சூல் மகளிர் போல*
*(கச்சிப்பேட்டு நன்னாகையார்: குறு: 287)*

*சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப் பன்ன*
*கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ*
*(கழார்க்கீரன் எயிற்றியார், குறு: 35)*

இதேபோல புறப்பாடல்களிலும்கூட அவர்களது மொழியில் பெண்ணுடலையும் உணர்வையும் முதன்மைப்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. உடல் சார்ந்த அனுபவங்களை முன்னிறுத்துவது அகமரபிற்குட்பட்டதெனினும் பெண் புலவர்கள் போர் மற்றும் வீரம் குறித்த புறப்பாடல்களிலும் கூடத் தம் உடலை மொழிதலில் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

பொன்முடியார் எதிரிகளுடைய போர்க்குதிரைகள் போரை விரும்பாது பின்நிற்பதை விவரிக்கையில் அவற்றை முருகன் கோட்டத்துக் கலத்தைத் 'தொடக்கூடாத' 'தீட்டுடைய' மகளிரோடு பின்வரும் பாடலில் ஒப்பிடுகிறார்:

*தண்ணடை மன்னர் தாருடைப் புரவி*
*அணங்குடை முருகன் கோட்டத்துக்*
*கலம் தொடா மகளிரின் இகந்து நின்றவ்வே*
*(பொன்முடியார், புறம்: 299)*

பின்வரும் பாடலில் தமது மகன் போர்க்களத்தில் எதிரிகளை வீழ்த்திக் களத்தில் வீழ்ந்தமையினைக் கண்ட தாயின் மனநிலையைப் பெண்ணின் உடல் சார்ந்த அனுபவ மாகவே ஔவையார் வெளிப்படுத்துகிறார்:

*வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி,*
*இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய,*
*சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி,*
*வாடுமுலை ஊறிச் சுரந்தன*
*ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே. (ஔவையார், புறம்: 295)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவற் பெண்டு தனது பாடலில் காவலாளி ஒருவன் போர் வீரனின் இருப்பிடத்தை அவனது தாயிடம் கேட்கும் சந்தர்ப்பத்தில் அவள் தன் உடல் சார்ந்த படிமத்தினூடாகப் பதிலிறுப்பதை விவரிக்கிறார்:

*.............................. ஒரும்*
*புலி சேர்ந்து போகிய கல் அளை போல*
*ஈன்ற வயிறே இதுவே,*
*தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே? (புறம்: 86)*

சங்கப் பெண்புலவர்களின் பாடல்களில் தாய்மை பற்றிய மேற்கூறிய படிமங்கள் தவிர நேரடியாகவே தாய்மை உணர்வை வெளிப்படுத்துகின்ற பாடல்களும் காணப்படுகின்றன:

*. . . . . . பகுவாய்*
*அரிபெய் கிண்கிணி ஆர்ப்ப, தெருவில்*
*தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்*
*பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு*
***(மதுரை மேலைக்கடையத்தார் நல்வெள்ளையார், நற்றிணை: 250)***

மேற்கூறப்பட்டன மாத்திரமன்றி பெண்மைய விமர்சனத்தின் பிரிவுகளுள் உள்ளடங்கும் பெண்மைய எடுத்துரைப்பு (Female affiliation in narrative), பெண்மையப் பிரதியுறவு (women centred intertextuality ), லிண்டா ஹற்சியனின் சுய பிரதிபலிப்பு (self reflexivity), ஜூலியா கிறிஸ்தேவா குறிப்பிடும் மீமொழி (semiotic) மற்றும் கதையாடல் உருவாக்கம் (discourse formation) என்பவற்றின் அடிப்படையிலும் சங்கப்பாடல்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தலாம்.

## துணைநின்ற நூல்கள்

**குறுந்தொகை,** உ.வே.சாமிநாதையர், (பதிப்பு), சென்னை, 1955.

**புறநானூறு மூலமும் பழைய உரையும்,** சாமிநாதையர் (ப.ஆ.), உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், திருவான்மியூர், 1971.

**நற்றிணை,** சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1976.

David Lodge with Nigel Wood, 1988, **Modern Criticism and Theory,** United Kingdom.

Gill, Jo. 2007, **Womens Poetry**, Edinburg University Press, Edinburg.

Irigarey, Luce. 1985, **The Sex which is Not One,** (trans.), C, Porter with C. Burke Cornell University Press.

Jeniffer Coats, 1993, **Women Men and Language**, Oxford, UK.

Kristeva, Julia. 1993, **Desire in Language; A Semiotic Approach to Literature and Art**, Blackwell, Oxford, UK

Showalter, Elain 1979. **"Towards a feminist poetics" in Women Writing and Writing about Women,** ( ed.) M. Jacobus Croom Helm, London.

Showalter Elain (ed) 1986, **The New Feminist Criticism,** Essays on Literature and theory, Virago, London.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலித்தொகை: காலமாற்றத்தின் கண்ணாடி

க. இரகுபரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பதினெண் மேற்கணக்கு என்ற தொகுதியில் அடங்கும் தொகை நூல்கள் எட்டும் நெடும் பாடல்கள் பத்தும் பொதுவாக சங்க இலக்கியம் என்று சுட்டப்பெறுவன. எட்டுத்தொகை எனக் குறிப்பிடப்பெறும் தொகை நூல் ஒவ்வொன்றும் சங்ககாலம் எனச் சுட்டப்பெறும் காலப்பகுதியில் தோன்றிய தனிச்செய்யுள்களின் தொகுதிகள். செய்யுள்கள் பொருள் அடிப்படையிலும் செய்யுள்களின் அடியெண்ணிக்கை அடிப்படையிலும் யாப்பின் அடிப்படையிலும் எட்டுத் தொகுதிகளாக ஆக்கப்பட்டுள்ளன. பொருளடிப்படையில் நோக்கும்போது அந்த எட்டு நூல்களுள் புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்னும் மூன்றும் புறத்திணை சார்ந்தன் ஏனைய ஐந்தும் அகத்திணை சார்ந்தன. அகத்திணை சார்ந்தவற்றுள் குறுந்தொகை, நெடுந்தொகை எனப்படும் அகநானூறு, நற்றிணை என்னும் மூன்று தொகை நூல்களும் அகத்திணை சார்ந்து ஆசிரியப்பாவால் அமைந்த செய்யுள்களின் அடியளவு நோக்கி வேறு வேறாகத் தொகுக்கப்பட்டவை அகத்திணை சார்ந்த கலித்தொகையும் புறத்திணை சார்ந்த பரிபாடலும் செய்யுள்களின் யாப்பின் அடிப்படையிலும் பொருளடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட தொகுப்புக்கள். கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டும் பெரும்பாலான இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் ஏனைய சங்கத் தொகை நூல்களுள் அடங்கும் செய்யுள்கள் தோன்றிய காலத்துக்குச் சற்றுப் பிற்பட்ட காலமொன்றைப் பிரதிபலிக்கும் செய்யுள்களைக் கொண்டமைவன என்று கருதப்படுகின்றது.

சங்ககாலம் எனச் சுட்டப்பெறும் காலப்பகுதிக்கு அடுத் காலகட்டம் இலக்கிய வரலாற்றாசிரியர்களால் சங்கமருவியகாலம் எனச் சுட்டப்பெறுகிறது. அக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பெருள் மரபாலும் யாப்பு முதலியவற்றாலும் முன்னைய காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களிலிருந்து பெரிதும் வேறுபடுவன. சங்ககாலம் எனப்பெறும் காலப்பகுதியில் தோன்றிய செய்யுள்கள் காதல், வீரம், கொடைத்திறம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க, சங்கமருவிய காலத்தில் அறக்கருத்துக்களே இலக்கியத்தில் அதிக முனைப்புப் பெறுகின்றன. அவ்வக்காலப் பகுதியின் வரலாற்றுப் பின்னணிகள் அவ்வக்காலப் பகுதியில் முனைப்புறும் பொருள் மரபு வேறுபாட்டுக்கான பிரதான காரணமாய் அமைந்தன எனலாம்.

கலித்தொகையிற் காணப்பெறும் செய்யுள்கள் சங்ககாலம் என்ற காலப் பகுதியிலிருந்து சங்கமருவிய காலப்பகுதிக்கு நிலைமாறும் தமிழ்நாட்டைப் பிரதிபலிப்பதை அவதானிக்க முடிகிறது. அதாவது நிலையான பண்புடைய ஒரு காலப்பகுதியை அன்றி, மாறும் காலம் ஒன்றைக் கலித்தொகை பிதிபலிப்பதைக் காணமுடிகின்றது.

'இலக்கியம் காலத்தில் கண்ணாடி' என்ற ஒரு கோட்பாடு மிகவும் மலினப்படுத்தப்பட்ட வகையில் இலக்கிய உலகில் நிலவுகின்றது. கண்ணாடியொன்று தன் முன்னாலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களை அப்படியே பட்டவர்த்தனமாகப் பிரதிபலிப்பதுபோல் இலக்கியம், தான் தோன்றிய காலத்துச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதில்லை. அப்படிப் பிரதிபலிப்பதாயின் அது வெறும் செய்தியாகி விடுமேயன்றி இலக்கியமாகாது. இலக்கியத்தின் ஆக்கக் கூறுகளுள் ஒன்றோ பலவோ, மறைமுகமாகவேனும் குறித்த காலத்தைப் பிரதிபலிக்கும் என்பதே உண்மை. அவ்வெளிப்பாடு, பொருள் ரீதியானதாக மாத்திரமே அமையும் என்று இல்லை. இலக்கியத்தின் அழகியற் கூறுக;ளாகவும் அது வெளிப்படலாம். இந்த உண்மைக்கு நல்லதொரு அண்மைக்கால உதாரணத்தைக் காட்ட வேண்டுமானால் பாரதியின் 'சுயசரிதை'யைக் காட்டலாம்.

பாரதி, தன் சிறுபராயத்தில் ஒரு சிறுமியைக் காதலித்ததாகவும் அவளது பார்வையைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக அவளின் வருகைக்காகக் காத்திருந்து, அவள் போகும் இடமெல்லாம் தானும் பின்தொடர்ந்து சென்றதாகவும் கூறுகிறான். அவ்வாறு அவளுக்காகக் காத்திருந்த தன் செயலுக்கு, அக்காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களைப் பிடிப்பதற்காக ஆங்கில அரசின் ஒற்றர்கள் காத்திருந்ததை உவமையாகக் கையாளுகின்றான். அந்த உவமையில் அக்காலத்தைய இந்திய அரசியற் சூழல் நன்கு பிரதிபலிக்கின்றது.

*நீர் எடுத்து வருவதற்கு அவள் மணி*
*நித்திலப் புன்னகைச் சுடர் வீசிடப்*
*போர் எடுத்து வரும் மதன் முன்செலப்*
*போகும் வேளை, அதற்குத் தினந்தோறும்*
*வேரெடுத்து சுதந்திர நற்பயிர்*
*வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்*
*சீரெடுத்த புலையுயிர்ச் சாரர்கள்*
*தேசபக்தர் வரவினைக் காத்தல்போல்*
*காத்திருந்து.........*[1]

நவீன காலத்திற் போலவே பழந்தமிழ் இலக்கியங்களிலும் அவற்றின் அழகியற் கூறுகள் அவ்விலக்கியங்கள் தோன்றிய காலத்தைப் பிரதிபலித்து நிற்பதைக் கண்டுகொள்ள முடியும். அத்தன்மையைக் கலித்தொகையில் அதிகமாகவே கண்டுகொள்ளக் கூடியதாய் உள்ளது.

கி.பி. 300 – 650 காலப்பகுதி, தமிழகத்தில் பெருமாற்றங்கள் நிகழ்ந்தேறிய காலப்பகுதி சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தரில் சோழ, பாண்டிய வம்சத்தவரின் ஆட்சி முற்றாகவே மறைந்தது சேர அரசு வலி குன்றியது. சோழ பாண்டிய நாடுகளிலே களப்பிரர் என்னும் புதியதொரு அரச வம்சத்தின் ஆட்சி தோன்றியது. வடக்கே தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்தை மையப்படுத்திய வகையில் பல்லவர் என்னும் புதிய அரச வம்சத்தார் ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். முன்பு குறுநில மன்னர்களாக, மூவேந்தரைச் சார்ந்து நின்ற சிற்றரசுகளும் பிறவும் தம் நிலைப்பாடுகளில் மாற்றங் கண்டன. பேரரசுகள் மாறும் நிலையில் சிற்றரசுகளும், பழைய பேரரசின் கீழ் பிரதானிகளாக, அலுவலாளர்களாக விளங்கியவர்களும் எவ்வாறு நடந்து கொண்டிருப்பார்கள் என்பதும் ஊகிக்கத்தக்கதே. ஆட்சிகள் சிதையும் வேளைகளில் கிளர்ச்சிகள் ஏற்படுவதும் கிளர்ச்சிக்காரர்களுக்குப் புதிய தலைவர்கள் ஆதரவளிப்பதும் ஆதிக்கப் போட்டியாளர்களுக்கிடையே அகப்பட்ட பொதுமக்கள் பலமுனையாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படுவதும் ஆட்சியதிகாரங்கள் மாறி நிலையான அரசொன்று வலுப்பெறுவதற்கு இடையில் நிருவாக ஒழுங்குகள் சிதைவதும் மக்களின் வாழ்வியல் விழுமியங்கள் மதிப்பிழந்து போவதும் என்று இவையெல்லாம் நிகழக் கூடியனவே.

சங்ககாலம் என்று குறிப்பிடப்படும் காலப்பகுதியின் இறுதியில் அல்லது சங்கமருவியகாலம் என்று குறிப்பிடப்பெறும் காலப்பகுதியின் தொடக்கத்தில் தோன்றியன என்று கொள்ளப்பெறுகின்ற கலித்தொகைப் பாக்களிற் பயின்றுள்ள அழகியலிலும் மாறும் காலம் ஒன்றின் பிரதிபலிப்பை நம்மாற் கண்டுகொள்ளக் கூடியதாய் உள்ளது.

தலைவன் பிரிவினால் தலைவி வருந்துவாள் என்பதை, தலைவனுக்கு உணர்த்த முற்படும் தோழி, தலைவி நலமிழந்து – அழகு கெட்டு வாடிய முகத்தினளாவாள் என்கிறாள். தலைவியின் முகவாட்டம் உவமை வகையால் வலியுறுத்தப்படும் வகை வருமாறு:

*ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்,*
*பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டு அமைவாளோ?*[2]

[நாட்டை ஆள்கின்ற அரசன் (அறம் திறம்பியதன் பயனாய்) தான் பின்னர் கலக்கமுறும்படி அலைக்கழித்த நாடுபோல் அழகு கெட்ட முகத்தோடு துன்பதை ஆற்றி இருப்பாளோ?]

பொருள் தேடிப் பிரிய நினைக்கும் தலைவன் கடக்க வேண்டிய, ஆனால் கடத்தற்கரிய கரத்தின் கடுமைக்குக் கையாளப்படும் உவமை இது:

*நடுவிகந்து ஓரீஇய நயன் இல்லான் வினைவாங்க*
*கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு*
*கடுகுபு கதிர்மூடிக் காய்சினம் தெறுதலின்*
............................................
*விறல்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்*[3]

[நடுவு நிலையைக் கைவிட்டு நீங்கிய அருளில்லாத அமைச்சன், தான் எண்ணிய காரியத்தை முடிப்பதற்காக, பிழையாக வழிப்படுத்த அதனால் கொடுந்தொழிலைச் செய்ய முற்பட்ட அரசனது கொடுங்கோல் சுடுவதுபோல, சூரியன், கடுஞ்சூடான தன் கதிர்களைச் செலுத்திச் சினந்து வருத்த, மலைகளும் வெம்பிய கடத்தற்கரிய வெய்ய காடு]

இத்தகைய கொடுஞ்சுரத்துக்கு வேறொரு செய்யுளிற் கையாளப்படும் உவமையும் இங்கு கருதத்தக்கது. வெப்பமிகுதியால் மரங்கள் வேரோடு வெம்பின் இலை யாவும் உதிர்ந்து நிழல் என்பதே அற்றுப்போன கொடிய சுரம் குடிகள் வருந்தி ஓலமிடும்படியாக, பொருளாசையால் கொலைத் தொழிலுக்கும் அஞ்சாத அரச அதிகாரிகள் நெறிமுறை யில்லாமல் வரி வசூலிக்க, கோல்கோடிய அரசனது ஆட்சிக்குட்பட்ட உலகம் போல, நிழலற்ற மரங்கள் நிற்கும் வெஞ்சுரம்.

*வேரொடு மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின்*
*அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகி*
*கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்*
*உலகுபோல், உலறியா உயர்மர வெஞ்சுரம்.*[4]

மேல்வரும் செய்யுட்பகுதியும் இத்தகைய சித்திரிப்புகளை உடையதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல*
*எரிமேய்ந்த கரி வறல்வாய்...............*
*...................................................*
*...................................................*
*புயல் துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்.*[5]

[போர்த்தொழிலில் ஈடுபட்ட சினம் மிகுந்த அரசன், தன் படையொடு சென்று தங்கிய பகைவர் நிலம், தீயின்வாய் அகப்பட்டு கரியாகிப்போன மழையற்ற காட்டுவழி]

தலைவன் பொருள் தேடுவதற்காகவே தலைவியைப் பிரிகிறான். ஆனால் அப்பொருளோ நிலையில்லாதது என்பதை உணர்த்தி தலைவனின் போக்கினைத் தடுக்க முற்படும் தோழி, அதன் நிலையாமை உணர்த்த ஒரு உவமையைக் கையாள்கிறாள். தன்னுடைய உயர்ச்சியை – தனக்கு வரக்கூடிய இலாபத்தைக் கருத்திற் கொள்ளாது, அரசனுக்காகவே பாடுபட்ட அமைச்சன் ஒருவனை, சினக்கும் நிலை வந்துற்றபோது அந்த அமைச்சன் தனக்காகவே பாடுபட்டவன் என்ற எண்ணம் சிறிதுமின்றி – பழைமை பாராட்டாது – அவனைக் கொன்று தண்டிக்கும் அரசன், நிலையிழந்து அழிவான். அந்த அரசன் போன்றே பொருளும் நிலையில்லாதது. அத்தகைய பொருளையும் யாரும் விரும்புவார்களா? என்று வினவுகிறாள் தோழி. தோழியின் இழிவரல் உணர்ச்சி உண்மையில் பொருள் மேலானதல்ல் அருளில்லா அரசன் மேலானதே.

*புரைதவப் பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை*
*வரைவின்றிச் செறும் பொழுதில், கண்ணோடாது உயிர்வௌவும்*
*அரைசினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ?*[6]

தலைவன் இளவேனிற் காலத்தே திரும்பிவிடுவேன் என்று பிரிந்து சென்றான். குறித்த காலம் வந்தது தலைவன் வரவில்லை இளவேனில், தலைவியைத் தாக்குகின்றது.

அறிவில்லாத அமைச்சனின் திறனற்ற செயலால் பெருமையழிந்த அரசனது நாட்டிலே பகையரசனது படைகள் வந்துவிடுதல் போல, இளவேனில் தாக்குதல் நடத்துகின்றது.

*பேதையோன் வினைவாங்க, பீடிலா அரசன் நாட்டு*
*ஏதிலான் படைபோல, இறுத்தது இளவேனில்*[7]

கலித்தொகை என்ற அகத்திணை சார்ந்த இலக்கியத்திற் கையாளப்பட்டுள்ள இத்தகு உவமைகள் அசாதாரணமானவை் சங்ககால அகத்திணைச் செய்யுள்களிற் கையாளப்பட்ட உவமைகளினின்றும் பெரிதும் வேறுபட்டவை.

இயற்கை நெறிக்காலம் எனச் சுட்டப்பெறும் சங்ககாலத்தில் தோன்றிய அகத்திணைச் செய்யுள்களிற் கையாளப்பட்ட உவமைகள் பெரும்பாலும் இயற்கை சார்ந்தனவாகவே அமைந்தன. கலித்தொகையிற் கையாளப்பட்ட உவமைகளின் தொனிப்பொருள் அறம்சார்ந்தனவாக – பெரும்பாலும் அரசநீதி சார்ந்தனவாக அமைகின்றன. அடுத்துவரும் காலகட்டம் அறநெறிக்காலம் என்று இலக்கிய வரலாற்றாசிரியர்களாற் சுட்டப்பெறும் அளவுக்கு அறக்கருத்துகள் முனைப்புப் பெற்ற காலமாக அமைய, அத்தகைய அறக்கருத்துக்கள் செல்வாக்குப் பெறத் தொடங்குவதை – காலம் மாறிக் கொண்டிருப்பதை உணர்த்துவனவாக – கலித்தொகைச் செய்யுள்களிற் கையாளப்பட்டுள்ள உவமைகள் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பு அடிப்படையில் நோக்கும்போதும் கலித்தொகைச் செய்யுள்கள் மாறும் காலம் ஒன்றினைப் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம். சங்க அகத்திணை, புறத்திணைச் செய்யுள்களின் யாப்பு பிரதானமாக அகவற்பாவாகவே அமைந்தது. சிறுபான்மை வஞ்சிப் பாவும் பயன்பட்டது. சங்கமருவிய காலத்தில் அறக்கருத்துக்களைச் சொல்வதற்கேற்ற செப்பலோசை உடைய வெண்பா யாப்பே பெருஞ்செல்வாக்குப் பெற்றது. வெண்பா யாப்பின் செல்வாக்குக் காரணமாக அக்காலத்தில் தோன்றிய அகத்திணை, புறத்திணை இலக்கியங்கள்கூட அந்த யாப்பிலேயே அமையப் பெற்றன. மாறுங்காலத்தில் தோன்றிய அகத்திணைச் செய்யுள்கள் கலிப்பாக்களில் அமைந்தன. அத்தகைய காலத்தனவான ஒருவகைப் புறத்திணைச் செய்யுள்கள் பரிபாடல் என்ற யாப்பில் அமையப் பெற்றன. கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டுமே வெண்பா யாப்பின் தொடக்க நிலையினைத் தம்முட்கொண்டு அமைந்தனவே. அன்றியும் கலிப்பா தானே தன்னளவில் வெண்பாவோடு ஒத்து நிற்பது. இந்த உண்மைகளை யாப்பியல் நிபுணர் ஒருவரின் கூற்றிலேயே கண்டுகொள்வோம்.

> "பரிபாடலிலும் கலிப்பாவிலும் வெண்பா உறுப்பாக வருதல் உண்டு. கலிப்பா வெண்பாச் சுரிதகம் பெற்று முடிதலைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்."
>
> "வெண்பாவாக யாக்கப்படுவது அகவலோசை அன்று என்றார். அத்தகைய ஓசையினைப் பின்னூலோர் செப்பலோசை என்றனர். செப்புதலாகிய வாக்கியம் போன்ற ஓசையினை உடையதாக வரும் என்பர் இளம்பூரணர். ஒரு பொருண்மையினைக் கட்டுரைக்குங்கால் எழுந்த ஓசை செப்பலோசை என்பர் பேராசிரியர். பெரும்பான்மை, குறித்த பொருளை மறையாமல் செப்பிக் கூறலே அதற்கு இலக்கணம் ஆயிற்று என்பர் நச்சினார்க்கினியர்."
>
> "ஆசிரியப்பா, வஞ்சிப்பா என்பன இரண்டும் நடைப்பொதுமை கொண்டதுபோல வெண்பாவும் கலிப்பாவும் நடைப்பொதுமை வாய்ந்தவையாகும்."[8]

தம்மளவில் ஒத்தனவாக வெண்பாவும் கலிப்பாவும் அமையப் பெற்றாலும் இரண்டும் வேறு வேறு யாப்புக்களே. தூய - தனி வெண்பா யாப்பில் அமைந்த காலத்தால் மூத்த நூல்களாக இன்று எமக்குக் கிடைக்கப்பெறும் நூல்கள் சங்கமருவிய காலத்து நூல்களே. அவற்றுள் காலமூப்புடையதாக குறள் வெண்பா யாப்பில் அமைந்த திருக்குறளைக் கொள்ளலாம். தனியே தூய வெண்பா யாப்பில் நூல்கள் அமைவதற்கு முந்திய ஒரு நிலைமையை - பிறபாக்களுள் அது கலந்து பயின்ற நிலைமையை - நாம் கலித்தொகையிலும் பரிபாடலிலும் கண்டுகொள்ளலாம். எமக்கு இங்கு வேண்டுவது கலித்தொகையில் வெண்பா பயின்றுவருவது தொடர்பான செய்தியே.

> "............ இவ்விரு பாக்களுக்கும் (கலிப்பா, வெண்பா) இடையே உள்ள ஒற்றுமைப் பண்புகளினால் கலிப்பாக்களில் வெண்பாக்கள் கலந்து வருதல் சுட்டத்தக்கது. எட்டுத் தொகையில் ஒன்றாகிய கலித்தொகையில் பல்வேறு வெண்பாக்கள் பரவி வழங்குகின்றன. குறுவெண்பாட்டு என்ற வகையின் பாற்படுவனவாகிய குறள் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பனவும், நெடுவெண் பாட்டு என்ற வகையினைச் சார்ந்த நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா ஆகிய அளவியல் வெண்பாக்களும், நான்கடியின் மிக்கு வருவனவாகிய ப∴றொடை வெண்பாக்களும் கலித்தொகையில் உள்ள கலிப்பாக்களில் இணைந்து பிணைந்து காணப்பெறுகின்றன."[9]

அவ்வாறு இணைந்து பிணைந்து காணப்பெறும், வெண்பாக்களாக அமைந்த கலிப்பாப் பகுதிகள் சில வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கூறுவேன், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்.[10]

(ஆ) ஒருத்தி, அடிதாழ் கலிங்கம் தழீஇ ஒருகை
முடிதாழ் இருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயும் அலந்து.[11]

(இ) என்னானும், பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
ஆடெனில் ஆடலும் ஆற்றுகேன் – பாடுகோ
என்னுள் இடும்பை தணிக்கும் மருந்தாக
நன்னுதல் ஈத்தவிம் மா.[12]

(ஈ) பொய்போர்த்துப்,

பாண்தலை இட்ட பனுவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் – வேண்டியார்
நெஞ்சம் பிணித்தல் தொழிலாத் திரிதரும்
நுந்தைபால் உண்டி சில.[13]

(உ) நேரிழாய், கோளரி தாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற் றெமர்கொடை நேர்ந்தார் அலரெடுத்த
ஊராரை உச்சி மிதித்து.[14]

இவ்வாறாக நோக்கும்போது கலித்தொகை பலவகையிலும் மாறுங்காலம் ஒன்றைப் பிரதிபலிப்பதாக அமைவதைக் கண்டுகொள்ள முடியும்.

## அடிக்குறிப்புக்கள்

1. **பாரதியார் கவிதைகள்,** வானதி பதிப்பகம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 1998, ப. 240.
2. **சங்க இலக்கியம் – கலித்தொகை** (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004, செய்யுள் 5: 12, 13.
3. மேற்படி, 8: 1 – 6.
4. மேற்படி, 10: 4 – 7.
5. மேற்படி, 13: 1 – 9.
6. மேற்படி, 8: 15 – 17.
7. மேற்படி, 27: 7, 8.
8. சோ. ந. கந்தசாமி, **தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்** - முதற் பாகம் - முதற் பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989, பக். 357, 358.
9. மேற்படி, ப. 619.
10. **கலித்தொகை,** 82: 6, 7.
11. மேற்படி, 92: 42 – 44.
12. மேற்படி, 140: 13 – 16.
13. மேற்படி, 85: 22 – 25.
14. மேற்படி, 104: 73 – 76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தில் திணை மயக்கம்
## நச்சினார்க்கினியர் உரையை முன்வைத்து ஒரு நோக்கு

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியங்களிலே காலத்தால் மிகவும் மூத்தவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களே. இவை பண்டைத் தமிழர்கள்தம் அகம் பற்றியும் புறம் பற்றியும் பேசுகின்றன. அகம் பற்றிய கவிதைகள், புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய உள்ளத்து உணர்வுகளை முதன்மைப்படுத்திப் பேசுகின்றன. இவ் ஒழுக்கமுறையாகிய உரிப்பொருள் ஒவ்வொன்றையும், ஒவ்வொரு நிலப் பகுதிக்குரிய இயற்கையொடும் பின்னணியொடும் தொடர்புறுத்திப் பாடுவது சங்க இலக்கிய மரபாகும். உலகியல் யதார்த்தம் வேறாக இருக்க ஏன் இவ்வாறு செய்யுள் வழக்கானது புலவர்களாலே கைக்கொள்ளப்பெற்றது, எனும் வினா அறிஞர் பலராலும் ஆராயப்பெற்றுள்ளது.

"வாழ்வியல் நெறியில் இவ்வைந்து உரிப்பொருள்களும் ஒவ்வொரு நிலத்தார்க்கும் உரியனவாயினும், நாடக வழக்கால்.... ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வோரொழுக்கமே வகுக்கப்பட்டது... குறிஞ்சி நிலம் தலைவனும் தலைவியும் களவிற்கூடுவதற்கு வாய்ப்பும் வசதியும் உள்ள இடம் என்பதை மறுக்க முடியாது. இறையனார் களவியல் உரைகாரர் குறிஞ்சி நிலத்திலுள்ள சோலைகள் புறத்தார் அகத்தாரைக் காண்பதற்கு அரியவாயும், அகத்தார் புறத்தாரைக் காண்பதற்கு எளியவாயும் அமைந்துள்ளன வென்பர். அத்தகைய இடம் தலைவன் தலைவியைத் தனிமையிற் சந்தித்து காதல் வழியொழுக ஏற்றதாதலால் அந்நிலம் புணர்தல் என்ற ஒழுக்கத்துக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது."[1] என்பதான காரணங்கள் இவ்வினாக் குறித்த விடைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில், மலைப்பிரதேசமான குறிஞ்சி நிலப் பின்புலத்தில் புணர்தலையும், மேய்ச்சல் நிலமான முல்லையின் பின்புலத்தில் இரங்கலையும், வேளாண் இடமாகிய மருதத்தின் பின்புலத்தில் ஊடலையும், கடற்கரையாகிய நெய்தற் பின்புலத்தில் இரங்கலையும், இம்மரபு பேசும். பிரிதலை – அதற்கெனத் தனி நிலப்பகுதி வகுக்காது கடுங்கோடையில் குறிஞ்சியும் முல்லையும் திரிய, தோன்றுகின்ற பாலையெனும் வறண்ட பிரதேசத்தின் பின்புலத்தில் பேசுவது, சங்க இலக்கியத்தின் மரபாகும்.

இம்மரபு சங்கச் செய்யுட்கள் படைப்பாக்கம் பெற்றகாலத்தில் எழுந்ததா, இல்லை, தொகுப்பு முயற்சிகளின்போது, அல்லது, உரையாக்க முயற்சிகளின்போது எழுந்ததா என்பது, நீண்ட ஆய்வுக்குரியது. தமிழக எல்லை முழுதும் சிதறி வாழ்ந்த புலவர் அனைவரும் இம்மரபை அறிந்துதான் கவி யாத்தனர் என்பது மிகை. மேலும், தொடக்கக்காலச் சங்கச் செய்யுள்கள் இம்மரபு ஏற்பட்டு வழங்கிவந்த பின்னர்தாம் தோன்றியவை எனக் கொள்ளவும் முடியாது. சங்கச் செய்யுட்கள் தோன்றி வந்த காலப் பகுதியில் மெல்ல மெல்ல இம்மரபு தனக்குரிய முழுமையே நோக்கி வளர்ந்து வந்திருத்தல் வேண்டும். பிற்காலத்துச் சங்கச் செய்யுட்கள் சில இம் மரபு அறிஞர் உலகில் பரவலாக்கம் அடைந்த பின்பு தோன்றியனவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மரபு ஏற்பட்டு இலட்சியப் புலவர் மத்தியில் ஓரளவு அறிகை ஏற்பட்ட பின்னர் கூட, அனைத்துப் புலவர்களும் இம்மரபைப் பின்பற்றியிருப்பாரா என்பதும் ஐயமே. ஆளுக்காள் வேறுபடும் ஆளுமையும் சுயமும் இதில் தாக்கம் செலுத்தியிருக்குமென எதிர்பார்க்கலாம்.

"புணர்தலுக்கு மலைப்பாங்கும் ஊடலுக்கு வயலிடமும் இருத்தலுக்குக் காட்டுச்சார்பும் சூழ்நிலையாக அமைதல் வேண்டும் என்பது புலனெறி வழக்கம். இவ்வழக்கம் இலக்கியக் கற்பனைக்குச் சிறக்கும் என்பது கருதி நம் முன்னோர் வகுத்தனர். ஊடல் ஓரிடம் கூடல் ஓரிடம் நடைமுறையில் இல்லை. இயலாது என்பது வெளிப்படை. அம்மூவனார் இயல்பு நெறிப்புலவர் போலும். அவர் பாட்டுக்கு நெய்தல்வாழ் மக்களே பெரும்பாலும் தலைமக்கள் ஆதலின், எல்லா உரிப்பொருளுக்கும் களமாக ஒரு திணையையே கொண்டனர்."[2]

எனுங் கருத்து, இயல்பு நெறிப் புலவர்கள் சிலர் சங்க இலக்கிய மரபை நோக்காது, சுயாதீனமாகப் படைப்பில் ஈடுபட்டுள்ள தன்மையை உறுதி செய்கின்றது. திணை மயக்கம் குறித்து தொல்காப்பியம்

*"திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே*
*நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப*
*புலன் நன்குணர்ந்த புலமையோரே"*

எனும் நூற்பா மூலம் திணைமயக்கம் குறித்து தொல்காப்பியர் என்ன கருதினார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நூற்பாக் கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுதல், தெளிவானதாகும்.

- திணை மயக்கம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது.
- முதற்பொருளாகிய நிலம் இன்னொரு நிலத்துடன் மயங்கி வராது.
- முதற்பொருளில், காலம், மயங்கி வரக்கூடியது.
- கருப்பொருள் மயங்கி வரலாம்.
- முதற்பொருளும் திணைமயக்கமும்

திணைவகுப்பில் முதற்பொருளே மிக முக்கியமானதென, உரையாசிரியர் பலரும் கருதுகின்றனர்.

*"முதல்,கரு, உரி என்ற மூன்றே*
*நுவலுங்காலை முறைசிறந்தனவே*
*பாடலுட் பயின்றவை நாடுங் காலை"*

என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு, உரையாசிரியர் எனப்பெறும் இளம்பூரணர் வரைந்துள்ள உரையைக் நோக்கும்பொழுது இம் முதன்மை தெரியவருகின்றது. அவர் உரையை நோக்கும்பொழுது, செய்யுட்களுக்குத் திணைவகுக்கப்பெற்ற காலத்தில், பின்வரும் நியதி பின்பற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

- அகப்பாடல்களில் முதல்,கரு, உரி மூன்றும் வந்திருப்பின் முதலைக் கொண்டு திணையைத் தீர்மானிப்பது.
- கரு, உரி இரண்டும் வந்திருப்பின் கருவைக் கொண்டு திணையைத் தீர்மானிப்பது.
- உரி மட்டுமே வந்திருப்பின்தான், அதனைக் கொண்டு திணையைத் தீர்மானிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திணைவகுப்பு மரபையொட்டி செய்யுள் ஒன்றினுக்கு, திணைக் குறிப்பானது, நிலம், பொழுதாய முதற்பொருளை அது அல்லாத இடத்து கருப்பொருளை ஒட்டியே கூறப்பெற்றிருக்கும். ஆனால், உண்மையில் அச்செய்யுளின் ஒழுக்கமாகிய உரியோ அத்திணைக்குரியதாக அல்லாமல், சிலவேளை மாறுபட்டிருக்கும். இவ்வாறு மாறுபடும் வேளையில் அச்செய்யுள் திணைமயக்கச் செய்யுளாகக் கருதப்படுகிறது.

நிலமும், பொழுதுமாகிய முதற்பொருள்கள் இரண்டில், நிலம் மயங்குதலில்லை என்பது தொல்காப்பியரது முடிவு எனக் கூறுவர். நிலம் மயங்குதல் என்பதிலிருந்து நான்கு வகையான அர்த்தத்தைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

*ஒரு நிலமும் இன்னொரு நிலமும் மயங்கி வருவது (நிலம் - நிலம்)*

*காலமும் நிலமும் மாறி வருவது. (நிலம் - காலம்)*

*கருப்பொருளும் நிலமும் மாறிவருவது. (நிலம் - க.பொ.)*

*உரிப்பொருளும் நிலமும் மாறுபட வருவது. (நிலம் - உரி)*

இவற்றுள், பெரும்பாலான உரையாசிரியர்கள் உரிப்பொருளும் நிலமும் மாறுபட வருவதென்பதை உரிப்பொருள் மயக்கம் என்றே கொள்கின்றனர். அவர்கள் கருத்துப்படி நிலம்தான் மிக முதன்மையான பொருள். அந்நில வகைகள் ஒன்றுக்குரிய ஒழுக்கம் நிற்க வேண்டிய இடத்தில் மற்றோர் ஒழுக்கம் நிற்பது உரிமயக்கம். இவ்வாறே கருப்பொருள் மயக்கம், கால மயக்கம் என்பவற்றையும் கொள்ள வேண்டும்.

எனவே, நான்கு வகையாக அமையக்கூடிய நில மயக்கத்தில் நிலம் - காலம், நிலம் - கருப்பொருள், நிலம் - உரி என்பன முறையே கால மயக்கம், கருப்பொருள் மயக்கம், உரிமயக்கங்களாகக் கருதப்பெறுதலின், இப்பிரிவுள் அடங்குவது நிலம் - நிலம் மட்டுமேயாம். எனவே, மயக்குறுதலில்லை எனத் தொல்லாசிரியர் பேசுவது எதனையென்றால், நிலமும் நிலமும் மயங்கா என்பதையே, அதாவது - ஒரு செய்யுளில் ஓர் உரியைக் காட்டும்போது இருவேறு நிலங்கள் தம்முள் மயங்கிவாரா - என்பதனைத்தான்.

அடுத்து, கால மயக்கத்தை நோக்கின், இதுவும் நான்கு வழிகளில் ஏற்படத்தக்கது என்பது புலனாகும். அதாவது, நிலத்துடன் மயங்குவது, இன்னொரு காலத்துடன் மயங்குவது, கருப்பொருளுடன் மயங்குவது, உரியுடன் மயங்குவது.

காலம் - நிலம்

காலம் - காலம்

காலம் - கருப்பொருள்

காலம் - உரிப்பொருள்

இவற்றுள், நிலத்தையடுத்து முதன்மையுடையது பொழுது ஆகையால், கருப்பொருளுடன் மயங்குவது, கருப்பொருள் மயக்கமாகவும், உரியுடன் மயங்குவது உரிப்பொருள் மயக்கமாகவும் கருதப்பெறுகிறது. எனவே, காலம் மயங்குதல் என்பது, பின்வருமாறு அமையலாம்.

(அ) மரபு வரையறுத்த நிலமல்லாத வேறொரு நிலங்குறித்த செய்யுளில் குறித்தவொரு காலம் பயின்று வருவதை அதாவது, ஒரு காலம் நிற்க வேண்டிய இடத்தில் வேறு காலம் வந்து நிற்பதைச் சுட்டுகிறது. (காலம் - நிலம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஒரு காலத்துடன் இன்னொரு காலம் வந்து கலந்து நிற்பதைச் சுட்டுகிறது. இங்கு, ஒரு பெரும்பொழுதுடன் இன்னொரு பெரும்பொழுது, அல்லது ஒரு பெரும்பொழுதுடன் அதற்குரியதல்லாத சிறுபொழுது கலந்து வருவது சுட்டப்பெறுகிறது. (காலம் - காலம்)

## கருப்பொருளும் திணைமயக்கமும்

கருப்பொருள்கள் மயங்குதற்குரியன என்பது சங்கச் செய்யுட்களாலும், தொல்காப்பிய நூற்பாக்களாலும் புலனாகின்றது.

> *"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்*
> *அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்*
> *வந்த நிலத்தின் பயத்த வாகும்"*

என்கிறது கருப்பொருள் மயக்கம் குறித்த நூற்பா. இதற்குக் காரணம், குறித்தவொரு ஒழுக்கத்தை இலக்கியமாக்கும்போது, அதனை வாசக மனங்களுக்கு அழுத்தமாக வழங்கும் பொருட்டு, அதற்குத்தோதான பின்புலத்தை அமைப்பதே கருப்பொருள் மயக்கத்தின் நோக்கம் ஆகும்.

கருப்பொருள்களை, நிலையானவை (ஆறு முதலியன), இடம் பெயர்பவை (பறவைகள், மிருகங்கள்), பரபுபவை (மரங்கள், செடிகள்) எனப் பகுக்கும் ஆய்வாளர் சிலர், "நிலையாக இல்லாத கருப்பொருள்கள் வேறு நிலங்களிலும் உள்ள நிலை கருதி இலக்கியத்தில் கருப்பொருள்கள் மயக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது"[3] என்பர்.

இக்கருப்பொருள் மயக்கமும் நான்கு வகையாக ஏற்படுதல் கூடும். ஒன்று, செய்யுளின் உரியாகிய ஒழுக்கத்துக்கு இலக்கிய மரபு விதிக்கின்ற (கருப்பொருள் - உரி) பின்னணிக் கருப்பொருள்கள் அல்லாமல், வேறு நிலப் பொருட்கள் அச்செய்யுளில் பயின்று வருதல். இதனை உரிப்பொருள் மயக்கமாகவும் கொள்ளலாம்.

இரண்டாவது, ஒரே செய்யுளில் வெவ்வேறு நிலத்துக்குரியதாக விதிக்கப்பெற்ற கருப்பொருட்கள் கலந்து வருதல் (கருப்பொருள் - கருப்பொருள்) இதனை,

> *"ஒண் செங்கழுநீர்க் கண்போல் ஆயிதழ்*
> *ஊசி போகிய சூழ் செய் மாலையன்*
> *பக்கம் சேர்த்த செச்சைக் கண்ணியன்*
> *குய மண்டாகம் செஞ்சாந்து நீலி"*

எனும் அகநானூற்றுச் செய்யுளால் (48) அறியலாம். இங்கு, "மருதத்துக்குரிய கருப பொருளும் குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருளாகிய வெட்சிப் பூவும் அணிந்தோன் என்றமையால் கருப்பொருளாகிய மயங்கி வந்தது"[4] என்பர் அறிஞர்.

இவ்வாறே, வேறு நிலப் பின்னணியில் குறித்த கருப்பொருளில் வருதல் (கருப்பொருள் - நிலம்) வேறுபொழுதுப் பின்னணியில் கருப்பொருள் வருதல் (கருப்பொருள் - காலம்) என்பனவும் கருப்பொருள் மயக்கமே.

## உரிப்பொருளும் திணைமயக்கமும்

பலர் திணையில் முதற்பொருளுக்கே முதன்மை அளிப்பினும், பாடலின் முதன்மைப் பொருள் உரிப்பொருள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களில் எப்பொருளுக்கு முதன்மை என்பது பற்றிச் சொல்லும்போது தொல்காப்பியர் இருவகைப் பொருள்படும்படி நூற்பா இயற்றியுள்ளார். ஒரு கவிதையை எந்தத் திணையில் சேர்ப்பது என்கின்ற கேள்வி எழும்போது உரிப்பொருளுக்கு முதன்மை தருவதுதான் சரியா இருக்க முடியும். கவிதையை உரிப்பொருள்தான் தீர்மானிக்க முடியும்" என்கிறார் ஞானி.

உரிப்பொருளாக ஓர் ஒழுக்கத்தைப் பாடப்புகுந்த புலவன் ஒருவன், கட்டாயமாக, சங்க அகத்திணை மரபை ஒட்டி, குறித்த ஒழுக்கத்துக்குரியதாகக் கூறப்பெற்ற நிலம் முதலிய முதல் மற்றும் கருப்பொருள்களை பின்னணியாக அமைத்துத்தான் பாடியிருப்பான் என எதிர்பார்த்தல் இயலாது, அவ்வாறு உரியும் முதலும், இலக்கியமரபு எதிர்பார்ப்பதுபோல அமையாமல் மாறி அமையும் வேளையிலே, பின்வந்தோர் அப்பாடலைத் திணை மயக்கப் பாடலாகக் கருதினர். உரிப்பொருள் மயக்கம் பின்வரும் அடிப்படையில் நான்கு வகையானதாகும்.

உரிப்பொருள் - நிலம்

உரிப்பொருள் - காலம்

உரிப்பொருள் - கருப்பொருள்

உரிப்பொருள் - உரிப்பொருள்

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" எனும் தொல்காப்பிய நூற்பா, திணைமயக்கங் குறித்து முக்கியமானதாகும். இந்நூற்பாவின் பொருள் இன்னதுதான் என, ஒரு வியாக்கியானம் மட்டும் இதற்கு இல்லை. உரையாசிரியர்கள் பலரும் பலவாறு கருத்துக் கூறிச் சென்றுள்ளனர். இதனால், உரிப்பொருள் மயக்கங் குறித்து இதன்வழி பல கருத்துக்கள் கொள்ளப்பெற்றுள்ளன.

உரிப்பொருள் மயங்காது. உரிப்பொருள் அல்லாதனவாகிய, முதலும் (நிலம் தவிர) கருப்பொருளுமே மயங்கும் என்பது இது குறித்த இளம்பூரணர் கருத்து.

ஆனால், நச்சினார்க்கினியரோ "உரிப்பொருள் அல்லன என்பதனை உரிப்பொருளும் அல்லனவும்" எனக் கொண்டு, உரிப்பொருளும் அல்லாதவனாகிய கைக்கிளையும் பெருந்திணையும் மயங்கும் எனக் குறிப்பிடுகிறார்.

சங்கக் கவிதைகளையும், கவிஞர் இயல்பு நெறியையும் நோக்குவார், நச்சினார்க்கினியர் கூறியுள்ளபடி, உரிப்பொருள் மயங்கும் என்பதனை ஏற்பதில் தடையிருக்க முடியாது. திட்டவட்டமாக 'இது தான் இதற்கு' என்று வரையறை செய்யாது, படைப்பாளிகளின் தன்மையறிந்தே தொல்காப்பியர் திணை மயக்கத்துக்கு தம் இலக்கிய மரபில் இடமளித்தார். இதனை மேலும் வளர்த்து, அடுத்த தளத்துக்குக் கொண்டு செல்வது நச்சினார்க்கினியருடைய வியாக்கியானமேயாம்.

"ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வருமென்பதூஉம், நிலன் இரண்டு மயங்காதெனவே காலம் இரண்டு தம்முள் மயங்குமென்பதூஉம் கூறினாராயிற்று. எனவே, ஒரு நிலமே மயங்குமாயிற்று. உரிப்பொருண் மயக்குறுதல் என்னாது திணை மயக்குறுதல் என்றார். ஓர் உரிப்பொருளோடு ஓர் உரிப்பொருள் மயங்குதலும் ஓர் உரிப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும் இவ்வாறே காலம் மயங்குதலும் கருப்பொருள் மயங்குதலும் பெறுமென்றற்கு. திணை என்பது அம்மூன்றனையுங் கொண்டே நிற்றலின்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திணைமயக்கம் குறித்த தொல்காப்பிய நூற்பாவுக்கான நச்சினார்க்கினியர் உரை. இவ்வுரைதான் மேலே நோக்கப்பெற்றதான பல்விதமான திணைமயக்கங்களுக்கும் இடமளிப்பதாகும். இவ்வுரையை பிரித்து நோக்கும்போது, எவ்வாறு அது பல்விதமான மயக்கங்களுக்கும் இடம் தருகிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

*"ஓர் உரிப்பொருளோடு ஓர் உரிப்பொருள் மயங்குதலும்…"*

உரிப்பொருள் - உரிப்பொருள்

*"ஓர் உரிப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும்…"*

நிலம் - உரிப்பொருள்

காலம் - உரிப்பொருள்

கருப்பொருள் - உரிப்பொருள்

*"இவ்வாறே காலம் மயங்குதலும்…"*
*"அதாவது ஒரு காலத்தொடு ஒரு காலம் மயங்குதல்"*

காலம் - காலம்

ஒரு காலம் நிற்றற்கு உரிய இடத்து ஒரு காலம் வந்து மயங்குதல்

நிலம் - காலம்

*"(இவ்வாறே) கருப்பொருள் மயங்குதலும்' "*
*"அதாவது, ஒரு கருப்பொருளோடு ஒரு கருப்பொருள் மயங்குதல் "*

கருப்பொருள் - கருப்பொருள்

"ஒரு கருப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஒரு கருப்பொருள் வந்து மயங்குதல்"

நிலம் - கருப்பொருள்

காலம் - கருப்பொருள்

என்பதாக இது விரிந்த தளத்தில் அமைகின்றது. இதைவிடுத்து பிற உரைகளின்படி உரிப்பொருள் மயங்காது, நிலம் மயங்காது எனக் கொள்வது நேரியதாகாது.

## ஆய்வு முடிவுகள்

ஒருநிலப் பின்புலத்தில் ஓரொழுக்கத்தைப் பேசுவதாகச் சங்க இலக்கிய மரபு கட்டமைக்கப் பெற்றுள்ளது எனினும் எல்லா நிலவாழ்வியலிலும், புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கங்களும் இருந்திருக்கும் என்பது சொல்லாமலே புலனாகும்.

இதன்படி, புலவர் சிலர் சங்க இலக்கிய மரபை நோக்காது இயல்பு நெறியில் தாம் பாடவிழைந்த பொருளை தாம் விரும்பிய பின்னணியில் - மரபில் விதிக்கப்படாத நிலம் முதலிய பின்புலத்தில் - பாடிப் போந்தனர்.

இவ்வாறு பாடுவது இயல்புதான் எனும் படைப்பியல்பை உணர்ந்த தொல்காப்பியர், திணை பொருள் வரையறையை இறுக்கமான கட்டுப்பாடாக்காது திணை மயங்குறுத்தலை ஏற்று திணை மயக்க நூற்பா அமைத்தார்.

எனினும், தொல்காப்பியரின் இந் நெகிழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத பின்னை உரையாசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் சிலர், உரிப்பொருள் மயங்காது என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்தமை சங்கச் செய்யுட்களை பலவற்றை நோக்கும்பொழுது, பொருத்தமாக அமையவில்லை.

நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் எனும் திணைக் கோட்பாட்டின் முக்கிய அமிசங்கள் தாமும், பிறவும் பலவாறு மயங்கும் (நிலம் - நிலம்) நிலை, தொல்காப்பியருக்கு ஏற்புடைத்து என்பதை எடுத்துக் காட்டிய நச்சினார்க்கினியர் உரையே, திணைமயக்க நூற்பாக்களுக்கு மிகவும் பொருந்தும் உரையாக உள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. நாகலிங்கம்.க., **செந்தமிழ் இலக்கண விளக்கம் மூன்றாம் பாகம்,** 2005, ப.32.

2. மாணிக்கம், வ.சுப., **தமிழ்க்காதல்** (2002), மெய்யப்பன் தமிழாய்வகம், ப.279.

3. செயராமன், ரா., **தொல்காப்பியத்தில் மொழி இலக்கியக் கட்டுடைப்பும் ஆக்கமும், தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998, ப.96.

4. நாகலிங்கம், க., **செந்தமிழ் இலக்கண விளக்கம்,** மூன்றாம் பாகம், அளவெட்டி, 2005, ப.76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழரிடையே வழக்கிலிருந்த ஒப்பனை முறைகள்: சங்க இலக்கியத்தின் வழியான தேடல்

திருமதி.செல்வஅம்பிகை நந்தகுமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தமிழ்மொழியில் காலத்தால் பழைமையான இலக்கியங்களாகக் கருதப்படுபவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் குறித்துப் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. தமிழ்மொழியானது வளர்ச்சி பெற்று வரும் நிலையிலும் தொழிநுட்ப சாதனங்களின் அபிவிருத்தியினாலும் பழைய இலக்கியங்களைப் புதிய சிந்தனை களினூடாக நோக்க வேண்டியது காலத்தின் தேவை. இந்த ஆய்வானது பண்டைத் தமிழரிடையே வழக்கிலிருந்து ஒப்பனை முறைகளைச் சங்க இலக்கியத்தின் வழியான தேடல் முயற்சியாக அமைகின்றது.

அழகுக்கலை மிகவும் அற்புதமான இன்பக்கலையாகும். மனிதனிடம் இயல்பாகவுள்ள அழகுணர்ச்சி எதனையும் அழகாகச் செய்வேண்டும் என எதிர்பார்க்கின்றது. மனிதன் தன்னை அழகுபடுத்திப் பார்த்துத் திருப்தி அடைகின்றான். அழகுபடுத்தலை "ஒப்பனை" என்ற சொல்லால் குறித்தனர். பண்டைய நாளைப் போல் அல்லாமல் இன்றைய காலத்தில் ஒப்பனைக் கலையின் முக்கியத்துவம் அதிகம் உணரப்பட்ட ஒன்றாக உள்ளது. பூப்புச்சடங்குகளிலும் திருமணச் சடங்குகளிலும் நாட்டிய, நாடக சினிமாக்கலைஞர்கள் மத்தியிலும் ஒப்பனைக்கலை முதன்மைப்படுத்தப்படுகின்றது. அழகுபடுத்தல் செயற்பாட்டினை மேற்கொள்பவர்கள் 'ஒப்பனைக் கலைஞர்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

பண்டைத் தமிழரிடையே வழக்கிலிருந்த ஒப்பனை முறைகளைச் சங்க இலக்கியத்தின் வழியான தேடல் முயற்சியாக இந்த ஆய்வு அமைகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனத் தனித் தனியாக வகைப்படுத்தி ஒப்பனை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டமையைச் சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆய்வின் வரையறை கருதி பெண்களின் ஒப்பனை முயற்சிகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மனிதனின் தோற்றப் பொலிவு சார்ந்த அழகியலுக்குப் பரந்த தளத்தைச் சங்க இலக்கியங்கள் தந்துள்ளதை இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

சங்க இலக்கியங்கள் ஆய்வு மூலங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. விளக்க முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு அணுகுமுறைகள் இந்த ஆய்வில் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அழகு பற்றிய கருத்து நிலை, அழகு குறித்து நிகண்டுகள் தரும் சொற்கள், சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ள அழகுகுறித்த சொற்களின் நுட்பமான பொருள், ஒப்பனை தொடர்பாக வழங்கும் சொற்கள், பெண்களின் ஒப்பனை முயற்சிகள் இன்றைய நிலையில் ஒப்பனையில் முக்கியத்துவம் எனப் பல்வேறு விடயங்கள் இந்த ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்படும். உடல் அழகு பற்றிய கருத்தோட்டத்தில் பழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களிடையே வழங்கிய மரபான அம்சங்களை இனங்காணும் வாய்ப்பு இந்து ஆய்வின் மூலம் அமைகின்றது. மேலும் பழந்தமிழரின் அழகு பற்றிய சிந்தனையாக மட்டுமல்லாமல் ஓர் இனத்தின் இன அடையாளங்களை உணர்த்தக்கூடியதாகு ஒப்பனைக் கலை அமைவதும் ஆய்வின் பயனாக அமைகின்றது.

**அழகு பற்றிய கருத்து நிலை**

அழகு என்பதற்குப் பல்வேறு வகையான வரையறைகள் கூறப்படுகின்றன. 'அழகே வாழ்க்கை' என்பது ரஷ்ய அறிஞர் ஷெர்னி ஷேவ்ஸ்கியின் கருத்து அழகான பொருள் ஒரு மனிதனுக்கு வாழ்க்கையை நினைவுபடுத்துவதாகும். இந்த வரையறை அழகு, வாழ்க்கை, மனிதன் என்ற மூன்றுக்கும் இடையாலான நெருக்கத்தைக் குறிக்கின்றது. அழகு என்பது ஒரு பண்பு நிலையாகும். அதனைச் சுவைப்பதும் அதில் ஈடுபடுவதும் மனிதனின் அடிப்படையான உந்துதல் ஆகும்.

தமிழரின் அழகு பற்றிய சிந்தனை எத்தகையது என்று எண்ணும்போது ஒருவித வியப்புணர்வு மேலோங்குகின்றது. "அழகுடன் வாழும் உலகை நோக்கி அழகு எப்படி இருக்கிறது என வினவின் அதைச் சொல்லால் சொல்ல இயலாது அது விழிக்கிறது" என்பது திரு.வி.க. அவர்களின் கூற்று. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழரின் உணர்வினில் அழகு பற்றிய சிந்தனை நிறைந்து விளங்கியது. தொல்காப்பியத்தில் அழகு என்ற சொல் பொருளதிகாரச் செய்யுளியலில் செய்யுட்குரிய உறுப்புக்கள் வருமிடத்து ஓர் இலக்கிய வகையாகச் சொல்லப்பட்டுள்ளது. இது தவிர அழகு என்ற பொருள் தருக்கூடிய ஏர், எழில் முதலான சொற்கள் பொருளியலில்

*"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா*
*கற்பும் ஏரும் எழிலும் என்றா*
*................................*
*நாட்டியல் மரபின் நெஞ்சு கொளின் அல்லது*
*காட்டலாகாப் பொருள் என்ப"* *(தொல். பொருள். 51)*

என்றதில் இடம் பெற்றுள்ளன. இதன் பொருள் ஒப்பு, உரு, ஏர், எழில் போன்ற சொற்கள் எல்லாம் நாட்டில் வழங்குகின்ற மரபினாலே பொருளை மனதினால் உணர்ந்தாலே தவிர இதனது பொருள் இதுவெனக் காட்டலாகாப் பொ்ருளை உடையன என்பதாகும். இதனால் அழகின் பண்பை வழக்கியல் மரபுப்படி நாம் உணரமுடியுமேயன்றி அதற்கென்று தனிவடிவம் தந்து வரையறை கூறுதல் அரிது என்பது இதனால் அறியப்படுகின்றது.

அழகு என்பது ஒருவரையொருவர் நெருங்குவதற்குரிய உணர்வு பூர்வமான சாதனம். உடலின் அழகும் அங்கு அசைவுகளும் ஒரு வகையான உடல் மொழியை உருவாக்கின்றன. அந்த வகையில் அழகு என்பது ஒரு தகவல் தொடர்பையும் செய்கின்றது. தமிழ் இலக்கியங்களில் உடல் அழகு பற்றிய கருத்தோட்டங்களைத் தி.சு. நடராசன் பின்வருமாறு முன்வைக்கின்றார்.

1. இளமை, நலமான உடல், உடல் வலிமை சார்ந்ததாகவும் விருப்பத்தோடு கூடிய உணர்வுநிலை சார்ந்ததாகவும் அமைகின்றது.
2. உடலியல் சார்நத அழகியல் இளமையான பெண்ணுடலை மையமாகக் கொண்டது.
3. உடல் அழகு இயற்கைப் பொருனோடு இணைத்துப் பேசப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உடல் இயல்பாக அன்றி ஒப்பனையோடும் புனைவோடும் சொல்லப்படுதல்.

5. கற்பனையும் புராணமரபும் இணையும் சூழலில் மனித உடல் அழகு யதார்த்தத்திலிருந்து மீமனிதப் புனைவோடு சித்திரிக்கப்படுதல்.

அழகில் ஈடுபடாத உள்ள இல்லை எனலாம். அழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதில் உயர்வு தாழ்வு இல்லை. அந்த அழகு அவரவர் அறிவு, அனுபவம், சூழல், கற்பனை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது.

## அழகு குறித்து நிகண்டுகள் தரும் சொற்கள்

நிகண்டு என்பது சொற்களுக்கான பொருள்களைத் தருவதற்காக ஆக்கப்பட்ட நூல்வகையாகும். அழகு என்ற சொல் குறித்துப் பலவகையான சொற்களை நிகண்டுகள் தந்துள்ளன. ஆய்வின் வரையறை கருதி கி.பி 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஆசிரிய நிகண்டில் அழகு குறித்து வழங்கியுள்ள சொற்பட்டியலைப் பின்வருமாறு காட்டலாம். அணங்கு, அணி, அந்தம், அம், அம்மை, அலம், அற்புதம், ஆரியை, இராமம், எழில், ஏர், ஐ, ஒப்பு, கட்டளை, கந்தி, கவின், காமர், காரிகை, காள், குலம், கழகம், கேழ், கோலம், சந்தம், சவி, சார்வு, சாரு, சித்திரம், சீர், சுந்தரம், செவ்வி, செழுமை, சேடு, சொக்கு, தகை, தளிமம், தேசிகம், தேன், தொட்டில், நல்கு, நலம், நவ்வி, நோக்கு, பத்திரம், பாங்கு, பாணி, பூ, பெண்மை, பேதை, பொற்பு, பொன், மஞ்சு, மணி, மதன், மயம், மருகல், மா, மாதர், மாழை, யாணர், வரு, வனம், வரி, வண்ணம், வடிவு, விடங்கம், வாமம்.

மேற்குறித்த எழுபது சொற்களும் அழகு என்பதற்கு இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அழகு பற்றிய நிகண்டுகளின் சொல்விளக்கம் பிற்கால இலக்கியச் சொற்களையும் வடசொற்களையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடவேண்டிய ஒன்று.

## சங்க இலக்கியத்தில் பயின்று வரும் அழகு குறித்த சொற்களின் நுட்மான விளக்கம்

சங்கத் தமிழர்கள் மிக நுட்பமான அறிவு படைத்தவர்கள். தாம் கண்டு மகிழும் அழகிலும் நுண்ணிய வேறுபாடுகளைக் கண்டறிந்து அதற்கு ஏற்ற வகையில் அழகை வெவ்வேறு சொல்லால் அழைத்துள்ளனர். சங்க இலக்கியங்களில் நுண்ணிய வேறுபாடுகளுடன் கூடிய அழகினைக் குறிக்கும் பல்வேறு சொற்கள் பயின்று வந்துள்ளன. அவற்றைப் பின்வருமாறு காட்டலாம்.

1. அணங்கு – தெய்வத்தன்மை பொருந்திய அச்சத்துடன் கூடிய அழகு

> *"இளையள் முளைவா ளெயிற்றள்*
> *வளையுடைக் கையளெம் அணங்கி யோளே"* *(குறுந். 119)*

2. எழில் - அழகான ஒன்றைக் காணும் போது உள்ளத்து உணர்வை எழுச்சி பெறச் செய்யும் அழகு.

> *"பணை எழில் மென்றோ ளணை இய வந்நாட்*
> *பிழையா வஞ்சினம் செய்த"* *(குறுந். 318)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஏர் - பொலிவோடு கூடிய அழகு

*"முலையேர் மென்முகை யவழிந்த கோங்கின்*
*தலையலர் வந்தன* *(குறுந். 254)*

4. கவின் - கவிந்து வரும் அழகு

*"தொல்கவின் தொலைய தோணலந் சாஅய்*
*நல்கார் நீத்தன ராயினும் நல்குவர்"* *(குறுந். 14)*

5. காமர் - விருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய அழகு

*"கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்*
*குலவுமென் முறையள் கொடிக்கூந்தலளே"* *(குறுந். 132)*

6. கேழ் - வண்ணத்தோடு கூடிய அழகு

*"ஒண்கேழ் வனமுறைப் பொலிந்த*
*நுண்பூ ணாகம் பொருந்துதன் மறந்தே"* *(அகம். 61)*

7. தகை- குற்றமில்லாத மாட்சிமைப்பட்ட அழகு

*"ஆய்நலந் தொலைந்த மேனியும் மாமலர்த்*
*தகைவனப் பிழந்த கண்ணும் வகையில"* *(அகம். 69)*

8. நலம் - பிணி இல்லாத இயல்பான அழகு

*"மலரே ருண்கண் மாணலந் தொலைய*
*வளையேர் மென்றோண் ஞெகிழ்ந்தன் றலையும்"* *(குறுந். 377)*

9. பொற்பு – ஒப்பனையோடு கூடிய அழகு

*"பொற்புடை விரியுளைப் பொலிந்த பரியுடை"* *(குறுந் 313)*

10. மதன் - மயக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அழகு

*"நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்*
*நார் உரித் தன்ன மதனில் மாமை"* *(நற். 8)*

11. முருகு - இளமை நலனோடு மிளிரும் அழகு

*"முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல"* *(நற். 82)*

12. வனப்பு – உறுப்புக்கள் திரண்டவழிப் பெறுவதோர் அழகு

*"ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்"* *(குறுந் 131)*

## அழகின் இருநிலை

அழகு என்று சொல்பவற்றை இரு பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று இயற்கை அழகு. மற்றொன்று செயற்கை அழகு 'கை' என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளுண்டு "கை" என்பதை அழகு என்னும் பொருளில் பயன்படுத்தும் பொழுது இயல்பாக அமையும் அழகை 'இயற்கை' என்ற சொல்லாலும் செயலால் அமையும் அழகை செயற்கை (செயல் + கை) என்ற சொல்லாலும் குறித்தனர். உலகில் இயல்பாக ஒளிரும் எழில்களை நக்கீரர் "கைபுனைந்து இயற்றா கவின் பெருவனப்பின்" (திருமுருகு. 17) என்று பாடியுள்ளார் இயற்கை அழகு என்று குறிப்பிடுபவற்றை உயிருள் அழகு, உயிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு என இரண்டு பிரிவுகளில் அடக்கலாம், மலை, வானம், கடல், பூமி போன்றவை உயிரில் அழகாகும். உயிருள் அழகு என்ற பிரிவில் மரம், செடி, விலங்கு, பறவை மக்கள் என்ற உயிரினங்கள் அடங்குகின்றன.

இவற்றுள் மக்களின் அழகை உறுப்பு நலன், பண்பு நலன் அல்லது அக அழகு, புற அழகு என்று இரண்டாகப் பாகுபடுத்தலாம். இந்த ஆய்வுக் கட்டுரையில் மக்களின் சிறப்பாகப் பெண்களின் உறுப்பு நலன்களே எடுத்து நோக்கப்படுகின்றன. பெண்களின் உறுப்பு நலன் இயல்பாக இயற்கையான கொடையாக இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது. உடல் உறுப்புக்கள் அமையவேண்டிய இலக்கணப்படி அமைந்திருக்கின்ற அழகைக் 'கட்டழகு' என்ற சொல்லால் அழைத்தனர். உடல் அழகானது மேலதிக செயற்கையான முயற்சியாக ஒப்பனையோடும் புனைவோடும் அழகு செய்யப்படுகின்றது. ஒப்பனை என்பது ஒருகலை. தன்னுடைய உடல் பற்றிய உணர்வும் அழகாக்தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் ஒப்பனையை ஒரு தேவையாக ஆக்குகின்றன. பெண்களின் உடல் சார்ந்த அழகுக்கு ஒப்பனையும் ஒரு பகுதியாக இலக்கியங்களில் கூறப்படுகின்றது. தலைவனுடைய பிரிவுக் காலங்களில் தலைவி ஒப்பனை செய்யாமல் இருப்பதும் அவளின் உடலில் பசலை தோன்றுவதும் சங்க இலகியங்களில் பன்முறை பேசப்படுகின்றது. மலைபடுகடாம் கொங்கையின் அழகை "வினை புனை எழில் முலை" என வருணிக்கின்றது. இங்கு கொங்கையின் அழகுக்கு மூன்று அடைமொழிகள் தரப்பட்டுள்ளன. ஒன்று இயல்பானது – எழில், மற்றும் ஒப்பனையாக வினை – புனை என்ற இரு செயல்கள் கூறப்படுகின்றன. பெண்கள் பலவகையான ஒப்பனைகள் செய்தும் இவர்களைப் "புனையா ஓவியம்" என்றே சங்க இலக்கியங்கள் வருணிக்கின்றன.

## ஒப்பனை சொல்லும் பொருளும்

ஒப்பனை என்ற சொல்லிற்கு அழகுபடுத்துதல் என்பது பொருள் இயற்கையாகக் கிடைத்த அழகினை மேலும் அழகுபடுத்துவதற்காக மேலதிகமான செயற்கையான முயற்சி ஒப்பனை ஆகும். ஒப்பனை என்பதற்கு புனைதல், கைசெய்தல், வேய்தல், பொற்பு, அலங்கரித்தல், வனைதல், பூசுதல், அணிதல், மண்ணல், பூணுதல் எனப் பல பொருள்களுண்டு இருக்கின்ற அழகை வெளிக்கொணர்தல், அழகை மிகைப்படுத்தல், அழகு இல்லாத பொருளையும் அழகாக மாற்றுதல் என்பவை ஒப்பனையின் பயன்களாகும்.

## பெண்களின் ஒப்பனை முயற்சிகள்

சங்ககால மகளிர் தங்களை அழகுபடுத்துவதற்குச் சில ஒப்பனை முறைகளைக் கையாண்டுள்ளனர். ஒப்பனை செய்யும் வண்ணமகளிர் ஒப்பனை செய்யும் அறை போன்றவற்றைப் பற்றிய விரிவான குறிப்புக்கள் இல்லை. இவை பற்றிய செய்திகள் பிற்கால இலக்கியங்களில் அவதானிக்கக் கூடியதாக உள்ளன. அந்தவகையில் சங்ககால மகளிரது ஒப்பனை முயற்சிகளைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

1. நீராடல்
2. கூந்தல் ஒப்பனை
3. தொய்யில் எழுதுதல்
4. ஆடை வகைகள்
5. அணிவகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மலர்கள் புனைதல்
7. வாசப்பொருள்கள், வண்ணங்கள் பூசுதல்
8. ஒப்பனை செய்யும் வேளைகள்
9. வயது நிலைக்கேற்ற மாற்றங்கள்

வடமொழியில் வல்லப தேவர் என்பவர் எழுதிய சுபாஷிதாவளியில் பதினாறு விதமான அலங்காரங்களைப் பெண்கள் கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஸ்நானம், ஆடை, திலகம், கண்மை, காதணி, மூக்கணி, கூந்தல் அலங்காரம், ரவிக்கை, காலணி, உடலுக்கு, நறுமணம், வளையல், பாதத்தில் செம்பஞ்சுக் குழம்பு, மேகலை, தாம்பூலம், மோதிரம், ஏனையவை என்பன அவையாகும். பெண்கள் இயற்கையாக அமைந்த அழகோடு மேலதிகமான சில ஒப்பனை முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை அவ்வவ் கால இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

### நீராடல்

பண்டைத் தமிழ்ப் பெண்கள் குளிர்ந்த நீரில் நீராடுவதில் பெருவிருப்பு உடையவர்களாக இருந்துள்ளனர். பெண்கள் நீண்ட கூந்தலுக்கு மணமிக்க சந்தனத்தைத் தேய்த்து முழுகுவது வழக்கம் எனத் தெரிகிறது.

*"உரைத்த சாந்தின் ஊரலிருங்கதுப்பு"* *(அகம்.102)*

என்ற அடிகள் இதனைத் தெரிவிக்கின்றன. வாசைன மிக்க நறிய நெய்யையும் வெண்ணெயையும் கூந்தலில் தேய்த்துக் கொள்வர் என்பதை,

*"வாசநறு நெய்யாடி"* *(பரி.12)*
*வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்பு"* *(கலி.115)*

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு சந்தனமும் நெய்யும் வெண்ணெயும் தேய்த்து முழுகிய கூந்தலில் ஈரம் புலரும் வண்ணம் நெருப்பில் வாசப்பொருள்களையிட்டுப் புகைத்து உலர்த்துவார்கள். இதனை,

*"பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்ம்மார்*
*தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்து*
*இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப"* (நெடுதல் - *54 – 56)*

என்ற அடிகளால் உணரலாம். உடல் தூய்மைக்கு உதவும் இன்றியமையாத நற்பழக்கமே நீராடல். ஆறு, கடல் அருவிகளில் நீராடல் என்பது இயற்கையோடு ஒன்றிய நீராடல். வெப்பக்குளியல், ஆவிக்குளியல், மூலிகைக் குளியல் எனப் பல்வேறு வகைக்குளியல்கள் மேலைநாடுகளில் நல்வாழ்வு நோக்கில் உருவானவை. இந்த நற்பழக்கங்கள் பழந்தமிழர் வாழ்வியலில் இயல்பாகவே இணைந்திருந்தன.

### கூந்தல் ஒப்பனை

சங்ககாலப் பெண்கள் தமது கூந்தலை நீண்ட நேரம் ஒப்பனை செய்து கொண்டுள்ளனர். கூந்தல் வாசைன கமழும் பொருட்டு நறு மணப்புகையூட்டினர். பலவகையான தலையலங்காரங்கள் அக்காலத்தில் நிலவியுள்ளதைப் பாடற்சான்றுகள் தெரியப்படுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. குழவி, அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என ஐந்து வகையாகத் (ஐம்பால்) தலைக்கோலம் செய்து கொண்டனர்.

*"ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்"* *(அகம்.48)*
*"பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தல்* *(அகம். 158)*
*"சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்*
*வகைசேர் ஐம்பால் தகைபெற வாரி"* *(நற்.140)*
*"ஐம்பால் வகுத்த கூந்தல்"* *(நற்.160)*

பலவகையாக அலங்கரிக்கப்பட்ட கூந்தலில் பலவகை வண்ண மலர்களையும் சூடி அழகுபெற வைத்தனர்.

*"போது அவிழ் நறுந்தாது அணிந்த கூந்தல்"* *(அகம். 296)*
*"அவிழ்பு முடியினள்* *(நற்.42)*
*"போது ஆர் கூந்தல்"* *(அகம். 246)*

விரித்தும் தொகுத்தும் வகுத்தும் வாரியும் கோதியும் தீண்டியும் நறுமணப் புகையூட்டியும் வண்ணமலர்களைச் சூடியும் பெண்கள் கூந்தல் ஒப்பனைகளைச் செய்துள்ளமையை இவற்றால் அறியமுடிகின்றது.

### தொய்யில் எழுதுதல்

தொய்யில் என்பது தோய்தல் எனப் பொருள்படும். மேனியில் எழுதிய வள்ளிக் கொடியைத் தொய்யில் என்பர். தலைவன் தலைவியைத் தொலைவில் பார்க்கும் பொழுது அவள் அணங்கோ தெய்வமோ என ஐயுறுவான். பின் உற்றுநோக்கிச் சில அடையாளங்களால் இவள் பெண்ணே எனத் தெளிவுறுவான். அந்தத் தெளிவைத் தரும் அடையாளங்களில் ஒன்று தொய்யில். இது பற்றிய குறிப்புக்களைச் சங்கச்சான்றுகளால் அறியலாம்.

*"தொய்யில் வனமுலை வரி "* *(அகம் 225)*
*"உருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய*
*தொய்யில் காப்போ ரறிதலு மறியார்"* *(குறு.276)*
*"என்தோள் எழுதிய தொய்யிலும்"* *(கலி.18)*
*"தொய்யில் இளமுலை இனிய தைவந்து"* *(கலி.54)*

தொய்யில் எழுதுதல் ஒரு நுண்ணிய கலைத்திறன். புணர்ச்சிக்கு முன் தலைவியின் மார்பிலும் தோளிலும் குங்குமம் மற்றும் சந்தனக் குழம்பால் ஆன கலவையைக் கொண்டு ஓவியம் வரைவது மரபு. ஒவ்வோர் இரவிலும் வெவ்வேறு வகையான தொய்யில் எழுதுவர். தொய்யிற் கலையைக் கூத்தர்கள் தலைவனுக்குக் கற்பிப்பார்கள். இவ்வாறு தொய்யில் எழுதுவது தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் அன்பை விளைவிக்கும் என்பது ஐதிகம்.

### ஆடைவகைகள்

பழந்தமிழர் ஆடைகளில் முக்கிய கவனங் கொண்டிருந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. உடை பற்றிய சங்க இலக்கியக் குறிப்புக்களைத் தொகுத்து நோக்குமிடத்துப் பழந் தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சி நிலைகளையும் கண்டு கொள்ள முடிகின்றது. ஆடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய இலக்கியக் குறிப்புக்களை நோக்கும் போது தழை, கச்சை, ஆடை, கலிங்கம், உடை, அறுவை, துகில், போன்ற சொற்கள் உடை பற்றியதாகக் காணப்படுகின்றன.

*"அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்"* *(அகம் .59)*

*"விரைப்பரி வருந்திய வீங்கு செலல் இளையர்*
*அரைச் செறி கச்சை யாப்பழித் தசைஇ"* *(நற்.21)*

*"காயாம்பூங் கண்ணிக் கருந்துவ ராடை* *(கலி. 108)*

*"பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கம்"* *(புறம். 392)*

*"ஒன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்"* *(பெரும்பாண்)*

*"அரவுரி யன்ன அறுவை நல்கி"* *(பொருநர்.83)*

*"பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டல்குல்"* *(நெடுநல்.145)*

புதிய தழைகளையும் பூக்களையும் இணைத்துத் தழையாடைகள் செய்யப்பட்டன. ஆம்பல் மலர்களையும் வேறின மலர்களையும் அலங்காரத்திற்காகப் பயன்படுத்தினர். பழந்தமிழ்ப் பெண்களிடையே கலையுணர்வு மேம்பட்டிருந்ததை இதன் மூலம் அறியமுடிகின்றது. மேலும் தழைகளில் பலவிதம் இருந்ததாகத் தெரிகின்றது. முழுநெறித்தழை (புறம்.116) என்பது. முழுப்பூக்களால் நெறியாகக் தைக்கப்பட்ட தழையாடை பகைத்தழை (ஐங்.187) என்பது ஒன்றோடொன்று மாறுபட்ட நெறிப்பினை உடைய தழையாடை

பெரும்பாலும் தழை பெண்களுக்குரிய உடையாகவே கூறப்பட்டுள்ளது. சங்க அகத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவிக்குத் தழையுடை தந்தமை கூறப்படுகின்றது.

*"குன்றநாடன், உடுக்குந் தழைதந்தனனே யவையாம்*
*உடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்*
*கேளுடைய்க் கேடஞ் சுதுமே ஆயிடை*
*வாடல கொல்லோ தாமே அவன் மலைப்*
*போருடை வருடையும் பாயாச்*
*சூருடை அடுக்கத்த கொயற்கருந் தழையே"* *(நற். 359)*

இப்பாடலில் தலைவன் தழையுடை தந்தமையும் அவ்வுடையைப் பெற்ற தலைவி உடுப்பதற்கு முடியாமலும் கொடுப்பதற்கு அஞ்சிய இயல்பும் கூறப்படுகின்றது. சமூகத்தின் பல்வேறு நிலைகளில் வாழ்ந்த பெண்களும் தழையுடை அணிந்துள்ளனர். பெண்களைப் பொறுத்தவரை தழையாடை அவர்களின் நாளாந்த வாழ்க்கையிலும் ஒழுக்க நெறியிலும் முக்கியமானதாக விளங்கியது. பெண்களின் களவொழுக்கத்தைத் தழையுடை காட்டிக் கொடுத்த சந்தர்ப்பங்களும் கூறப்பட்டுள்ளன. தழையாடைச் சிதைவும் கோதை வாடலும் அன்னையரால் கண்காணிக்கப்பட்டு கண்டிப்புக்கும் இந் செறிப்புக்கும் உள்ளாயினர். ஆண்களின் பரத்தமையொழுக்கத்தினைப் பலரறியப் புலப்படுத்தும் கருவியாக இத்தழையுடை அமைந்த செய்தி பரிபாடலில் (பரி.6) விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தலைவன் கொணர்ந்த தழையுடை துவண்டிருப்பதால் பிறள் ஒருத்திக்கென கொய்யப்பட்டு அவள் மறுக்கவே தன்னிடம் தரப்பட்டதாகக் குறை கூறும் பரத்தையின் கூற்று தலைவனின் புல்லிய ஒழுக்கத்தை வெளிப்படுத்துகின்றது. பண்டைய காலத்தில் தழை உடையாகப் பயன்பட்டதால் அதற்கும் ஒழுக்கத்திற்கும் இணைப்பு உண்டாயிற்று. தழையின் பசுமையும் பண்பும் குறைந்தவிடத்து ஒழுக்கச் சீர்கேடு ஏற்பட்டமை எல்லோராலும் உணரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் துகில் என்னும் ஆடைவகையை அணிந்த செய்திகள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. துகில் அணியும் தன்மையும் வகையும் வேறுபட்டமைந்துள்ளன. வேலைப்பாடு நிறைந்த துகிலைக்குறிப்பதற்குப் "பூந்துகில்" என்ற சொல் கையாளப் பட்டுள்ளது.

*"பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்"* *(அகம்.387)*
*"துகிலணி அல்குல் துளங்கியல் மகளிர்"* *(சிறுபாண் 262)*

"அல்குல்" என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் பெண்களில் இடைப்பிரதேசத்தினைக் குறித்தது. இடையைச் சுற்றித் துகிலணிவதைப் பெண்கள் பண் பாடாகக் கொண்டிருந்தனர். இதனால் தான் சிறப்பாகத் துகில் அல்குலோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. மேலும் துகில் அணியும் தன்மை வேறுபட்டிருந்ததைப் பாடல்கள் தெரிவிக்கின்றன. "புனைதுகில்" (பரி. 7) என்னும் தொடர் மகளிர் உடுத்த ஆடையைக் குறிக்கின்றது. "இருந்துகில் தானையினெற்றி" என்னும் தொடர் துகில் முன்றானையாகப் பயன்பட்டதைக் காட்டுகின்றது. துகில் வெண்மை நிறமானதாக பருத்தியினால் ஆக்கப்பட்டதாக உருவத்தை மறையாது காட்டும் தன்மையுடையதாக அமைந்திருந்தது.

முல்லைப்பாட்டு பழந்தமிழ்ப் பெண்கள் அணிந்த கச்சு என்னும் உடை பற்றிக் கூறுகின்றது.

*"குறுந்தொடி முன்கைக் கூந்தலுஞ் சிறுபுறத்து*
*இரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்*
*விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்"* *(முல்லை. 45-47)*

அரசனுடைய பாசறையில் பாவை விளக்கு ஏற்றிய பெண்கள் தமது கச்சோடு ஒளி பொருந்திய வாளையும் கட்டியிருந்தனர். கச்சு அணியும் வழக்கம் பெண்களிடையே இருந்ததைப் பிற்கால இலக்கியங்களும் உணர்த்தியுள்ளன.

கலிங்கம் என்னும் ஆடையைப் பெண்கள் அணிந்த செய்தியினைக் குறுந்தொகை வாயிலாக அறியலாம்.

*"முளிதயிர் பிசைந்த காந்தள் மென்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்"* *(குறுந்.167)*

இப்பாடலில் பெண் கலிங்கமணிந்து சமையல் செய்த காட்சி வர்ணிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களது சமூக வாழ்க்கையில் ஆடை முக்கியமானவையாகக் கொள்ளப்பட்டன. பால்நிலைகளுக்கிடையே இருந்த பண்புகளையும் உருவ வேறுபாடுகளையும் புலப்படுத்திக் காட்டுபவையாக பழந்தமிழர் ஆடைகள் விளங்கின.

### அணிவகைகள்

பழந்தமிழ்ப் பெண்கள் அணிகளை அணிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருந்துள்ளனர். இது பற்றி அவர்களுக்கு ஆயிழை, சேயிழை, நேரிழை, பொற்றொடி, ஆய்தொடி, ஒண்தொடி என அணிகளைக் கொண்டே பண்டையோர் பெயரிட்டிருக்கின்றனர். பெண்கள் தலை முதல் பாதம் வரை அணிகலன்களால் ஒப்பனை செய்த சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தலையில் மகரமீன் போலப் பொன்னாற் செய்த தலைக்கோலத்தை அணிந்திருந்தார்கள்.

"பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை" (கலி.54)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. "வயந்தகம்" என்னும் பெயருடைய அணி தலைக்கோலத்தினின்றும் நெற்றியில் தாழ விட்டிருக்கும்.

*"அவைபுக ழரங்கின்மே லாடுவா ளணிநுதல்*
*வகை பெறச் செரீஇய வயந்தகம்"*

என்பதால் உணரலாம். "குழை மாண் ஒள்ளிழை" (அகம். 6) என்ற அடிகள் காதில் அழகிய குழையை அணிந்திருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. "வந்திகை" என்னும் ஓரணியை பழந்தமிழ்ப் பெண்கள் தோளின் கீழ் அணிந்திருந்தார்கள் என்பதை,

*" வணங்கிறைப் பணைத்தோள் சோர்ந்துகுவன்ன*
*............ வயக்குறு வந்திகை"*

(மதுரைக். உணர்த்துகின்றன. கழுத்தில் பொன்னால் செய்த நாணினை அணிந்திருந்தார்கள் என்பதை,

*"ஏக்கழுத்து நாணாற் கரும்பி னணை மென்றோள்" (பரி.7)*

என்ற அடியினால் அறியலாம்.

*"போக்கில் பொலந்தொடி செறீஇயோளே" (நற். 136)*

*"பொலந்தொடி நின்ற மயிர்வார் முன்கை" (ஐங். 352)*

என்ற அடிகள் பண்டைக் காலப் பெண்கள் பொன் வளையல்களை அணிந்திருந்தார்கள் என்பதை உணர்த்துகின்றன. "சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப" (நற்.120) என்ற அடிகள் மெல்லிய விரலில் சிறிய மோதிரம் அணிந்திருந்தார்கள் என்பதை அறிவிக்கின்றன. வாளை மீனின் பிளந்த வாயைப் போன்று வளைவாகச் செய்யப்பட்ட ஓரணியை விரலில் அணிந்திருந்திருந்தார்கள் என்பதை நெடுநல்வாடை கூறுகின்றது.

*"வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்*
*செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கத்து" (நெடுநல். 143 – 144)*

இதனை "நெளி" என்று பெயரிட்டுள்ளார் நச்சினார்க்கினியர். பரிபாடலில்வையை நதி கவர்ந்து சென்ற பொருட்களைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

*"கைவளை யாழி தொய்யகம் புனைதுகில்*
*மேகலை காஞ்சி வாகு வலயம்*
*எல்லாங் கவரு மியல் பிற்றாய்" (பரி.7)*

இவ்வடிகளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையினால் 'தொய்கம்" என்பது தலைக்கோலம் என்பதும் "மேகலை" என்பது இருவடமாய்த் துகிலுக்குப் புறத்தணியும் அணி என்பதும் அறியக்கிடக்கின்றது. கால்களில் பொன்னால் செய்யப்பட்டுப் பரல்கள் பெய்யப்பட்ட சிலம்பினை அணிந்து மகிழ்ந்துள்ளனர். இதனை,

*"அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை" (அகம்.6)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சிலம்பு ஆர் சீரடி"* (அகம்.17)
*"முத்து அரிப் பொற்சிலம்பு"* (நற்.110)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. பண்டைத் தமிழ்ப் பெண்கள் தமது உடலின் உறுப்புக்களைப் பல்வகை அணிகலன்களால் ஒப்பனை செய்து பார்ப்பதில் பெருவிருப்புடையவர்களாக இருந்துள்ளனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**மலர்கள் புனைதல்**

சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள். இயற்கையில் கிடைத்த பொருட்கள் எல்லாம் அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒன்றாகக் கலந்தன. அந்த வகையில் மலர்களானது பொழுது உணர்த்துதல், அடையாளப்பூ, மங்கலப்பொருள், அலங்காரப் பொருள், அணிகலன், உணவு, வழிபாடு எனப் பலநிலைகளில் பயன்பட்டுள்ளதனைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாகப் பெண்கள் மலர்கள் சூடுவதிலும் மாலைகளைப் புனைவதிலும் நாட்டமுடையவர்கள். சங்க மகளிர் ஞாழல், பாதிரி, அதிரல், மரா, வேங்கை, நெய்தல், காஞ்சி, தாழை, நரந்தம், குவளை, ஆம்பல், போன்ற மலர்களைத் தலையில் அணிந்தனர். அழகிய புதிய குவளை மலரைத் காதிற் குழையாக அணிந்த கோலத்தை,

*"குவளைக் குழைக்காதின் கோலச் செவியின்*
*இவள் செரீஇ நான்கு விழி படைத்தாள்."* (பரி.11)

எனப் பரிபாடல் கூறுகின்றது. குவளை, ஆம்பல் இவற்றின் தண்டினைக் கையில் வளையாக அணிந்திருப்பர். "ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்" என்று பரிபாடல் தெரிவிக்கின்றது.

மலர்களால் கட்டப்படுகின்ற மாலைகள் பலவிதமாக அமைந்தன. ஆண்களும், பெண்களும் தனித்தனியான மாலைவகைகளைத் தொடுத்துப் பயன்படுத்தினர். ஆரம், கண்ணி, தார், தாமம், கோதை, தெரியல், தொடை, பிணையல், புடையல், மாலை, போன்ற மாலை வகைகளை சங்க இலக்கியப் பகுதிகளால் அறியலாம். பெண்கள் தலையிலும், மார்பிலும் அணிபவை கோதை என்றும் மாலை என்றும் கூறப்பட்டன. ஏனைய மாலை வகைகளையும் மகளிர் அணிந்த செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. இதனை,

*" ஆரம் தாங்கிய அலர் முலை ஆகம்" (அகம் . 74)*

*"கருங்கால்வேங்கை செம்பூம் பிணையல்*

*ஐது ஏந்து அல்குல் யாம் அணிந்து உவக்கும்."* (அகம் - 345)

*"ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி" (நற் . 200)*

*"கான முல்லை கயவாய் அலரி"*

*பார்ப்பன மகளிர் சாரற்புறத்து அணிய" (நற் . 321)*

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசப் பொருட்கள், வண்ணங்கள் பூசுதல்

பெண்கள் வாசப் பொருட்களையும் வண்ணங்களையும் தம் உடலில் பூசிக் கொள்வதைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. தமது கூந்தலுக்கு எண்ணெய், நெய், சந்தனம், நறுமனப்புகை முதலியவற்றால் வாசனையூட்டினர். மணம் மிக்க சுண்ணப் பொடியை மகளிர் முகத்திலும், உடம்பிலும் பூசிக் கொள்வர். பல பெண்கள் கூடி சுண்ணம் இடிப்பதை

*"பொன்னும் சந்தனமும் கருப்பூரம்*
*முதலியனவும் புழகிலும் பனிநீரிலும்*
*நனைய வைத்திடித்தலின் இடிக்க*
*வல்லார் பலரும் வேண்டிற்று"* (மதுரை 382)

என வரும் மதுரைக்காஞ்சி அடிகளால் அறியலாம். இத்தகைய சாந்துகள் வாசம் மிகுந்ததாக இருப்பதனால் அணிபவர் மேனியும் வாசனை மிக்கதாக விளங்கிற்று. இதனை,

*"நறுஞ் சாந்து அணிகுவம்"* (அகம். 340)
*"தண்கமழ் சாந்தம் நுண்துகள் அணிய"* (அகம். 354)
*"ஓசனை கமழும் வாசமேனியர்"* (பரி.12)

என்னும் பாடல்களால் அறியலாம்.

பெண்கள் தமது கண்களில் அழகை வெளிப்படுத்துவதற்காகக் கண்களுக்கு மையிட்டுக் கொள்வதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இதனை.

*"சிறு தொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்"* (ஐங். 16)

என்ற அடிகளால் உணரலாம். பெண்கள் நெற்றியின் கண் திலகம் இட்டுக் கொள்ளுவதை,

*"தேங்கமழ் திருநுதற் றிலகம் தைஇயும்"* (அகம்.389)
*"திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல்"* (நற்.62)

என்ற அடிகளால் உணரலாம். ஒப்பனை செய்கின்ற பெண்கள் தம்முடைய பேரெழிலைக் கண்ணாடியில் கண்டு மகிழ்ந்து அவ் வெழில் மேலும் சிறக்கும் வண்ணம் வாய்க்கு வாசத்துவர் இட்டுக் கொள்வார்கள் என்பதை,

*"மாசறக் கண்ணடி வயக்கி வண்ணமும்*
*தேசு மொளியுந் திகழ நோக்கி*
*வாச மணத்துவர் வாய்க்கொள் வோரும்"* (பரி.12)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இங்கு வாசத்துவர் என்பது வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, ஏலம் முதலிய வாசனைப் பொருட்களின் கூட்டினைக் குறிக்கின்றது. சிவந்த சிறிய பாதத்தின் கண் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுதலும் பண்டைத்தமிழ் மகளிரிடையே வழக்கிலிருந்தது என்பதை,

*"அஞ்செஞ் சீறடி பஞ்சி ஊட்டி"* (அகம்.389)

என்ற அடிகள் மூலம் உணரலாம். மேலும் ஆடைகளுக்கு மணங் கமழ் புகையேற்றுவது வழக்கம் என்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மென்னூற் கலிங்கம் கமழ்புகை மடுப்ப"* *(மதுரை)*

என்ற மதுரைக்காஞ்சி அடிகளால் உணரலாம்.

## ஒப்பனை செய்யும் வேளைகள்

சங்க மகளிர் ஒப்பனை செய்யும் போது பருவ நிலையையும் தாம் பங்குபெறும் நிகழ்வினையும் கருத்திற் கொண்டுள்ளனர். பெண்கள் வெப்பமான காலத்தில் தழையாடைகளை விரும்பி அணிந்தனர். இயற்கையாகக் கிடைக்கும் தழைகளையும் பூக்களையும் கொண்டு தழையாடைகள் ஆக்கப்படுவதால் வெப்பமான காலத்திலும் உடலில் குளிர்ச்சியை ஏற்படுத்துவையாக அமைந்தன. இதனால் பெண்கள் தழை ஆடைகளை விரும்பி மரபான ஆடையைப் போல் அணிந்து கொண்டனர்.

ஐம்புலன்களுக்கும் ஒருசேர இன்பம் பயக்கும் மலர்களும் குளிர்ச்சி நிறைந்தவை. பெண்கள் மலர்களைப் புனைவதில் நாட்டமுடையவராக இருந்துள்ளமையைச் சங்கச் சான்றுகளால் அறியலாம். மலர்கள் புனையாத மங்கல மகளிரைக் காண்பது அரிதாகும். மகளிர் பூவில்லாத வறுந்தலை முடிப்பதை,

*"மகளிர் பூவில் வறுந்தலை முடிப்பவும்" (புறம்.44)*

எனப் பெரிய தீமையாகக் கோவூர்கிழார் பாடியுள்ளார். குளிர்ந்த மலர்களை அணிந்து கொள்ள முடியாத கூதிர்காலமாக இருப்பினும் மகளிர் மலர் அணியாது இருத்தல் முறையாகாததால் பல மலர்களாலான கோதை புனையாது சில மலர்களையாவது அணிந்து கொள்வர். இதனை,

*"கூந்தன் மகளிர் கோதை புனையார்*
*பல்லிருங் கூந்தில் சின்மலர் பெய்ம்மார்" (நெடுநல்)*

என நெடுநல் வாடையில் நக்கீரர் கூதிர்கால நிகழ்ச்சியை வருணனை செய்கின்றார். இதன் மூலம் குளிர்காலத்தில் குறைவான மலர்களை அணிந்துள்ளமையை உணர்ந்து கொள்ளலாம்.

வேனிற் காலத்தில் வடவர் தந்த வட்டக் கல்லில் அரைத்த சந்தனத்தின் தேய்வைப் பெண்கள் உடலிலி பூசிக் கொள்வார்கள். குளிர்காலத்தில் கஸ்தூரி முதலிய கலந்த கலவையைப் பூசிக் கொள்வார்கள். இதனை,

*"கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்*
*கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக*
*வடவர் தந்த வான்கேழ் வட்டம்*
*தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப"* (றெடுதல்)

நெடுதல் வாடை அடிகளால் உணரலாம். உடல் வெப்பநிலையைச் சமப்படுத்துதலையும் பேணுதலையும் நோக்காகக் கொண்டு வெப்ப காலத்தில் சந்தனமும் குளிர்காலத்தில் கஸ்தூரியும் பயன்படுத்தப்பட்டன.

சங்க காலத்தில் நடைபெற்ற திருமணத்தின் போது மணமகளுக்கென சிறப்பான ஒப்பனைகள் செய்யப்பட்டன. பெண்ணுக்கான ஆடை, அணிகலன்கள், தனித்துவமாக அமைந்திருந்தன.

*"வதுவை நாள் அணி" (அகம் - 56)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அகநானூற்றுப் பாடல் மணமகளுக்கான ஆடை அணிகலன்கள் பற்றித் தெரிவிக்கின்றது. நீராடலின் போது பெண்கள் துகில் என்னும் ஆடை வகையை அணிந்தனர்.

*"மீப் பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால்*
*வெண்டுகில் சூழக் குழன் முறுக்குநர்"* *(பரி. 10)*

என வையை நீர் விளையாட்டில் பெண்கள் உடுத்த ஆடையைப் பற்றிக் கரும்பிள்ளைப் பூதனார் என்னும் புலவர் பாடியிருத்தலைக் காணலாம். சிலர் உடம்பின் மேல் வெண்மையான துகிலைப் போர்ப்பர். சிலர் வெண்மையான துகிலைப் நீராடிய கூந்தலின் மேல் சுற்றி முறுக்குவர். விழாக்காலங்களிலும் கூத்துக்களின் போதும் சிறப்பாகத் தழையாடைகளை விரும்பி உடுத்தனர். ஆடைகளுக்கேற்ப பொருத்தமான அணிகலன்களும் அணியப்பட்டன.

*" இழை அணி அல்குல் விழவு ஆடு மகளிர்" (நற். 138)*
*"விழவு அணி மகளிர் தழையணிக்கூட்டும்* *(அகம். 70)*
*"வயல்வெள்ளாம்பல் உருவ நெறித்தழை*
*யைதக லல்குல் அணிபெறச் தைஇ*
*விழவிற் செல்இயர் வேண்டும்."* *(நற்- 390)*

பருவ நிலைக்கேற்பவும் விழா, ஆடல், திருமணம், நீராட்டம், போன்றவற்றிற்கேற்பவும் பெண்கள் ஒப்பனைகளைச் செய்துள்ளமை இவற்றின் மூலம் தெளிவாகின்றது.

## வயது நிலைக்கேற்ற மாற்றங்கள்

மகளிர் தம்மை அலங்கரிக்கும் போது வயது நிலையைக் கருத்திற் கொண்டனர். இளமை, முதுமை என்னும் வயது நிலை முறையாகப் பேணப்பட்டமையைச் சங்க இலக்கியச் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. முதிய மகளிர் இள மகளிருக்குச் சிறப்பான வழிகாட்டல்களைச் செய்துள்ளனர். பரிபாடலில் வையை நீர் வழிபாட்டில் கலந்து கொண்ட மகளிர் பருவ நிலைக்கேற்ப நான்கு வகையாகக் காட்டப்பட்டுள்ளனர்.

*"முதியரிளையர் முகைப்பரு வத்தர்*
*வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னார்*
*இருதிற மரந்தரு மின்னின யோரும்*
*விரவுநரை யோரும் வெறுநரை யோரும்"* *(பரி: 10:19 -22)*

பூப் பெய்தாத மகளிர் முகைப்பருவத்தார் என்றும் பூப்பெய்திய மகளிர் அலர்வாய் அவிழ்ந்தன்னார் என்றும் பெயர் பெற்றனர். அடுத்த நிலையில் உள்ளவர்கள் கருமயிரிடையே நரைவிரவு நடுப்பருவத்தினர், முழுநரை பழுத்தவர் எனப் பகுக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சங்க காலத்தில் மக்கள் வயுது நிலையைக் கருத்திற் கொண்டமை புலனாகின்றது. ஒப்பனையின் போதும் இதைக் கவனத்தில் கொண்டனர்.

இளமைப்பருவம் எய்தாத பெண்கள் இடுப்புப் பகுதியை மட்டும் மறைத்துத் தழையாடை அணியும் வழக்கம் இருந்துள்ளது. பருவம் அடைந்த பெண்கள் தமது மார்புப் பகுதிகளை மறைக்கும் வண்ணம் கச்சுக்களை அணிந்துள்ளனர். கச்சுக்களை நெய்த பின் அதன் விளிம்புகளை முடித்தலும் ஒரு கலையாகும். இத் தொழில் புரிவோரை "வம்பு நிறை முடிநர்" (மதுரை. 514) எனக் குறிப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பூந்துகில் மரீஇய ஏநீது கோட்டு அல்குல்*
*அம்மாசு ஊர்ந்த அலர் நூற்கலிங்கமொரு*
*புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்*
*தளிர் ஏர் மேனி தாய கணக்கின்*
*அம்மானைத் தடை இயமென்தோள் முகிழ் மலை*
*வம்பு விசித்து யாத்த வாங்கு தாய் நுசுப்பின்" (நெடுதல். 145 - 151)*

என்ற மகளிர் துகிலுடுத்துக் கச்சுக்கட்டும் இயல்பினை நக்கீரர் எடுத்துரைக்கின்றார்.

பல வகையான கூந்தல் அலங்காரங்களைப் பெண்கள் செய்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. முதுமகளிர் வாரி விடப்பட்ட கூந்தலை முடித்துக் கட்டியிருப்பர் என்பதை மதுரைக்காஞ்சி (மதுரை 407 – 408) தெரிவிக்கின்றது. இளமகளிர் தமது கூந்தலை வாரி முடித்துக்கட்டாமல் கீழே தொங்க விட்டனர். என்பதைச் சிறுமாணாற்றுப்படை (சிறுபாண் 191 – 192) வாயிலாக அறியலாம்.

## நிறைவு

பண்டைத்தமிழ் மகளிர் தமது அழகினை மிகைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் ஒப்பனையை மேற்கொண்டுள்ளனர். ஒப்பனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமையைச் சங்கப்பாடல்கள் மூலம் அறிய மடிகின்றது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலம் ஆதலால் இயற்கையில் கிடைக்கின்ற பொருட்களே ஒப்பனைக்காகப் பயன்படுத்தப்பட்டன. இன்றைய காலத்தில் பெண்கள் செய்யும் ஒப்பனையின் மூலக்கூறுகளை சங்க இலக்கியங்களில் அறியக்கிடக்கின்றன. ஒப்பனையில் அதிகம் ஈடுபாடு உடையவர்களாகக் இக்காலப் பெண்கள் அமைகின்றனர். பூப்புச்சடங்கிலும், திருமணச்சடங்கிலும் மணபெண்ணுக்குச் சிறப்பான அலங்காரம் மேங்கொள்ளப்படும். மணப்பெண்ணின் உறவினர் அலங்கார வேலைகளை மேற்கொள்வர். ஆனால் இன்று ஒப்பனை தொடர்பாகப் பயிற்சி பெற்ற ஒப்பனைக் கலைஞர்கள் அலங்கார வேலைக்கு வருகை தருகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்படும் 'வண்ணமகள்' ஒப்பனையை மேற்கொள்பவள். நாளாந்த வாழ்க்கையிலும் ஒப்பனையுடன் கூடிய அழகைப் பெண்கள் விரும்புகின்றனர். மேலைத் தேசத்தவரின் பண்பாட்டுத் தாக்கத்தால் தமிழர்கள் மத்தியில் ஒப்பனையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. செயற்கையான ஒப்பனைப் பொருட்கள், ஆடை அணிகலன்கள் மாற்றங்கள் எனப் புதியவை வரவேற்கப்பட்டுள்ளன. எனினும் அண்மைக்காலங்களில் இயற்கையான ஒப்பனைப் பொருட்களில் மக்களின் கவனம் சென்று விட்டது. உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு இயற்கையில் இருந்து செய்யப்படும் ஒப்பனைப் பொருட்களை பெண்கள் விரும்பி வாங்குகின்றனர். பழந்தமிழரின் மரபான நடைமுறைகள் இன்றும் பின்பற்றப்படுவதற்கு இதுவொரு எடுத்துக்காட்டாகும். ஒப்பனை என்பது வெறும் அழகுக்கலை மட்டுமல்லாது ஓர் இனத்தின் பண்பாட்டு அம்சங்களை இனங்காட்டும் அடையாளமாகும். உடல் அழகு பற்றிய கருத்தோட்டத்தில் பண்டைத் தமிழ்ப் பெண்களிடையே வழங்கிய மரபான அம்சங்களைச் சங்க இலக்கியச் சான்றுகள் மூலம் உணர முடியும். மேலும் மனிதனின் தோற்றம் பொலிவு சார்ந்த அழகியலுக்குப் பரந்த தளத்தைச் சங்க இலக்கியங்கள் தந்துள்ளன என்பதையும் அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்படுத்திய நூல்கள்

**அகநானூறு,** (1920), கம்பர் விலாஸ் புத்தகசாலை, மைலாப்பூர்

ஆண்டிப்புலவர், **ஆசிரியநிகண்டு.**

**ஐங்குநூறு,** (1943), தி. சதாசிவஐயர் பதிப்பு, யாழ்ப்பாணம்.

**கலித்தொகை,** (1925), நச்சினார்க்கினியர் உரை, இரண்டுபாகம், அனந்தராமையர் பதிப்பு, சென்னை.

கலியாண சுந்தரனார், திரு, வி., **முருகன் அல்லது அழகு**, பாரி நிலையம், சென்னை.

**குறுந்தொகை,** (1965), புலியூர்கேசிகன் தெளிவுரை, பாரிநிலையம், சென்னை.

தானம்மாள், இல, (1981), **சங்க இலக்கியத்தில் மலர்கள்**, வானதிபதிப்பகம், சென்னை.

**தொல்காப்பியம், பொருளதிகாரம்,** (1943), பேராசிரியர் உரை, கணேசையர் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

நடராசன், தி,சு., (2005), **தமிழ்மரபில் அழகியல்**, இணையம்

**நற்றிணை,** (1919) நாராயணசாமி ஐயர் உரை, சென்னைப்பட்டினம், சைவ வித்தியா நுபாலான யந்திரசாலை சென்னை.

நாகேஸ்வரன், க., (2007), **சங்ககால வாழ்க்கை முறையில் ஆடைகளும் அணிகளும்**, **சங்க இலக்கியமும் சமூகமும்**, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

**பத்துப்பாட்டு,** (1938), நச்சினார்க்கினியர் உரை, உ.வே சாமிநாதையர் வெளியீடு, கேசரி அச்சுக்கூடம், சென்னை.

**பரிபாடல்,** (1933) பரிமேலழகர் உரை, உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.

பாலசுந்தரம், இ., (1990), **ஈழத்தில் ஒப்பனைக்கலை,** மகவம் கலை இலக்கிய நிறுவன வெளியீடு, இலங்கை.

**புறநானூறு,** (1935), உ.வே சாமிநாதையர் பதிப்பு, லா.ஐர்ல் அச்சுக்கூடம், சென்னை.

மனோன்மணி, ச., (1998), **பண்டைத்தமிழர் வாழ்வியற்கோலங்கள்,** பாரிநிலையம், சென்னை.

வேங்கடராமச் செட்டியார், செ., **முல்லையும் பூத்தியோ**, பழந்தமிழர் அழகியல், பாரிநிலையம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வரலாற்று நோக்கில் மூதின்முல்லைப் பாடல்கள்

ஹறோசனா ஜெயசீலன்
முதுதத்துவமாணி மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம்

ஒரு படைப்பின் உருவாக்கத்திலும் அதன் உருவ, உள்ளடக்க அமைவிலும் சமுதாயத்திற்கு மிகமுக்கிய பங்குண்டு. எத்தகையதொரு கலைப்படைப்பும் வெற்றுவெளியிலிருந்து தோன்றுவதில்லை. அது காலம், இடம் எனும் இரண்டினை மையச்சரடாகக் கொண்டே கருக்கொள்கிறது. குறிப்பிட்ட படைப்பு தோற்றம் பெற்ற வரலாற்றுச் சூழமைவே அப்படைப்பின் உருவ, உள்ளடக்கத்தினைப் பெரிதும் நிர்ணயிக்கின்றது. எனவேதான் மாறிவரும் வரலாற்றுச் சூழமைவுக்கு ஏற்ப இலக்கியப் போக்கும் மாற்றமடைவது வரலாற்று நியதி எனப்படுகின்றது. அதனால், இலக்கியத்தின் வழி சமூக வரலாற்றை இனங்காணவும் கட்டமைக்கவும் வாய்ப்பேற்படுகின்றது. தமிழ்ச்சூழலில் இலக்கியத்தின்வழி சமூக வரலாற்றை கண்டறியும் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, சங்ககாலச் சமுதாயம் பற்றிய ஆய்வுகள் பெரிதும் சங்க இலக்கியங்களை மையமிட்டதாகவே அமைந்துள்ளன.

சங்ககாலத் திணைப்பாகுபாடும் புறத்திணைத் துறைகளும் சங்ககாலச் சமுதாய மாற்றத்தோடு நெருங்கிய தொடர்புடையவையாக விளங்குவதைக் காணலாம். வேட்டையாடும் நிலையிலிருந்து பயிர்த்தொழில், கடல்கடந்த வாணிபம் வரையான சமூகப் படிநிலை வளர்ச்சியைக் குறிஞ்சி முதல் நெய்தல் வரையான ஐவகைத் திணைப்பாகுபாட்டில் காணலாம். புறநானூற்றுத் துறைகளில் இனக்குழும சமுதாயவாழ்வின் சிதைவிலிருந்து வேந்தர் மரபின் உச்சம் வரையான சமுதாய மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, 'திணைகளைப் போன்று திணைகளுக்குள் இடம்பெற்ற சில புறத்துறைகளும் சமுதாயப் பின்னணியை மையமிட்டுக் குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டுமே நிலவியுள்ளன. மகட்பாற்காஞ்சி, ஏர்க்கள உருவகம், மழபுலவஞ்சி, செவியறிவுறுவு, பரிசில்கடாநிலை, பரிசில்துறை போன்ற துறைகள் சங்ககால சமுதாய வரலாற்றில் குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் மாத்திரமே தோற்றம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, மருதநிலப் பொருளாதார மேம்பாடு உணரப்பட்டு மருதநிலப் பெருக்கத்துக்கான செயல்களிலும் போர்களிலும் ஈடுபட்டுத் தண்பணை (மருதநிலம்) ஆளும் மன்னர்களாய் உயர்ந்த வேந்தர்களின் வளர்ச்சிக் காலத்தில் பகைவர்களின் விளைவயல்களை அழித்தொழிப்பதான மழபுலவஞ்சித் துறைகளைக் காண்கிறோம்.' (விரிவுக்கு: மாதையன், பெ., 2004) இவ்வாறே மூதின்முல்லை துறையும் சங்கச் சமுதாயத்தின் குறிப்பிட்ட காலப் பின்னணியை விளக்குவதாகவே அமைந்துள்ளது. குறிப்பாக, மூதின்முல்லைத் துறைசார்ந்த பாடல்கள் சங்ககால இனக்குழும சமுதாயத்தின் எச்சமாக, சீறூர்மன்னர் கால வாழ்வினை விளக்குவனவாக அமைந்துள்ளமையை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவ்வகையில் அத்துறைசார்ந்த பாடல்களைச் சமூக வரலாற்று நோக்கில் அணுகி, அவற்றுள் வெளிப்படும் சமூக வரலாற்றினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சங்க இலக்கியம் பற்றிய எமது நோக்குமுறைமையைத் தொல்காப்பியம் தீர்மானித்திருந்தாலும் தொல்காப்பிய எல்லைகளைத் தாண்டிய பல அம்சங்களைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. குறிப்பாக, தொல்காப்பிய இலக்கண மரபுகளிலிருந்து வேறுபட்ட பல செய்திகளைச் சங்க அக - புறப் பாடல்களில் காணமுடிகின்றது. அவற்றுள் புறநானூற்றினுடைய திணை, துறை வகுப்பு தனித்துச் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். புறநானூற்றின் திணை, துறை வகுப்பு முறைமையானது தொல்காப்பியப் புறத்திணையியலின் திணை, துறை வகுப்பு முறையிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளதோடு தொல்காப்பிய விதிகளுக்கு உள்ளடங்காத பல் துறைப் பாடல்களையும், தொல்காப்பியம் கூறாத சில துறைகளையும் புறநானூற்றில் காணமுடிகின்றது. அவ்வாறு தொல்காப்பியம் கூறாத ஒரு துறையாகவே மூதின்முல்லை அமைந்துள்ளது. புறநானூற்றில் மூதின்முல்லைக்குரியவை எனப் பாகுபடுத்தப்பட்ட 15 பாடல்கள் உண்டு. அவற்றுள் 14 பாடல்கள் வாகைத்திணையைச் சார்ந்தனவாகவும் 01 பாடல் தும்பைத் திணை சார்ந்ததாகவும் உள்ளன. அதேவேளை, மூதின்முல்லையை ஒத்தவகையினதாக வல்லாண்முல்லை என்ற துறையும் புறநானூற்றில் உண்டு. புறப்பொருள் வெண்பாமாலை அவ்விரு துறைகளைப் பின்வருமாறு விளக்குகின்றது.

*மூதின் முல்லையானது,*
*"அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்இல்*
*மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத்தன்று" (பு.பொ.வெண்பாமாலை: 175.)*

என, கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது அம்மறக்குடியில் பிறந்த மடப்பத்தினுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்தது எனவும் "வல்லாண் முல்லையானது இல்லையும், ஊரையும், இயல்பையும் சொல்லி அழகிய ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லியது" (பு.பொ.வெ.மா: 177.) எனவும் கூறும். இதன்படி, மறவர்க்குல மகளிர் பற்றிக் கூறுவது மூதின்முல்லை எனவும், அக்குல ஆடவர் பற்றிக் கூறுவது வல்லாண் முல்லை எனவும் கொள்ளலாம். உரையாசிரியர் இளம்பூரணர், மறம்கடை கூட்டிய குடிநிலையை விளக்கும்போது 'ஆண்பால் பற்றி வந்ததனை இல்லாண்முல்லை' எனவும், 'பெண்பால் பற்றி வந்ததனை மூதின் முல்லை என்றும் கூறுவ' என்பார். நச்சினார்க்கினியர் தானைநிலையை விளக்கும்போது, இனி தாயர் கூறுவன மூதின்முல்லையாம், மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம், கண்டோர் கூறுவன வல்லாண்முல்லையாம் என்கின்றார். எனவே, மூதில் மகளிரின் வீரத்தை உரைப்பதே மூதின்முல்லை எனவும் மூதில் தலைவனின் இல்லும் பதியும் இயல்பும் எடுத்துரைப்பது வல்லாண்முல்லை எனவும் பொருள்கொள்ளப்படுகிறது.

மூதின்முல்லை என்ற தொடர் மூதில் + முல்லை ஆகிய இரு சொற்களின் சேர்க்கையால் ஆனதாகும். சங்க இலக்கியங்களிலே பல இடங்களில் மூதில் என்ற சொல்லும் முல்லை என்ற சொல்லும் பயின்று வந்துள்ளன. மூதில் என்ற சொல், மூது - இல் எனப் பொருள்பட, பழமையான இல்லங்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறநானூற்றில் 289ஆம் பாடலில் "பீடு பெறு தொல்குடிப்பாடு பல தாங்கிய மூதிலாளர் உள்ளும்" என்ற அடிகளில் வரும் தொல்குடி, மூது - இல் - ஆளர் ஆகிய தொடர்கள் இனக்குழுவுக்குள் உள்ள மூத்த இல்லத்தைச் சேர்ந்த குடி பற்றிக் குறிப்பிடுகின்றன. மூதின் மகளிராதல் தகுமே என 279ஆம் பாடலிலும், தமியன் வந்த மூதிலாளன் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

284ஆம் பாடலிலும் அவ்வில்லத்தில் வாழ்பவர்களைக் குறிக்க மூதின் மகளிர், மூதிலாளன் ஆகிய தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூதில் என்பதற்கு தமிழ் அகராதிகள் தொல்குடி, பழங்குடி, மறக்குடி எனப் பொருள் தருகின்றன. முல்லை என்ற பதமானது நிலம், ஒழுக்கம், பூ எனப் பல பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. வாகைத்திணை பற்றி விளக்க முனைந்த நச்சினார்க்கினியர் வெற்றி வகைகளாக வாகை, முல்லை ஆகிய இரு வகை வெற்றிகளைக் குறிப்பிட்டு உறழ்ச்சியாற் பெற்ற வெற்றி வாகை என்றும், இயல்பாகப் பெற்ற வெற்றி முல்லை என்றும் வேறு பிரித்துக் காட்டினார். போட்டியில் தகுதி மிகுதியால் பெற்ற வெற்றி உறழ்ச்சி வெற்றி என்பதும், போட்டி இன்றி இயல்பினாலேயே பெற்ற வெற்றி முல்லை என்பதும் அவரது கருத்து. புறப்பொருள் வெண்பாமாலையும் வாகைத்திணைக்குரிய துறைகளில் அரச முல்லை, பார்ப்பன முல்லை, கணிவன் முல்லை, ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை முதலான 12 முல்லைகளைப் பட்டியற்படுத்துகின்றது.

இதன்படி, வாகைத்திணையின் துறையாக வகுக்கப்பட்டுள்ள மூதின்முல்லை என்ற தொடரில் முல்லை என்பது இயல்பினால் வருகின்ற வெற்றியையும் மூதில் என்பது தொல்குடி அல்லது மறக்குடியை குறிக்கிறது என்றும் கொண்டால் தொல்குடியினரின் அவர்களது இயல்பினால் பெறுகின்ற வெற்றியே மூதின்முல்லை என்ற தொடரின் நேர்ப்பொருள் எனலாம். இத்தொடர் குறிக்கின்ற துறையானது தொல்குடிப் பெண்களின் வீரத்தை சிறப்பித்தல் எனக் கூறப்படுகின்றது. தொல்குடிச் சமுதாய அமைப்பில் பெண்ணே முதன்மை பெற்றிருந்ததால் மூதில் என்ற சொல் தொல்குடிப் பெண்ணைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சங்க இலக்கியங்களின் வழி கிடைக்கப்பெறும் இனக்குழும சமுதாய எச்சங்களில் பெண்ணே முதன்மை பெற்றிருந்திருக்கின்றாள். சங்கப் பாடல்களில் இடம்பெறும் கொற்றவை சிறுவ, பழையோள் குழவி போன்ற தொடர்கள் அதற்கு ஒரு சான்றாகும். அந்தவகையில், மூதின்முல்லைத் துறைப் பாடல்கள் தொல்குடிப் பெண்களின் வீரத்தைச் சிறப்பிப்பதால் சங்ககால சமூகவளர்ச்சிப் படியில் தொடக்ககாலச் சமூகத்தின், இனக்குழுச் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களைச் சுமந்துள்ளன எனலாம். அவ்வாழ்வியல் அம்சங்களை இனி விரிவாக நோக்கலாம்:

சங்க இலக்கியச் சான்றுகளின்படி மூதில் சமூகத்தின் வாழ்க்கை பற்றாக்குறை மிக்கதாக இருந்துள்ளது. அச்சமூக வாழ்க்கைச் சூழல் நெல் விளையாத புன்புலச் சீறூர்களாக விளங்கியுள்ளன. அங்கு வரகு, தினை முதலான தானியங்கள் விளைவதற்கேற்ற மண்ணியல் அமைப்பே காணப்பட்டுள்ளது. மண் செம்மண்ணாக இருந்திருக்கின்றது. காட்டில் வாழும் குறு முயல்களும் மான்களும் முள்ளம்பன்றிகளும் உடும்புகளும் நடமாடும் முற்றங்களையும் புதர்களையும் கொண்டிருந்துள்ளது. ஊருக்கு புறத்தேயும், வாழ்விடங்களுக்கு எல்லையாகவும் யானைகள் மோதியதால் சிதைவடைந்த முள்வேலிகள் காட்சியளித்துள்ளன.

மூதின்முல்லைச் சமூகத்தினரின் பிரதான நீர் ஆதாரங்களாக, பன்றிகள் தோண்டிய குழிகளில் திடீர் மழை பெய்து தேங்கிய நீரும், செங்கற்களை அறுத்துக் கட்டிய வல்லுவர்க் கூவல்களும், அரிது உண் கூவல் எனப்படும், மக்கள் அரிதாக வந்துண்ணும் கூவல்களும், மடுக்களுமே இருந்துள்ளன. அதனால் நீர்ப்பற்றாக்குறை அங்கு நிலவியிருக்கிறது எனலாம். நீரும் உவர் நீராகவே விளங்கியுள்ளது. வரகு, தினை, கொள்ளு, அவரை ஆகிய தானியங்களும், புளித்த கள், தயிர், உடும்பு முதலானவையும் உணவாகப் பயன்பட்டுள்ளன. அவர்களின் உணவு முறைகளாக, உடும்பின் தசையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்து சமைத்துத் தயிரோடு சேர்த்த கூழும், உறையிட்ட தயிரும், புளித்த கள்ளும், நெருப்பில் வாட்டிய தசைகளுடனே அரிசியும் நெய்யும் கலந்து சமைத்துத் துடுப்பால் துழாவப்பெற்ற களி போன்ற வெண்சோறும் இருந்துள்ளன.

வழிபாட்டு மரபாக, போருக்குச் சென்று இறந்த முன்னோர்களின் நினைவாக எழுப்பப்பட்ட நடுகல் வழிபாடே நிலவியுள்ளது. 'நன்னீர் ஆட்டி, நெய் நறைக் கொளீஇய மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும், நெல் உகுத்துப் பரவும்' வழிபாட்டு முறைகளைக் கொண்ட நடுகல் வழிபாடு என்ற ஒன்றே தமது வழிபாடு எனப் பல பாடல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இழவு வினைக் காரணங்களோடு தொடர்புடைய இவ்வழிபாட்டு மரபு பெருங்கற்கால நாகரிகத்துடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது.

வில் கொண்டு வேட்டையாடி உணவுப்பொருட்களைப் பெறுதல் (வில் ஏர் வாழ்க்கைச் சீறூர் - புறம் 331), கள் வடித்தல் (இல்லடு கள்ளின் சில் குடிச் சீறூர்- புறம்329), வரகு தினை முதலானவற்றைப் பயிரிடுதல் (புறம் 333,327), பருத்தி நூற்றல் (புறம்326), வேந்தனுக்குத் துணையாகப் போருக்குச் சென்று அங்கு கிடைக்கின்ற யானைகளின் முகபாடம் முதலான பொருட்களைப் பெற்றுக் கொண்டு வருதல் (புறம்326) ஆகியவை இம்மக்களின் பிரதான பொருளாதார வருவாய்களாகக் காணப்பட்டுள்ளன.

வேட்டையாடப்பட்டவை உடும்பு, முயல், மான் முதலான சிறிய பிராணிகளாகவே காணப்பட்டுள்ளன. ஆகவே, அப்பிராந்தியம் குறிஞ்சி நிலம் போல அடர்ந்த காடாகவோ முல்லை நிலம் போல வருவாய் கூடிய பகுதியாகவோ இல்லாமல் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட, குறுமுயல்கள் அதிகம் வாழ்கின்ற சிறு பற்றைகளையும் புதர்களையும் கொண்ட சூழலியல் அமைவைக் கொண்டிருந்திருக்கின்றது எனலாம். அதாவது, இச்சமூகத்தின் வாழ்வியல் சூழல், "வன்புல இருக்கையான வரண்ட காட்டுப்பகுதியாகும். மழை பெய்த காலங்களில் ஆநிரைகளை மேய்ப்பதற்கு இப்பகுதி பயன்பட்டது. பாலை, மிளை, புறவு, சுரம் என்று புலவர் மரபு இதனை அடையாளப்படுத்துகின்றது. இங்கே குடிசை முற்றங்களில் தினை மற்றும் மேற்தோல் களைந்த வெள்ளை எள் ஆகிய தானியங்களை சுளகிலும் மான்தோலிலும் பெய்து காய வைத்தனர். அதனை மேய வந்த காட்டுப் புறாக்கள் இதல், சிதல் முதலான பறவைகளைப் பிடித்து உணவாக்குவதற்கும் இது வழிமுறையாக இருந்தது. பாவைமான் என்ற பெயரில் பெண்மானை முற்றத்தில் கட்டி வைத்து அதனோடு தழுவ வரும் ஆண்மானை பிடித்து உணவாகப் பயன்படுத்தினார்கள். குடிசைகளையும் ஊர்களையும் சுற்றி முள் மற்றும் பருத்திநார்களால் வேலி கட்டினார்கள். படுப்பதற்கு பாய் தோல் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். வேட்டுவக் குடிச் சிறுவர்கள், கள்ளிமரத்தின் அடியில் மறைந்திருந்து, புதுவரகு அரிக்காலில் காட்டெலிகளை வில்லால் வேட்டையாடி விளையாடினர். ஊர்மன்றத்தில் குறு முயல்கள் ஆங்கு வைக்கப்பட்டிருந்த கருப்பு மண் கலயங்கள் உடையுமாறு பாய்ந்தோடின. நெல்லிமர வேலியும் பரற்கற்களும் உடையது ஊர்மன்றம். முள்ளம் பன்றியையும் உடும்பையும் ஒட்டு மரக்கட்டைகளால் அடைத்த படலை உடைய சீறில் முற்றத்தில் வைத்து வேடர்கள் கூறுபோட்டுப் பகிர்ந்தார்கள். அக்கூறுகளைக் கொள்ளி வைத்துச் சுட்டபோது எழுந்த நிண நாற்றம் ஊர்த் தெருவில் கமழ்ந்தது. அவ்வூர் மன்றத்தில் இரத்தி மர நிழலில் வேடர் சிறுவர்கள் அம்பு எய்து விளையாடினார்கள். புள் ஊன் தின்ற புலவு நாறும் சிறுவர் ஊகம் புல் தண்டுகளில் வேல மரமுட்களை அம்புகளாகச் செறிந்து வலார்வில் வளைத்துச் செய்து, பருத்தி வேலிகளில் காட்டெலிகளை வேட்டையாடினார்கள்" (ராஜ் கௌதமன்: 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21, 22)

பொருளாதார வசதி மிகக் குறைந்ததாகவும், தமக்குத் தேவையானதைத் தாமே நிறைவு செய்து கொள்கின்ற சமூகமாகவும், பற்றாக்குறை ஏற்படும் போது கடன்பெறுகின்றதும் மீளச் செலுத்துகின்றதுமான சமூகமாகவும் இச்சமூகம் காணப்பட்டுள்ளது. பாணன், துடியன், பறையன், கடம்பன் முதலான குடிகள், வேடுவர்கள் என்போர் இச்சமூகச் சூழலில் வாழ்ந்திருக்கின்றார்கள். ஏனைய நிலங்களிலிருந்து விலகிய தனித்தன்மையான ஒரு புவியியல், சமூகவியல் பிராந்தியமாக அது காணப்பட்டுள்ள போதிலும் பாணர் முதல் புரவலர், வீரர், வேந்தர் வரை எவ்வித வேறுபாடுமின்றி இங்கு வந்து பசியாறிச் சென்றுள்ளனர்.

மூதில் பகுதியின் தலைமைப் பொறுப்பு சீறூர்த் தலைவர்களிடமிருந்தது. சீறூர் மன்னர், குறுநிலமன்னர், அரசர், வேந்தர் எனப் பொதுவாகப் பாகுபடுத்தி நோக்கப்படுகின்ற சங்ககால அரச மரபின் படிமுறை வளர்ச்சியில் சீறூர் மன்னர்கள் என்று கூறப்படுபவர்கள் இனக்குழும சமூக அமைப்பின் தலைவர்களாக விளங்கியுள்ளனர். "இச்சீறூர்த் தலைவர்கள் உடைமையோ கைப்பொருளோ இல்லாதவர்களாகவும், மிகவும் வறுமைப்பட்டவர்களாகவும், பொருளைக் கடனாகப் பெற்று இரவலர்களைப் பேணுபவர்களாகவும், இரவலர்க்கு வரகையும் தினையையும் வழங்குபவர்களாகவும், விருந்து பேணுவதற்காக வாளையும் யாழையும் பணயமாக வைப்பவர்களாகவும், படலை உடைய குடிசைகளில் வாழ்பவராகவும், பாணரோடு கூடியிருந்தவராகவும், கூவை இலையால் வேயப்பட்ட பந்தலை உடைய சிறிய இல்லங்களில் வாழ்பவராகவும் காட்டப்பட்டுள்ளனர்." (பெ.மாதையன் 2009, ப.134.) மூதின்முல்லைப் பாடல்களில் இவர்கள் சீறூர் மன்னர் எனவும், குருசில் (தலைவன்) எனவும், உரவுவேற் காளை எனவும் குறிப்பிடப்படுகின்றனர். அத்தலைவனைவிட உயர்ந்த நிலையிலிருந்த தலைவர்களைக் குறிக்க வேந்தன், அரசு, காவல் மன்னன் ஆகிய சொற்கள் இப்பாடல்களில் இடம்பெறுகின்றன. காவல் மன்னன் என்னும் பதம் இங்கு இடம்பெறுவதால் காவல் மன்னர்களுக்கும் அடுத்தநிலையில்தான் இச்சீறூர் மன்னர்கள் இருந்திருக்க வேண்டும். அதனால் அவர்களை மன்னர்கள் என்று சொல்வதைவிட சீறூர்த் தலைவர்கள் என்று அழைப்பதே பொருத்தமுடையது. வேந்தர் மரபு எழுச்சி பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் இனக்குழுக்களின் தலைவர்களாகச் சுதந்திரமாகச் செயற்பட்ட அவர்கள், வேந்தர் மரபின் எழுச்சியுடன் வேந்தர்களைச் சார்ந்து இயங்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். அக்குழுக்களின் வாழ்க்கைச் சூழலும் பொருளாதார நிலைமையும் வேந்தர்களைச் சார்ந்து இயங்கவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

இச்சீறூர் தலைவர்களின் முக்கியமான பணியாகக் காணப்பட்டது வேந்தனுக்காகப் போர்க்களம் சென்று போரிடுவதேயாகும். வேல் இவர்களின் முக்கியமான ஆயுதமாகப் பயன்பட்டுள்ளது. இவர்களைக் குறிக்க உரவுவேற் காளை என்னும் தொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவர்கள் பகைவர்களை வீழ்த்தியதுடன், போரின் போது யானைகளை வீழ்த்துதல், ஆநிரைகளைக் காத்தல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளான். யானைகளை வீழ்த்துதல் என்பதே இவர்களது பெரிய வீரச் செயலாக விளங்கியுள்ளது. நாகம் உறையும் புற்றைப் போல ஊரைக்காத்து வருபவனாகவும், யானைகளை வீழ்த்தியதால் கிடைக்கப்பெற்ற பொன்னால் ஆன முகபடாம் முதலிய பொருட்களைப் பாணர்களுக்கு பரிசிலாக வழங்குபவனாகவும், விருந்தளிப்பவனாகவும் சீறூர் தலைவன் இருந்துள்ளான். அவன் அள்ள அள்ளக் குறையாத சோற்றுவளத்தினையுடைய நாட்டினைக் கொண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. 'நாள்தோறும் கொடை கொடுக்கும் செல்வம் இல்லாதவன். அதேசமயத்தில் இல்லை என்று மறுக்கும் சிறுமையும் இல்லாதவன். அவன் கூட்டு உழைப்பிலிருந்து விலகிப் பிறர் உழைப்பில் வாழ்ந்தவன் அல்லன்.' (சுப்பிரமணியன், கா., 2011: 34) இக் கூட்டு உழைப்பு என்பது இனக்குழும சமுதாயத்தின் முக்கிய பண்பாகும். சங்கப் பாடல்களில் பல இடங்களில் இக்கூட்டுழைப்பின் வெளிப்பாடுகளைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, 'சீறூர்மன்னர் சமுதாயத்தின், விருந்து பேணும் பண்பும் ஊறொடு தலைவி பசித்திருத்தல் என்பதும் கூட்டுண்ணுதலின் எச்சங்களே ஆகும். கூடி உண்ணுதல் போலவே உழைப்பும் அனைவருக்கும் உரியதாய் இருந்திருக்கின்றது.' (மாதையன், பெ, 2004: 42)

குடிவழி, சொத்துரிமை, குடும்பத் தலைமை, உறைவிட முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகத்தின் அமைப்பு முறையை மானிடவியலாளர்கள் ஆய்வு செய்வர். தாய்த்தலைமை முறை என்பது தாய்வழிச் சமுதாய அமைப்பின் ஒரு கூறாகும். தாய்த்தலைமைப் பண்பானது திராவிடப் பண்பாட்டில் ஓங்கியிருந்திருக்கிறது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இந்நிலையில், மூதின்முல்லைப் பெண்களினது சிறப்பு இயல்புகளாக,

- பொது அறம் - விருந்தளித்தல் (புறநானூறு 306, 326, 333,334)
- வீரம் (புறநானூறு 279, 288, 306, 312)
- தலைமைத்துவமும் அதிகாரமும் (புறநானூறு 306, 326)

ஆகியன காணப்பட்டுள்ளன.

"முற்காலச் சமூகங்களில் மகளிர் ஆடவர்களைப் போல வீரர்களாக மட்டுமன்றி, இரக்கமற்றவர்களாகவும் கொடியவர்களாகவும் கூட இருந்துள்ளனர். சில முற்பட்ட சமூகங்களில் முது மகளிர் ஆடவர்களைவிடப் பழிவாங்கும் இயல்பினராகவும் இருந்துள்ளனர். கராகிர்கிஷ்களுக்கு இடையில் மகளிர் ஆடவரினும் வீரமாகவும், அவர்களை விடத் தெளிவானவர்களாகவும் இருந்துள்ளதாக பிரில்பாட்டின் மேற்கோளினை உதாரணங் காட்டி கைலாசபதி குறிப்பிடுவார். (கைலாசபதி, 2006:374) தமிழ்ச் சமூகச் சூழலிலும் பாண்டிய அரச மரபில் பெண்களின் அதிகாரம் ஓங்கியிருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். சங்க இலக்கியங்களில் பேய் மகளிர் பற்றிய செய்திகளைக் காண்கின்றோம்.

மூதில் குடிப் பெண்களும் போரின் மீது இயல்பாகவே விருப்புடையவர்களாகவும், விருந்து பேணுவதற்கான வருவாய்க்காகக் கணவனைப் போர்க்களம் அனுப்பி வைப்பவர்களாகவும், போருக்காக ஆண்மக்களைப் பெற்றுக் கொடுப்பதைத் தனது கடமையாகக் கொள்பவளாகவும், முன்னைய போர்களில் தந்தை, கணவன் ஆகியோரை இழந்த போதிலும் சிறியவனாயிருந்த தனது ஒரேயொரு மகனையும் போருக்கு அனுப்பி வைப்பவர்களாகவும் இருந்துள்ளனர்.

" கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தந்தை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே
நெரு நல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலக்கி, ஆண்டுப்பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேல் கைக்கொடுத்து வெளிது விரித்து உடீஇப்*
*பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி*
*ஒரு மகன் அல்லது இல்லோள்,*
*செருமுக நோக்கிச் செல்க என விடுமே" (புறம் 279)*

எனப் பெண்கள் போர் மீது விருப்புக் கொள்பவர்களாக, இருந்துள்ளனர். தனது தந்தை, கணவன் ஆகியோர் இறந்த பின்பும் தனது மகனையும் போருக்கு அனுப்பி வைக்கும் அப்பெண்ணின் துணிவு மூதின்மகளிருக்கே உரியதாக அக்காலத்தில் காணப்பட்டுள்ளது. புறநானூற்றில் உள்ள உவகைக் கலுழ்ச்சி பாடல் ஒன்றிலும், தன் புதல்வன் புறமுதுகிட்டுப் போர்களத்திலிருந்து ஓடியதாகப் பலர் கூறக் கேள்விப்பட்ட தாய், அச்செய்தி உண்மையாயின் அவன் பால் உண்ட முலைகளை அறுத்திடுவேன் என வஞ்சினம் கூறி கையில் வாள் கொண்டவளாகப் போர்க்களம் நோக்கிச் செல்வதைக் காண்கின்றோம். (பு.நா 278)

புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்படுகின்ற மூதின்முல்லைப் பாடல்,

*"வந்த படை நோனாள் வாயின் முலை பறித்து*
*வெந்திற லெஃக மிறைக் கொளீஇ - முந்தை*
*முதல்வர் கல் தான் காட்டி மூதின் மடவாள்*
*புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு" (பு.பொஇ வெ.மா ,175)*

என்று குறிப்பிடும். இதன்படி, மூதிலாள் பகைவர் படையெடுத்து வருவதைக் கண்டு தாங்கமுடியாத பொறுமையில்லாதவளாக விளங்கியிருக்கின்றாள்; அந்நிலை கண்டு வெகுண்டெழுந்து சினம் கொள்கின்ற கோபக்காரியாக இருந்திருக்கின்றாள்; அப்பொழுதுதான் பால் குடித்துக் கொண்டிருக்கின்ற தன் மகனின் பாலுண்ணும் வாயைத் தன் மார்பிலிருந்து பறித்து எடுக்கின்ற கொடியவளாக விளங்கியிருக்கின்றாள்; போருக்குச் சென்று இறந்துபட்ட தன்னுடைய மூதாதையரின் நடுகற்களைக் காட்டித் தன் மகனுக்கு வீரத்தையும், துணிச்சலையும் ஊட்டுபவளாக இருந்திருக்கின்றாள். இப்பண்புகள் தொன்மையான தாய்வழிச் சமுதாயத்தின் தொடர்ச்சியைப் பறைசாற்றி நிற்கின்றன.

புறநானூற்றில் மூதின்முல்லையாக துறைவகுக்கப்பட்ட பாடல்களில் மட்டுமன்றி, உவகைக் கலுழ்ச்சி, வல்லாண் முல்லைத் துறைகளிலும் மூதில் மகளிர் பற்றிய பல செய்திகளைக் காணக்கூடியதாக உள்ளது. புறம் 314 ஆவது வல்லாண் முல்லைப் பாடலில், தலைவனது சிறப்புக் கூறப்படும்போது 'இவளுடைய கணவன்' என அடையாளப்படுத்தலின் வாயிலாகவும், புறம் 276ஆம் பாடலில் 'செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்' எனவும் 277ஆம் பாடலில் வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன் எனவும் இவளுடைய மகன் இவன் என ஆணை அடையாளப்படுத்தலின் வாயிலாகவும் பெண் பெற்றிருந்த முக்கியத்துவம் புலப்படுகின்றது. இதன்படி, மூதில் குழுமங்களில் தாய்வழிச்சமுதாயத்தின் எச்சமாகப் பெண்முதன்மை சில சந்தர்ப்பங்களில் மேலோங்கி யிருக்கிறது எனலாம்.

மூதில் பெண்கள், வீட்டு நிர்வாகத்தைக் கவனித்ததுடன் விருந்தினர்கள் அதிகம் வரவிரும்பி நடுகற்களை வழிபடுபவர்களாகவும், (புறம் 306) வரகு, தினை என யாவையும் இரவலர்க்கு உண்ணத் தீர்ந்தாலும் அதனைக்குறித்து எதுவும் கருதாது முற்றி உலர்ந்த விதைத் தானியத்தை உரலிடை குத்தி உணவு அளிப்பவர்களாகவும், (புறம் 333) வேந்தர் முதல் வீரர் வரை யாவருக்கும் ஒரே வகையான உணவு வழங்குபவர்களாகவும், (புறம் 333) விருந்தோம்பலில் கை ஓய்விலாதவர்களாயும் விளங்கியுள்ளனர். (புறம் 334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தளித்தல் என்பது இச்சமூகத்தினரின் பொது அறமாக விளங்கியுள்ளது. அச் சமூகத்திலுள்ள பெண்கள் தங்களை நாடி வந்தவர்களை அரவணைப்பவர்களாகவும், சுற்றத்தாரையும், பாணரையும், பரிசிலரையும் பேணுபவர்களாகவும், (புறம் 326) உள்ளது தவச் சிறிது ஆயினும் மிகப் பலர் வந்தாலும் கிடைத்த உணவுப் பொருள்களை பங்கிட்டு வழங்குபவர்களாகவும், (புறம் 331) யாவையும் இரவலர்க்கு உண்ணத் தீர்ந்தன என்றாலும், தன்னுடைய வறுமையைக் கூறி வறிதே செல்லுக (புறம் 328) என விடாதவர்களாகவும் இருந்துள்ளார்கள். தமக்குக் கிடைத்த உணவினை வேறுபாடின்றிப் பங்கிட்டு உண்பது என்பது ஆதிப்பொதுவுடமை சமூகத்தின் இயல்பு. அதன் தொடரே விருந்தளித்தலாக மூதின்முல்லை சமூகத்திலும் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது.

“வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் ஆகியவற்றை அடிப்படை நிலைகளாகக் கொண்ட சமூகங்களில் வளங்கள் மீள் வழங்குகை செய்யப்படுதலும், பொதுத் துய்ப்புச் செய்யப்படுவதும் இயல்பானதாகக் காணப்படும். சமத்துவத் தன்மையுடைய சமூகங்கள் ஒன்றுக்கொன்று உதவும் பொருளாதார அமைப்புக்களாகவே செயற்பட்டன. மீள் வழங்குகை குடும்ப மட்டத்தினுள்ளேயே நடந்திருத்தல் வேண்டும். விரிந்த நிலையில் விஸ்தரிக்கப்பட்ட குடும்ப முழுமைக்கும் அம் மீள் வழங்குகை செய்யப்பட்டிருக்கலாம். அத்தகைய கரு விதை நிலையில் நடைபெறும் மீள் வழங்குகையில் அக்குடும்பத்திலுள்ள மூத்த பெண்மணியே ஜீவாதாரமான பாகத்தை வகிப்பாள். மூதின் முல்லைச் சமுதாயத்தில் காணப்பட்ட பொதுத் துய்ப்பும், மீள் வழங்குகையுமே வேந்துவிடு தொழிலுக்கும், விருந்து பேணலுக்கும், பொதுநல மனப்பாங்கிற்கும் காரணமாக இருந்துள்ளன. வேந்தரின் நிலவுடைமைச் சமுதாயத்தில் கொடை என்பது பரவலாகப் பேசப்பட மூதில் சமூதாயத்தில் விருந்து பேணல் உயிர்ப்பண்பாகக் காட்டப்பட்டுள்ளது.” (மாதையன்.பெ, 2009: 136.)

மூதின்முல்லைப் பாடல்கள் பெண்ணின் வீரம், கடமை, தலைமை ஆகியவற்றைக் கூறினாலும், அங்கும் ஆண்வழிச் சமூக அமைப்பின் அதிகார வேர்கள் வெளிப்படவே செய்கின்றன. குறிப்பாக, புறநானூற்றில் காணப்படுகின்ற மூதின்முல்லைப் பாடல்கள் இனக்குழுச் சமுதாய அமைப்பின் சிதைவுக்கும் வேந்தர் சமுதாயத்தின் எழுச்சிக்கும் இடைப்பட்ட நிலைமாறுகால சமூக வாழ்வினையும் வேந்தர் சமூகத்தின் தொடக்ககாலத்து வாழ்வினையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. அதனால், நிலைமாறுகாலகட்டப் பாடல்களில் பெண்ணின் முதன்மை மேலோங்கியும் ஆணின் அதிகார நாக்குகள் ஆங்காங்கும் வெளிப்படுகின்றன. அவ்வாறு மேலோங்கியிருந்த பெண்ணின் முதன்மைக் கூறுகளைத் தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகக் கொள்ளலாம். வேந்தர் சமூகமாக மாற்றங்கண்டுவந்தபோது பெண்ணின் சுயாதீனமான இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் ஆணின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் செயற்பாடுகளும் கருத்தாக்கங்களும் நிலைபெற்றுள்ளன. மூதின்முல்லைப் பாடல் ஒன்றில்,

*“ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே....” (புறம் 312)*

எனப் பெண்ணின் கடமை ஆண்பிள்ளையைப் பெற்றுக் கொடுப்பதுடன் வரையறுக்கப்படுகின்றது. அவ்வாண்பிள்ளைக்கு கடனாவது ‘ஒளிறு வாள் அருஞ்சமமுருக்கிக் களிறு எறிந்து பெயர்த்தலே’யாகும். அதற்காகவே, அவன் தந்தை அவனைச் வீரனாக்கவும், வேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு நன்னடை நல்கவும், கொல்லன் அவனுக்கு வேல் வடித்துக் கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளான். எனவே, பெண்ணின் கடமையும் போருக்காக ஆண் மகனைப் பெற்றுக் கொடுப்பது என்றளவில் வரையறுக்கப்படுகின்றது. அதனாலேயே பெ. மாதையன், "பெற்றுப் பாதுகாத்தலைத் தவிர வேறு எதுவும் தாய்க்கு இல்லாத சூழலும் சான்றோனாக்கும் உரிமை தந்தைக்கு மட்டும் இருந்ததையும் பிற எல்லா சமுதாய செயற்பாடுகளும் ஆண்வழிப்பட்டதாக நிகழ்ந்ததையும் இந்தப் பாடல் முன்வைக்கின்றது" எனக் கூறுகின்றார். (மாதையன்.பெ, 2010: 74) முன்னைநாள் போரில் தந்தையை இழந்தவள், நேற்றைய போரில் கணவனை இழந்தவள், இன்று போர் முரசம் கேட்டு தனக்கிருந்த ஒரேயொரு மகனையும் விரும்பி அனுப்புகின்ற சூழ்நிலை போய், போர் செய்வது ஆண்மகனது கட்டாயக் கடமை என்று நிர்ப்பந்திக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. இங்கு சீறூர்மன்னர் என்றிருந்த நிலைமை போய் வேந்த மரபு என்னும் ஆதிக்கத்தையே காணக் கூடியதாக உள்ளது. மற்றுமொரு பாடலானது,

*பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்துக்*
*கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும் (புறம்: 326)*

என்று குறிப்பிடும். இப்பாடலில் வருகின்ற பருத்திப் பெண்டு என்பதற்கு உ.வே. சாமிநாதையர் பருத்தி நூற்கும் பெண் எனப் பொருள் தருகின்றார்.(உ.வே.சா, 1985:500) பெ. மாதையன் பருத்திப் பெண் என்பது கைமைப் பெண்ணைக் குறிக்கும் எனவும், அப்பெண் பருத்தி நூற்கும் தொழிலை மேற்கொண்டமையினால் தொழிலின் வழி பருத்திப் பெண்டிர் என அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடுகிறார். இதன்படி, சீறூர் சமூகத்தில் வேந்தர் சமுதாயத் தொடர்பு ஏற்பட்டமையால் நிலவுடமைப்பண்புகள் நுழையத் தலைப்பட்டதால் மூதின்முல்லைப் பெண்களும் கைம்மை நோற்றிருக்கிறார்கள் எனவும் குறிப்பிடுகிறார். (விரிவுக்கு: மாதையன். பெ, 2010: 119)

மூதின்முல்லை துறையில் உள்ள மற்றுமொரு பாடல், இவ்வாறு புதிதாக உள்நுழைந்தவற்றின் மீதான எதிர்ப்புணர்வாக உள்ளதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

*"அடலருந்தருப்பின்...*
*குரவே தளவே குருந்தே முல்லை என்று*
*இந்நான்கு அல்லது பூவும் இல்லை*
*கருங்கால் வரகே இருங்கதிர் தினையே*
*சிறுகொடிக்கொள்ளே பொறிகளர் அவரையோடு*
*அந்நான்கு அல்லது உணாவும் இல்லை*
*துடியன் பாணன், பறையன் கடம்பன் என்று*
*இந்நான்கு அல்லது குடியும் இல்லை*
*ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி*
*ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்*
*கல்லே பரவின் அல்லது*
*நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" ( புறம் 335)*

என, குரவம், தளவம், குருந்து, முல்லை என்ற நான்கைத் தவிர வேறு பூ இல்லை. வரகு, தினை, கொள், அவரையைத் தவிர வேறு உணவு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய குடியைத் தவிர இங்குவேறு குடி இல்லை. பகைவர்களை வென்று, யானைகளை வீழ்த்தி, தானும் வீரமரணம் எய்தி நடுகல்லாகியவரை பூவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லும் சொரிந்து வழிபடுவதைத் தவிர எங்களிடம் வேறு தெய்வமோ, வணக்கமோ வழிபாட்டு மரபோ இல்லை எனக் குறிப்பிடும் இப்பாடலை மூதின்முல்லை அல்லது இனக்குழும சமுதாயத்தின் தொடர்ச்சியான சீறூர்மன்னர் காலத்து சமுதாய வாழ்நிலை மாற்றமுற்று புதிதாக வந்துசேர்ந்த வாழ்க்கை நிலைமைக்கான எதிர்ப்பாகக் கருதலாம். சங்க இலக்கியங்கள் காட்டுகின்ற சமூகமானது தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளது. அம்மாற்றத்தில் ஒரு கட்டத்தில் வைதீக-ஆரிய-பார்ப்பனச் செல்வாக்கு மேலோங்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

“புறநானூற்றிலும், ஏனைய சங்க இலக்கியங்களிலும் வைதீக - ஆரிய - பார்ப்பனச் செல்வாக்கைக் காண முடிகின்றது. பதிற்றுப்பத்து, சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை புத்ர காமேஷ்டி யாகத்தையும், (பதிற்றுப் பத்து 74) பெருநற் கிள்ளி இராஜசூய யாகத்தையும், கரிகால் சோழன் யாகத்தூண் எழுப்பியதையும் புறநானூற்றின் வழி அறிகின்றோம். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் சிறப்புப் பெயரைப் பெற்ற அரசன் ஒருவன் புலவனாகவும் இருந்திருக்கின்றான். நல்லியக்கோடனது அரண்மனைக் கதவு பார்ப்பனர்களுக்கும் திறந்திருந்திருக்கிறது.(சிறு.ஆற்) அதியமான் வைதீகச் சார்புடைய மன்னனாக மாறியதுடன் அவனது மரணச் சடங்கு வைதீக செல்வாக்கிற்குட்பட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. (புறம் 93), சிவன், விஷ்ணு, பிரம்மன், கிருஸ்ணன், பலராமன் முதலான வைதீகத் தெய்வங்கள் வழிபடப்பட்டுள்ளன. மறுபிறப்பு, மறுமை முதலிய நம்பிக்கைகளும் நட்சத்திரம் பார்த்தல், நாள்பார்த்தல், உள்ளிட்ட வழிபாட்டுச்சடங்குகள், திருமணச்சடங்குகள் மரணச் சடங்குகள் முதலான சடங்கு முறைகளும் நிலவியிருக்கின்றன. அந்தணர்களைப் போற்றும் பார்ப்பன வாகை எனத் தனியானதொரு துறையும் வைக்கப்பட்டு உள்ளது.” (ராஜ்கௌதமன், 1994: 93, 94)

எனவே, யாகம், வேள்வி என மாறிய தெய்வ வழிபாட்டு நிலைமைகளின்கீழ், அம்மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையற்ற மூதிலாளராகிய தொல்குடிப்பிறப்பாளர் சமூகத்தின் எதிர்ப்புக் குரலாக, புதிய சமுதாய நடைமுறைகள் மீதான நிராகரிப்பாக மேற்கூறிய பாடலைக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

புறநானூற்றில் உள்ள மூதின்முல்லைப் பாடல்களானவை மூதில்சமூகத்துப் பெண்களினது நிலை, சீறூர் தலைவர்களின் இயல்புகள், அச்சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள் ஆகிய மூன்று பொருண்மைகளைப் பிரதானமாகக் கொண்டிருப்பதைக் காணலாம். மூதில் மகளிரின் நிலை எனும் போது அவர்கள் பின்பற்றிய பொது அறம் - விருந்தளித்தல் (புறநானூறு 306, 326, 333, 334), அவர்களின் துணிவு (புறநானூறு 279, 288, 306, 312), தலைமைத்துவமும் அதிகாரமும் (புறநானூறு 306, 326) ஆகியவற்றைப் பதிவுசெய்துள்ளன. மூதில் பெண்கள் போர் மீது விருப்புடையவர்களாகவும், பகையரசர் படையெடுத்து வருவதைக்கண்டு பொறுக்கமுடியாது சினம் கொள்பவர்களாகவும் இருந்துள்ளனர். விருந்தளித்தலை உயிர்ப்பண்பாகப் பேணுபவர்களாகவும், விருந்தினர்கள் அதிகம் வரவிரும்பி நடுகல்லை வழிபடுபவர்களாகவும் அதற்கான ஆதாயத்தைத் தேடிவருவதற்காகத் தமது கணவனை வேந்தனுக்காகப் போர்க்களம் அனுப்பிவைப்பவர் களாகவும் விளங்கியுள்ளனர். மூதின்மகளிரிடம் தலைமைத்துவமும் அதிகாரமும் இருந்தமைக்கான எச்சங்களைச் சில பாடல்களில் காணமுடிகின்றது. சீறூர் மன்னர்களது இயல்புகளில் அவர்களது கொடைத்திறம் (புறநானூறு 327, 328, 329, 330, 331, 308),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் (புறநானூறு 332, 288, 327) போன்றன பரவலாகப் பேசப்பட்டுள்ளன. அவர்களது பிரதான கொடையாக விருந்தளித்தலே விளங்கியுள்ளது. வேந்தர்கள் வழங்கிய பொன், மணி, முத்து, யானை போன்றவற்றிலிருந்து சீறூர் தலைவர்களின் கொடை வேறுபட்டுள்ளதை அவதானிக்கலாம். அவ்வேறுபாடு இருவேறு சமூகத்தின் வேறுபாடெனலாம். வேந்தர்களைப் போல நாடு பிடிப்பதிலும், பிடித்த நாட்டைக் கொள்ளை அடிப்பதிலும், பொருள் சேர்ப்பதிலும், தனது மேலாண்மையைத் தக்க வைப்பதிலும் ஈடுபட்டவர்கள் அல்லர் சீறூர் தலைவர்கள். அவர்களது வாழ்க்கை முறை பெரிதும் பொதுத் துய்ப்பினைச் சார்ந்ததாகவே அமைந்திருந்திருக்கின்றது. சீறூர் தலைவர்களினதும் தலைவிகளினதும் வாழ்க்கைமுறை பெரிதும் சமுதாய நலம் பேணலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

வாழ்வியல் அம்சங்களில் வழிபாட்டு மரபு, உணவு, உடை உறையுள், நீர், இசை, தொழில் போன்றவற்றைக் கண்டுகொள்ள முடிகின்றது. வைதீக-பார்ப்பனியம் கலப்பில்லாத பெருங்கற்கால நாகரிகத் தொடர்புடைய நடுகல் வழிபாடே அவர்களது வழிபாடாக இருந்துள்ளது. அவர்கள் வாழ்ந்த பகுதிகள் நெல் விளையாதவையாகவும் வரகு, தினை முதலான தானியங்கள் விளைவதற்கேற்றவையாகவும் இருந்திருக்கின்றன. காட்டில் வாழும் சிறு மிருகங்கள் நடமாடும் இடங்களாகவும் காட்சியளித்துள்ளன. நீர்ப்பற்றாக்குறை நிலவியிருப்பதுடன் நீரும் மண்ணுக்கேற்ற உவர் நீராகவே விளங்கியுள்ளது. வரகு, தினை, கொள்ளு, அவரை, ஆகிய தானியங்களும், கள், தயிர், சிறுமிருக மாமிசம் முதலானவையும் உணவாகப் பயன்பட்டுள்ளன. வேட்டையாடுதல், கள் வடித்தல், வரகு தினை முதலானவற்றைப் பயிரிடுதல், பருத்திநூற்றல் வேந்தனுக்குத் துணையாகப் போருக்கு சென்று அங்கு கிடைக்கின்ற யானைகளின் முகபாடம் முதலான பொருட்களைப் பெற்றுக் கொண்டு வருதல் என்பன அம்மக்களின் பிரதான வருவாய் மூலங்களாக இருந்துள்ளன.

புறநானூற்று மூதின்முல்லைப் பாடல்களை மொத்தமாக நோக்கும்போது அவை, சங்ககாலச் சமூக வரலாற்றின் ஒரு கட்ட வாழ்வின் சில போக்குகளை வெளிப்படுத்தி நிற்பதைக் காணமுடிகின்றது. குறிப்பாக, சங்ககாலம் எனப்படுகின்ற ஆறு நூற்றாண்டு காலமாக சங்கச் சமூகம் தொடர்ச்சியாக மாற்றத்துக்கு உள்ளாகிவந்துள்ளது. அம்மாற்றமானது இனக்குழு சமுதாயத்தின் சிதைவிலிருந்து வேந்தர் மரபின் எழுச்சி வரை இடம்பெற்றுள்ளது எனலாம். அச்சமூக மாற்றத்துக்கு ஏற்ப இலக்கியப் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டே வந்துள்ளன. அந்தவகையில் புறநானூற்றின் மூதின்முல்லைப் பாடல்கள் காட்டுகின்ற சமுதாயம், இனக்குழுச் சமுதாய சிதைவுக்கும் வேந்தர் மரபு எழுச்சிக்கும் இடைப்பட்ட நிலைமாறு காலத்தையும் வேந்தர் மரபின் எழுச்சிக் காலத்தின் தொடக்கத்தையும் கொண்டுள்ளது எனலாம். அதனாலேயே தாய்வழிச் சமுதாயத்தினதும் இனக்குழுச் சமுதாயத்தினதும் பல எச்சங்களை அப்பாடல்களில் காணமுடிவதுடன் வேந்தர் மரபுடன் உள்நுழைந்த புதிய சமுதாய வாழ்நிலைமைகளையும் அவ்வாழ்நிலைமைகள் சிலவற்றுக்கான எதிர்ப்பையும் காணமுடிகின்றது.

### உசாத்துணை நூல்கள்

சாமிநாதையர், உ.வே.சா, (ப.ஆ), (1985), **புறநானூறு,** தஞ்சாவூர்; தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சிவத்தம்பி, கா, (2009), **சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்**, சென்னை; உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.

............... (2003), **பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி,** சென்னை; மக்கள் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…………… (2007), **தொல்காப்பியமும் கவிதையும்,** கொழும்பு; குமரன் புத்தக இல்லம்.

சுப்பிரமணியன். கா, (2011), **சங்ககாலச் சமுதாயம்,** சென்னை; நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

செல்வராசு.நா, (2005), **சங்க இலக்கிய மறுவாசிப்பு,** சென்னை; காவ்யா.

திருஞானசம்பந்தம், ச. (ப.ஆ) (2012), **புறப்பொருள் வெண்பாமாலை,** திருவையாறு; கதிர் பதிப்பகம்.

பத்மநாதன், சி, (ப.ஆ) (2007) **சங்க இலக்கியமும் சமூகமும்,** இலங்கை; இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

பாலசுப்பிரமணியன், கு.வெ, (மொ.பெ) (2006), **தமிழ் வீரநிலைக் கவிதை,** சென்னை; குமரன் புத்தக இல்லம்.

மாதையன், பெ, (2004) **சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்,** சென்னை; பாவை பப்ளிகேசன்.

……………………, (2009), **தமிழ்ச் செவ்வியல் படைப்புக்கள்,** சென்னை; நியூ செஞ்சறி புக் கவுஸ்.

……………… (2010), **சங்க இலக்கியத்தில் குடும்பம்,** சென்னை; நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

ராஜ்கௌதமன், (1994), **தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு,** புதுச்சேரி; கௌரிப்பதிப்பகம்.

……………, (1997), **அறம் / அதிகாரம்,** கோவை; விடியல் பதிப்பகம்.

……………, (2006), **பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்,** சென்னை; தமிழினி வெளியீடு.

…………… (2009), **ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரீகமும்,** சென்னை் தமிழினி வெளியீடு.

**தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணம்,** (6ஆம் பதிப்பு), (2006) சாரதா வெளியீடு.

**தொல்காப்பியம் பொருளதிகாரம்** - நச்சினாக்கினியம், (1986) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககால இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களாக பாணர்கள்

திருமதி. வானதி பகீரதன்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இனக்குழுச் சமுதாயம் என்பது கூட்டு வாழ்க்கை வாழ்கின்றதும் உணவு, உறையுள் முதலான பிற தேவைகளைக் கூட்டாகப் பகிர்ந்து தமது வாழ்வியலையே தொழிலாகக் கொண்டு வாழ்கின்றதுமான சமுதாயத்தைக் குறிப்பதாகும்.

சங்ககாலம் இனக்குழு வாழ்க்கை முறை ஒழிந்து நிலவுடமையாக மாறும் காலகட்டத்தைக் குறிப்பதாக கா.சிவத்தம்பி போன்றோர் கருதுகின்றனர். இவ்வாறு மாறும் காலகட்டத்தில் பழைய சமுதாயத்தின் எச்சங்கள் இருப்பதில் வியப்பில்லை. "இனக்குழு வாழ்வு முறை அழிந்து நிலவுடமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் நிலவுவது இயல்பே. இனக்குழு அழிவு முழுமையாக இராமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் சிந்தனைகள், நம்பிக்கைகள், பண்பாட்டு எச்சங்கள் அதற்கடுத்து உருவாகும் சமுதாயத்தில் எஞ்சிநிற்கும்." என நா. வானமாமலை குறிப்பிடுகின்றார்.

சங்க காலத்தில் வாழ்ந்த இனக்குழு சமுதாயத்தில் பாணர்கள் பிரதானமானவர்கள். இவர்கள் கூட்டு வாழ்க்கை வாழ்ந்ததுடன் யாழிசைத்துப் பண்பாடிப் பரிசு பெறுவதையும் வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இப்பாணர் சுற்றம் வேந்தர்கள், வள்ளல்கள், குறுநில மன்னர்களிடம் பரிசு பெற்று தம் பசிப்பிணி போக்கும் நோக்குடன் கலை வாழ்வை மேற்கொண்டது.

"இனக்குழு மக்களிடையே தொழிற் பிரிவாகத் தோன்றிய இக்கலைஞர்கள் நிலப்பிரபுத்துவத் தோற்ற காலத்தில் இனக்குழு மக்களின் தலைவர்களிடமும் புதிதாகத் தோன்றி வளர்ச்சி பெற்ற மன்னர்களிடமும் பிழைப்பு நாடிச் சென்றனர்" என்ற கா. சுப்பிரமணியனின் கூற்று பாணர்களின் வாழ்வியலைப் பறைசாற்றுகின்றது.

அந்தவகையில் இவ்வாய்வு பாணர்கள் எவ்வகையில் இனக்குழு சமுதாயத்திற்கு உரியவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். என்பதை பாணர்களது வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள், கூட்டுழைப்பு, உணவுப் பழக்க வழக்கங்கள், உடைமை எதுவுமற்ற வறுமைநிலை, அவர்களது வாழிடம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியங்களைச் சான்றுகாட்டி பாணர்களிடம் இனக்குழு சமுதாயத்தின் பண்புகள் பலவும் காணப்படுகின்றன என்பதை சமூகவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதாக அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனக்குழு சமூகமும் பாணரும்

சங்ககால சமூகம் சொத்துடமை எதுவுமற்ற, அரசு எனும் அமைப்பு உருவாகாத, சிறு குழுத்தலைவர்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தையும் நிலவுடமையாளர்களான வேந்தர்கள், மன்னர்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது எனக் கூறலாம். சொத்துடைமையற்ற சமுதாயத்தில் கூட்டு வாழ்க்கை இடம் பெற்றதுடன் தமது வாழ்வாதாரத்திற்குத் தேவையானவற்றை கூட்டாகவே பெற்றுக் கொண்டனர். உழைப்பு,உணவுதேடல், பகிர்ந்துண்ணல் என்பன கூட்டாகவே நிகழ்ந்தது. இச்சமுதாயத்தில் சொத்துடமை காணப்படவில்லை. தனக்கென எதையும் சேர்த்து வைக்காத, சமூக நலனில் அக்கறையுடையோராக இச்சமூகக் குழுவினர் காணப்பட்டனர். மனிதனின் நாகரிக வரலாற்றில் இனக்குழு சமுதாய வாழ்க்கையின் பின்னர் அதன் வளர்ச்சியினால் உடைமைச் சமுதாயம் உருவாகின்றது எனலாம்.

சங்ககாலம் இனக்குழு வாழ்க்கை முறை அழிந்து நிலவுடமையாக மாறும் காலகட்டத்தைக் குறிக்கிறது. இவ்வாறு மாறுகின்ற சூழலில் அதற்கு முன்பிருந்த சமுதாயத்தின் எச்சங்களைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை. சங்ககால சமுதாயத்தில் நால்வகைக் குடிகள் காணப்பட்டதை பின்வரும் பாடல் மூலம் உணரலாம்.

*"துடியன் பாணன் பறையன் கடம்பனென்*
*றிந்நான்கல்லது குடியுமில்லை ...." (புறம் 335)*

இந்நால்வகைக் குடிகளில் பாணர்குடி தனித்துவம் வாய்ந்ததாக விளங்கியது. பாணர்களில் சிறுபாணர், பெரும்பாணர் என இரு பிரிவினர் காணப்பட்டனர். இவர்கள் கலைகளை வளர்த்ததோடு அக்கலைகளைத் தம் வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டனர். பாணர்களின் வாழ்க்கைமுறைக்கும் இனக்குழு சமூக மக்களின் வாழ்க்கை முறைக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். இதனை, "பழைய இனக்குழுவோடு நெருங்கிய உறவுடையதாக இருந்திருக்கக்கூடிய பாணர் மரபு புதிய முடிமன்னராட்சிச் சமூக அமைப்பில் எச்சமாக மாறிக் கொண்டிருந்தது." (ராஜ்கௌதமன், அறம் அதிகாரம், பக் 38) என்ற ராஜ்கௌதமனின் கூற்று மூலம் உணரலாம்.

இனக்குழு மக்களிடம் காணப்பட்ட கூட்டு வாழ்க்கை பகிர்ந்துண்ணல், சொத்துடைமைகள் எதுவுமற்ற வறியநிலை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றைப் பாணர்களது வாழ்க்கை முறையிலும் காணக்கூடியதாக உள்ளது.

## பாணர்களும் கூட்டு வாழ்க்கையும்

சங்க இலக்கியங்களில் பாணர்கள் பற்றிய குறிப்புக்களில் பெரும்பாலானவை பாணரைக் கூட்டமாகவே சுட்டுகின்றன. பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்ற போது பெரும்பாலும் கூட்டமாகவே சென்றுள்ளனர். பாணர் சுற்றம், பாணரது கடும்பு, இரும்பேர் ஒக்கல், காரென்ஒக்கல், இருங்கிளை, போன்ற தொடர்கள் அவர்கள் கூட்டமாகவே சென்றனர் என்பதைக் காட்டுகின்றன. இப்பாணருடன் பெண்கலைஞர்களான பாடினியும் விறலியும் இளையோரும் சேர்ந்தே சென்றுள்ளனர். இவர்கள் பலவகையான இசைக் கருவிகளையும் கொண்டு சென்றுள்ளனர்.

பாணர் கூட்டம் கூட்டமாகவே சென்றுள்ளனர். பாவைக் கூத்து, கழைக்கூத்து, கரகாட்டம் வளைய ஆட்டம், நடனம் முதலான கலையை வெளிப்படுத்தும் கலைஞர்கள் எவ்வாறு கூட்டமாகச் செல்கின்றாரோ அதைப் போன்றே பாணரும் கூட்டமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுள்ளனர். இப்பாணர்களின் கூட்டம் மிகப் பெரியது என்பதால் அதனை இருங்கிளை என மதுரைக்காஞ்சி(750), இரும்பேர்ஒக்கல் என புறநானூறு(60), காரென்ஒக்கல் (புறநானூறு 141), பாண்கடும்பு புறநானூறு(170), கல்லென் சுற்றம் என பெரும்பாணாற்றுப் படை(21)ல் குறிப்பிடப்பட்டுள்ளது ஒக்கல், கடும்பு, கிளை என்பன சுற்றத்தைக் குறிக்கும். சங்க இலக்கியங்களில் பாணரது சுற்றம் எறும்புக் கூட்டத்திற்கும் பறவைகள் கூட்டத்திற்கும் உவமிக்கப்பட்டுள்ளது.

எறும்புக் கூட்டம் மழையிலிருந்து தம் முட்டைகளைப் பாதுகாப்பதற்காக மேட்டுப்பகுதியை நோக்கி கூட்டமாகச் செல்வதைப்போல பாணர் கூட்டம் புரவலரை நாடிச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"பாணர் காண்க இவன் கடும்பினது இடும்பை*
*யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந்தன்ன*
*ஊணொலி அரவந்தானும் கேட்கும் பொய்யாஎழிலி பெய்விடம் நோக்கி*
*முட்டை கொண்டு வற்புலம் சேரும்*
*சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்...." (புறநானூறு 173)*

பழுமரத்தை நாடிப் பறவைகள் செல்வதைப் போல தம்மை ஆதரிக்கும் வள்ளல்களை நாடிப் பாணர்கள் கூட்டமாகச் சென்றமை பற்றி பெரும்பாணாற்றுப் படையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

*"பழுமரம் தேடும் பறவை போலக்*
*கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்..."*
*(பெரும்பாணாற்றுப்படை 21)*

சீறூர் மன்னன் ஒருவனின் கொடைச்சிறப்பையும் அவனது எளிமையான வாழ்க்கையையும் புகழ்ந்து பாடிய ஆலத்தூர்க்கிழார் என்ற புலவர் அச் சீறூர் மன்னன் அழகியகுடிகள் வாழும் சிற்றூரில் வளமான கால்கள் நிறுத்தப்பட்ட பந்தரின்கீழ் இடையன் கொழுத்திய சிறு சுடரைக் கொண்ட விளக்கொளியில் பாணர்கள் சூழ்ந்திருக்க அவரிடையே வீற்றிருந்ததாகப் பாடுகின்றார்.

*"...வெண்காழ் தாய வண்காற் பந்தர்*
*இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்*
*பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை..." (புறநானூறு 324)*

*"இரும்பேர்ஒக்கலொடு ஒருங்குஇனிது அருந்தித்*
*தங்கினை சென்மோ பாண..." (புறநானூறு 320)*

*இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே (புறநானூறு 264)*

*பண்ணமை நல்யாழ் பாண்கடும்பு அருந்தி.. (புறநானூறு 170)*

*பசித்த பாணர் உண்டு கடை தப்பலின் ஒக்கல் ஒற்கம்*
*சொலியத் தன்னூா (புறநானூறு 327)*

*"இரும்பேர் ஒக்கல் அருந்தி எஞ்சிய*
*அறிந்து உவப்ப ஈந்தான்.." (புறநானூறு 396)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணர்கள் சுற்றமாக மன்னரைச் சார்ந்திருந்தமை பற்றி புறநானூறு 29ம் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கத் தாமரைப் பூவினை தலையில் சூடிய பாணர்கள் மன்னனின் மகிழ்நாள் இருக்கையைச் சூழ்திருப்பதாக எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை

*"அழல் புரிந்த அடர்தாமரை*
*ஐதுஅடர்ந்த நூற்பெய்து*
*புனைவினைப் பொலிந்த பொலன்நறுந் தெரியல்*
*பாறுமயிர் இருந்தலை பொலியச் சூடிப்*
*பாண் முற்றுக நின் மகிழ்நாள் இருக்கை.."* (புறநானூறு 29)

என்ற பாடல் அடிகள் தெளிவு படுத்துகின்றன. எனவே பாணர்கள் தம் வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்வதற்காக புரவலர்களை நாடி கூட்டமாகச் சென்றனர் எனக் கூறலாம்.

## பாணர்களும் வாய்மொழி மரபும்

இனக்குழுசமுதாயத்தில் செய்யுள் மரபுகள் வாய்மொழிப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன. க.கைலாசபதி அவர்கள் 'தமிழ் வீரநிலைக் கவிதைகள்' என்ற நூலில் சங்கப்பாடல்களில் வாய்மொழிப்பண்புகள் பலவும் காணப்படுவதை சான்று காட்டி நிறுவியுள்ளார். சங்கப்பாடல்களில் பலவர் பாடிய பாடல்களும் பாணர் பாடிய பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பாணர்கள் புலவர்களை விட சமூக அந்தஸ்து நிலையில் குறைவாகவே மதிக்கப்பட்டுள்ளனர். பாணர்கள் "கல்லா வாய்ப்பாணர்" எனக் குறிப்பிடப்படுவதன் மூலம் அவர்கள் வாய்மொழி மரபினர் என்பதை உணரலாம். பாணர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடும் போது ஒரேவிதமான சொற்கள், தொடர்கள், அடைகள் போன்றவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியிருப்பது அவர்கள் வாய் மொழி மரபிற்குரியவர்கள் என்பதையே காட்டுகின்றது.

## பாணர்களின் வறுமை

சங்க இலக்கியங்களில் பாணர்கள் சுற்றம் சொத்துடமை எதுவுமற்ற வறிய சுற்றமாகக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் தம்மை ஆதரிக்கும் வள்ளல்களை நாடி ஊரூராக அலைந்து திரிந்ததுடன் தமது பசியைப் போக்கிய வள்ளல்களைப் போற்றிப் புகழ்ந்தனர். பாணர்களின் பசி, அவர்கள் அணிந்திருந்த கந்தல் ஆடை, பசியால் வாடிய தோற்றம், ஒட்டி உலர்ந்த உடல், இருப்பிடமின்றி அலைந்து திரிந்தமை, பொதுஇடங்களிற் படுத்துறங்கியமை, அவர்கள் குடியிருக்கும் வீட்டின் தன்மை, பரிசில் வேண்டியமை என்பன இவர்கள் சொத்துக்கள் எதுவுமற்ற வறியவர்கள் என்பதை உணர்த்துகின்றன. வேட்டையிற் கிடைக்கும் பொருட்களை அன்றையநாளே பகிர்ந்துண்டு பொழுதைக் கழிக்கும் இனக்குழு மக்களைப் போன்றே இவர்களது வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது.

## பாணர்களும் பசியும்

சங்க இலக்கியங்களில் பாணர்களைப் பற்றிக் குறிப்பிடப்படும் இடங்களில் பெரும்பாலும் அவர்களைப் பசியுடன் தொடர்புபடுத்தியிருப்பதைக் காணலாம். பசித்த பாணர் (புற நானூறு 327), கடும்பின் கடும்பசி (புறநானூறு 68), காரென் ஒக்கல் (புறம் 141), கல்லென் சுற்றம் (பெரும்பாணாற்றுப்படை 21), கடும்பினது இடும்பை (புறம் 173),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைதல் சுற்றம் (புறம் 212) போன்ற தொடர்கள் பாணர்கள் பசியினால் பட்ட அவலங்களைப் பறைசாற்றுகின்றன.

காரென் ஒக்கல் என்பதற்கு உரையாசிரியர்கள் பலரும் பல்வேறுபட்ட விளக்கமளிக் கின்றனர். என்ன வாய்க்குமோ, எங்கே செல்வோமோ என மயங்குகின்ற கூட்டம் எனவும் பசியாலும் வறுமையாலும் வாடியதால் முகமும் உடலும் கறுத்துத் தோன்றும் கூட்டம் எனவும் உரை கூறப்பட்டுள்ளது.

கல்லென் சுற்றம் என்பது பசியினால் அழுகையொலியுடைய சுற்றம் எனவும் பசியினால் வாடிய சுற்றத்திற்கு உணவு கிடைத்த போது வேகமாக உண்பதால் ஒலியை ஏற்படுத்தும் சுற்றம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பைதல்சுற்றம் என்பதும் பசியால் வாடியிருக்கும் சுற்றம் என்ற பொருளையே தருகின்றது. கடும்பினது இடும்பை என்பதும் பாணர் சுற்றத்தின் பசித்துன்பத்தையே குறிக்கின்றது. தம்மை ஆதரிக்கும் புரவலர்களை நாடிச் சென்ற பாணர் கூட்டத்தின் முதல் இலக்கு தம் வயிற்றுப்பசியைப் போக்குதலே. பொருட்களைப் பெறுவது இரண்டாம் பட்சமானதாகவே அமைந்துள்ளது. இதனைப் பின்வரும் பாடல் அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"*ஊண்சோற்றமலை பாண்கடும்பு அருந்தும்....*" (*புறம்33*)

"*அமலைக் கொழுஞ்சோறு ஆர்த்த பாணர்க்கு....*" (*புறம் 34*)

"*பசித்த பாணர் உண்டு கடை தப்பலின்....*" (*புறம் 327*)

"*இரும்பேர் ஒக்கல் அருந்தி எஞ்சிய....*" (*புறம் 396*)

எனவே பாணர்கள் தம்மை ஆதரிக்கும் வள்ளல்களை நாடி ஊரூராக அலைந்து திரிந்தனர் என்பதையும் அவர்கள் பசிப்பிணி மருத்துவர்களை நாடித் தம்பசிப்பிணி போக்கினர் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## பாணர்கள் அணிந்திருந்த ஆடையின் தன்மை

பாணர்களின் சுற்றம் வறிய சுற்றம் என்பதை அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் மூலம் அறிய முடிகின்றது. ஆலத்தூர்க்கிழார் என்ற புலவர் பாணன் ஒருவன் உடுத்தியிருந்த ஆடையினைப் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"*கையது கடன்நிறை யாழே மெய்யது*
*புரவலர் இன்மையின் பசியே அரையது*
*வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்*
*ஓம்பியுடுத்த உயவற் பாண...*" (*புறம்69*)

பாணன் அணிந்திருந்த உடை கிழிந்த கந்தல் உடையென்பதால் அது ஏற்கனவே நெய்யப்பட்ட இழையின்றி தைத்த பிறநூல் இழையூடே காணப்பட்டது எனவும் அக்கிழிந்த உடை வியர்வையால் நனைந்திருந்தது எனவும் மறைக்க வேண்டிய பகுதியை மறைத்து உடுத்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறத்தினைப் பாடும் ஔவையார் அவன் பாணனை எவ்வாறு உபசரித்தான் எனக் கூறும்போது பாணன் அணிந்திருந்த உடையை வர்ணிப்பதனூடாக பாணனின் வறுமையைக் குறிப்பிட முனைகின்றார். அதாவது கேணியில் படர்ந்திருந்த பெரிய இலையையுடைய பாசியின் வேர் போலக் கிழிந்த உடை எனக் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஊருண் கேணிப் பகட்டு இலைப்பாசி
வேர்புரை சிதார் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்கம் உடிஇ..." (புறம் 392)*

புறநானூறு 138 வது பாடலிலும் பாணனின் கந்தல் ஆடைபற்றிப் பேசப்படுகிறது.

*"ஊள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறயாழ்
சிதாஅர் உடுக்கை மதாஅரிப் பாண"*

இவ்வாறாக பாணனின் கந்தல் உடைமூலம் அவனது வறுமைநிலை எடுத்துக்காட்டப்படுகிறது. பெரும்பாணாற்றுப்படையிலும் பாணன் அணிந்திருந்த ஆடை பாசிபோன்ற கிழிந்த ஆடை எனக் குறிப்பிடப்படுகிறது.

*"பாசிஅன்ன சிதர்வை நீக்கி
ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ..."*

என்ற அடிகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

## பாணர்களின் உடற் தோற்றம்

ஒருவனது உடற் தோற்றத்தைக் கொண்டும் அவனது வறுமை நிலையை எடைபோட முடியும். இதற்கமையவே சங்கப் புலவர்களும் பாணர்களின் உடற் தோற்றத்தை வர்ணிப்பதனூடாக அவர்களது வறுமை நிலையை எடுத்துக்காட்ட முற்படுகின்றனர். அதாவது பாணர்கள் உணவின்றி வாடியதால் எலும்புகள் வெளிப்பட்டுத் தோன்றும் உடலமைப்பை உடையவர்களாகக் கூறப்படுவதோடு உணவின்றிச் சோர்வுற்ற இப்பாணர்களின் உடம்பு பூட்கையில்லாதவர்களின் யாக்கை எனவும் வர்ணிக்கப்படுகிறது.

பாணன் ஒருவன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமையும் பாடல் ஒன்றில் பொருள் பெற்ற பாணன் பொருள் பெறாத பாணனை ஆற்றுப்படுத்தும்போது "உடும்பைத் தோல் உரித்தாற் போன்று எலும்புகள் வெளிப்பட்டுத் தெரியும் விலாப்பக்கத்தை உடைய பாணனே" என விளிக்கின்றான். உண்ண உணவின்றி உடல் மெலிந்து ஒட்டியுலர்ந்து எலும்புகள் வெளிப்பட்டுத் தெரிதல் மூலம் பாணனின் வறுமைநிலை எடுத்துக்காட்டப் படுகின்றது. இதனை,

*"உடும்பு உரித்து அன்ன என்பு எழு மருங்கின்
கடும்பின் கடும்பசி களையுநாக் காணாது
சில்செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து
ஈங்கு எவன் செய்தியோ பாண..." (புறம் 68)*

என்ற அடிகள் மூலம் உணரலாம். இப்பாணனை விளிக்கும் போது அவன் பசித்த சுற்றத்துடன் இருந்தான் என்பதையும் உணரலாம். இச்சுற்றத்தின் கடும் பசியினைப் போக்குபவர்களைக் காணாது இப்பாண்சாதியினர் உணவுக்குப் பெற்ற பரிசு என யாழை நொந்து கொண்டு இருப்பதாக குறிப்பிடுவதன் மூலமும் பாணர்களின் வறுமை நிலை எடுத்துக்காட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாணர்களின் வாழிடம்:**

சங்கப் புலவர்கள் பாணர்களைப் பற்றிக் குறிப்பிடும் குறிப்புக்களிலிருந்து அவர்களது வாழிடம் எத்தகையது என்பதை உணர முடிகின்றது. பெரும்பாலும் அவர்களுக்கு நிரந்தரமான வாழிடம் காணப்படவில்லை. தாம் புரவலர்களை நாடிச் செல்லும் போது அங்கு கிடைக்கும் வாய்ப்புக்களுக்கேற்ப ஊர்ப் பொதுமன்றிலோ மரத்தடியிலோ சிறு குடிசைகளிலோ அன்றைய இராப் பொழுதைக் கழித்தனர் அல்லது ஓய்வெடுத்தனர் எனக் கூறலாம். இது இனக்குழு மக்களின் வாழ்க்கை முறையின் பிரதிபலிப்பே எனக் கூறலாம்.

இதனை ஏணிச்சேரி முடமோசியாரின் பாடல்ஒன்று தெளிவாக விபரிக்கின்றது. பொன்தாமரைமலரைச் சூடியிருக்கும் பாணன் குளிர்ந்த பனி துளிக்கும் நன்றாக விடியாத காலைப் பொழுதில் மன்றத்தில் இருக்கும் பலாமரத்தின் அடியில் கிணை என்னும் வாத்தியத்தை இசைத்துப் பாடியதாக இப்பாடல் குறிப்பிடுகின்றது.

*"பொலம் இலங்கு சென்னிய பாறுமயிர் அவியத்*
*தண்பனி உறைக்கும் புலரா ஞாங்கர்*
*மன்றப் பலவின் மால்வரைப் பொருந்தி என்*
*தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி*
*இருங்காலை ஓர்ப்ப இசையி..." (புறம் 374)*

பாணர்களின் குடியிருப்பு பாண்சேரி எனப்பட்டது. இதனை மதுரைக் காஞ்சியும் புறநானூறும் குறிப்பிடுகின்றன.

*"கண்மடற்கொண்ட தீந்தேன் இரியக்*
*கள்ளரிக்கும் குயம் சிறுசின்*
*மீன் சீவும் பாண்சேரி..." (புறம் 348)*

*"குருகு நரல மனை மரத்தான்*
*மீன் சீவும் பாண்சேரியொடு...." ( மதுரைக்காஞ்சி 269)*

*"கான்பொழில் தழீஇய அடைகரை தோறும்*
*தாது சூழ் கோங்கின் பூமலர்தாஅய்*
*கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல்*
*ஆவிர் அறல் வையைத் தறை துறை தோறும்*
*பல்வேறு பூத்திரள் அழுந்துபட்டிருந்த*
*பெரும்பாண் இருக்கையும்...." ( மதுரைக்காஞ்சி 336 - 342)*

பெரும்பாணர்களின் குடியிருப்புச் சூழல் நீர்த்துறைகளுக்கு அருகில் இருந்ததுடன் அவை பூந் தோட்டங்களால் சூழப்பட்டனவாயும் இருந்தன.

**பாணர்கள் குடியிருந்த வீட்டின் தன்மை**

பாணர்கள் குடியிருந்த வீட்டை வர்ணிப்பதனூடாகவும் பாணர்களின் வறுமை நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது. சிறுபாணாற்றுப் படையில் பாணனின் வீட்டிலுள்ள சமையல் அறையில் சமையல் வேலை இடம்பெறாததால் குட்டிகளை ஈன்ற நாய் அடுப்பில் படுத்து உறங்குவதாகவும் வீட்டுக் கூரையில் கட்டப்பட்ட தடிகள் கட்டவிழ்ந்து அங்கொன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கொன்றுமாக தென்படும் பழைய சுவரைக் கொண்டிருந்ததாகவும் அச்சுவரில் கறையான் அரித்துச் சேர்ந்த புழுதியில் காளான் பூத்திருந்ததாகவும் வீட்டின் நிலையைக் குறிப்பிடப்படுவதனூடாக வறுமைநிலை எடுத்துக்காட்டப்படுகிறது.

*"புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்*
*காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த*
*பூழி பூத்த புழல்காளாம்பி*
*ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல் ...."*
*சிறுபாணாற்றுப்படை (132 – 135)*

இத்தகைய வீட்டிலே வறுமை காரணமாக உணவின்றி இளைத்த உடலைக் கொண்ட பாண்மகள் கடும்பசிக்கு ஆற்றாது குப்பையில் நின்ற வேளைக் கீரையைக் கிள்ளி வந்து உப்பில்லாமல் சமைத்தாகவும் உப்பில்லாத அவ்வுணவை உண்பதை பிறர் பார்த்தால் பழிப்பர் என நாணி தலைவாயிற் கதவை அடைத்து விட்டு உண்பதாகவும் கூறுவதனூடாக பாணர்களின் வறுமைநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

## வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

இனக்குழு மக்களிடையே காணப்பட்ட வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் பாணர்களிடமும் காணக் கூடியதாக உள்ளது. மரங்களில் உறையும் தெய்வங்களை வணங்குதல், நடுகற்களை வணங்குதல், சகுனம் பார்த்தல் போன்றவற்றை எடுத்துக்காட்டு களாகக் குறிப்பிடமுடியும்.

பரிசில் பெறுவதற்காகச் செல்லும் பாணன் ஒருவன் இனிய இசையை உண்டாக்கு வதற்காக தனது யாழை இசைத்த போது அது இரங்கற் பண்ணான விளரிப்பண்ணை இசைத்து மாறுபட்டு நிற்கின்றது. இது தீய சகுனம் என நினைத்து நடுங்கும் மனத்துடன் அவன் புறப்பட்ட போது தீய நிமித்தமாக ஒரு பெண் விரித்த கூந்தலுடன் வருகிறாள். இத்தீய சகுனத்தைக் கண்ட பாணன் களர் நிலத்தில் உள்ள கள்ளி மரத்தின் நிழலில் உறையும் தெய்வத்தை வணங்குவதாக புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"வளரத் தொடினும் வௌவுபு திரிந்து*
*விளரி உறுதரும் தீந்தொடை நினையாத்*
*தளரும் நெஞ்சம் தலைஇ மனையோள்*
*உளரும் கூந்தல் நோக்கிக் களர*
*கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி*
*பசிபடு மருங்குலை கசிபு கைதொழாஅக்*
*காணலன் கொல்என வினவினை வரூஉம்*
*பாண கேண்மதி யாணரது நிலையே...." (புறநானூறு 260)*

புறநானூறு 263 வது பாடலில் பாணர்கள் நடுகல்லை வழிபட்டமைக்கான சான்றினைக் காணலாம்.

*" பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்*
*இரும்பறை இரவல சேறி ஆயின்*
*தொழாதனை கழிதல் ஓம்புமதி வழாது*
*வண்டுமேம் படூஉம்இவ் வறநிலை யாறே....." (புறநானூறு 263)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உணவு

பாணர்கள் பரிசில் நாடிச் சென்ற இடங்களில் அவர்கள் புன்செய் நில வேளாண்மை மூலம் பெறப்பட்ட வரகு, தினை முதலான தானியங்களையும் வேட்டைமூலம் பெறப்பட்ட உடும்பு, முயல், முள்ளம்பன்றி, காட்டுக்கோழி, புறா, கவுதாரி முதலானவற்றின் இறைச்சியையும் ஆரல்மீனையும் உண்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. புறநானூறு 327 வது பாடலில் இளையோர் காலால் மிதித்து எடுத்த வரகில் கடன்காரர்களுக்குக் கொடுத்தது போக எஞ்சியதைப் பாணர்கள் உண்டு சென்றமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. நெருப்பில் வாட்டப்பட்ட இறைச்சியை உண்டமை, இறைச்சியோடு தயிர் சேர்ந்த கூழை உண்டமை கள்ளுண்டமை பற்றிய செய்திகள் புறநானூறு 328, 333, 320, 325, 326, 319 பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாணர்கள் மீன் சொரிந்த மண்டைப்பாத்திரத்தை வைத்திருந்தமை பற்றியும் பாண்மகள் தூண்டிலில் மீன்பிடித்தமை, மீனை பண்டமாற்றுச் செய்தமை பற்றிய குறிப்புக்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

### பாணர்கள் சீறூர் மன்னர்களைச் சார்ந்திருந்தமை

சீறூர் மன்னர்களைப் பற்றியும் அவர்களது ஊர்களின் தன்மை பற்றியும் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. சீறூர் மன்னர்கள் தம்குடிகளைச் சார்ந்திருந்தமை பற்றியும் அவர்களோடு கள்ளுண்டு களித்து இன்புற்றிருந்தமை பற்றியும் அறியமுடிகின்றது. இச்சீறூர் மன்னர்கள் கைப்பொருள் யாதொன்றும் இல்லாதவர்களாகவும் வரகுக் கடன் இரக்கும் நெடுந்தகைகளாகவும் சொத்துடமை அற்றவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர். (புறம் 313, 327)

இச்சீறூர் மன்னர்கள் வாளையும் சீறியாழையும் பணயமாக வைத்து விருந்து பேணும் பண்புடையவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர். பாணர்கள் சீறூர் மன்னர்களைச் சார்ந்திருந்தமையை ஆலத்தூர்க்கிழார் என்ற புலவரின் பாடல் தெளிவாக விளக்குகின்றது

மன்னன் ஒருவனின் கொடைச்சிறப்பையும் அவனது எளிமையான வாழ்க்கையையும் புகழ்ந்து பாடும் போது அச்சீறூர் மன்னன் அழகிய குடிகள் வாழும் சிற்றூரில் வளமான கால்கள் நிறுத்தப்பட்ட பந்தரின்கீழ் இடையன் கொழுத்திய சிறு சுடரைக் கொண்ட விளக்கொளியில் பாணர்கள் சூழ்ந்திருக்க அவரிடையே வீற்றிருந்ததாகப் பாடுகின்றார்.

*"...வெண்காழ் தாய வண்காற் பந்தர்*
*இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்*
*பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை..." (புறநானூறு 324)*

சொத்துடமை எதுவுமற்ற சமுதாய அக்கறை கொண்ட சீறூர் மன்னர்களின் வாழ்வியலை நோக்கினால் அதில் இனக்குழு சமுதாயத்தின் பண்புகளைக் காண முடிகின்றது.எனவே அவர்களைச் சார்ந்திருந்த பாணர்களது வாழ்வியலிலும் இனக்குழு சமுதாயத்தின் எச்சங்களைக் காண முடிகின்றது.

### உசாத்துணை நூல்கள்

அம்மன்கிளி முருகதாஸ், (2006) **சங்க கவிதையாக்கம் மரபும் மாற்றமும்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கைலாசபதி.க (2006), **தமிழ் வீரநிலைக் கவிதை,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் (பதிப்பாசிரியர்), 2007, **சங்க இலக்கியமும் சமூகமும்,** இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

மௌனகுரு.சி, (2003) **சங்க கால சமூகமும் இலக்கியமும் ஓர் மீள்பார்வை,** கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.

வித்தியானந்தன்.சு., (2003), **தமிழர் சால்பு,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

வேங்கடசாமி மயிலை சீனி, (2001), **நுண்கலைகள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை

மாதையன். பெ, (2004), **சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்,** பாவை பப்ளிக்கேஷன்ஸ், சென்னை.

சுப்பிரமணியன். கா, (1982), **சங்ககால சமுதாயம்,** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

கதிர்காமதேவன். (1980), **பழங்தமிழர் வீரப்பண்பாடு,** ஏரக வெளியீடு, மதுரை.

சீனிவாசன். ஆ., (1976), **குறிஞ்சி,** பி.கே. புக்ஸ், மதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பாடல்களில் கதைக் கூறுகள்

கலாநிதி எஸ்.வை. ஸ்ரீதர்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுலோயா

கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுகள் தொடக்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை சங்ககாலம் அல்லது இயற்கை நெறிக்காலம் அல்லது மூவேந்தர்கள் ஆட்சிக்காலம் என அழைப்பர் இலக்கிய வரலாற்றாசிரியர்கள்.

இக்கால இலக்கியமென்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் தொகுப்பாகும். இவற்றுள் அக்கால மக்களின் அகவாழ்வியலின் நெறிமுறைகளும் புற வாழ்வியலின் நெறிமுறைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள அகத்திணை சார்ந்த நூல்கள் பல தலைவன், தலைவியின் காதல் சார்ந்த வாழ்வியலைப் புலப்படுத்தும் போது, இன்றைய சிறுகதையின் வடிவத்தை ஒட்டிய தன்மை போல அன்றே செய்யுள் நடையில் எழுதப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

எடுத்துக்காட்டாக குறிஞ்சிக் கலியில் 51ஆவது பாடலைக் கபிலர் பின்வருமாறு பாடியிருக்கிறார்.[1]

*சுடர்த்தொடீஇ கேளாய், தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டுஓடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, "இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன்" எனவந்தாற்கு, அன்னை
"அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா" என்றாள் என, யானும்
தன்னை அறியாது சென்றேன், மற்று என்னை
வளை முன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
"அன்னாய் இவனொருவன் செய்ததுகாண்" என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத், தன்னையான்
"உண்ணுநீர் விக்கினான்" என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்.*

மேலே காட்டிய பாடலின் பொருள் பின்வருமாறு:

ஒளியுடைய வளையல்களை அணிந்த என் தோழி, நான் சொல்வதைக் கேள்! சின்ன வயதில் நீயும் நானும் மணலில் சிறிய வீடு கட்டுவோம். அப்போது, ஒரு குறும்புக்காரச் சிறுவன் அதைக்கால்களால் உதைத்துச் சிதைப்பான் ஞாபகம் இருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம், நாம் கூந்தலில் மலர் மாலை சூடி வீதியில் வருவோம். அந்தக் குறும்புப் பயல் அந்த மாலையை அறுத்துக்கொண்டு ஓடுவான்.

பின்னர், நாம் வரிகளை உடைய பந்தை வைத்து விளையாடுவொம். அந்தப் பொல்லாதவன் அங்கேயும் வருவான். நம்முடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவான். இப்படிப் பல குறும்புகளால் நம்மை நோகவைத்த அந்தப் பயலை, சமீபத்தில் மீண்டும் பார்த்தேன்.

இப்போது அவன் நன்கு வளர்ந்த வாலிபன். ஒரு நாள் நானும் அம்மாவும் தனியாக இருக்கும் போது நம் வீட்டு வாசலில் வந்து நின்றான். "தண்ணீர் வேண்டும்" என்றான். அம்மா பாவம், என்னைக் கூப்பிட்டு, "அழகான அணிகலன்களை அணிந்தவளே, யாரோ தாகம் என்று வந்து நிற்கிறார்கள், தங்கத்தால் ஆன பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துப்போய்க் கொடு" என்றாள். விபரம் புரியாமல் நானும் போனேன்.

அந்தப் பயல் என்ன செய்தான் தெரியமா? தண்ணீரை விட்டு விட்டு, வளையல் அணிந்த என்முன் கையைப் பிடித்து இழுத்தான். அதிர்ச்சியடைந்த நான், "அம்மா! இவன் என்ன செய்கிறான் பாரேன்" என்று அலறினேன். அம்மாவும் பதறிப்போய் ஓடி வந்தாள். ஆனால், இவன் எதுவும் தெரியாத அப்பாவி போல் விழிக்கிறான். நல்லவேளை, நான் அவனைக் காட்டிக்கொடுக்கவில்லை. அவன் செய்த குறும்பை மறைத்து, "தண்ணீர் குடிக்கும் போது இவனுக்கு விக்கல் எடுத்தது. அதனால்தான் பயந்து போய் அலறினேன்" என்று பொய் சொன்னேன். நான் சொன்னதை அம்மா நம்பி விட்டாள். ஆதரவாக அவனுடைய முதுகைத் தட்டிக் கொடுத்தாள். அப்போது அந்தத் திருட்டுப்பயல் கடைக்கண்ணால் என்னைக்கொல்வது போல் பார்த்துப் புன்னகை செய்தான்!

இவ்வாறு சங்கப் பாடல்களில் பல கதைகள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இவர்கள் நூற்றுக் கணக்கான பாடல்களில் இடம், பொருள் அறிந்து பல சிறு சிறு கதைகளை யதார்த்த பூர்வமாகச் சொல்லித் தமது கருத்தை அன்றே வெளிப்படுத்தியிருக் கின்றனர் என்பது யாவரும் அறிந்த விடயம். இக்கதைகள் சிறிதாகவும் தனி மனித உணர்வை வெளிப்படுத்துவதாகவும் வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியை அழகாகக் காட்டுவதாகவும் குறைந்த பாத்திரங்களுடன் விரிவான வர்ணனைகள் அற்றதாகவும் காணப்படுகின்றன. அதாவது இன்றைய சிறுகதைகளுக்கு இருக்கவேண்டிய பன்புகள் பலவும் சங்கக் கதைகளுக்கு இருந்திருக்கின்றன என்பதை இதன் மூலமே நாம் அறிந்து கொள்ளலாம்.

"மேல்நாட்டினர் வருகையால், குறிப்பாக ஆங்கிலேயரின் வருகையினாலே, தமிழ் நாட்டிலும் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புதிய கருத்துக்கள் இடம்பெறலாயின. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்கள், நிர்வாகச் சீர்திருத்தங்கள் முதலியனவும், ஆங்கிலக் கல்வியின் விருத்தியும் தமிழ் நாட்டுச் சமுதாய அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின. இம்மாறுதல்களுக்கேற்ப மேல்நாட்டு இலக்கிய வகையைப் பின்பற்றித் தமிழ் நாட்டிலும் "மேல்நாட்டுச் சரக்கு" எனப் புதுமைப்பித்தனால் வருணிக்கப்பட்ட புனைகதை இலக்கியங்கள் எழலாயின. மேல் நாடுகளிற் போலவே தமிழ் நாட்டிலும் முதலில் நாவலிலக்கியமே தோன்றியது. மயூரம் வேதனாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி கதை, ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம், மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் முதலிய நாவல்கள் தொடக்கத்தில் எழுதப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையடுத்து சிறுகதைகள் எழலாயின. பதினெட்டாம் நூற்றாண்டில் வீராசாமிச் செட்டியார் எழுதிய வினோதரச மஞ்சரியும், தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்து எழுதிய கதைகளும் சிறிய கதைகளேயெனினும் அவை தற்கால உருவ, உத்திகளுடன் கூடிய சிறுகதைகளாகக் கொள்ளப்படுவதில்லை. பாரதியார், மாதவையா முதலியோர் சிறுகதைகள் எழுதிய போதிலும், தற்கால உருவ, உத்திகளைக் கையாண்டு பூரணமான கலையுருவம் படைத்த சிறுகதைகளை முதன் முதலிலே தமிழில் எழுதியவர் வ.வே.சு. ஐயர் என அழைக்கப்படும் வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் அவர்களே. இதனால் அவரைத் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என அழைப்பதும் மரபாகிவிட்டது."[2]

இவரைத் தொடர்ந்து 1933 ஆம் ஆண்டு தோன்றிய மணிக்கொடி என்னும் பத்திரிகையுடன் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் முக்கிய திருப்பம் ஏற்பட்டது. இதன் மூலம் எமக்குப் புதுமைப்பித்தன், கு.ப. இராஜகோபாலன், அழகிரிசாமி, சி.சு. செல்லப்பா எனப்பலர் சிறுகதையை வளர்க்க இக்கலை இன்றுவரைப் பெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

"இப்படி வளர்ந்து நிற்கும் இக்கலையின் இலக்கணத்தைப் பார்ப்போமாகவிருந்தால் வாழ்க்கையின் சாளரம் என்றும், ஒரு சாவித் துளையின் வாயிலாகப் பரந்த ஓர் அறையைப் பார்ப்பது போன்ற தென்றும், ஒரு மின்னல் வெட்டுப் போன்றதென்றும், ஒரு நூறு மீட்டர் ஓட்டத்தை நிகர்த்தது என்றும் பல வகைகளிலும் பல நிலைகளிலும் சிறுகதை விளக்கப்படுகிறது. இவை அனைத்துமே ஒவ்வொரு வகையில் சிறுகதையின் இயல்புகளை உணர்த்தி நிற்கின்றன. வாழ்க்கையின் ஏதோ ஒரு கோணத்தை மட்டும் காட்டுவதென்றும், அவ்வாறு காட்டுவதை வளர்த்தல் இன்றிச் சுருக்கமாகக் கதை வடிவில் காட்டுவதென்றும் பொதுவாகக் கூறலாம்..... எந்த ஒரு நல்ல சிறுகதையிலும் சொல்வதை விடச் சொல்லாமல் விடுவது பல மடங்குகளாகவே இருப்பதைக் காணலாம். சிறுகதையின் இந்தச் சிறப்பை எர்னஸ்ட் ஹெமிங்வே கடலில் மிதக்கும் பனிப்பாறைகளுடன் ஒப்பிட்டு மிக அழகாக விளக்குவார். வெளியிலே புலப்படுகின்ற இந்தப் பனிப்பாறைகளின் பகுதிகளைவிடப் பல மடங்கு பகுதிகள் நீரில்தான் அமிழ்ந்திருக்குமாம். சிறுகதையும் இப்படித்தான் என்பது அவர் தரும் விளக்கம்."[3]

இந்த நிலையில் எமது ஆய்வாளர்கள் எல்லோருமே சிறுகதையயின் தோற்றத்தை ஐரோப்பியர்களின் வருகையுடனேயே பார்க்கின்றனர். ஐரோப்பியரின் வருகைக்கு முன் எம்மிடையே சிறுகதை எந்தநிலையில் இருந்தது என்ற வினாவை முன்வைத்தால் அதற்குக் கிடைக்கும் பதில் ஆரம்பகாலத்தில் எம்மவர்களிடம் பாட்டன் பாட்டி கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், பேய்க்கதைகள், தென்னாலி இராமன் கதைகள், மரியதை இராமன் கதைகள், முல்லா கதைகள், அபுனவாஷ் கதைகள், மாதனமுத்தா கதைகள் எனப் பட்டியல் படுத்தும் இவர்கள் இவை கதைகள் ஆனால், இன்றைய சிறுகதைகள் அல்ல என்பர். ஏனோ தெரியவில்லை இவர்கள் எல்லோருமே சங்ககால அகத்திணைப் பாடல்களில் நூற்றுக்கணக்கான கதைகள் இருந்ததை இலேசாக மறந்து விட்டார்கள் என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஐரோப்பியரின் வருகையின் பின்னர் எம்மிடையே பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் பாரம்பரியக் கல்வி முறை மாற்றியமைக்கப்பட்டமை, அச்சியந்திரத்தின் வருகை, பத்திரிகைகளின் தோற்றம் போன்றவற்றுக்கூடாக கல்வியில் ஏற்பட்ட மாற்றம் உரைநடை வளர்ச்சிக்கு வித்திட்டது. இவ்வளர்ச்சி நாவல், சிறுகதை வளர்வதற்கு அடிகோலியது. ஆனால், இந்த ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் உரைநடை இருந்திருக்கிறது. அது 1. உரையாசிரியர்கள் கையாண்ட நடை 2. சாசனங்களில் உள்ள நடை 3. மணிப்பிரவாள நடை[4] போன்றவையாகும். ஆனால், இந்த நடை கற்றோருக்கு மட்டுமே விளங்குவதாக இருந்ததால் இந்த உரைநடை வகையைக் கைவிட்டுத் தமது எழுது கருவிகளின் வகைக்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் மனனம் செய்வதற்கும் ஏற்ற இலகுவான வழியாக எமது முன்னோர் கையாண்ட செய்யுள் நடையையே சங்ககாலம் தொடக்கம் நயக்கர்கால இறுதிவரை இலக்கியங்களைப் படைக்கப் பயன் படுத்தியிருக்கிறார்கள். இது அவர்களின் குற்றமன்று. அன்றைய கால இழுப்புக்கேற்ப அவர்கள் போயிருக்கிறார்கள். ஆனால், அவர்களின் செய்யுள் நடையிலேயே ஆயிரம் ஆயிரம் கதைகளை இன்றைய சிறுகதைக்குச் சமமாகப் பாடியிருக்கிறார்கள் என்பதை மேலே காட்டிய ஒரு பாடலில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.

அகிலன், "கதைக் கலை" என்னும் தனது நூலில் சிறுகதையின் தன்மையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சிறுகதை என்றால், அது அளவில் சிறிதாக இருக்கவேண்டும். தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட போக்கை அது சுவையோடு பிரதிபலிக்கவேண்டும். கதையின் கருப்பொருள் வாழ்க்கையோடு தொடர்புகொண்ட எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு கதாபாத்திரத்தின் இயல்பைக் கூறுவதாகவோ, ஆழமான மனித உணர்வுகளில் ஒன்றை வெளிப்படுத்துவதாகவோ, வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியைச் சுவைபட எடுத்துரைப்பதாகவோ, வாழ்க்கையின் ஒரு சிக்கலை அழகாக அல்லது அழுத்தமாக எடுத்துக் காட்டுவதாகவோ இருக்கலாம். ஆனால், ஒரு மனிதர், அல்லது ஓர் உணர்வு, அல்லது ஒரு நிகழ்ச்சி, அல்லது ஒரு சிக்கல்தான் அதில் தலைதூக்கி நிற்கவேண்டும்."[5] இதைப் போன்றே சிறந்த சிறுகதை யாசியர்கள் பலரும் சிறுகதைக்கு விளக்கம் தருகின்றனர். இந்த விளக்கத்தில் இருந்து நாம் பார்ப்போமாகவிருந்தால் சங்ககாலம் செய்யுள் இலக்கியம் வளர்ந்த காலம். ஆகவே, இலக்கியங்கள் செய்யுள் நடையில் படைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், ஐரோப்பியர்காலம் உரைநடை வளர்ந்த காலம் ஆவவே சிறுகதை உரைநடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் இருந்து பார்க்கும் போது, சிறுகதை என்கின்ற வடிவம் இருவேறு காலங்களில் இருவேறு விதமாக எழுதப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் மேலேகாட்டிய சிறுகதைக்கான இலக்கணம் சங்ககால அகத்திணைப் பாடல்களுக்கும் பொருந்தும். ஆகவே, சிறுகதையின் தொடக்ககாலமாக சங்ககாலத்தைப் பார்க்கலாம் என்பது எனது முடிவாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. **கலித்தொகை,** பாடல் 51, கழகப் பதிப்பு
2. அருணாசலம், க. (2012) **ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் (1925 - 1965),** கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம். பக். 5,6.
3. தண்டாயுதம், இ. (1972) **தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்,** சென்னை: மூவேந்தர் அச்சகம். ப. 19.
4. செல்வநாயகம், வி. (2010) **உரைநடை இலக்கிய வரலாறு,** கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம். ப. 51.
5. அகிலன் (1981) **கதைக் கலை,** சென்னை: பாரி புத்தகப்பண்ணை, ப. 22.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு

திரு. தயாநிதி
முதுநிலை விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

ஆரம்ப காலங்களில் மக்கள் நெருப்பு, காற்று, மழை, சூரியன் முதலான இயற்கைப் பொருட்களை வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் அறிவு முதிர்ச்சியால் அவற்றையும் தம்மையும் இயக்கி நிற்கும் பேராற்றல் ஒன்று உண்டென உணர்ந்து கொண்டு அம்மேலான பொருளை வழிபட்டனர். இவ்வழிபாட்டின் தொடக்கமே சமயத்தின் தொடக்கமாகும். சமயம் என்னும் சொல் முதன்முதலில் மணிமேகலையிலேயே காணப்படுகின்றது. ("மூதூர் அகத்தே அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு உன்னிய பொருளுரைத்து ஐவகைச் சமயமும் அறிந்தனன்") மணிமேகலையை அடுத்து இச்சொல் திருவாசகத்திலே இடம்பெற்றிருக்கின்றது. தாய்த்தெய்வ வழிபாடு பற்றிய குறிப்புக்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளன. அன்னை வழிபாடு புராதன சமுதாயங்களில் காணப்பட்ட சமய நம்பிக்கையாகும். அது கி.மு. ஐயாயிரம் ஆண்டளவிலே தொடங்கி ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுவரை நிலவிய ஓர் உலகார்ந்த சமயநெறி எனக் க. கைலாசபதி குறிப்பிடுவார். பண்டைக்காலம் முதற் கொண்டு தாய்த்தெய்வ வழிபாடு உலகெங்கும் இருந்திருக்கிறது. தாய்த் தெய்வத்தினைத் தாயாகவும் கன்னியாகவும் உருவப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்த மரபாக உள்ளது. சுமேரியா, எகிப்து, அசீரியா, இந்தியா ஆகிய பழைய நாகரிகங்களில் அன்னை வழிபாடு சிறப்புப்பெற்று இருந்திருக்கின்றது. பழந்தமிழ் இலக்கியங்களில் மூன்று வகையான தாய்த்தெய்வங்கள் பற்றிக் கூறப்படுகின்றது.

1. பழந் தமிழர்களின் தாய்த் தெய்வம் கொற்றவை.
2. இந்திய ஆரியர்களுடைய கலப்பால் (indo – Aryan) தோன்றிய தாய்த் தெய்வம் காளி.
3. திராவிடருக்கு முன்னரே இந்தியாவில் குடியிருந்த பழங்குடி மக்களை (Austric) பழங்குடி இனத்தவரிடையே வழங்கிய தாய்த்தெய்வத்தைப் பற்றிய செய்திகளும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. (பி.எல் சாமி)

தென்னிந்தியத் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில், பெருங்கற்படைக் காலம் என்பது சங்க காலத்திற்கு முந்திய ஓராயிரம் ஆண்டுகாலத்துக்குரிதாகக் கொள்ளப்படுகிறது. நிலையினால் சுட்டப்படுகின்றன. தமிழகத்தில் காணப்பட்ட பத்து முதல் பதினைந்து தொன் எடை கொண்ட கற்களால் அமையப்பெற்ற உருவங்களையும் நடுகற்களையும் பல்வேறு பரல் உயர் பதுக்கைகளையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்திய ஆய்வில், சங்ககாலத்து மக்களின் வாழ்க்கையை உயர்நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் பெருங்கற்படைக் காலத்தைச் சேர்ந்த மக்கள் என நிறுவப்படுகின்றது. தமிழகத்தில் காணப்பட்ட நினைவுச் சின்னங்களின் பின்னணியில் அவதானிக்கையில் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பதுக்கைகள், நிலத்துக்கு அடியில் கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்றும், வளர்நிலையாகக் கற்பதுக்கைகளுடன் நெடுங்கற்கள் நடப்பட்ட நிலையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது என்றும், கற்பதுக்கைகளைத் தவிர்த்து நெடுங்கற்கள் நடப்பட்டுள்ளன என்றும், நெடுங்கற்கள் அளவில் சிறுத்து நடுகற்களாக நடப்பட்டுள்ளன. இந்த நினைவுச் சின்னங்களின் பெரும்பகுதி வெட்சிப் போரில் ஆனிரை கவர்ந்து / மீட்டு உயிர்துறந்த மறவர்களுக்கு நாட்டப்பட்டதென்றும், இப்பண்பாட்டுக் காலத்தில் கொற்றவை வழிபாடு மிகச் சிறப்பாக இடம்பெற்றிருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

தொல்காப்பியர் பூர்வீகத் தமிழர் வாழ்ந்த நிலப்பரப்பை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களாக வகுத்து அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையை ஆராய்கிறார். நிலத்தை அதன் மண்ணின் தன்மை, அங்கு வாழ்ந்து வந்த மக்கள், அவர்களின் இயல்புகள், தொழில், உணவு, உடை, காதல், வீரம், கொடை ஆகிய பண்புகளுக்கு அவர்கள் அளித்திருந்த முக்கியத்துவம், ஆங்காங்கு தொல்காப்பியர் முதல், கரு, உரி என மூன்றாகப் பிரித்து விளக்குகின்றார். இவற்றுள் கரு என்ற பிரிவில் முதலிடம் பெறுவது தெய்வம். நான்கு நிலங்களுக்கும் உரிய தெய்வம் பற்றிய தொல்காப்பியர் ஐந்தாவது சூத்திரத்தில் விளக்குகின்றார். " மாயோன் மேய காடுறை உலகமும்...." இச் சூத்திரத்தில் வரும் தெய்வப் பெயர்கள் புராணங்களோடு தொடர்புடையன எனத் தெரியவருகிறது.

புராணகால ரிஷிகள் மாயையை ஏற்றுக்கொண்டு பல கடவுளர்களைப் படைத்துக் கொண்டனர். மக்களும் தங்களுக்கு ஏற்றவகையில் தங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான மூர்த்தி வடிவங்களை வணங்கத் தொடங்கினர். இந்து ஆரியர்களின் இப்புராணக் கதைகள் இந்தியா முழுவதும் பரவின. தமிழ் மக்கள் முக்கியமான மேலே கூறிய நான்கு தெய்வங்களை தங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமாக வணங்கி வந்தனர் எனத் தெரிகிறது. தமிழ் நாட்டுக் குழுக்களிடையே நடைபெறும் போரில் வெற்றி பெறுவதற்கு அவர்கள் தெய்வத்தின் துணை வேண்டி நின்றனர். குறிஞ்சி எனப்பட்ட மலைப் பிரதேச மக்கள் நடத்திய போர்களின் முக்கியமானது, முல்லை, மருதம் ஆகிய பிரதேச மக்களின் மாடுகளைக் களவெடுப்பதால் ஏற்பட்டது. இந்தப் போரைத் தொல்காப்பியம் 'வெட்சி' எனக் குறிப்பிடுகிறது. மாடுகளை வலிந்து கைப்பற்றுவதற்குச் செல்லும் படைகள் 'வெட்சிப்' பூவைச் சூடிச் செல்வதால் அப்பெயர் உண்டானது. ஆரம்ப காலத்தில் இப்படைகளுக்கு ஒரு பெண் தலைமை வகித்தாள் எனத் தெரிகிறது. அப்பெண் 'கொற்றவை' எனப்பட்டாள். போரின் கடுமை அதிகரிக்கத் தொடங்கியதும் பெண்ணுக்குப் பதிலாக ஆணைத் தேர்ந்தெடுத்தார்கள். போரில் கொற்றவை தலைமை வகித்து படைகளை அழைத்துச் செல்வது பற்றி தொல்காப்பியத்தின் காலத்துக்கு அடுத்த காலப்பகுதியில் தோன்றிய புறப்பொருள் வெண்பா மாலை விபரம் தருகிறது.

கொற்றவைக்குப் பின் போரில் தலைமை வகித்தவன் முருகன். இவனை கொற்றவையின் மகன் எனப் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன. திருமுருகாற்றுப்படை முருகனை,

> *"மலைமகள் மகனே மாற்றொர் கூற்றே*
> *வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ*
> *இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"*

எனப் போற்றுகின்றது. இங்கு மலைமகள், கொற்றவை, காளி என்பன ஒரே தெய்வத்தின் பல பெயர்கள் என்பதைத் தமிழ் மக்கள் பண்டைக்காலத்திலிருந்தே உணர்ந்திருந்தார்கள் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவை வணக்கம் தொன்மையானது. இவள் வீரத்தையும் வெற்றியையும் கொடுப்பவளாக இருந்துள்ளாள். "மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே" (புறம் - 59) இளம்பூரணார் கொற்றவை நிலை குறிஞ்சித் திணைக்கு முருகவேளே அன்றிக் கொற்றவையும் தெய்வம் என்றார். குறிஞ்சி நில மக்கள் வேட்டைத் தொழிலில் இருந்து புராதனப் பயிர்த் தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் புன்புலப் பயிர் செய்யத் தொடங்கினர்கள். அக்காலத்தில் பெண்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆகவே, பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் 'காடுகிழாளும்' தோன்றினாள்.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் முதியோள், பழையோள் என்று அழைக்கப்பட்ட பெண்தெய்வம் பரிபாடலில் 'காடுகிழாள்' என்று அழைக்கப்படுகிறாள். காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தெடங்கிய காலத்தில் காடுகிழாளும் தோன்றினாள் (தமிழர் வரலாறும் பண்பாடும்). அதற்கு முன்பே சேயோன் கடவுளாகி விட்டான். முருகனைக் காடுகிழாளின் மகனாக ஏற்றுக்கொண்டது. இவள் வீரத்தொழிலில் வெற்றிபெறுவோர்க்கு கொற்றவையானாள். இலக்கியங்கள் தந்தை வழிச் சமுதாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்திருந்தாலும், பெண்வழிச் சமூக அமைப்பு பண்டைக்காலந்தொட்டே இருந்து வந்திருக்கிறது. மனிதன் தனது உணவை வேட்டையாடிப் பெற்றான். இவர்களை 'வில்லேருழவர்' என்று பண்டைய நூல்கள் அழைக்கின்றன. அக்காலத்தில் 'வேல்' சிறந்த கருவியாக இருந்திருக்கிறது. வேட்டைக்குப் பயன்பட்ட இந்த ஆயுதத்தினைத் திறமையாக எறிபவன் வேலன் எனப் பட்டான். வேலனை வேடர்கள் போற்றினார்கள். தங்கள் வாழ்க்கையில் தோன்றும் சங்கடங்களைப்போக்க வேலனை நாடினார்கள். மற்றவர்களைவிட இவன் அறிவு மிகுந்தவனாகக் காணப்பட்டான், அதனால் அவன் தெய்மானான். இந்தக் காலத்தில் பெண்கள் குகைகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்துவந்தனர். அக்காலத்தில் அவர்கள் பயிர் செய்யத் தொடங்கினர். தொழிலில் பங்குகொண்ட மக்கள் ஆண்களைவிட உயர்வுபெற்றனர். பெண்ணாதிக்கச் சமுதாயம் தோன்றி வளர்ந்த முற்காலத்தில் பெண்தெய்வங்கள் தோன்றின. அவள் பழையோள் ஆனாள். நிலமோ பெண், பெண் செழிப்பைத் தருபவள். அதற்காகப் பாவை நோன்பு இருந்திருக்கின்றார்கள். ஆண்டாள் காலத்திற்கு மிகப் பழங்காலத்தில் இந்த நோன்பு நோற்கப்பட்டிருக்கின்றது.

> *"கடம்பு கொடி யாத்துக் கண்ணி சூட்டி*
> *வேறுபல் குரல் ஒருதுஉஸக் கின்னியம்*
> *காடுகெழு நெடுவேட் பாகொளைக் கேற்ப*
> *அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்" – அகம் 382*

காடுகெழு நெடுவெளின் தாயை காடுகெழு செல்வியாகக் கொள்ளப்படுகின்றது. சங்க காலத்திலேயே முருகன் காடுகிழாளின் மகனாகக் கருதப்பட்டான். அகம் - 266, புறம் - 128, 209, குறிஞ்சிப்பாட்டு – 51

தேவாரத்தில் வருகின்ற "முதுகோதையோடாடிய நீள்மார்பன்", "போகமார் மோடி கொங்கை புணர்தரும் புனிதர் போலும்" எனும் தொடர்கள் வழி, சிவன் பழையாளோடு ஆடியதும், மோடியை மனைவியாகக் கொண்டதும் தெரிகின்றது. மோடி என்றால் எல்லோரையும் பெற்ற தாய் என்று கொள்ளப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படை (வரி 458) ஸ்ரீ லலிதாசகஸ்ட நாமம் புராதனா என்ற பெயர் பழையோள் என்பதின் திரிபு என்றும், தக்கயாகப் பரணி தொல்லை நாயகி என்றும், திருப்புகழ் மூவர்க்கு முன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், அகநானூறு பழையர் போன்ற பழங்குடிகளின் கடவுளே பழையோள் என்றும் குறிப்பிடுகின்றன. சங்ககாலத்து கானமர் செல்வி கனதுர்க்கையென்றும், கானமர் செல்வி வனவாசி என்றும் அழைக்கப்பட்டுள்ளாள்.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் காவிரியின் தெற்கில் உள்ளதொரு குன்றான அயிரைமலை, ஐவர்மலை என்றும் அழைக்கப்படுகிறது. இம்மலை அயிரைக்கொற்றவை வீற்றிருப்பதெனக் குறிக்கப்படுகின்றது. இதனை, "தும்பை சான்ற மெய்தயங்கு உயகத்து.." என்கின்றது. உன்னை எதிர்கொண்ட மன்னர்களைக் கொன்று, வில்லின் நாணை அறுத்து, முரசங்களின் கண்களைப் பிளர்ந்து, அவர்களுடைய பட்டத்து யானைகள் கதறுமாறு அவற்றின் கொம்புகளை அறுத்து, அவற்றைக்கொண்டு தெய்வத்தன்மைகொண்ட கட்டிலை அமைத்து, அக்கட்டிலின் மேலிருந்தவாறு தும்பைப் போரைச் செய்து வென்றமையால், தம்மார்பினைக் கிழித்து அதிலிருந்து வெளிப்படும் குருதியை அயிரைமலையிலுள்ள கொற்றவைக்கு உன்னுடைய மறவர் பலியூட்டச் செய்வாய். அத்தகைய கொற்றவையாள் வாழ்கின்ற அயிரைமலையைப்போல உன்புகழும் என்றும் அழியாததாகி நிலைபெறுக பெருமானே" என்று நரபலி கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.. "வில்குலை யறுத்துக் கோலின்வரா" (பதிற்றுப்பத்து - 79)

*"நிறம்படு குருதி புறம்படின் அல்லது*
*படையெதிர்கொள்ளா அஞ்சுவரு மரபின்*
*கடவுள் அயிரையின் நிலைஇக்"*

என்ற பாடலடிகளால் உணர்த்தப்படுவது, வீரர்களுடைய உயிர்நிலையிலிருந்து வந்த இரத்தம் பலியாக அளிக்கப்பட்டாலல்லாது, கொற்றவை நிவேதத்தினை ஏற்றுக்கொள்ளாள் என்பதாகும். பகைவரது இரத்தத்தைப் பிசைந்த சோற்றுப் பிண்டங்களால் இந்தக் கொற்றவையை வழிபட்டது கூறப்படுகின்றது. அதாவது, பிரிந்த தலைவன் மீண்டும் வந்து சேர்ந்து பின் பிரியாது உறைய வேண்டும் என்று கொற்றவையை வழிபட்டிருக்கின்றனர். பிற்காலத்தில் கொற்றவையைத் துர்க்கையோடு மாறுபட வழங்கினர் என சு.வித்தியானந்தன் குறிப்பிடுவார்.

போர்க்களத்தே கடுஞ்சினத்துடன் ஓதப்படும் மந்திர முழக்கத்துடன் அருந்திறற் கடவுளுக்குக் குருதியுட் கலந்து படைக்கப்பெறும் சோற்றுத்திரளை காக்கைக்கு வீசும்போது, அதனைப் பேயும் தன்கையால் தொட அஞ்சி நடுங்கும்; அவ்வுணவின்மேல் எறும்பு மொய்ப்பதில்லை ஆகிய வியப்புடைய வரிகள் பதிற்றுப்பத்திற் குறிக்கப்பெற்றுள்ளன. (க. வெள்ளைவாரணன்)

பதிற்றுப்பத்தில் அயிரைமலை மட்டுமன்றி "கடவுட் பெயரிய கானமொடு கல்லென" என்ற பாடலடியால் விந்தியமலையும் குறிக்கப்படுகின்றது. இது இமயமலையை அடுத்து எண்ணத்தகும் சிறப்புடையது என்பர். இம்மலையும் இதனையடுத்த காடும் 'விந்தை' என்னும் பெயருடையது. இது கொற்றவையின் பெயராகும். "அந்தரம் செல்வோர் அந்தரி இருந்த" என்ற மணிமேகலையின் அடி இதனை உறுதி செய்கின்றது. (அந்தரி - கொற்றவை)

கொள்ளக்கொள்ளக் குறைவுபடாச் செல்வம் பெற்றிருப்பதால் கடலை ஒப்பானவனே. பலவான விண்மின்களுக்கிடையில் பொலிவாக தோன்றும் திங்களைப்போல நீயும் நின் அரச சுற்றத்தோடு, அவர்களுக்கும் மேம்பட்டுப் பொலிவோடு தோன்றுகின்றாய். அயிரை மலையின்கண் கோயில் கொண்டிருக்கும் கொற்றவையை வழிபட்டு, கடலின் செருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியுமாறு வேலை ஏவியும் பகைவரது வலிமையும் அழித்தும் விளங்குவாய். பதிற்றுப்பத்து (90) "கள்ளும் கண்ணியும் கையுறையாக" (அகம் மருதம் - 156)

*"பாய்குழை நீலம் பகலாகத் தையினாள்*
*குவளை குழைக்காதின் கோலச் செவியின்*
*இவள்செரீஇ நான்கு விழிபடைத்தாள் என்று*
*நெற்றி விழியாநிறைதிலகம் இட்டாளே*
*கொற்றவைகோலங் கொண்டோர் பெண்"* *(பரிபாடல் 11, 96 - 100 வரி)*

*உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்*
*சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்*
*கழல்கட் கூகையோடு கடும்பாம்பு தூங்க*
*பெருமுலை யலைக்குங் காதிற் பிணற்மோட்*
*டுரகெழு செல்வி னஞ்சுவரு பேய்மகள்*
*(திருமுருகாற்றுப்படை 47 - 51 வரி)*

அகநானூற்றுப் பாடலில் சுவர்ப்பாவை வழிபாடு கூறப்பட்டுள்ளது. அழகிய முத்துவடம் புனைந்து செய்த அழகு அமைந்த, வலிய சுவரின் கண்ணுள்ள பாவைக்குப் பலிகொடுத்தல் கூறப்பட்டுள்ளது. பாவை என்றால் குமரி என்று கூறப்படுகின்றது. குமரிக்கோலம் கொற்றவையைச் சுட்டவருகின்றது. ("தாளிய மலர்பல" - அகம்: 369) புறனநூற்றுச் செய்யுளொன்று கள வேள்வி பற்றிக் குறிப்பிடுகின்றது. பகைவர்களுடைய தலையைக் கொய்து, அதனால் அடுப்பு செய்து, விறகிட்டு எரித்து, ஈனாத பேய்கள் தோண்டித் துழாவிச் சமைத்த உணவை, மாக்களும் உண்ணமறுத்த ஊண் சேறாகிய பிண்டத்தைப் பேய்மகன் எடுத்துக் கொற்றவைக்குப் படைத்தான் என்று போர்க்கள வேள்வி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ("விசிபிணித் தடாரி விம்மென ஓறறி" - புறம் : 372)

தலைவனின் பிரிவைத் தாங்கமுடியாத தலைவி, பிரிந்த தலைவன் மீண்டும் வந்து சேர்ந்த பின்னர் பிரியாது உறையவேண்டுமென்று கொற்றவையை வழிபடுகின்றாள்.

*"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்*
*கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்" (குறுந்தொகை – 218)*

நரபலி இடும் பீடிகையும், கடனாக அறுத்த தலைகள் தொங்கும் நெடுமரமும் மணிமேகலையில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

*"தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்து புறஞ்சுற்றிய" (மணிமேகலை 6, 51-53)*

மோடியின் முன் தன்தலையைத் தானே அரிந்து வைத்தலையும், அணங்காகிய கொற்றவை யின் கையில் அரிந்த தலையைக் கொடுத்தலையும், பரணிப்பாட்டுக்கள் கூறுகின்றன.

*" மோடி முன்தலையை வைப்பரே முடி"*

பேய்கள் எல்லாம் காளியைச் சுற்றியிருந்தன. அப்போது தமது பசிக் கொடுமையினை முதுபேய் காளிக்குக் கூறியது. தாம் இமயத்தில் இருந்து வரும்பொழுது கலிங்கத்தில் சில தீய நிமித்தங்களைக் கண்டதாகக் கூறி, தமக்கு ஏற்படும் சில நற்குறிகளையும் கூறின. அது கேட்ட காளி "உங்களுக்கேற்பட்ட குறியும் கலிங்கத்தேற்பட்ட குறியும் நன்மை விளைவிப்பனவே. குலோத்துங்கன் யானைகள் போருக்குத் தயாராகுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பரணிப் போர் இடம்பெறப் போகின்றது. அப்போது பேய்கள் கூழ்குடிக்கத் தயாராகு கின்றன'' என்று கலிங்கத்துப் பரணி, பரணிக் கூழைப் பெறுமாறு கூறிய பேய்களின் தலைவியாகிய காளி பற்றிவிபரிக்கின்றது.

சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவை பற்றிய விரிவான விளக்கம் இடம் பெறுகின்றது. ஆறலைக் கள்வர்கள் என்று சுட்டப்படும் எயினர்கள் வணங்கும் கடவுளாக அவள் சுட்டப்படுகின்றாள். எயினர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து வருவதற்காக கொற்றவையை வழிபட்டுச் சென்றிருக்கின்றனர். கவர்ந்து வந்த பின்னர் கொற்றவைக்குப் பலிகொடுத்து வணங்கியிருக்கின்றனர். எனவேதான், எயினர்க்கு வெற்றி தருபவள் கொற்றவை என்ற குறிப்பு வேட்டுவ வரியில் வருகின்றது. கொற்றவைக் கோயில் ஐயைக் கோட்டம் என்று அழைக்கப்படுகின்றது. பழுங் கடனுற்ற முழங்குவாய்ச் சாலினி என்று அவள் வர்ணிக்கப்படுகின்றாள். (சிலம்பு - 74). சாலினி கண்ணகியைத் தெய்வமாகக் கூறுவதால் ''இவள் துர்க்கையாகவே பிறந்தாள்'' என அரும்பதவுரையாசிரியர் கூறுகின்றார். கொற்றவைக்கு எயினர் குருதிப்பலி கொடுப்பது போலவே கொற்றவையின் கூறாகக் கருதப்பட்ட கண்ணகிக்கும் அயிரவரைப் வெற்றிவேற் சோழன் பலிகொடுத்திருக்கின்றான். சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவையையும் குன்றக் குரவையில் முருகனையும் வேடுவர்கள் வணங்கியிருப்பதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். மேலும், கொற்றவை பின்வரும் பெயர்களால் போற்றப்படுகின்றாள்.

*அமரி குமரி கவுரி சமரி*
*சூலி நீலி மாலவற்கு இளங்கினை*
*ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்*
*பாய்கலைப் பாவை பைந்தொடிப்பாவை*
*ஆய்கலைப் பாவை அருங்கல்ப பாவை*
*ஆடியல்கொள்கை அந்தரி கோலம் (சிலம்பு)*

*விழிநுதற் குமரி விண்ணோர் பாவை*
*மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி*
*நுதல் கழித்து விழித்த இமையா நாட்டத்து*
*பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி*
*நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து*
*அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்*
*துளைஎயிற்று உரகக் கச்சுடை முலைச்சி*
*வளையுடையிற் கையிற் சூலமேந்தி*
*கரியின் உரிவை போர்த்துஅணங்கு ஆகிய*
*வரியின் உரிவை மேகலையாட்டி*
*சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி*
*வலம்படுகொற்றத்து வாய்வாட் கொற்றவை (சிலம்பு 12; 54 – 64)*

துணங்கையம் செல்வி எனப் பெரும்பாணாற்றுப்படையும், அந்தரி என மணிமேகலையும் கடல் கெழு செல்வி, கான் அமர் செல்வி என அகனாறும், பெருங்காட்டுக் கொற்றி எனக் கலித்தொகையும் மலைமகள் எனத் திருமுரகாற்றுப்படையும் வனதுர்க்கை என பெரும்பாணாற்றுப்படையும் குறிப்பிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவையைச் சுற்றி இரு சிங்கங்கள் உள்ளன. தெய்வமான பூதமாதா, சிலம்பி வந்த நூல் போன்ற துகிலை உடுத்துள்ளாள். பாம்புறையும் இடத்திலும் கூகையுடனும் இருந்துள்ளாள். சிலம்பில் நூல் போன்ற ஆடை உடுத்திருந்ததாகக் கூறுப்படுகின்றது. "பாம்புறை மருதி னோங்குசினை நீழற்" (பெரும்பாணாற்றுப்படை 232 - 236) எல்லாம் உணர்ந்திருக்கும் பெரிய காட்டில் கொற்றவைக்கு அவை அறியாதன சில உண்டாக பேய் நொடி சொன்னாற்போல, உன்னுடைய பொய்களை எனக்குச் சொல்லாதே என்றாள் தலைவி.

> "பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்
> நொடித்தாங்கு வருந்தனின் வஞ்சமுரைத்து" *(கலித்தொகை – 533)*

பதிற்றுப்பத்தில் "கடவுட் பெரிய கானம்" என்ற வரியினூடாக கடவுளாகிய கொற்றவை உறையும் விந்திய மலையிலுறையும் துர்க்கை என்று பொருள் கூறப்பட்டுள்ளது. பேய்களின் தலைவியாகிய காளி பாலை நிலக் காட்டில் உறைகின்றாள். இங்கு கதிரவனின் ஒளியால் பொரிபொரியாகப் போன காரை, சூரை முதலான செடிகளும், கொடிகளும், மரங்களுமே காட்சியளிக்கின்றன. பருந்துகளும் புறாக்களும் மான்களும் நாக இரத்தினங்களும் மூங்கில் முத்துக்களும் ஆங்காங்கு காணப்படுகின்றன. பாம்புகள் தலையை நீட்டுகின்றன. இவ்வாறான கொடுமை காணப்படும் இடத்தில் காளி உறைவதாக கலிங்கத்துப் பரணி விபரிக்கின்றது.

இவ்வாறாக போற்றப்பட்டுவந்த கொற்றவை வழிபாடானது இன்று காளி வழிபாடாகவும், துர்க்கை வழிபாடாகவும் மக்கள் மத்தியில் சிறப்புப்பெறுகின்றது. காளி வழிபாட்டுச் சடங்கானது இரண்டு பத்ததி முறைகளின் அடிப்படையில் இடம்பெறுகின்றது.

1. அடையல் பத்ததி
2. கும்ப பத்ததி

அடையல் பத்ததியில் காளிக்கும் பட்டறைக்கும் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இங்கு நோர்ப்பும் பலியும் சடங்கின் நிறைவாக அமைகின்றது. மாரியம்மன் அகவலில், "சித்திரவேல் விழியானவளும் நீயே, ராட்சதனைக் கொலை செய்தவளும் நீயே, ஈரேழுலோகம் ஆண்டவளும் நீயே, சத்தி குலத்தில் உதித்தவளும் நீயே, தாயென்னும் மகமாரி நீயே..." என்று அவளுடைய குணம் விளக்கப்படுகின்றது. எனவே, சங்க காலக் கொற்றவை வழிபாடு காலத்துக்குக்காலம் மாற்றம்பெற்று, இன்றும் மக்கள் மத்தியில் காளி எனும் வடிவிலும் ஏனைய பெண் தெய்வங்களுடன் இணைந்தும் அமைகின்றது.

**உசாவியவை**

சாமி.பி.எல். (1975) **தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு,** சென்னை.

கைலாசபதி.க (1999) **பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,** சென்னை

பரமசிவம். தெ (1995) **தெய்வங்களும் சமூக மரபுகளும்,** சென்னை.

வித்தியானந்தன்.சு (2003) **தமிழர் சால்பு (சங்க காலம்),** குமரன் புத்தக இல்லம்.

வெள்ளைவாரணன். க (வி.தெ), **சங்க இலக்கியத்தில் சமய நோக்கு.**

**சங்ககாலக் கொற்றவை** (வலைத்தளத்திலிருந்து பெறப்பட்ட கட்டுரை)

**சங்ககாலக் கொற்றவை சமூகவியல் ஆய்வு** (வலைத்தளத்திலிருந்து பெறப்பட்ட கட்டுரை)

**சிலம்பில் பத்தினி வழிபாடு** (வலைத்தளத்திலிருந்து பெறப்பட்ட கட்டுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள் ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு

இராசையா மகேஸ்வரன்
கல்விசார் பிரதி நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

விளையாட்டினால் ஒருவருக்கு மனமகிழ்ச்சியும், உடல்வளர்ச்சியும், உடலுக்குப் புத்துணர்வும் ஏற்படுகின்றன. மனிதனுக்கு உழைப்பும், உறக்கமும் போலவே விளையாட்டு, திளைப்பு, மகிழ்ச்சி என்பனவும் முக்கியமானதாகும். மனிதர்கள் மட்டுமன்றி சகல உயிர்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றன. விலங்குகளும் பறவைகளும் கூட விளையாடுவதைக் காண்கின்றோம். தமிழ் இலக்கியத்தில், பழந்தமிழ் மன்னர்கள் காலந்தொட்டு வீர விளையாட்டுக்கள் இருந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரபலமான பல விளையாட்டுக்கள் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் சங்ககாலத்திலேயே ஆரம்பமாகியுள்ளது. சங்ககால தமிழ் இலக்கியங்களில், விளையாட்டுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்கத்தமிழ் இலக்கியம் எட்டுத் தொகையையும், பத்துப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. கி.மு. 776 இல் ஒலிம்பிக் ஆரம்பித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்துவந்துள்ளது. கி.மு. 339 இல் நிலநடுக்கம் காரணமாக அரங்கம் அழிந்ததில் பலர் இறந்தனர். இதனால் ஒலிம்பிக் நிறுத்தப்பட்டு மீண்டும் 1896 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, ஆரம்ப ஒலிம்பிக் சங்க காலத்தில் நடந்துள்ளன. சங்கக்கால விளையாட்டுக்கள் பற்றிச் சங்கப் பாடல்களிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. தெரு, மறைவிடம், மன்றம், செய்குன்று, இளமரக்கா என்னும் பூங்கா, பந்தல், பீளிக்கறை, நீர்நிலை, நெடுமணல்பரப்பு, காவற்காடு, கனிமலர்ச்சோலை, களம் முதலான பகுதிகளில் சங்ககால மக்கள் விளையாடியதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தமிழரின் ஆயகலைகள் அறுபத்துநான்கில் குதிரையேற்றமும் ஒன்றாகும். இது வளர்ச்சிபெற்ற சூதாட்டப் போட்டியாகவும் இன்று காணப்படுறது.

*ஒண்கொடி மகளிர் வண்டல் சயநம*
*நொண்டி அன்ன என்நலம் கந்து*
*கொண்டனை சென்மோ மகிழ்த நின் சூளே*

இங்கு ஒள்ளிய வளையலை அணிந்த பெண்கள் வண்டற் பாவை செய்து விளையாடுவதை குறிப்பிடுகின்றது. (குறுந்தொகை 238: 3)

புறநானூற்றில் ஒரை ஆயத்து ஒண்தொடி மகளின், ஓரை ஆயம் ஒரு விளையாட்டு வகை கைவளையல் அணிந்த மகளிர் விளையாட (புறநானூறு 176: 2), குறுந்தொகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுண்டலையும் பந்து விளையாடலையும் தன்னோடு கூடி விளையாடும் ஆய மகளிருடன் செய்யாமல் என (396:2 பாலையில்) கூறப்பட்டுள்ளது.

விளையாட்டாயமொரு (நன்றிணை 68) விளையாட்டு ஆயமொரு வெணமணல் அழுத்தி (நற்றிணை 172) ஒருங்கு விளையாட (கலித்தொகை 711.6) மடவரன் மகளிரோடு விளையாடி (பெரும்பாணாற்றுப்படை38) ஆகியவற்றில் விளையாட்டு பற்றிக் கூறப்படுகின்றது. இவற்றை அக விளையாட்டுக்கள், புறவிளையாட்டுக்கள் (indoor outdoor games) என வகைப்படுத்தலாம்.

தொல்காப்பியத்தில், செல்வம் பலனே புணர்வு விளையாட்டென்று எல்லல் நீத்த உவகை நான்கே எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் இன்பம் தருவதே விளையாட்டாக நோக்கலாம். சங்ககால இலக்கியங்களில் கூறப்படும் விளையாட்டுக்களை இன்றைய விளையாட்டுக்களோடு ஒப்பிட்டு நோக்குதல் அவசியமானதாகும்.

## ஆய்வுப் பிரச்சினை

தற்காலத்தில், சட்டதிட்டங்களுடன் விளையாடப்படும் விளையாட்டுக்கள் கூட ஆரம்ப காலத்தில் நாட்டுப்புற விளையாட்டுகளாக இருந்தே வளர்ச்சியடைந்ததன. பின்னர் இன்று வரைக்கும் காலத்துக்காலம், காலத்துக்கேற்ப விதிமுறைகள் அமைக்கப்பட்டு தற்போது விளையாடப்பட்டு வருகின்றன. விளையாட்டுக்களின் ஆரம்பகாலம் ஆவணப் படுத்தப்படாமல் வரலாறாகவே கூறப்படுகிறது. ஆனால், சங்க இலக்கியத்தில் இதற்கான ஆவணப்படுத்தலையும், பதிவினையும் காணமுடிகின்றது. இவற்றில் பல ஆதாரத்துடன் எடுத்து காட்டப்படாமலுள்ளன.

## ஆய்வின் நோக்கம்

சங்ககால இலக்கியங்களில் தற்கால விளையாட்டுகளின் ஆதாரங்களைத் தேடுவதும், ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி இப் பதிவினை ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறை

வரலாற்று மீட்டுருவாக்க அணுகுமுறைக் கோட்பாடு கொண்டு சங்க இலக்கியமான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றிலிருந்து பொதுவான விளையாட்டுக்களையும், குறிப்பாக தற்போது சட்டதிட்டங்களுடன் விளையாடும் விளையாட்டுக்களின் ஆரம்பத் தினையும் தேடிப் பதிவு செய்து ஆவணப்படுத்துவதோடு, இரண்டாம்நிலை ஆதாரங்களின் துணைக்கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வில் கண்டவை

### புனலாடுதல் நீச்சல் (swimming)

நீராடி மகிழ்தல் என்பதே புனலாடுதலாகும். இது தற்போது பல பெயர்களைக் கொண்ட நீச்சல் தடாக விளையாட்டாகக் காணப்படுகின்றது. நீச்சல் என்பது நீரினுள் எந்தவிதக் கருவிகளும் இல்லாமல் பக்க உறுப்புகளின் அசைவின் மூலம் மிதந்து, நகரும் செயலாகும். நீச்சல் பழக்கம் புத்துணர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தருகிறது. குளிப்பதற்கும், மீன்பிடிப்பதற்கும், புத்துணர்ச்சிக்கும், உடற்பயிற்சிக்கும் மற்றும் விளையாட்டாகவும் நீச்சல் பழக்கம் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் படர்பிறை (Synchonised

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Swiminig) என்பதும் நீச்சல் போட்டிகளில் காணப்படும் ஒரு வகை நீரில் ஆடல் எனும் குழுவாக பங்குபற்றும் போட்டியாகும். வரலாற்றிற்கு முந்திய காலமான கற்காலந்தொட்டே நீச்சல் கலை மனிதர்களிடம் இருந்ததற்கான ஆதாரங்கள் 7000 ஆண்டுகள் பழமையான குகை ஓவியங்கள் மூலம் காணக்கிடைக்கின்றன. கில்கமெஷ் காப்பியம், இலியட்,ஒடிசி மற்றும் விவிலியம் போன்ற எழுத்துபூர்வமான ஆதாரங்கள் கி.மு. 2000 இல் இருந்து கிடைக்கின்றன. ஆண்களும், பெண்களும் பங்குபற்றும் இப் போட்டி நிகழ்வாக விளங்கும் நீச்சல், சங்க காலத்தில் மருதச் செய்யுள்களில் காணப்படுகின்றது. பரிபாடல் வையைப் பற்றிய பாடலில் புனலாடல் பற்றிக் காட்டப்பட்டுள்ளது. வையைப் புனலின் வனப்பு

*இறு வரை புரையுமாறு இருகரை ஏமாத்து,*
*வரை புரை உருவின் நுரை பல சுமந்து,*
*பூ வேய்ந்து, பொழில் பரந்து*
*துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்,*
*அலர் தண் தாரவர், காதில்*
*தளிர் செரீஇ, கண்ணி பறித்து*
*கைவளை, ஆழி, தொய்யகம், புனை துகில்,*
*மேகலை, காஞ்சி, வாகுவலயம்,*
*எல்லாம் கவரும் இயல்பிற்றாய்: தென்னவன்*
*ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் மாறுஅட்ட*
*தானையான் வையை வனப்பு*

நீரால் அரிக்கப்பட்டு அடிப்பக்கம் இற்றுப்போன மலைபோல, நீரால் அரிக்கப்பட்டுக் குத்துண்டு நிற்கும் இருகரைகளாகிய காவலுக்குள் அடக்கி, வெள்ளிப் பனிமலையின் சிகரங்களைப் போன்ற வடிவம் உடைய நுரைகள் பலவற்றையும் சுமந்துகொண்டு, பூவினால் மூடப்பட்டுச் சோலைகளிடையே பரந்து வந்தது வையை, மேலும், அவ்வையை, தன்னிடத்தில் விரைந்து நீர் விளையாடலைச் செய்கின்ற ஆராய்ந்தணிந்த மலர் மாலையினையுடைய பெண்டிரின் காதுகளில் தளிரைச் செருகியும், மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த ஆடவரின் தலையில் சூடிய தலைமாலைகளைப் பறித்தும், மகளிரின் கைகளில் அணிந்த வளையல், மோதிரம், தலையில் அணிந்த தலைப்பாகை, உடுத்திய ஆடை, அந்த ஆடையின் உள்ளே அணியப்படும் மேகலை, ஆடையின் புறத்தே அணியும் காஞ்சி ஆகியவற்றையும் கவர்ந்து கொள்ளும் இயல்பினையுடையதாய, பகைவரைக் கொன்ற படையினுடைய பாண்டியனுக்குரிய வையையாற்றில் வந்த புதுவெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன், பகைவருடைய தோல்விக்குரிய நிலத்தில் புகுந்து அவர்களை வென்று அவர் நாட்டுப் பொருள்களைக் கவர்ந்து வருதலை ஒத்ததால் வையையின் வனப்பு, பாண்டியனின் இயல்பை ஒத்தது எனக் கூறப்படுகின்றது.

*தலைப்புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்*
*கடைப் புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்*
*புன்னகைவிட்டு புனலோடு ஒழுகின்*
*ஈண்டும் வருகுவன் போலும் குறுந்தொகையில் **(222:1** குறிஞ்சி**)***

தலைவியும் தோழியும் ஆடும் புனல் விளையாட்டில் தலைவன் கண்டறிந்தமை இப்பாடலிற் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புனல்நயந்து ஆடும் அத்தி அணிநயந்து*
*காவியி கொண்டு ஒயித் தாங்கும் அன்னோ என*
*(அகநானூற்றில் 376 மருதம் (10-11)*

கூறப்படுகிறது.

**பண்ணை பாய்தல்** (Diving)

மகளிர்க் காதில் தளிரைச் சொருகும் வழக்கம் உண்டு என்பதனை, வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர் (திருமுருகாற்றுப்படை - 31) என்பதால் அறியலாம். மூழ்கி நீராடி எழும் போது, நீரில் அடித்து வரப்படும் தளிர் காதில் வந்து செருகிக் கொள்ளுமாதலின், வையை, மகளிர் காதில் தளிரைச் சொருகியது என்னும் கற்பனையை ஆசிரியர் புலப்படுத்தினார். இதில் கிழ் நீச்சல் - அதாவது மேலே இருந்து குதித்து கிணற்றின் கீழே சென்று மணல் எடுத்து வருவதை தொடித்தலை விழத்தண்டுன்றினார் என்றும் புலவர் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் பலரும் சூழ்ந்து நிற்கக் கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் கொண்டு மேலேவந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய கல்லா இளமைப் பருவத்தினை நினைந்து கழிவிரக்கப்படுகிறார், தொடித்தலை விழுத்தண்டுன்றினார் என்னும் புலவர்.

*இனிநினைதந் திரக்க மாகின்று திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத.*
*தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து*
*தழுவுவழித் தழீஅத் தூங்குவழித் தூங்கி*
*மறையென லறியா மாயமி லாயமொடு*

*உயர்சினை மருதத்துத் துறையுறத் தாழ்ந்து*
*நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்*
*கரையவர் மருளத் திரயகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*
*குளித்து மணற்கொண்ட கல்லா இளமை புறம். 243*

நற்றிணையில் (68இல்) ஆற்று நீர் விளையாட்டுப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**ஈட்டி எய்தல்** (Spear shot- Javelin- Arrow shot)

ஈட்டி எறிதல் என்பது ஈட்டி அல்லது ஈட்டி போன்ற ஒன்றை எவ்வளவு தூரம் எறிய முடியும் என்று பார்க்கும் ஒரு தட கள விளையாட்டு ஆகும். ஒவ்வொரு போட்டியாளரும் ஒரு தட களத்தில் ஓடிவந்து அந்த விசையுடன் எறிவர். ஒவ்வொருவருக்கும் மூன்று சுற்றுக்கள் தரப்படும். ஈட்டியின் முனை முதலில் நிலத்தைக் குத்தினால், அந்த முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். ஈட்டி கிடையாக போய் விழுந்தால், ஈட்டியின் இறுதி முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். எந்தப் போட்டியாளர் அதிக தூரம் எறிகிறாரோ, அவரே வெற்றியாளர். இவ்விளையாட்டானது ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும், தென் ஆசிய (சாக்) விளையாட்டு போட்டியிலும் உண்டு. இது போலத் தேசியப் போட்டிகள் மாகாணப் போட்டிகளிலும் ஈட்டி எறிதல் போட்டி உண்டு. சங்க கால வேடுவர்கள் ஈட்டி எய்தனர். மன்னர்களே ஈட்டி எய்தலை வீரமிக்கதாக கருதினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றில் வேட்டையாடச் சென்ற இடத்தில் ஈட்டி எறிதலைக் கண்ட புலவர் பெருமானுக்குப் பெரும்பரிசினை அளித்த செய்தி இடம் பெற்றுள்ளது

**உடற்பயிற்சி ஆட்டம் கண்காட்சி பெலே டான்ஸ்** (Tril Play)

விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப விழாவிலும், இறுதி விழாவிலும் நடைப்பெறும். ஆட்டங்களுடன் போட்டியாகவும் நடைபெறுகிள்றது. சில இடங்களில் பேண்ட் வாத்தியப் போட்டியாகவும் நடைபெறுகின்றது. சங்க காலத்தில் மன்னர்கள் கூத்தர் விறலியர்களின் பாடலையும், ஆடலையும் கேட்டும் கண்டும் இணைந்து பங்குபற்றியவர்களுக்கு பெரும் பரிசு அளித்துள்ளனர். துணங்கை என்பது இன்னொரு கூத்தாகும், விழாவின் போது தெருக்களில் துணங்கை ஆடினர். இதற்கு ஏற்ப முழவு ஒலித்தது.

*முழவு இமிழும் அகலாங்கண்*
*விழவு நின்ற வியன்மறுகில்*
*துணங்கை (மதுரை.327)*

அத்துணங்கைக் கூத்தில் மகளிர் பங்கு பெறுவர். ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஆடுவர். மள்ளர் குழீஇய விழவினானும், மகளிர் தழீஇய துணங்கையானும் யாண்டும் காணேன் மாண்தக்கோனை என்னும் ஆதிமந்தியாரின் பாடல் வரிகள் சான்றாகும். போர்க் கொடுமையால் நெடுஞ்செழியனின் பகைப்புல மகளிர் தாம் வழக்கமாக ஆடும் துணங்கையை மறந்திருந்தனராம். (மதுரை. 159-160) இங்ஙனம் நடக்கும் துணங்கையில் அரசரும் கலந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

**சதுரங்கம்** (chess)

சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய விளையாட்டுகளில் ஒன்று வட்டாடல். திருவள்ளுவர்

கல்லாடிக் கோட்டி கொளல்

அரங்கின்றி வட்டாடுதலை யொக்கும் என்கிறார் இளங்கீரனார் பாடிய நற்றிணையில் வேப்பமரத்து நிழலில் நெல்லிக்காயை வட்டமாக கொண்டு ஆடுவது பற்றி,

*பொரியயரை வேம்பின் புள்ளி நிழல்*
*கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்*
*கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்*
*வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர் (நற். 3.2-5)*

பறையில் உதிர்ந்து கிடந்த பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் வட்டுப்போலத் தோன்றிய பாலை நிலம்பற்றி அகநானூறும் (5.9-10) குறிப்பிடுகின்றது. சதுரங்கத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், இந்தியாவில் விளையாடப்பட்டு வந்த சதுரங்கம் என்னும் விளையாட்டிலிருந்தே இது வளர்ச்சியடைந்தது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இங்கிருந்து மேற்கே ஐரோப்பாவுக்கும், கிழக்கே கொரியா வரையும் பல வேறுபாடுகளுடன் பரவியது. இது மங்கோலியா வழியாக ரஷ்யாவுக்குப் பரவியது. அங்கே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளையாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து பாரசீகத்துக்குப் பரவிய இவ்விளையாட்டு, பாரசீகத்தை இஸ்லாமியர்கள் கைப்பற்றிய பின்னர் இஸ்லாமிய நாடுகள் பலவற்றிலும் பரவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விளையாட்டில் மிகவும் சிறப்புற்றிருந்த விளையாட்டு வட்டாடல் ( வட்டாடல் - வட்டை உருட்டி சூதாடுதல்) இதற்காக இழைத்துக் காய்களை நகர்த்தி விளையாடும் இவ்வகை ஆட்டம் ஒருவகைச் சூதாட்டத்தை ஒத்தது. இவ் விளையாட்டைத் திருவள்ளுவர்,

*அரங்குஇன்றி வட்டுஆடி அற்றேநிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல் (401)*

ஆகவே, இந்த வட்டாடல் விளையாட்டு குறள் காலத்து விளையாட்டு என்பது தெரிய வருகிறது. எனவே, பழந்தமிழரும் விளையாட்டுகளிலும் அறிவியல் வழி சிந்தனை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே தமிழருக்கு மரபு சார்ந்த பெருமையாகிறது.

**பந்தாடுதல் - கோகோ ஏன்ட்போல்** (Handball)

நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய மகளிர் வழக்கமாக இருந்தது மாடி வீடுகளில் - மேல் மாடத்தில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

*பீலி மஞ்ஞையின் இயலிக் கால*
*தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை*
*வான்தோய் மாடத்து வரிப்பந் தசைஇ (பெரும்பாண். 331.333)*

கைப்பந்தாடும் (ஏன்ட்போல்) பெண்களைப்பற்றிப் புறநானூற்றிலும் கூறப்படுகின்றது.

*வரிப்பனை பந்தோடு பாவைத்தூங்க (திருமுருகாற்றுப்படை 68)*
*பந்தோடு பெயரும் பரிவி லாட்டி (நற்றிணை 140 6-7)*
*பந்து நிலத்தி எறிந்து பாவை நீக்கி (நற்றிணை 17 9-2)*
*பாலும் உண்ணால் பந்துடன்*
*விளையாடு ஆலயமொரு மேவார் (குறுந்தொகை 396 1 )*

எனக் குறிப்பிடப்படுகின்றன.

புராண காலந்தொட்டு திருமாலின் அவதாரமாகிய கண்ணன் (கிருஷ்ணன்) கோபியர்களுடன் வட்ட வடிவில் நின்று விளையாடியது பற்றிக் கூறப்படுகின்றன. அதன் வளர்ச்சியே இன்றைய கோ கோ விளையாட்டு. இயற்கையாகவே இளஞ்சிறார்கள் ஒருவரை மற்றருவர் துரத்திப் பிடித்து, விளையாடுவர். அதன் வளர்ச்சியுற்ற நிலையே கோ கோ விளையாட்டு என்று வல்லுனர்கள் கருதுகின்றனர். இன்று இந்தியா ஆசியா என்று பரந்து பட்ட நிலையில் இவ்விளையாட்டு விளையாடப்பட்டாலும், தொடக்கம் காலத்தில் மராட்டிய மாநிலத்தில் தொடக்கப் பெற்று வந்துள்ளது. நற்றிணையில் மகளிர் கைப்பந்து, காற்பந்து விளையாட்டுகள் பற்றிக் (நற்றிணை 104, 324) குறிப்பிடப்பட்டுள்ளது.

**மணிவட்டு (ஆக்கி -** Hockey**)**

மணிவட்டு உருண்டுகொண்டிருந்தது. அதனைக் குணிலால் அடித்தனர். அதனால் அந்த மணிவட்டு மேலும் வேகமாக உருண்டோடியது. இதுதான் இந்த விளையாட்டைப் பற்றிச் சொல்லப்படும் செய்தி. குணில் என்பது நுனி வளைந்திருக்கும் தடி. துரத்தல் என்பது தட்டி ஓட்டுதல். வளைந்த தடியால் உருளும் பந்தை அடித்தனர். இது இக்கால ஹாக்கி விளையாட்டைப் போல அக்காலத்தில் ஆடப்பட்ட விளையாட்டு.சேர மன்னர் இமயத்தில் வில் பொறித்த செய்தியை, ஆரிய மன்னர் இழிவுபடுத்திப் பேசிய செய்தியைக் கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குட்டுவன் அவர்களுக்குப் பாடம் புகட்ட வடநாட்டின்மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தான். கண்ணகிக்குக் கல் இமயமலையிலிருந்து கொண்டுவரலாம் என்று கூறக் கேட்டதும் அவன் எண்ணத்துடிப்பு மேலும் வேகமாகப் பாய்ந்தது. இது உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்தாற் போல் வேகமாகச் சென்றது எனக் கூறப்பட்டுள்ளது

**வட்டுநா விளையாட்டு (கோல்ப்-** Golfe**)**

வட்டைக் குணிலால் அடித்த குணில்வட்டு விளையாட்டைப் போல நாக்குப் போன்ற தடியால் வட்டை அடித்த விளையாட்டு நாவட்டு விளையாட்டு அல்லது வட்டுநா விளையாட்டு ஆகும். குணில் விளையாட்டில் மணிவட்டை அடித்தனர். இந்த விளையாட்டில் அரக்கினால் சிவப்புப் புள்ளிகள் வைக்கப்பட்டிருந்த வட்டை அடித்தனர். குணில் விளையாட்டில் அடிக்கும் கோலாகக் குணில் பயன்படுத்தப்பட்டது. இந்த விளையாட்டில் நாக்கு போன்ற தடி பயன்படுத்தப்பட்டது. இக்காலக் கோல்ப் விளையாட்டில் இதுபோன்ற தடி பயன்படுத்தப்படுகிறது. இது சங்ககால நாத்தடி விளையாட்டு ஆகும்.

*வினை தலைப்படுத்தல் செல்லா நினைவுடன்*
*முளிந்த ஓனம் முதனைதயல் அம்காட்டு*
*பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி*
*மோட்டு அரும்பாறை ஈட்டுவட்டு ஏறப்,*
*உதிர்வன படூ உம் கதிர் தெறு கவாஅன்*
*மாய்ந்த போல மழகு துணை தேற்றி (அகநானூறு பாலை 5 (7-12))*

எனக் கூறப்படுகின்றது.

**மற்போர்** (wrestling)

மற்போர் என்பது இரண்டு ஆட்கள் ஆயுதங்கள் இல்லாமல் ஈடுபடும் ஒருவகைப் போர் அல்லது தற்காப்புக் கலை ஆகும். இது உலகின் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயும் உள்ள ஒரு கலை வடிவம். இந்திய மரபிலும், தமிழர் மரபிலும் மற்போர் சிறப்புற்று இருந்தது. "மல்" என்பதற்கு வலிமை, மற்றழில், எனப் பொருள் வழங்குகின்றன இம் மற்போர் தமிழ் இலக்கியங்களில் 'மல்லாடல்' என வழங்கப்படுகின்றது. மற்போர் இன்று ஒரு விளையாட்டாக, அரங்கக் கலையாகப் பெரிதும் பயிலப்படுகிறது. இது ஓர் ஒலிம்பிக் விளையாட்டும் ஆகும். மல்லாடல் பிற்காலத்தில் குஸ்தி என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது. மற்போராளிகளைப் பயில்வான் என்றும் குறிப்பர். மற்போர் விளையாட்டு நம்நாட்டில் நெடுங்காலமாகப் பயிலப்பட்டு வருகிறது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் மற்போரில் சிறந்தவனாக இருந்ததால் அவனுக்குச் சிறப்பு பெயராக மாமல்லன் என்ற பெயர் ஏற்பட்டது. அவன் பெயராலே மாமல்லபுரம் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்டது.

புறநானூற்றில் மற்போர் புரிந்த மன்னன் எனப் புலவர் சாத்தந்தையார் பாடியுள்ளார். (புறநானூறு 80) சோழன் போர்வைக் கோப்பெரு நற்றின்றி இவன் தித்தன் என்னும் சோழ மன்னன் மகன் (புறநானூறு)

*இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்*
*மைந்துடை மல்லன் மதவலி முருக்கி*
*ஒருகால் மார்பு ஒதுங்கின்றே ஒருகால்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரு தார் தாங்கிப் பின் ஒதுங் கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும், வெல்போர்ப்
பொரல் அரம் தித்தன் காண்கதில் அம்ம
பசித்துப் பணைமுயலும் யானை போல,
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லன் கடந்து அடு நிலையே

மல்லன் (மற்போர்வீரன்) ஆற்றலை அழித்துத் தன் ஒரு காலை அவன் மார்பிலும், மற்றரு காலை முதுகுப்புறத்திலும் அழுத்தி வருந்தச் செய்தவன் பெருநற்கிள்ளி அவன். பசித்துச் செல்லும் யானை தன்முன்னே எதிர்ப்பட்ட மூங்கில் தண்டினை ஒடித்துத்தள்ளுவதைப் போல, களம்புகுந்து மல்லனைப் பெருநற்கின்னி வீழ்த்திய செயல் விளங்கிற்று எனக் கூறப்படுகின்றது.

**நாவாய்ப் போட்டி (படகோட்டப்போட்டி** Boat competition rowing**)**

நாவாய் என்பது பொதுவாகக் கடற்கரை நாவாயியல் (coastal Narvigation) வானவியல் நாவாயியல் (astrononomical navigation) மின்னணுக் கருவி நாவாயில் (electronic Nativagation) என இன்று பகுத்துள்ளனர்.

கடற்கரை நாவாயியல் என்பது கடற்கரை நிலப்பகுதியில் உள்ள அடையாளங்களைக் கொண்டு கப்பலை வழிநடத்துவதாகும். நாவாய்ப் போட்டிகள் - அதாவது படகோட்டிப் போட்டிகள் படகு வலிக்கும் போட்டிகள் தற்போது காணப்படுகின்றன. நெடியோன் பாண்டியனின் முந்நீர் விழாவில் வளி தொழில் நாவாய்ப் போட்டி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இக்கால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளதைத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்கவும் ஆராயவும் முடிகின்றது. இவ் ஆய்வு சங்கப் பாடல்களில் விளையாட்டுப் பற்றியதாக அமைந்தாலும், தமிழ் இலக்கியத்திற்கும் விளையாட்டுக்குமான ஓர் ஆய்வின் முன்னோடி ஆய்வாகவே இதனைக் கொள்ளமுடியும். எனவே இத்துறை சார்ந்த ஆய்வுகள் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் ஆராயப்பட வேண்டும். அதற்கு ஒரு முன்னாய்வாக இதனை பயன்கொள்ளமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**

தட்சிணாமூர்த்தி அ. (1994) **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**, யாழ் வெளியீடு.

**தமிழ் நாட்டு வரலாறு சங்ககாலம் வாழ்வியல்**, (2000), தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு தமிழ்நாட்டு பாட நூல் நிறுவனம்.

செங்கைப் பொதுவன், (2010), **சங்க இலக்கியங்களின் விளையாட்டுக்கலை,** உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு சிறப்பு மலர். 2010 தமிழ்நாடு அரசு.

**சங்க இலக்கிய வரலாறு மா.ரா. களஞ்சியம்** iii, (2010), தொகுப்பு சண்முகசுந்தரம், சென்னை, காவ்யா.

சிவகாமசுந்தரி க. (1995), **சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வித்தியானந்தன். சு. (1954), **தமிழர் சால்பு,** தமிழ் மன்றம் கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர்கள் விபரம்


**பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

**திரு. க. சண்முகலிங்கம்**
முன்னாள் பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**பேராசிரியர் துரை. மனோகரன்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**பேராசிரியர் செ.யோகராசா**
தமிழ்த்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**திருமதி. றூபி வலன்டினா**
தலைவர், தமிழ்த்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி. சோதிமலர் ரவீந்திரன்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி. நதீரா மரியசந்தானம்**
தமிழ்த்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி. க. இரகுபரன்**
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. செல்வ அம்பிகை நந்தகுமாரன்**
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி. எஸ். வை. ஸ்ரீதர்**
மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

**திரு. ஆர். மகேஸ்வரன்**
முதுநிலை நூலகர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**திருமதி. வானதி பகீரதன்**
விரிவுரையாளர்,
சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்.

**திரு. மு. தயாநிதி**
முதுநிலை விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

**திருமதி. ஹறோசனா ஜெயசீலன்**
முதுதத்துவமாணி ஆய்வாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக்கழகம் – தமிழ்த்துறை
# பருவக்கருத்தரங்கு – 2015

## 01. 2015 / 2016 ஆம் ஆண்டுகளுக்கான பருவக் கருத்தரங்குகளின் விபரம்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பருவக் கருத்தரங்கத் தொடரானது இலங்கை மற்றும் பிற நாடுகளில் உள்ள எழுத்தாளர்களை, புலமையாளர்களை அழைத்துத் தமிழியல்சார் கருத்தாடலை மேற்கொள்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அந்தவகையில், 2015 / 2016 ஆம் ஆண்டுகளில் ஒழுங்கு செய்யப்பட்ட பருவக் கருத்தரங்குகள் தொடர்பான சுருக்க விபரம் வருமாறு:

- பேராசிரியர் நஞ்சுண்டன் வருகை – மைசூர் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்த பேராசிரியரும் எழுத்தாளருமான நஞ்சுண்டன் 'நாவல் மொழிபெயர்ப்பு' தொடர்பான சிறப்பு விரிவுரை ஒன்றினை வழங்கினார்.
- செல்வி கனகலதா வருகை – கவிஞரும் சிங்கப்பூர் தமிழ்முரசு வாரப்பத்திரிகை ஆசிரியையுமான செல்வி கனகலதா தனது கவிதை அனுபவங்கள் மற்றும் சிங்கப்பூர் கலை இலக்கியப்போக்குகள் குறித்த கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டார்.
- கவிதாயினி ஔவை வருகை - ஈழத்துக் கவிஞைகளில் குறிப்பிடத்தக்கவரும் 'எல்லை கடத்தல்', 'எதை நினைந்தழுவதும் சாத்தியமில்லை' எனும் கவிதைத் தொகுப்புகளின் ஆசிரியையுமான ஔவை தனது கவிதை அனுபவங்களையும், ஈழத்துப் போர்க்காலச் சூழலில் பெண் கவிஞைகளின் மேற்கிளம்புகை குறித்த தன் கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டார்.
- கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் வருகை – கலைமகள் ஆசிரியரான கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் அவர்கள் 'தமிழகப் பத்திரிகைகளின் போக்கு' குறித்த சிறப்புக் கருத்துரை ஒன்றினை வழங்கினார்.
- பேராசிரியர் ஆனந்தகுமார் - காந்திகிராமம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆனந்தகுமார் அவர்கள் 'புதிய நோக்கில் பாரதி கவிதைகள்' எனும் தலைப்பில் விசேட உரை ஒன்றினை நிகழ்த்தினார்.
- மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க வருகை – மலேசியாவில் இருந்து மலேசியத் தமிழ் எழுத்தாளர் மன்றச் செயலாளர் திரு ராஜேந்திரன் தலைமையில் சுமார் 25க்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் வருகை தந்தார்கள். இந்த ஒன்றுகூடலின் போது மலேசியாவைச் சேர்ந்த திரு ராஜேந்திரன் சிறப்புரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் சு. முரளிதரனும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களும் சிறப்புரை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.
- பேராசிரியர் அ. ராமசாமி வருகை – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த பேராசிரியர் அ. ராமசாமி 'நாவலும் வாசிப்பும்' எனும் தலைப்பில் விசேட விரிவுரை ஒன்றை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. நூல் வெளியீட்டு நிகழ்வுகள்**

- யாதுமாகி – பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் கவிஞர் நா. திருச்செந்தூரனின் 'யாதுமாகி' எனும் கவிதைத் தொகுதிக்கான வெளியீட்டு நிகழ்வை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் தமிழ்த்துறையின் அநுசரணையுடன் நடாத்தியது. இந்நிகழ்வில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களும் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் அவர்களும் அறிமுகவுரை ஆற்றினர். தமிழ்த்துறை விரிவுரையாளர் எம். எம். ஜெயசீலன் நூலுக்கான விமர்சன உரையினை நிகழ்த்தினார்.
- திரிதலிலிருந்து தெரிதல் - பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன் அவர்களது □திரிதலிலிருந்து தெரிதல்□ எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட கருத்தரங்க மண்டபத்தில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நிகழ்ந்தது. நூலுக்கான முதற்பிரதியைப் பேராசிரியர் எம். ஏ. நு.்.மான் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். நூலுக்கான அறிமுகவுரை பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களாலும் விமர்சனவுரை கலாநிதி ஸ்ரீ பிராசந்தன் அவர்களாலும் நிகழ்த்தப்பட்டது.

**03. பிறநாட்டுக்கான கல்வி சார் விஜயங்களும், கருத்தரங்கப் பங்கேற்புகளும்**

- தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அகில இந்திய தமிழாசிரியர் மன்றத்தின் 53ஆவது சர்வதேச மாநாட்டில் 'தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுமுறையில் ஈழத்தவர் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஆதாரசுருதி உரையை நிகழ்த்தினார்.
- தென்னிந்திய தொல்லியல் கழகத்தின் வருடாந்த மாநாட்டின் கோவிலூர் அறக்கட்டளைச் சார்பில் 'வேதாரணியம் - யாழ்ப்பாணம் - கலாசார உறவுகள்' எனும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவதற்காக மதுரை ராஜபாளையத்திற்கு தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் அழைக்கப்பட்டார்.
- 'ஈழத்துப் பெண் கவிதையியல்' எனும் தலைப்பில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த, ஈழத்து அறிஞர் பலரும் பங்கேற்ற கருத்தரங்கினை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஒருங்கிணைத்திருந்தது. அக்கருத்தரங்கில் பேராதனைத் தமிழ்த்துறைத் தலைவர் ஆதாரசுருதி உரையினை நிகழ்த்த, அத்துறையின் ஏனைய விரிவுரையாளர்களான கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் (ஈழத்துப் பெண் கவிதைகளில் உணர்த்து முறை உத்திகள்), பெருமாள் சரவணகுமார் (மலையகப் பெண் கவிதைகளும் அரசியலும்), எம்.எம். ஜெயசீலன் (இலங்கைப் பெண் கவிதைகளில் ஆண்களும் அதிகாரமும்), எஸ். சுதர்சன் (ஈழத்துப் பெண் கவிதைகளில் போரும் வாழ்வும்), ஆன் யாழினி சதீஸ்வரன் (ஈழத்துப் பெண் கவிதைகளில் உடல் அரசியல்) ஆகியோர் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இவர்களுடன் யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, சபரகமுவ பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் கட்டுரை சமர்ப்பித்தனர். அக்கருத்தரங்கில் பேராதனைத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர்களான எம். வை.எ.்.ப். ரிஸ்மியா, எம் என். ஜெஸ்மினா ஆகியோரும் கலந்துகொண்டனர்.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை ஏற்பாட்டில் 'தடம் பதித்த தமிழறிஞர்கள்' என்னும் தலைப்பில் 05.12.2015 ஆம் திகதி நடந்த பன்னாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த பெருமாள் சரவணகுமார் 'பேராசிரியர் க. கைலாசபதி' எனும் தலைப்பிலும் எம்.எம். ஜெயசீலன் 'சி.வி.வேலுப்பிள்ளை' எனும் தலைப்பிலும், எஸ். சுதர்சன் 'சிவசம்புப் புலவர்' எனும் தலைப்பிலும், ஆன் யாழினி சதீஸ்வரன் 'கவிஞர் நீலாவணன்' எனும் தலைப்பிலும் எம்.வை.எ.ஃப். ரிஸ்மியா 'கவிஞர் மஹாகவி' எனும் தலைப்பிலும் எம்.என். ஜெஸ்மினா 'நீர்வை பொன்னையன்' எனும் தலைப்பிலும் கட்டுரை சமர்ப்பித்தனர். சபரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீதர், மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகப் பதில் நூலகர் இராசையா மகேஸ்வரன் முதலானோரும் கட்டுரை சமர்ப்பித்தனர்.

- மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தில் நடந்த புலம்பெயர் இலக்கியம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் மையக்கருத்துரை ஆற்றினார். இவரோடு யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி. சிவலிங்கராஜாவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் செ. யோகராசா, அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் றூபி வலன்ரினா பிரான்ஸிஸ் ஆகியோரும் கலந்துகொண்டு கட்டுரை சமர்ப்பித்தனர்.

- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகமும் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகமும் இணைந்து 'புதிய நோக்கில் சங்க இலக்கியம்' எனும் தலைப்பிலான புத்தொளிப் பயிற்சி ஒன்றினை 28.07.2016 முதல் 06.08.2016 வரையான திகதிகளில் கோயம் புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடாத்தின. இதில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களும் விரிவுரையாளர்களான பெருமாள் சரவணகுமார், எம். எம். ஜெயசீலன், ஆன் யாழினி சதீஸ்வரன், எம். வை. எ.ஃப். ரிஸ்மியா ஆகியோரும் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்களும் கலந்துகொண்டனர். மேலும், அங்குள்ள பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு 'ஈழத்துத் தமிழிலக்கியச் செல்நெறி' குறித்த சிறப்பு விரிவுரை ஒன்றும் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

- கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த சிலப்பதிகார மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் 'வம்பப் பெருந்தெய்வம்' எனும் தலைப்பிலும், கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் 'கட்டுரைக் காதை' எனும் தலைப்பிலும், ஆன் யாழினி சதீஸ்வரன் 'சிலப்பதிகாரத்தில் துணைப் பாத்திரங்கள்' எனும் தலைப்பிலும், பாஸ்கரன் சுமன் அவர்கள் 'தொன்மவியல் நோக்கில் இந்திரவிழா' எனும் தலைப்பிலும் கட்டுரை சமர்ப்பித்தனர்.

- எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதி கோயம்புத்தூரில் நடைபெற உள்ள உ.வே. சாமிநாத ஐயரும் 19ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் என்ற தொனிப்பொருளிலான சர்வதேச பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கத்தினை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, மலாய் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவற்றுடன் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சக இணைப்பாளராக நின்று நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பாளர்: எம்.வை.எஃப். ரிஸ்மியா**
உதவி விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அடைவுகள்

**இளங்கலைமாணித் தேர்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்**

ஆர். தினுஷா, தமிழில் சதக இலக்கியங்கள்: கொங்கு மண்டல சதகங்கள், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

எம்.எப்.எப். பஜிலா, கவிஞர் இக்பால் கவிதைகள் - ஓர் ஆய்வு.

வி. காயத்திரி - மலையகத் தமிழ் நாவல்களில் மொழிக்கூறு - தூரத்துப் பச்சை வழித்தேடல்

க. கனகதுர்க்கா, இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயப் பக்திப் பனுவல்கள் - ஓர் ஆய்வு.

எஸ். கமலகாந்தன், இயற்றமிழ் போதகாசிரியர் வல்லை. ச. வைத்தியலிங்கம்பிள்ளையின் தமிழ்ப் பணிகள் ஒரு சிறப்பாய்வு.

ஏ. கோகிலவாணி, பண்டைய தமிழகத் துறைமுகங்களும் பூம்புகார் துறைமுகப் பட்டினத்தின் மீள் கட்டுமாணங்களும் - பட்டினப்பாலையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

வி. லோகேஸ்வரி, திருமங்கையாழ்வாரின் பக்திப் பனுவல்கள்: மரபும் மாற்றமும்.

ஆர்.ஐ. நஸ்ரியா உம்மா, கடாண்டுகம பிரதேச நாட்டார் பாடல்கள் - ஓர் ஆய்வு.

எஸ்.கே.எப். நிஸிரா, இஸ்லாமியத் தமிழ் மாலை இலக்கியங்கள் - ஓர் ஆய்வு.

ஆர். பத்மரதி, கோயில் பண்பாடும் பிரபந்தமும் (செல்வச் சந்நிதி ஆலயத்தின் பண்பாடு மற்றும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு).

ஆர். பிரியதர்சினி, இலக்கியத்தில் தொன்மம்: சங்கப் பாடல்களில் மாயோன் பற்றிய சிறப்பாய்வு.

ரி. ராகலேஸ்வரி, அளிக்கம்பை வனக்குறவர் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு.

எஸ். பிறைசில, கிறிஸ்தவ தேவாலயங்களில் திராவிடக் கட்டடக் கலையின் செல்வாக்கு - பண்பாட்டு வழி ஆய்வு.

ஜே. சஹிரா, மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச முஸ்லிம்களின் கிராமிய நிகழ்த்துகலைகள் - ஓர் ஆய்வு.

என். சகிந்தன், நிகழ்த்துகலையாகக் காத்தவராயன் கூத்து (வடமராட்சிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு).

எம். நதீசா, பழமொழி நானூறு - ஒரு சமூக ஆய்வு.

எஸ். ஷாலினி, தனிப்பாடல் திரட்டில் பெண்கள் (ஆண்பாற் புலவர்களின் பார்வையில் பெண் சித்திரிப்புக்கள்).

ஏ. சுபாஜினி, வவுனியா மாவட்ட முனியப்பர் வழிபாடு - ஒரு பண்பாட்டாய்வு.

எம். துவாரகன், கல்வயல் வே.குமாரசுவாமி கவிதைகள் - ஓர் ஆய்வு.

எஸ். வினோஜா, மன்னார் மாதோட்ட வாசகப்பாக்களில் பக்தியும் கலையும்.

எஸ். வித்யா, முல்லைமோடி கோவலன் கூத்து - ஓர் ஆய்வு (வன்னிப் பகுதியைக் களமாகக் கொண்ட ஆய்வு).

எஸ்.எம்.எப். சப்னா, வ.அ. இராசரத்தினத்தின் நாவல்களில் மூதூர்ப் பிரதேச மக்களின் வாழ்வியலும் பண்பாடும் ஓர் ஆய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உழவர் ஓதை மதகோதை
உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி




ISBN 978-955-659-418-8
9 789556 594188
விலை ரூபா 400.00
#652
Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org